

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நந்தனின் மீரா... ★ பத்மா கிரகதுரை




https://telegram.me/aedahamlibrary

# பத்மா கிரகதுரை

எழுதிய

# நந்தனின் மீரா .

1

வானுமற்ற ...நிலமுமற்ற...எல்லை கட்டாதோர் பிரதேசத்தில்
எங்கிருந்தோ ...எப்படியோ ...
வந்தென்னகம் நனைத்துவிட்டான்
அன்றுதான் ஆரம்பமானது என் பிரபஞ்சம் .

"நந்தகுமரன் வெட்ஸ் மீரா " எனும் எழுததுக்கள் பொன்னாய் மின்னின. உற்சாகம் பொங்கும் மனதுடன் அதனை பார்த்தபடி காரிலிருந்து இறங்கினாள் மீரா .இன்னமும் கல்யாண களை கட்டவில்லை அந்த மண்டபத்தில் .ஆனாலும் மணப்பெண்ணிற்குரிய அனைத்து இயல்புகளும் மீராவிடம் குடிவந்து விட்டது .
" ஏய் மீரா என்னடி ...ப்யூட்டி பார்லர் மேக்கப் அதற்குள் முடித்து விட்டு வந்துவிட்டாயா ...? " கீர்த்தனா கேட்டாள் .சித்தி பெண் .

" ம்ஹூம் ..சாப்பிட்ட பிறகு மேக்கப்பிற்கு போகலாம் என்று முதலில் இங்கே சாப்பிட அழைத்து வந்துவிட்டார் அப்பா ..." மென்மையாய் இதழ் பிரித்து குயில் குரலில் கூறினாள் மீரா .

" என்னது இன்னமும் மேக்கப் முடிக்கலையா ...? ஏய் ...ராதா , சரிதா , சித்ரா , ரவி , ஆனந்த் எல்லோரும் ஓடி வாங்க ..."

கீர்த்தனாவின் கத்தலில் அந்த மண்டபத்தில் ஆங்காங்கே இருந்த அந்த இளைஞர் பட்டாளம் முழுவதும் அங்கே , வாசுகியை சுற்றி கூடியது .எல்லோரும் வாசுகியின் அத்தை , மாமா ...சித்தப்பா , பெரியப்பா பிள்ளைகள் .ஓரிரண்டு வயது கூட , குறைய இருக்கும் , கிட்டதட்ட ஒரே வயதுடைய நண்பர்களைப் போல் பழகும் உறவினர்கள் .

" ஏய் எதுக்குடி இப்படி கத்துகிறாய் ....? " மீரா புரியாமல் கேட்டாள் .அவளுக்கு பதில் சொல்லாமல் தங்களை சூழ்ந்து கொண்ட இளவல் பட்டாளத்தை பார்த்து கையாட்டிய கீர்த்தனா ....

" ஏய் எல்லாரும் நல்லா பாருங்கப்பா.நம்ம புதுப்பொண்ணு இன்னமும் இன்னமும் அலங்கரிக்க அழகு நிலையம் போகவில்லை .அதற்குள் அவள் முகத்தை பார்த்தீர்களா ...? கோல்டன் பேசியல் போட்டது போல் ஜொலித்துக் கொண்டிருக்கிறதே ..."

" அட ..ஆமாம் ..."

" முகம் மின்னுது ..."

" கண் ஜொலிக்குது ..."

" கன்னம் சிவக்குது ..."

ஆளாளுக்கு மீராவை  தங்கள்புறம் திருப்பி ஆராய்ந்தபடி சொல்ல , இந்த கேலியில் மீரா திணறினாள்  .

" ஏன்பா பொண்ணுங்க , கல்யாணம்னா நிஜம்மாகவே இப்படி அழகாயிடுவாங்களா ...? " ரவி கேட்டான் .

" டேய் ரவி அண்ணா .நம்ம மீரா சும்மாவே அழகு .இதில் அந்த மாதிரி ஹீரோ மாதிரி ஒரு மாப்பிள்ளை அமைஞ்சா இன்னும் அழகாக மாட்டாளா ...? அதுதான் அப்படியே பட்டர் பேப்பர் மாதிரி வழுவழுன்னு ஆகிவிட்டாள் ..." சொன்னது போன்றே பட்டராய் வழுவழுத்த மீராவின் கையை வருடிய ராதாவின் குரலில் மிக லேசாக ஒரு பொறாமை கூட தெரிந்த்து .

" சரிப்பா கைதான் பட்டர் பேப்பராகி விட்டது .கண்ணில் எதற்கு எப்போதும் ஒரு டியூப்லைட் எரிகிறதாம் ...? " சரிதா .

" அதைவிடு இந்த கன்னம் ஏன் எப்போதும் ரூஜ் தடவியது போன்றே இருக்கிறதாம் ..." கீர்த்தனா .

" ஏய் கலாட்டா பண்ணாமல் சும்மா இருக்க மாட்டீர்களா ...? " தனது கன்னத்தை தேய்த்தபடி மீரா மெல்லிய குரலில் கூறினாள் .கன்னம் சிவந்நிருக்கிறதாம்மா ..இருக்கும் அவனை முதன்முதலில் பார்த்ததும் கன்னத்தில் ஏறிய சிவப்பு இது .போக மாட்டேனென்கிறது .அழுத்தி தடவிக்கொண்டாள் .

" என்னது கலாட்டா பண்ணக்கூடாதா ...? பிறகு நாங்கள் எதற்காக காலேஜ் , ஆபிஸெல்லாம் லீவ் போட்டுவிட்டு இங்கே ஓடி வந்திருக்கிறோமாம் .கல்யாணம் முடிவதற்குள் உன்னையும் ,

உன்னவரையும்  ஒரு வழி பண்ணிவிடுவோம் ..." ஆனந்த் உற்சாகமாக கூறினான் .

அவனது அந்த உன்னவரில் ஏதோ ஓர் சிலிர்ப்பு மீராவின் உடலில் ஓடியது .என்னவர் ....அவர் என்னவர் ...ஆமாம் எனக்கே உரியவர் .நாளை இந்நேரம் நான் அவருக்கும் , அவர் எனக்கும் உரியவராயிருப்போம் .

நந்தகுமரனின் உருவம் மனதினுள் வந்து நிற்க , கண்கள் சொக்கி ஒரு மயக்கத்திற்குள் போனாள் .அன்று ....

பெண் பார்க்க வந்த அன்று ...ஒரு முறை ...ஒரே ஒரு முறைதான் அவளை ஏறிட்டு பார்த்தான்.அதே நேரம் மீராவும் அவனை பார்க்க , விநாடியில் தன் கண்களை திருப்பிக் கொண்டுவிட்டான் .அந்த கணப்பொழுதே ஆயிரக்கணக்கான வோல்டேஜ்களை மீராவின் உடலினுள் செலுத்திவிட்டது .

அந்தப்பொழுதிலிருந்து ஏதோ ஒரு புது உலகத்தினுள் வாழந்து கொண்டிருக்கிறாள் அவள் .அநாவசிய அலட்டல்களோ , வழிசல்களோ இன்றி கம்பீரமாக அந்த ஒற்றை சோபாவில் நிமிர்ந்து அமர்ந்திருந்தான் .மீராவிற்கு அவள்  படித்த  சில சரித்திர நாவல்களின் நாயகர்களின் வர்ணனைகளை நினைவூட்டினான் .

அவனை சுற்றி அமர்ந்து படிப்பு , தொழில் என  கேள்விகளால் அவனை துருவிய அவள் வீட்டு ஆட்களுக்கு பொறுமையாக , பதட்டமின்றி தெளிவாக விடை  கூறினான் .அவனுக்கென வைக்கப்பட்ட பலகாரங்களை தவிர்த்து விட்டு , தண்ணீர் மட்டும் குடித்தான் .அவனருகில் வந்து அமர்ந்து பேச்சு கொடுத்த மீராவின் தம்பி வினோத்திடம் சிறு புன்னகையோடு பேசினான் .

அவன் ஒரு முறையாவது மீண்டும் ஒரு தடவை தன்னை பார்க்க மாட்டானா ... என்ற ஆசையுடன் , உள்ளறை ஜன்னல் வழியாக அவனை பார்த்தபடியிருந்த மீராவின் ஆசையை மட்டும் கடைசி வரை நிறைவேற்றவேயில்லை .திரும்பியே பார்க்காமல்தான் டாக்ஸியில் போய் ஏறிக்கொண்டான் .

இரு வீட்டு வழியிலும் திருப்தியுடன் திருமணம் பேசி  பூ வைத்து நிச்சயம் செய்த பிறகும் , ஒவ்வொரு நாளும் அவனது போன் காலுக்காக காத்திருந்து ஏமாந்தாள் . பெண் பார்க்க வந்தபோது அநாவசிய வழிசலின்றி இருந்த அவனது நிமிர்வில் பெருமை கொண்டிருந்த

https://telegram.me/aedahamlibrary

அவளது பெற்றோருக்கு , நிச்சயத்தின் பின்னும் போனில் கூட பேசாத அவனது தன்மை சிறு கவலையளித்தது .

இது மெல்ல மாப்பிள்ளை வீட்டாரின் காதில் போடப்பட்டது. நந்தகுமாரின் அக்கா பிரவீணா , தங்கை மாளவிகா , மாமியார் சுந்தரியுடன் ஒரு வெள்ளிக்கிழமை பெண்ணை பார்த்து போகவென்று வந்த அந்த வீட்டு பெண்கள் கூட்டம் , வாங்கி வந்த மல்லிகை பூவை மீராவின் தலை நிறைய வைத்துவிட்டு , தனது பிள்ளையின் , தம்பியின் , அண்ணனின் பெருமைகளை அடுக்க தொடங்கியது

மீராவின் தந்தை திருக்குமரனிடம் நந்தகுமரனின் தொழில் திறமைகள் குவியலாக கூறப்பட்டன. அம்மா அன்பரசியிடம் அவனது குடும்ப பொறுப்பு , சகோதர பாசம் கூடை கூடையாக கொட்டப்பட்டது .ஏனோ இதிலேதும் பொய்யிருப்பது போன்றே மீராவுக்கோ , அவள் பெற்றோருக்கோ தோணவேயில்லை .

இதுபோல் மணக்க போகும் மணமகனின் பெருமைகள் , அதுவும் பார்த்த கணம் முதல் மனம் முழுவதும் பரவி விரிந்து சிரித்து நிற்பவனது புகழுரைகள் கேட்க மீராவுக்கு கசக்குமா என்ன ...? அவளும் உடல் முழுவதும் செவியாக்கிக் கொண்டுதான் அமர்ந்திருந்தாள் . ஆனால் ஏதோ ....எங்கேயோ ...ஒரு விடுதல் .சிறு பிசகொன்று ....வெண்பரப்பில் ..விழுந்துவிட்ட கரும்புள்ளியொன்று அவள் இதயத்தை உறுத்தியபடியிருந்த்து. சுபமான  வீணை மீட்டலின் ஊடே அசுபமாய் ஸ்வரமொன்று ஒலித்தபடியே இருந்த்து .

https://telegram.me/aedahamlibrary

அப்போது தனது போனை எடுத்த பிரவீணா ஏதோ நம்பரை அழுத்தியபடி வெளியே நடந்தாள் .இரண்டு நிமிடங்கள் வெளியே நின்று பேசியவள் உள்ளே வந்து தனது போ னை மீராவின் காதில் வைத்தாள் .

" தம்பிதான் பேசு ..." என்றாள் .

திக்கென்றது மீராவுக்கு .என்ன இது இப்படி திடீரென்று பேச சொன்னால் ..என்ன பேச ...? விழித்துக்கொண்டு இருந்த அவளின் காதில் ....

"  வேண்டாம் அக்கா .நான் பேசவில்லை ..." என்ற அவனது குரல் விழுந்த்து .

சற்று முன் அவனது குரலுக்கான பரபரப்போடிருந்த அவளது மனம் இப்போது அமைதியானது .எதிர்பார்ப்போடு விரிந்திருந்த இதழ்கள்

இறுகிக்கொண்டன.

அவளது முகமாற்றத்தை கண்ட பிரவீணா போனை தன் காதுக்கு கொண்டு போய் ...

" நந்து ....மீரா பேசுகிறாள் .இரண்டு வார்த்தை பேசு ..." உத்தரவு போல் கூறிவிட்டு போனை மீராவிடம் கொடுத்தாள் .

இப்போது போனின் மறுபுறம் " ஹலோ ..." எனும் குரல் கேட்டது.

மீராவி ன் பதில் ஹலோவில் சிறு மரத்த தன்மையிருந்த்து .

" வந்து ...உ...உங்கள் ..பெ ...பெயர் என்ன ...? "

உங்களாம் ...பெயர் தெரியாதாம் ....மௌனமாக இருந்தாள் மீரா .

" சாரி ..என்ன பேசுவதென்று தெரியவில்லை ..." எதிர்குரலில் தடுமாற்றம் இருந்த்து .

" ம் ..." என்ற ஒற்றை வார்த்தையை பதிலாக்கினாள் மீரா .சுற்றி இத்தனை பேர் இருக்கையில் வேறு என்ன பேச ....?

" நாம் அனைவரும் சுற்றியிருப்பதால் , பேச கூச்சமாக இருக்கும் ..." அன்பரசி ஜாடையாக சொன்ன பின்னும் சுற்றியிருந்த யாருக்கும் நகரும் எண்ணமில்லை .மூன்று பெண்களும் சுற்றியமர்ந்து மீராவை விட்டு பார்வையை நகற்றாமல் அமர்ந்திருந்தனர் .அதிலும் மாளவிகா தனது கையை கன்னத்தில் வைத்துக்கொண்டு , விழியகற்றாமல் வாசுகியை பார்த்தபடியிருந்தாள் .

https://t.me/aedahamlibrary

" ம் ....." பெருமூச்சொன்றை விட்டாள் சுந்தரி .

" எங்க காலத்திலெல்லாம் இப்படியா ...நிச்சயமானவுடனே போன்ல பேசனும் , நேரில பேசனும்னு காத்துக்கிட்டிருந்தோம் .கல்யாணமாகி பத்துநாள் கழிச்சித்தான் அவர் முகத்தையே முழுசா நிமிர்ந்து பார்த்தேன் . இப்போ இருக்கிறதுகெல்லாம் அப்படியா ...? ஆனால் நான் என் பிள்ளைங்களையும் என்னை மாதிரிதான் வளர்த்திருக்கேன் .என் பொண்ணுங்களும் சரி , பசங்களும் சரி ...கல்யாணத்துக்கு முன்னால் அப்பிடியிப்படின்னு எதுவும் பண்ணினதில்லை ....ம் ....எல்லார்கிட்டயும் இதையே எதிர்பார்க்க முடியுமா ...? ம் ...."

வார்த்தைக்கு வார்த்தை பெருமூச்சுவிட்டு , குரலை ஏற்றியிறக்கி நீளமாக பேசி நிறுத்தினாள் .அன்பரசிக்கும் , திருக்குமரனுக்கும் தர்ம

சங்கடமானது .தலையை குனிந்து கொண்டனர் .

தன் காதிலிருந்த போனை விலக்கி பிரவீணாவிடமே நீட்டினாள் மீரா.ஆனால் அதற்கு முன்பே எதிர்புறம் கட்டாகிவிட்டதோ என்ற சந்தேகம் அவளுக்கிருந்த்து .போனை வாங்கி தனது காதில் வைத்த பிரவீணாவின் முகமும் அதையே உணர்த்த , அவள் மீராவை பார்க்காமல் திரும்பிக்கொண்டாள் .

சங்கடமான அங்கே நிலவிய சூழ்நிலையை சரி பண்ண தோதாக , மாளவிகாவின் மடியிலிருந்த அவளது எட்டு மாத குழந்தை குரல் கொடுத்து அழத்துவங்கியது .அவள் குழந்தையை சமாதானப்படுத்த ஆரம்பித்தாள் .

" குழந்தைக்கு பால் கொண்டு வரட்டுமாம்மா ...? ஆற்றி தருகிறாயா ...? " அன்பரசி மாளவிகாவிடம் கேட்க , அவள் பதில் சொல்ல சூழ்நிலை இயல்பாக முயற்சித்தது .

ஆனால் மீராவின் ் மனநிலை இயல்பாகவில்லை .அவனுக்கு அவளுடன் பேச பிடித்தமில்லை. இதற்கு அர்த்தம் அவனுக்கு என் மேல் பிடித்தமில்லை என்பதை தவிர வேறு என்னவாக இருக்க முடியும் ...? ஏனோ தனது இந்த நெருடலை தன் வீட்டாருடன் கலந்து கொள்ள அவளுக்கு யோசனையாக இருந்த்து .

இந்த நவீன காலம் போல் சுந்தரி தனது பிள்ளைகளை வளர்க்கவில்லை .அதனால் நந்தகுமரன் அன்னைக்கு , தந்தைக்கு கட்டுப்பட்டு இருக்கிறான் .அன்று பெண் பார்க்கும் போது கூட அப்படித்தானே இருந்தான் ..!!! இது அன்பரசியின் வாதமாக இருந்த்து .

திருக்குமரனோ இடையில் இரண்டொரு முறை நந்தகுமரனை அவனது கடையில் போய் பார்த்துவிட்டு வந்ததிலிருந்து , ஓயாமல் மாப்பிள்ளை புகழ்தான் .அவனது பேச்சு , வியாபார தந்திரம் , திறன் ...அது இதுவென்று தினமும் ஒன்று சொல்லுவார் .அவராக பார்த்து அறிந்து கொண்டது கொஞ்சம் , வெளியே கேட்டு அறிந்த்து கொஞ்சம் என்று அவர் பேசியதெல்லாமே நந்தகுமரனின் புகழ்தான் .

தந்தை , தாயின் பேச்சுக்களில் வாசுகியும் மெல்ல தனது உறுத்தல்களை மறக்க துவங்கினாள் .மறக்க விரும்பினாள் என்பதே உண்மை .நந்தகுமரனின் சிரிப்பும் , அந்த ஒரே ஒரு நொடி கண் சந்திப்பும் அவளது கொஞ்ச நஞ்சம் மிச்சமிருந்த தயங்கங்களையும் துடைத்து எறிந்த்து.

இதோ இப்போதும் இங்கே திருமண மேடையில் அருகருகே நின்றிருந்தும் , இன்னமும் அவன் திரும்பி அவளை ...அவளுக்கென பார்க்கவில்லை .வருவோர் போவோரிடமெல்லாம் பேசினான் .கை கொடுத்தான் உறவுகளை அறிமுகப்படுத்தினான் .அறிமுகமானான் .ஆனால்எந்தநேரமும்இவளைஇவள்முகத்தை ..கண்களைபார்க்கவில்லை .

புல்சூட்டிலிருந்த அவனது கம்பீர தோற்றத்தில் முன்பே தன்னைத் தொலைத்திருந்த வாசுகிக்கும் அவனது பேச்சோ , பார்வையோ அப்போது வேண்டியிருக்கவில்லை .அவன் அவளை பார்த்து பேசினானென்றால் , அவள் தலை குனிய வேண்டி வரும் .பிறகு இப்படி அவனை அவ்வப்போது பார்வையிட முடியாமல் போகுமே ...

அவனது  தோற்றத்திலும் அடுத்தவர்களிடமென்றாலும் அவனின் பேச்சிலும், கவனமாக தள்ளியே நின்றாலும்  தவிர்க்க முடியாமல் மிக லேசாக உரசிய  அவனது தொட்டும் தொடாத படுதல்களிலும்  தனை மறந்தபடி , அவனது பாராமுகத்தை மறந்து நெகிழ்ந்திருந்தாள் மீரா.

அன்று இரவு ....

https://telegram.me/aedahamlibrary

" ஒரு மாதமாகவே கல்யாண அலைச்சல் .சரியாக தூங்கியே ஒரு வாரமாயிற்று .எனக்கு மிகவும் அலுப்பாக இருக்கிறது .தூக்கம் வருகிறது .உனக்கும் அப்படித்தானிருக்கும் .அதனால் இன்று ...நாம் தூங்குவோம் ..." என்று ஒரு கொட்டாவியை வெளியேற்றியபடி அவன் தூங்க தயாராக ஏனோ முதலில் திகைத்து , பின் நிம்மதியோ ...ஏமாற்றமோ போன்று ஏதோ ஒரு உணர்ச்சி பரவ நின்றாள் மீரா .

அவளொன்றும் உடனே அவனின் அணைப்பை நினைக்கவில்லை .வேண்டவில்லை .நேற்று இரவு வரை அறிமுகமற்ற ஒருவனுடன் ...இன்று இரவு உடனே எப்படி ...?????என்ற எண்ணம் அவளுள் உண்டு .ஆனால்
ஒருவரோடொருவர் பேசிக் கொள்ள , இருவரின் குடும்பத்தையும் அறிந்து கொள்ள ...ஆசைகளை பகிர்ந்து கொள்ள இதற்கு கூட என்ன தடை ...?

சரி ..விடு பேசக்கூட முடியாத அளவு அவருக்கு மிகவும் அசதி போல என எண்ணும் போதே அவனது செயல் அவளுக்கு உறுத்தலை அளித்தது .படுக்கை முழுவதும் பரவியிருந்த மல்லிகையையும் , ரோஜாவையும் தனது கைகளால் துப்புரவாக கீழே தள்ளி

விட்டுக்கொண்டிருந்தான் .இந்த உதிரிப்பூ கூடைக்கு மட்டுமே ஆயிரம் ருபாய் கொடுத்திருந்தார் அவள் தந்தை.இவன் இத்தனை அலட்சியமாக அதனை இப்படி  தள்ளுகிறானே ...கோபமாக அவனை பார்த்தாள் ..

அவள் பக்கம் பார்த்தாலல்லவா ...அவன் அவளது கோபத்தை அறிந்து கொள்ள ...? அருகில் ஒருத்தி நிற்கிறாளென்ற உணர்வேயின்றி , மலர்களை சுத்தமாக தள்ளியவன் , அவளுக்கு முதுகு காட்டி திரும்பியபடி படுத்துக்கொண்டான் .

வேறு வழியின்றி விளக்கை அணைத்துவிட்டு கட்டிலின் மறுஓரம் படுத்த மீராவுக்கு , இவ்வளவு நேரமாக இருந்த அந்நியோன்ய உணர்வு போய் , யாரோ ஒரு அறிமுகமற்ற ஆணுடன் தனியறையில் ஒரே கட்டிலில் படுக்க நேர்ந்த சங்கடம் உருவாக தொடங்கியது .

2

https://telegram.me/aedahamlibrary

நமக்கென்று ஒதுக்கி வைத்த
நறுவிசான பொழுதுகளை
பிய்த்து தின்னும் மௌனம் போர்த்தி
நகங்கடித்து கடக்கிறேன் ...
ஓடு சுமக்கும் நத்தையாய் ஊர்கிறதது,
கொத்தி பிடுங்கும் பார்வை தழைத்து
பேச ஆரம்பித்து விடேன் .

மாளவிகாவும் ,பிரவீணாவும் மணமக்களுக்கு ஆரத்தி எடுத்து திலகமிட , வலதுகால் என நினைவுபடுத்திய சுந்தரிக்கு பணிந்து வலதுகாலெடுத்து வைத்து உள்ளே தனது கணவன் வீட்டினுள் புகுந்தாள் .விளக்கி சொல்ல இயலாத விநோத உணர்வொன்று உடல் முழுவதும் பரவ , ஆதரநிற்காக கணவனை நோக்க அவன் அம்மாவை பார்த்துக் கொண்டிருந்தான் .

" செருப்பை இங்கே விடு ..." அந்த வராண்டா மூலையை காட்டிவிட்டு சுந்தரி உள்ளே போய்விட்டாள் .மனைவியை திரும்பியும் பாராமல் தாயின் பின்னாலேயே ் வீட்டினுள் சென்று விட்டிருந்தான் நந்தகுமார். மாளவிகா ஆரத்தியை தட்ட வாசலுக்கு போனாள் .பிரவீணாவும்

தாயுடன் சென்று விட ,புதிதாக மணமான பெண் புகுந்த வீட்டினுள் நுழையும் உணர்வை அடையாமல் அழையாதோர் வீட்டு வாசலில் வேண்டாத விருந்தாளியாய் நிற்கும் உணர்வை அடைந்தாள் மீரா .

" எங்கள் வீட்டிற்கு இனிய வரவேற்பு அண்ணி " உற்சாகமான குரலில் நிமிர்ந்து பார்த்தாள் .

சசிகுமார் ...நந்தகிமாரின் தம்பி .தலையை கினிந்து கைகளை விரித்து வரவேற்பு போல் அழைத்தான் .தன் தம்பி வினோத்தின் நினைவில் தானே மிகம் மலர எட்டுடுத்து வைத்து உள்ளே நுழைந்தள் மீரா .

மெல்ல கண்களை சிழற்றி வீட்டை பார்த்தாள் .பழைய காலத்து வீடு .முன்னால் நீள வராண்டா .அதில் சிமெண்ட் கிராதி வைத்து காற்றும் , வெளிச்சமும் தாராளமாக உள்ளே வந்த்து .அதன் ஓரம் ஒரு அறை தட்டி கொண்டு மறைக்கப்பட்டிருந்த்து .அதனை யாரோ படுக்கை அறையாக பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் .

பின்பு நீளமாக , ஒடுக்கமாக ஒரு அறை .அதன் பின் இப்போது மீரா நிற்கும் ஹால் .சோபாக்கள் , ப்ளாஸ்டிக் சேர்களால் நிரம்பியிருந்த்து .வலதுபுறம் இரண்டு அறையும் , இடது புறம் இரண்டு அறையும் ...படுக்கை அறை , சமையல் , பூஜை அறை ...இப்படி இருக்க வேண்டும் .வாசல் தொரிந்த்து .அதன் பின் முன்னால் போல் நீளமான அறை ஒன்று பின்னாலும் .அதிலிருந்து பின்வாசல் .

ஹால் சுவரில் வரிசையாக கறுப்பு , வெள்ளை பிகைப்படங்கள் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. இரண்டு மின்விசிறிகள் சுழன்றபடி இருந்தன. சோபா , சேர்கள் போக தரையிலும் ஜமுக்காளம் விரித்து ஆண்களும் , பெண்களும் ,குழந்தைகளுமாக விருந்தினர்கள் நிரம்பியிருந்தனர் .

கசகசப்பான பேச்சுக்களிடையேயும் அவர்கள் பார்வை மீராவிடமே குவிந்திருந்த்து .புதுப்பெண்ணல்லா ...???
குழந்தைகள் உட்கார்ந்திருந்த சோபாவை அவர்களை எழுப்பவிட்டு மீராவை அமர சொன்னாள் பிரவீணா .கண்களை சுழற்றி படபடப்போடு அங்குமிங்கும் தேடினாள் .

" என்ன தம்பியை தேடுறியாக்கும் ...? புதுப்பொண்டாட்டியை விட்டுட்டு உள்ளே போய் உட்கார்ந்துட்டானா ...? ஏய் நந்து ...இங்கே வா ..." கொஞ்சம் வயதான பெண் சத்தமாக கூப்பிட ...

" கல்யாணம் முடிந்து இரண்டு மணி நேரம்தான் ஆகுது .அதுக்குள்ளே

மாப்பிள்ளையை காணோம் ..." கொஞ்சம் சத்தமாகவே சொன்னாள் ஒரு நடுத்தர வயது பெண் .

"பொண்ணை விட்டுட்டு ...அண்ணன் எங்கே போனார் ...? " பரிதாபமாக மீராவை பார்த்தபடி மற்றொருத்தி சொல்ல ...மீராவற்கு அவமானத்தில் கண்கள் கலங்க தொடங்கியது .

சுருங்கிய முகத்துடன் பிரவீணா " நந்து ...." என அதட்ட ..

" இதோ வர்றேன் ..." என்றபடி பக்கத்து அறையிலிருந்து வந்தான் நந்தகுமார் .

" முகம் கழுவலாம்னு போனேன் .அதுக்குள்ளே எதற்கு இவ்வளவு கலாட்டா...? " அதட்டல் குரலில் எரிச்சலோடு கேட்டான் .

" புதுப்பொண்ணை தனியா விட்டுட்டு நீ பாட்டுக்கு உள்ளே போயிட்டா கேட்க மாட்டோமா ...? அது சரி எதுக்கு இத்தனை யோசனை ...? "

" என்ன யோசனை ...? "

" இவள் உன் பொண்டாட்டிதான் .அதனால் பயப்படாமல் உட்காரலாம் ..◌" பேசிக்கொண்டிருக்கும் அந்த பெண் நந்தகுமாருக்கு பெரியம்மா முறை வருபவள் .தனது வயதை முன்னிறுத்தி அவனை அதட்டிக்கொண்டிருந்தாள் .

அவள் அதட்டல் உண்மையே போல் அறையை விட்டு வெளியே வந்தாலும் இன்னமும் மீராவின் அருகே அமர பிடிக்காமலோ என்னவோ நின்றபடிதான் பேசிக்கொண்டஇருந்தான் .

இனி தானும் எழுந்து நின்று கொள்ள வேண்டியதுதான் என மீரா நினைக்கும் போதே தடுமாறி அவளை உரசியபடி அமர்ந்தான் நந்தகுமார் .இல்லை அந்த பெரியம்மா அவனை உந்தி தள்ளி அமர வைத்திருந்தாள் .

புதுக்கணவனின் ஸ்பரிசம் ...சுகமாக இல்லாமல் சுமையாக தோன்ற சட்டென தள்ளி அமர்ந்த மீரா இன்னமும் வேதனை அடைந்தாள் .ஏனெனில் அவளை ஸ்பரிசித்த அடுத்த நொடியே டக்கென அவளை முந்தி தானே வலகியிருந்தான் அவள் கணவன் .

" என்னடா உன் பொண்டாட்டி என்ன சொல்றா ...? " இருவருக்குமிடையே இருந்த கணிசமான இடைவெளியை

https://telegram.me/aedahamlibrary

பார்வையால் அளந்தபடி பெரியம்மா கேட்டாள் .

" இங்கேதானே இருக்கிறாள் பெரியம்மா .நீங்களே கேளுங்களேன் ...."

" அவளிடம் நான் கேட்டுக் கொள்வேனடா .உன்னிடம் என்ன சொல்கிறாள் ...என்று கேட்டேன் ..."

" சும்மா இருங்கள் பெரியம்மா .அண்ணனின் மனவேதனை தெரியாமல் .நீங்கள் வேறு எதையாவது கூறிக்கொண்டு ..." இளம்பெண்ணொருத்தி சொல்ல ...

மீராவின் இதயம் சிறிது நின்று பின் துடிக்க ஆரம்பித்தது .

அதற்குள் பிரவீணா பால் , பழ தட்டோடு வந்துவிட ...உறவினர்களின் கிண்டலும் , கேலியிம் திசை மாறியது .

மிக ஜாக்கிரதையாக கை படாமல் தன் வாயில் கணவன் வைத்த பழத்திற்கு பதிலாக , நுனிவிரலும் தீண்டாமல் அவன் வாய்க்கிள் பழத்தை தள்ளினாள் மீரா .

" உன் பொண்டாட்டி வாயில் பழம் ஒட்டியிருக்குது பாரு ..." பெரியம்மா சொன்னதும் துடைக்க எழுந்த மீராவின் கையை பிடித்து கொண்டவள் ...

https://telegram.me/aedahamlibrary

" நீயே துடைத்து விடுடா ...." அழுத்தமாக நந்தகுமாரிடம் சொல்ல , சுற்றியிருந்த இளையோர்கள் ஒரு காதல் காட்சிக்கு தயாராக ...நந்தகுமார் முகம் இறுக கைகளை முஷ்டியாக்கி இறுக்கியபடி இருந்தான் .இரண்டு இளைஞர்கள் லேசாக கையை கூட தட்ட ஆரம்பிக்க ...

" இங்கே என்ன சினிமா நடக்குதா ...? இத்தனை பேர் சுற்றி உட்கார்ந்து கொண்டு என் மகனையும் , மரிமகளையும் கிண்டாலா பண்றீங்க ...? அவுங்களை என்ன வெடகம்கெட்டவங்கன்னு நினைச்சீங்களா ...? " சுந்தரி சத்தமாக கத்த தொடங்கினாள் .அனைவரும் மௌனமானார்கள் .மீராவிற்கு உடனே அந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டும் போலிருந்த்து .

" ஏய் எதுக்குடி இப்போ இப்படி கத்துற...? பிள்ளைங்களை அம்மாகிட்ட ஆசீர்வாதம் வாங்க கூட்டிட்டு போனியா ...? " குருநாதன் ...நந்தகுமாரின தந்தை உள்ளே வந்து கத்த தொடங்க கத்திக் கொண்டிருந்த சுந்தரி மௌனமானாள் .

" இல்லை ...இனிமேத்தான் ...." முணுமுணுத்தாற் .

" ஏன்டி உனக்கு அறிவே கிடையாதா ...? புதக் கல்யாணம் முடிச்சவுங்களை முதல்ல பெரியவங்க கிட்ட ஆசீர்வாத்ததிற்கு அனுப்பாம ...நடுவீட்டில் உட்கார வச்சு கூத்தடிச்சிட்டு இருக்கியே ..? "

" இல்லப்பா ...பால் , பழம் கொடிக்கனுமில்ல ...? " பிரவீணா சமாதானமாக பேச ...

" ஏன் அதை பாட்டியை பார்த்த பறகு  கொடுத்தால் ஆகாதா ...? "
" போதிம்பா ...இப்போது என்ன ...பாட்டியிடம் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் அவ்வளவுதானே ...ஏய் எந்திரி ...வா ..." என்றபடி எழுந்த நந்தகுமார் வெடுக்கென மீராவின் கையை பிடித்து எழுப்பனான் .வேகநடையில் நன் பின்னோடு அவளை இழுத்து போனான் .
வீட்டின் பின்புறம் நான்கு அறைகளுடன் கூடிய சிறிய வீடொன்று இருந்த்து .நந்தகுதாரின் பாட்டி ...குருநாதனின் அம்மா அங்கே உடல்நலம் சரியில்லாமல் படுக்கையில் இருந்தார் .அங்கேதான் மீராவை இழுத்து சென்றான் நந்தகுமார் .

https://telegram.me/aedahamlibrary

இடைப்பட்ட வாசல்படியிலும் நிறுத்தாமல் அவளை இழுத்தபடியே சென்றவன் ,அங்கே கட்டிலில் படுத்திருந்த ஒரு மூதாட்டியின் அருகே அவளை கிட்டதட்ட தள்ளினான் .தனுமாறி பாட்டியின் மீதே விழப்போன மீரா கடைசி நிமிடம் சுதாரித்து நின்றாள் .

" டேய் ...டேய் என்னடா பண்ற ...? " பாட்டி படுத்தபடியே பேரனை பார்த்து கத்தினார் .

" உங்கள் ஆணை நிறைவேறிவிட்டது பாட்டி .நன்றாக பார்த்துக்கொள்ளுங்கள் ..." கைகளை கட்டிக்கொண்டு நின்றான் .

" நீ தவறாக எடுத்துக்கொள்ளாதேம்மா ◌இவன் கொஞ்சம் முரட்டு பயல் ..◌" பாட்டி மீராவை சமாதானப்படுத்த அவள் நடப்பதை நம்ப முடியாத அதிர்ச்சியில் நின்றாள் .

" இங்கே என் பக்கத்தில் உட்காரம்மா ..." ஆதரவாய் கை நீட்டி அழைத்தார் .

பற்றுக்கோலாய் அவர் கையை பற்றிய மீராவிற்கு சற்று முன்னிருந்த ஆதரவற்ற உணர்வு மாறி அமைதி தோன்றியது .

ஒரு தலைமுறை முந்தியவர் .எத்தனையோ அனுபவங்களை வைத்திருப்பபர் .அவரது ஆசீர்வாதம் வரமல்லவா ...? என தோன்ற கணவனையும் இணைத்துக் கொள்ளும் பாவனையல் அவனை பார்த்துவிட்டு பாட்டியின் பாதம் பணிந்தாள் .

" நல்லாயிரும்மா ..நூறு வருசம் புருசனும் ,பிள்ளைகளுமா தொங்க தொங்க தாலியோட வாழ்ந்து இந்தக் குடும்பத்தை காப்பாத்தனும் தாயே ..."

பாட்டியின் இந்த ஆசீர்வாதம் நெகிழ வைக்க ஈரம் கசியும் கண்களுடன் நிமிர்ந்த போதுதான் கவனத்தாள் .நந்தகுமார் பாட்டியை வணங்கவேயில்லை .மேலே விட்டத்தில் ஓடும் பல்லியை பார்த்தபடியிருந்தான் அவன் .

அதாவது அவனுக்கி குருநாதன் சந்தேகப்பட்டது போல் பாட்டியிடம் ஆசீர்வாதம் வாங்கும் எண்ணமேயில்லை .ஏன் ...? அப்படி என்ன வெறுப்பு ...?

குருநாதனும் , சுந்தரியும் வர ...

https://telegram.me/aedahamlibrary

" புது மருமகளை முதலில் விளக்கேற்ற சொன்னாயா ...? " பாட்டி மாமியார் குரலில் சுந்தரியை கேட்டார் .

" இனிமேல்தான் " அவள் தலையை குனிந்து முணுமுணுத்தாள் .

" ஐயோ ...இதையும் நான்தான் சொல்ல வேண்டுமா ...? மருமகள் வீட்டிற்கு வந்துவிட்டாள் .நீ இன்னமும் இப்படி எதற்கும் முழித்துக் கொண்டிருந்தால் எப்படி ...? " லேசாக தலையில் அடித்துக் கொண்டார் பாட்டி .

" உங்களிடம் ஆசீர்வாதம் வாங்கவே நான்தான் நினைவுபடுத்த வேண்டியிருந்த்து அம்மா .என்னடா பாட்டியை வணங்கினீர்களா ...? " குருநாதன் அதட்ட ...

" எல்லாம் ஆச்சு ..." முணுமுணுத்தபடி வெளியேறினான் நந்தகுமார் .

" புள்ளையை கூட்டிட்டு போய் விளக்கேற்ற சொல்லு " பாட்டி கட்டளையிட ...

" வாம்மா ..." என்றபடி சுந்தரி நடந்தாள் .

குருநாதன் அம்மாவிடம் அமர்ந்து விட ...மீரா கிழம்பிய மனதுடன்

வெளியேறினாள் .

3

கடினமென்ற உன் ஒரு சொல்லில்
கல்லென இறுகிக் கிடக்கிறது
கரு நீல ஆலகாலம் ,
சட்டை பட்டனுக்கென நூல் கோர்க்கையில்
அமிர்தமுண்ணும் ஆசை வருகிறது ,
சாந்தமென சமனமாகும் பொழுதுகளில்
கிணற்று சகடையாகிறது உள்ளம் ,
சரசரவென நீரிறைத்து ஊற்றிவிட்டு
போய்கொண்டேயிருக்கிறாய் நீலகண்டா ,
நிரம்பவே செய்யாத
காற்று தளும்பிய அண்டாவுடன்
உணர்ந்து கொண்டிருக்கிறேன் நான் .

https://telegram.me/aedahamlibrary

இரவு நிறைந்திருந்த  விருந்தினர்கள் சென்றுவிட வீட்டினர் மட்டும் இருந்தனர் .பிரவீணா அறையை தயார் பண்ண மாளவிகா மீராவை தயார் பண்ணினாள் .சலசலவென பேசியபடி இருந்த மாளஙிகாவின் பேச்சு எதுவும் மீராவின் காதில் விழுந்தாலும் மனதில் ஏறவில்லை .இவன் இன்று என்ன சொல்வான் ...என கணவனை நினைத்தபடி இருந்தாள் அவள் .

அந்த வீட்டில் முன் வராண்டா , ஹால் , கிச்சன் தவிர இரண்டு படுக்கையறைகள் .ஒன்றில் மட்டுமே பாத்ரூம் வசதி இணைந்திருந்த்து .சிறிய பூஜையறை ஒன்று , ஸ்டோர் ரூம் ஒன்று , பின் வராண்டாவின் ஓரம் ஒரு சிறிய அறை .வீட்டின் பின்புறம் கிணறு , அதில் மோட்டார் பொருத்தப்பட்டிருந்த்து .வாழை , வேப்பமரம் , மாமரம் என வீட்டின் பின்னால் சிறிய தோட்டம் .பின்புறம்தான் பாட்டி இருந்த அந்த சிறிய வீடு இருந்த்து .

அந்த பாத்ரூம் வசதியோடிருந்த அறையையே இப்போது புது மண தம்பதிகளுக்காக ரெடி பண்ணிக் கொண்டிருந்தனர் .அங்கேதான் நந்தகுமார் முன்பு தங்கியிருந்திருக்க வேண்டும் .அங்கேதான் மீராவின் சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கேதான் அவள் உடை மாற்றி

தயாராகும்படி கூறப்பட்டாள் .

ஒரு ஓரமாக இருந்த டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி முன் அவளை அமர வைத்து , அவள் தலை நிறைய பூ வைத்து விட்டாள் மாளவிகா .கட்டிலில் புது போர்வை ஒன்றை விரித்த பிரவீணா கொஞ்சம் உதிரிப் பூக்களை  கட்டில் மேல் தூவவும் , மீராவுக்கு கொஞ்சம் கூச்சமாக இருக்க , அந்த அறையை விட்டு வெளியேறினாள் .

" அத்தை நான் ஏதாவது செய்யட்டுமா ...? " அடுப்படியில் மிக்ஸி ஓட்டிக் கொண்டிருந்த சுந்தரியிடம் சென்று கேட்டாள் .

," ம் ...அப்படி உட்கார் ..." திரும்பிப் பாராமல் சொன்னாள் அவள் .

பேசாமல் ஓரமாக கிடந்த சிறிய டைனிங் டேபிளின் சேரை இழுத்து போட்டு உட்கார்ந்தாள் .

" அத்தை நீங்கள் ரொம்ப அழகாக இருக்கிறீர்கள் ." அவளருகில் வந்து அமர்ந்தாள் திவ்யா .பிரவீணாவின் மகள் .

" தேங்க் யூ செல்லக்குட்டி .நீங்க என்ன படிக்கிறீங்க ...? " பாசமாக அவள் கைகளை பற்றிக்கொண்டாள் வாசுகி .

https://telegram.me/aedahamlibrary

" நான் ஏழாவது படிக்கிறேன் .அத்தை நீங்க ரொம்ப அழகாக சேலை கட்டியிருக்கீங்க .இந்த வருடம் ஸ்கூல் டிராமாவில் நான் நடிக்கிறேன் .அப்போ எனக்கு இதே மாதிரி அழகாக சேலை கட்டி விடுறீங்களா ...? "

" ஓ...கட்டிவிடுறேன் .என்ன டிராமா ..? உங்க கேரக்டர் என்ன ...? "

தொடர்ந்து திவ்யாவுடன் ஆவலுடன் பேச தொடங்கினாள் .

" இல்லம்மா ...அந்த கணக்கு  ஒண்ணும் அவ்வளவு கஷ்டமில்லை .ஒருநாள் நான் உனக்கு சொல்லி தர்றேன் .அதுக்கு பிறகு பாரேன் ரொம்ப ஈஸியாயிடும் "

" அப்படியே என்னையும் கொஞ்சம் கவனிச்சிடுங்க அண்ணி ..." என்றபடி மற்றொரு நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு அமர்ந்தான் சசிகுமார் .

" உங்களுக்கு என்ன பண்ணனும் சசிகுமார் ...? "

" என்னது " ங்களா ..." .அண்ணி இது அநியாயம் .உங்களை விட நான் ரொம்ப சின்ன பையன் .ங்க போட்டு உங்க வயதை குறைக்கலாம்னு நினைக்காதீங்க .சும்மா சசின்னு கூப்பிடுங்க ."

" என்னடா ஒரு பத்து வயசு சின்னவனாக இருப்பாயா ...? " கிண்டல் செய்தபடி வந்தாள் மாளவிகா .

" இல்லை அண்ணியை விட பன்னிரென்டு வயது சிறியவன் நான் ..."

" நீங்க என்ன படிக்கிறீங்க சசி ...? "

" பி. எஸ்ஸி கம்யூட்டர் பைனல் இயர் அண்ணி .."

" அட எப்படிப்பா இவ்வளவு சின்ன வயதில் இவ்வளவு பெரிய படிப்பு படிக்கிறீங்க ...? "

" அதெல்லாம் தனி சாமர்த்தியம் ..." பெருமையாக காலரை உயர்த்தி விட்டுக் கொண்டவன் கொஞ்சம் யோசித்து " என்ன சொல்றீங்க ...? " என்றான் .

" பத்து வயதில் காலேஜ் பைனல் இயரா ...நான் கேள்விப்பட்டதேயில்லையே...ஆனாலும் இது பெரிய சாதனைதான்பா ..." சிரிக்காமல் சாதாரணமாக சொன்னாள் வாசுகி .

அவளுக்கும் சேர்த்து திவ்யாவும் , மாளவிகாவும் சத்தமாக சிரித்தனர் .
" என்னண்ணி இப்படி வாரிட்டீங்களே ...," என மூக்கை பொத்திக்கொண்டு குனிந்து டேபிளின் அடியில் பார்த்தான் .

https://telegram.me/aedahamlibrary

" என்ன பார்க்கிறீங்க ...? "

" அண்ணி அவன் உங்க காலை தேடுறான் .போதும் இதோடு விட்டுடுங்கன்னு கெஞ்சுறதுக்கு .." மாளவிகா கிண்டலை தொடர்ந்தாள் .

" மாமா இந்த பக்கம் வந்திட்டீங்கன்னா வசதியாக இருக்கும் .அத்தை கால் நல்லா இங்கே தெரியுது ..." திவ்யாவும் கேலியில் சேர்ந்து கொண்டாள் .

" ஏய் குட்டி நீயும் சேர்ந்து என்னை கலாய்க்கிறாயா...? " செல்லமாக திவ்யா தலையில் கொட்டினான் .

" ஏன் கையை அப்படியே வைத்திருக்கீங்க ...? " இன்னமும் மூக்கு மேலிருந்த அவன் கையை பார்த்து கேட்டாள் .

" அது ...என் மூக்கு கொஞ்ச நேரம் முன்னால் உடைஞ்சி விழுந்த்து

.அதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன் ..." தொடர்ந்து டேபிளின் அடியில் அவன் குனிந்து தேட , சிறிது நாட்களுக்கு பிறகு , மனம் விட்டு பளிச்சென சிரித்தாள் மீரா.

உடன் திவ்யாவும் , மாளவிகாவும் சேர்ந்து கொள்ள சமையலறை கலகலத்தது .அப்போது ஹாலில் இருந்த தொட்டிலில் படுத்திருந்த குழந்தையின் சிணுங்கல் சத்தம் கேட்க ,

" அண்ணி குட்டி பையன் முழிச்சிட்டான்னு நினைக்கிறேன் " என்றாள் மீரா.

" ம் ..." என எழுந்த மாளவிகா நின்று " என்னையா அண்ணி என்று அழைத்தீரகள் ..." என்றாள் சந்தேகமாக .
" நாற்பது வயது பொண்ணை இருபத்தியிரண்டு வயது பெண் இப்படி மரியாதையாக அழைப்பது பழக்கம்தான் மாளவிகா அக்கா ...." என்றான் சசிகுமார் ' அக்காவில் ' அழுத்தம் கொடுத்து .

உண்மையில் அவனுக்கும் மாளவிகாவிற்கும் ஒன்னரை வயதே வித்தியாசம்  .அவனை விட ஒரு வயதே மூத்த தன்னை பெண்ணென்ற ஒரே காரணத்தால் ,  இவ்வளவு சீக்கிரம் திருமணம் செய்து கொடுத்து விட்டார்களே என்ற கவலை மாளவிகாவிறகு எப்போதுமே உண்டு .அதுவும் குழந்தை பிறந்த்திலிருந்த ஏதோ தனக்கு அதிக வயதாகி விட்டது போல் அவளுள் ஒரு கவலை இருந்த்து .

" என்னது அக்காவா ...? ஏய் எருமை மாடே ..நான் உனக்கு அக்காவாடா ...? தடிமாடு மாதிரி வளர்ந்திருக்கிறாய் .என்னை விட இரண்ட்டி உயரம் இருந்து கொண்டு என்னை சொல்கிறாயே ...? " வேகமாக தனது தம்பியிடம் சண்டைக்கு போனாள் அவள் .

" ஏய் முதலில் பிறந்து நீதானேடி.என்னை விட ஒன்ன்னன்னரை வயது மூத்தவள் நீ .பிறகு அக்கா இல்லாமல் யாரு ...? ..."மேலும் அவளிடம் வம்பிழுத்தான் சசிகுமார் .

" ஆமாம் உனக்கு இருபது வருசம் முன்னால் பிறந்தேன் பாரு .ஒழுங்காக பெயர் சொல்லி கூப்பிடு ...அண்ணி நீங்களும்தான் என்னை பெயர் சொல்லித்தான் கூப்பிட வேண்டும் " மீராவிற்கும் உத்தரவிட்டாள் அவள் .

" ஏய் அதெல்லாம் முடியாது.அண்ணி இவள் பேச்சு கேட்காதீங்க .நீங்கள் என்னை மட்டும்தான் சசின்னு கூப்பிடனும் .இவளை

https://telegram.me/aedahamlibrary

அண்ணிங்க ...வாங்கங்க ...போங்கங்கன்னு ...நிறைய ங்க போடுங்க ..." சசிகுமார் கத்தினான் .

" ஏய் என்னடா உனக்கு கொழுப்பா ...? அண்ணி என்னை மாளுன்னு கூப்பிடுங்க .இந்த அவதாரத்தை மச்சான்னு கூப்பிடுங்க ..." சசியின் சட்டையை பிடித்து இழுக்க அவன் அவள் கைகளை பிடித்து முறுக்கினான் .

டேபிளில் கைகளை ஊன்றி , அதில் முகத்தை தாங்கியபடி இருவரது சண்டையையும் உற்சாகமாக பார்த்தாள் திவ்யா .' அப்படித்தான் மாமா ' ' விடாதீங்க சித்தி ' என்ற சியர்ஸ் கேர்ள்ஸ் வேலை வேறு ...

இந்த கலாட்டாக்களுக்கிடையே சிணுங்கிய மாளவிகாவின் குழந்தை அழ ஆரம்பித்து விட , அதை சொல்ல முயற்சித்த மீராவின் குரல் உடன் பிறந்த இருவர் காதுகளிலும் விழுவது போல் தெரியாததால் சிறு சிரிப்புடன் மீராவே எழுந்து சென்று குழந்தையை பார்த்தாள் .தொட்டிலை நனைத்து விட்டு அழுது கொண்டிருந்தான் குழந்தை .

" அச்சச்சோ அழாதீங்க கண்ணா ..சூச்சு போயிட்டீங்களா ...? ஈரமாயிடுச்சா ...? குளிருதா ...? " குழந்தைக்கு சரியாக கொஞ்சு குரலில் பேசியபடி குழந்தையை தொட்டிலில் இருந்து எடுத்தாள் .தரையில் அமர்ந்து குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டவள் நனைந்த ஜட்டியை மாற்றி உலர்ந்த ஜட்டியை அணிவிக்கும் போது ,

https://telegram.me/aedahamlibrary

" சசி அங்கே என்னடா சத்தம் ...? மாளு கூட வம்பிழுக்கிறாயா ...? " என நந்தகுமாரின் சத்தம் கேட்டது .தன்னைக் கடந்து கிச்சனுக்குள் போன அவனது அகன்ற பாதங்களை பார்த்தபடி தலையை நிமிர்த்தாமல் அமர்ந்திருந்தாள் மீரா .

குழந்தையை கொஞ்சியபடி தூக்கிக் கொண்டிருந்த போதே ,பின்வாசல் அருகே நந்தகுமார் வந்து நின்றுவிட்டதை வாசுகி பார்த்துவிட்டாள் .நிமிர்ந்து அவனை பார்க்க பிடிக்காமலேயே சட்டென தனது கொஞ்சல்களை நிறுத்திக் கொண்டவள்  குழந்தையோடு தரையில் அமர்ந்து விட்டாள் .ஒரு நிமிடம் அங்கேயே நின்றவன் பிறகு நடந்து உள்ளே போனான் .

என்னை பார்க்கும் போதே இவனது பார்வையில் ஏளனம் தெரிகிறது .இவனுடன் தனிமையில் இருக்க என்னை இப்படி அலங்கரித்து வைத்துள்ளனரே ...இந்த குன்றல்தான் அப்போது மீராவின் மனதில் ஓடியது .முன்தின இரவு அவள் முகத்தை நிமிர்ந்தும் பாராது தூங்கலாம்

என படுத்த நந்தகுமாரின் தோற்றம் நினைவு வந்த்து அவளுக்கு .நேற்று ஒரு மேக்கப் இன்று ஒரு மேக்கப் .இது போன்ற அலங்காரத்துடன் என்னை பார்த்தால் இவன் எவ்வளவு கேவலமாக நினைப்பான் ...? மடியிலிருந்த குழந்தையின் பிஞ்சு கரங்களை வருடியபடி யோசனையை ஓடவிட்டாள் அவள் .

" நான் இல்லண்ணா இவதான் ..."

" இல்லைண்ணா இவன்தான் .."

" மாமா ..மாமா ...இரண்டு பேரும்தான் ..." கைகளை தட்டியபடி மாமனின் தோள்களில் தொற்றிக்கொண்டாள் மருமகள் .

" ஏய் இப்போ இரண்டு பேரும் என்கிட்ட உதை வாங்க போறீங்க ..." நந்தகுமார் திவ்யாவை முதுகில் சுமந்தபடி இருவரையும் கண்டித்தான் .

" அண்ணா இவன் எப்போ பாரு என்னை பாட்டி , கிழவி ...வயசாயிடுச்சுன்னு சொல்றாண்ணா ..." மாளவிகா கண்ணை கசக்கினாள் .

" டேய் ஏன்டா ...? " நந்தகுமார் தம்பியை அதட்ட ,

" அண்ணா சும்மாண்ணா ..." என அவன் கூற ...

" ஐய்யோ ...யாரு சொன்னதுடா ...? நீ எங்க வீட்டு குட்டி பாப்பாதானே ...? நேற்று நீ பட்டு சேலை கட்டியிருந்தப்ப நம்ம பின்னால் வீட்டு கற்பகம் ஆன்ட்டி , நம்ம மாளு ப்ளஸ் டூ படிக்கும் போது எப்படியிருந்தாளோ ..இன்னமும் அப்படியே இருக்காளேன்னு அம்மாகிட்ட சொல்லிட்டிருந்தாங்கடா செல்லக்குட்டி ..." நந்தகுமார் கொஞ்சு குரலில் தங்கையை சமாதானம் செய்தான் .

இவன் இது போன்ற குரலில் எல்லாம் பேசுவானா என்ன ....? இது வரை கணவன் தன்னிடம் பேசிய ஒட்டுதலற்ற வறண்ட குரல்களை நினைவு படுத்திக்கொண்டு ஆச்சரியமாக அவன் குரலை கேட்டுக் கொண்டிருந்தாள் மீரா .

" அப்போ அந்த பச்சை பட்டு கட்டியிருந்த மாமி யாருன்னு ..நம்ம பக்கத்து வீட்டு சுசீலா ஆன்ட்டி கேட்டாங்களே ...அது யாரை பார்த்து அண்ணா ...? " அப்பாவியாக விழி விரித்து கேட்டான் சசிகுமார் .

அண்ணனின் ப்ளஸ் டூ படிக்கும் மாணவி என்ற பாராட்டுதலில்

https://telegram.me/aedahamlibrary

மகிழ்ந்திருந்த மாளவிகா ,கொஞ்சநேரம் கழித்தே முன்தினம் தான் கட்டியிருந்த்து பச்சை பட்டு என உணர்ந்து அழுகை பீறிட்டு வர ,

" டேய் உன்னை கொல்ல போறேன் நான் ..." என சசிக்குமார் மேல் பாய்ந்தாள் .இருவருக்குமிடையே வந்த நந்தகுமார் " அமைதி ..அமைதி " என இருவரையும் சமாதானம் செய்தான் .

" அண்ணா ஆரம்பத்திலிருந்து இவன் என்கூட தகராறு பண்ணிட்டே இருக்கான் .அண்ணியை என்னை பெயர் சொல்லி கூப்பிட சொல்லுங்கண்ணா .இவனை மட்டும் பெயர் சொல்லி கூப்பிடனுமாம் .நான் மட்டும் அண்ணியாம் ..."

" கல்யாணம் முடிஞ்சு குழந்தையெல்லாம் பிறந்த பெரிய பெண்ணை எப்படிண்ணா பெயர் சொல்லி கூப்பிட முடியும் ...? நான் காலேஜ் படிக்கிற சின்ன பையன் .என்னை பெயர் சொல்லி கூப்பிடலாம் ...ஏய் போடி நீ அண்ணிதான் ..."

" ம் ...அப்போ உங்க பிரச்சினைக்கும் காரணம் உங்க அண்ணிதானா ...? விடுங்க அவளையே கூப்பிட்டு பேசிடலாம் .திவ்யா குட்டி அவளை கூப்பிடுடா ..." என்றான் நந்தகுமார் .

https://telegram.me/aedahamlibrary

திவ்யா " அத்தை கிச்சனுக்குள் சீக்கிரம் வாங்க ..." அங்கிருந்தே கத்தினாள் .

அதென்ன உங்க பிரச்சனைக்கும் காரணம் என்று ஒரு உபரி " ம் " .இன்னமும் வேறு யார் பிரச்சனைக்கு நான் காரணமானேனோ ....? இதோ ஹாலில் உட்கார்ந்திருக்கும் மனைவியை அழைக்க இடையில் மருமகள் மூலம் ஒரு தூது எதற்கு ...? பற்களை கடித்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள் மீரா.

" அத்தை ..." என திரும்பவும் திவ்யா கத்த ....மனமின்றி குழந்தையை தூக்கிக் கொண்டு எழுந்தாள் .

" என்ன திவ்யா ...? " தனக்கும் கணவனுக்குமிடையில் குழந்தையை வைத்து முகத்தை மறைத்துக்கொண்டு திவ்யாவிடம் கேட்டாள்.

" மாமாதான் கூப்பிட்டாங்க அத்தை .மாமா சொல்லுங்க மாமா ..." இப்போது நந்தகுமாரிடம் பேச்சில்லை .அதானே என்னை பார்த்தாலே உன் வாய் தானாக மூடிக்கொள்ளுமே....மனதிற்குள் நினைத்தபடி தரையை பார்த்திருந்தாள் .

" சொல்லுங்கண்ணா ..." மாளவிகாவும் , சசிகுமாரும் கோரஸ் பாட ,

" இங்கே பாரும்மா , நீ மாளுவையும் , சசியையும் இனிமேல் பெயர் சொல்லி கூப்பிடும்மா ..."

எல்லோரும் மீராவையே பார்த்தபடி இருக்க , அவள் " உங்க அம்மாதானே , பின்பக்கம் போனாங்க .நான் போய் வரச் சொல்றேன் " நிதானமாக பின் வாசலுக்கு நடந்தாள் .

ஒரு நிமிடம் புரியாமல் விழித்து பிறகு மாளவிகாவும் , சசிகுமாரும் சத்தமாக சிரித்தனர் .

" அண்ணா உங்களுக்கேற்ற அண்ணி ..." சசிகுமார் .

" எங்களையெல்லாம் எப்படி கலாய்ப்பீங்க .இப்போ உங்களை கலாய்க்க ஒரு ஆள் வந்தாச்சு " மாளவிகா கை தட்டினாள் .

" என்ன மாமா ...? " திவ்யா புரியாமல் நந்தகுமார் முகம் பார்க்க ,

" திவு மாமா அத்தையை இத்தனை ' ம்மா ' போட்டாரில்ல அதை அத்தை கிண்டல் பண்றாங்க "

' ஓ ' புரிந்தும் புரியாமல் தலையாட்டிக் கொண்டாள் திவ்யா .

மீரா போன பாதையை கண்கள் மின்ன பார்த்திருந்தான் நந்தகுமார் .

https://telegram.me/aedahamlibrary

உண்மை விளம்புவதாக
சொல்லி சொல்லி
உன்னை விழுங்கி
என்னைத் துப்புகிறாய் ,
உறவுச்சிக்கலில் நானிருக்க
உலக உருண்டையை
அலசிக்கொண்டிருக்கிறாய் ,

நந்தகுமாரின் அந்நியத்தன்மையை உணர்த்துவதற்காகவே இப்படி பதில் சொல்லிவிட்டு நகர்ந்தாள் மீரா .அதனை அவனும் உணர்ந்து கொண்டானென்பதை முதுகை துளைத்த அவன் பார்வை அவளுக்கு கூறியது .அது எப்படி முதுகில் பதியும் அவனது பார்வையை கூட என்னால் உணர முடிகிறது ..மனதிற்குள் வியந்தபடி வீட்டின் பின்பக்கம் வந்தாள் .

பின்புறம் ஒரு சிறிய எல். இ.டி லைட் வெளிச்சத்தில் நிறைய இருளோடு இருந்த்து .வீட்டினுள்ளிருந்த வெக்கை வெளியே வந்த்தும் வேப்ப மர காற்றில் மாறிவிட , ஆழ்ந்து அந்த காற்றை நாசிக்குள் இழுத்துக் கொண்டாள் .

https://telegram.me/aedahamlibrary

" அண்ணி அசத்திட்டீங்க ..." மாளவிகா கையில் பால் டப்பாவோடு வந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள் . மீரா  புன்னகைத்தாள் .

" அண்ணனை விட்டுடாதீங்க .இதே போல் இறுக்கி பிடித்து கொள்ளுங்கள் ..." மீராவை கூர்ந்து பார்த்தபடி கூறினாள் .

" அப்படி பிடிபடுகிறவரா உன் அண்ணன் ...? " நாத்தனாரின் மறைமுக பேச்சுக்கு ஒரு மறைமுக கேள்வி கேட்டாள் .

" ஏன் பிடிபடாமல் ...? அதெல்லாம் மாட்டுவார். ...நீங்கள் மட்டும் வலையை கொஞ்சம் ஸ்ட்ராங்காக போட்டு வையுங்கள் ..." என கண்களை சிமிட்டி விட்டு உள்ளே சென்றாள அவள் .

இரண்டாவது இரவை எதிர் நோக்கியிருக்கும் அண்ணன் மனைவிக்கான நாத்தனாரின் சாதாரண கேலியாக இதனை எடுத்துக் கொள்ள முடியவில்லை மீராவால்  .இதில் ஏதோ அர்த்தம் இருப்பது போல் தெரிந்த்து .

எவ்வளவு அடர்த்தியாக வலை விரித்தாலும் ,காற்று அதில் சிறைபடுமா

...? இவன் காற்றைப் போல் அல்லவா பரவுகிறான் ...வேப்ப மரத்தின் முன்புறமிருந்த நீளமான கருங்கல்லின் மேல் அமர்ந்து கொண்டாள் மீரா .அந்த இடம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்த்து .ஏனோ மன இறுக்கங்களெல்லாம் அங்கே வந்த்தும் தளர்வதாக உணர்ந்தாள் .

பாட்டி வீட்டினுள் குருநாதனுடன் , சுந்தரியும் , பிரவீணாவும் இருப்பது தெரிந்த்து .மூவரும் ஏதோ தீவிரமாக பேசிக்கொண்டிருந்தனர் .சட்னி அரைத்துக் கொண்டிருந்த அத்தை எப்போது இங்கு வந்தார்கள் .நான் கவனிக்கவில்லையே ...அவர்களை பார்த்துக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தாள் மீரா.

அப்போது வீட்டின் பின் வாசலில் நந்தகுமாரன் வந்து நின்றான் .அவன் பார்வை பாட்டி வீட்டை நோக்கி இருந்த்து .மீரா இருக்குமிடம் இருளாக இருந்ததால் அவளை நந்தகுமார் கவனிக்கவில்லை .பாட்டி வீட்டை நோக்கி நடக்க தொடங்கினான் .

அவனும் அங்கே போனதும் ஒரு தீவிர விவாதம் அங்கே நடைபெறுவது தெரிந்த்து .சத்தம் கேட்காமல் செய்கைகளை மட்டுமே பார்க்க முடிவது ஏதோ நிழற்படம் பார்ப்பது போல் மீராவுக்கு தோன்றியது .ஏனோ அவர்களின் விவாதம் அவளுக்கு வயிற்றினுள் அமிலம் சுரக்க செய்த்து .ஏனோ அது தன்னைப் பற்றியதுதான் என தோன்றியது அவளுக்கு .

வாத்த்தின் பெரும் பகுதியை நந்தகுமாரே ஆக்ரமித்திருந்தான் . கைகளை ஆட்டி எதையோ தீவிரமாக மறுத்துக் கொண்டிருந்தான் .ஒரு வேளை ...அது என்னையோ ...? மீராவின் மனம் தடதடத்தது .சே ...அப்படியெல்லாம் இருக்காது ..வேறு ஏதோ பிரச்சினை .தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் .

உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த குருநாதன் , சுந்தரியையும் , நந்தகுமாரையும் நோக்கி ஆட்காட்டி விரலை நீட்ட எச்சரிக்கை போல் ஏதோ கூறிவிட்டு , விடுவிடுவென வீட்டினுள் சென்று விட்டார் .

பிரவீணா சுந்தரியை சமாதானப் படுத்துவது போல் ஏதோ கூறியபடி , அவளை வீட்டினுள் அழைத்து சென்றாள் .

நந்தகுமார் நின்று பாட்டியிடம் ஏதோ சொல்லிவிட்டு , பாட்டி வீட்டின் கதவை மூடிவிட்டு , மெல்ல வீட்டை நோக்கி நடக்க துவங்கினான் .என்ன பிரச்சினை இவர்களுக்குள் ....? மிக தளர்ந்த நடையுடன் சென்று கொண்டிருந்த கணவனை கவலையாக பார்த்துக் கொண்டிருந்த மீரா திடுக்கிட்டு எழுந்தாள் .

வீட்டினுள் போக நடந்து கொண்டிருந்த நந்தகுமார் திடுமென நினைத்தாற் போல் நின்று , பின் இவள் இருக்கும் தசை நோக்கி வரத் துவங்கினான் .

என்னை பார்த்து விட்டாரா ...? இல்லையே இங்கே இருட்டாக இருக்கிறதே ...நான் தெரிய மாட்டேனே ...நினைத்தபடி மெல்ல பின்னால் நகர்ந்து , மரத்தின் பின்னால் போய் நின்று கொண்டாள் .நேராக அவளிருக்கும் இடத்திற்கே வந்த நந்தகுமார் , அந்த கருங்கல்லின் மேல் அமர்ந்து கொண்டான் .

கைகளை பின்னால் ஊன்றி , கால்களை நீட்டி அமர்ந்து அண்ணாந்து வானத்தை பார்த்தவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்து போனான் .ஓ...இவன் என்னைப் போலவே தனிமை வேண்டி இங்கே வந்துள்ளான் போல ...

நிலவின் கீற்றொளியில் அண்ணாந்து பார்த்திருந்த அவனது அசையாதோற்றம் , எப்போதோ ஏதோ ஓர் கோவிலில் பார்த்த அரசனின்  சிற்பத்தை நினைவூட்டியது மீராவுக்கு .எடுப்பான அந்த மூக்கும் , நெற்றியில் படர்ந்த சுருள் முடியும் , அடர்ந்த மீசையும் அந்த அரை இருளில் வித்தாயாச தோற்றம் காட்ட ,முகம் தாண்டி இறங்கிய விழிகளில் பட்ட  அவனது விரிந்த தோள்கள் மீராவின் மனதை என்னவோ செய்த்து . தனை மறந்து அவனால் ஈர்க்கப்பட்டுக் கொண்டிருந்தவள் , அவன் திடீரென ஒரு கல்லை எடுத்து கீழே எறிந்தபடி " சை " என்க திகைத்தாள் .

மீண்டும் அடுத்ததாக அவன் எறிந்த கல் அவனது கோபத்தை ...இயலாமையை சொன்னது .மீராவிற்க்கு உள்ளத்தில் சொரேலென்றது .யார் மீதுள்ள வெறுப்பை இப்படி காட்டுகிறான் ...? தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு , அது நானாக இருக்காது ...தனக்கு தானே சமாதானமும் செய்து கொண்டாள் .

அப்போது " நந்து ..." என அழைத்தபடி சுந்தரி வந்தாள் .அங்கே வந்து மகனின் அருகே கல்லில் அமர்ந்து கொண்டாள் .

" இங்கே என்ன செய்கிறாய் ...? "

நந்தகுமார் பதில் சொல்லவில்லை .

" மீராவை  பார்த்தாயா ...? வீட்டினுள் இருந்தாற் போலில்லை ..."

அன்னைக்கு பதில் கூறும் எண்ணம் நந்தகுமாருக்கு இருப்பது போலில்லை .

" நந்து உன் பொண்டாட்டியை பார்த்தாயா என்று கேட்டேன் ." குரலை உயர்த்தி கேட்டாள் .

" ப்ச் ...எனக்கு தெரியாதும்மா ..." எரிச்சல் கொப்பளித்தது அவன் குரலில் .

" ம் ...உள்ளே ரூமினுள் இருக்கிறாளோ என்னவோ ...?ீபோ ...போய் பாரு ..."

" சும்மா இருங்கம்மா .நீங்க போங்க நான் பிறகு வருகிறேன் ..."

" தேவையில்லாததை யோசித்து மனதை குழப்பிக் கொள்ளாதேப்பா ...," மகனின் தலையை வருடினாள் .

" எதும்மா தேவையில்லாதது .பத்து வருடங்களாக இவள்தான் உன் மனைவி என்று ஒருத்தியை காட்டி வளர்த்து விட்டு , இன்று இன்னொருத்தியை மனைவி என்று கை காட்டுகிறீர்களே ...இது என்னம்மா நியாயம் ...? "

https://telegram.me/aedahamlibrary

," தலையெழுத்துப்பா . என் தலையில் எழுதிய துரதிர்ஷ்டம் உன் தலையிலும் எழுதப்பட்டிருக்கிறது .நான் வேறு என்ன சொல்ல ...? " சுந்தரி மிகுந்த வருத்தத்துடன் கூறினாள் .

" உங்கள் இயலாமைக்கு எதையாவது காரணம் காட்டாதீர்கள் அம்மா .உங்களால் முடியவில்லையென்றால் என் பொறுப்பிலாவது எல்லாவற்றையும் விட்டு விட வேண்டும் . அதையும் பாட்டியை பேசாதே , அப்பா ஜாக்கிரதை என சொல்லி சொல்லி வளர்த்து ...இதோ இப்போது அவர்கள் இருவரும் என் தலையிலேயே கை வைத்துவிட்டனர் ...."

" நான் வேறு என்னப்பா செய்யட்டும் .அப்படி உன் வாயை பொத்தி வளர்த்ததால்தான் உன் அப்பா இப்போது நம் வீட்டு வராண்டாவிலாவது தங்கிக் கொண்டிருக்கிறார் .இலலையென்றால் எப்போதோ வீட்டை விட்டு போயிருப்பார் ."

" அப்படி கோபித்து கொண்டு போவதானால் போகட்டுமே ..." சொல்லி முடிக்கு முன் அவன் வாயை பொத்தி யிருந்தாள் சுந்தரி .

" நந்து ..." அதட்டினாள் ." நான் இந்த வீட்டில் இருக்கவா ...இல்லை போய்விடவா ...? "

நந்தகுமார் அமைதியானான் .சிறிது நேரம் இருவரும் பேசாமல் இருந்தனர் .

" பத்து வருடங்கள் அம்மா .மிருணாளினியை என் மனைவியாகவே நினைத்து வந்திருக்கிறேன் .திடீரென நேற்று வந்த ஒருத்தியை இனி இவள்தான் உன் வாழ்க்கை என்கிறீர்களே .எனக்குள் இருப்பது இதயம் அம்மா .இரும்பு அல்ல ..." குரல் நெகிழ பேசிய நந்தகுமார் அப்படியே தன் தாயின் மடியில் தலை வைத்து சாய்ந்து கொண்டான் .

" என்னப்பா செய்ய ..? மிருணாளினி என் அண்ணன் மகளாக பிறந்து தொலைத்து விட்டாளே ...அதனால் தானே உன் அப்பாவிற்கும் , பாட்டிக்கும் அவளை பிடிக்காமல் போய்விட்டது " சுந்தரி விசும்பியபடி மகனின் தலை கோதினாள் .

" இல்லைம்மா என்னால் இவளுடன் மனம் ஒன்றி வாழ முடியுமென்று தோன்றவில்லை ."

https://telegram.me/aedahamlibrary

" நந்து நீ மீராவோடு நல்லபடியாக வாழாவிட்டால் , நான்தான் உன்னை ஏதோ சொல்லி வாழவிடாமல் செய்கிறேன் என என் மீது கூசாமல் பலி போடுவார்கள் உன் அப்பாவும் , பாட்டியும் .அவர்களை உனக்கு தெரியுமல்லவா ...? "

" எப்படிம்மா ...இது வாழ்க்கை அம்மா .நினைத்தபடி மாற்றிக் கொள்ள முடியாதம்மா மனதை ..."

" முடியும்பா .உன் பாட்டியும் , அப்பாவும் தேர்ந்தெடுத்தாலும் மீரா அருமையான பெண்ணாக தெரிகிறாள் .நீயே பார்த்தாயல்லவா ...? நிச்சயம் உன்னால் அவளுடன் ஒரு நல்ல வாழ்வு வாழ முடியும் "

" ம்ப்ச் ...நான் அவளை பார்க்கவில்லை ..."

" உஷ் ..நந்து அப்படி சொல்லாதே .அவள் உன் மனைவி .இந்த நிலையிலிருந்து நீ மாறுவாயானால் நான் உன்னை மன்னிக்கவே மாட்டேன் ..."

" ஏன்மா நீங்களும் சேர்ந்து என்னை வதைக்கிறீர்கள் ...? " அம்மாவின் மடியிலிருந்து எழுந்து கொண்டு  வெறுப்பாக கேட்டான் .

" வதைக்கவில்லையடா .வாழ்ந்து பார் என்று சொல்கிறேன் .நீ எழுந்திரு .வா உள்ளே போகலாம் ..." வலுக்கட்டாயமாக மகனை எழுப்பி உள்ளே இழுத்து சென்றாள் சுந்தரி .

அம்மா , மகன் பேசிய அனைத்தையும் ஒரு வார்த்தை விடாமல் தெளிவாக கேட்டுவிட்ட மீரா அளவில்லாத அதிர்ச்சியில் , மின்னல் தாக்கிய பூங்கொடியாக, அந்த மரத்தின் பின்புறம் சரிந்திருந்தாள் .

திருமணம் நிச்சயமான தினத்திலிருந்து புதிராக இருந்த பல விசயங்கள் , இப்போது அவளுக்கு எளிதாக விளங்கியது .

ஆக அவளது மணவாழவு , அடுத்தொருத்தியை இப்போது வரை மனதில் சுமந்து திரியும் , இவளை இன்னமும் கண்ணெடுத்தும் பாராத ஒரு ஆணுடன் .இது அவளது பெண்மைக்கு எவ்வளவு பெரிய அவமானம் ...? இப்படி ஒரு வாழ்வு அவளுக்கு தேவையா ...?

வேண்டாம் எவ்வளவு பெரிய பின்விளைவுகளை கொடுத்தாலும் இந்த வாழ்வு அவளுக்கு வேண்டாம் .பொழுது விடிந்தவுடனேயே தனது அம்மா வீட்டிற்கு சென்று விட வேண்டுமென்று முடிவெடுத்தபடி , அந்த இடத்தை விட்டு எழுந்து வீட்டினுள் சென்றாள் .

https://t.me/aadahamlibrary

இதே முடிவே மனம் முழுவதும் நிறைந்திருக்க , இரவு அறையினுள் நுழைந்தும் ...

" ஒரு வாரமாக திருமண வேலைகள் .அலைச்சல் அதிகம் .அதனால் மிகவும் டயர்டாக இருக்கிறது .நான் தூங்க போகிறேன். " நந்தகுமாரின் முகத்தை பார்க்காமலேயே இதை ஒப்பித்துவிட்டு , ஒரு பாயை எடுத்து தரையில் விரித்தவள் அவனுக்கு முதுகு காட்டியபடி படுத்து கண்களை இறுக மூடிக்கொண்டாள் .
இது போல்தானே நேற்று என்னிடம் பேசி , என்னை அலட்சியப்படுத்தினாய் .இன்று எனது முறை ...மனதிற்குள்ளாக அவனுடன் பேசியபடி தூங்க முயற்சித்தாள் .

ஒரு ஐந்து நிமிடம் தயங்கிய பின்பு அறையின் விளக்கு அணைந்தது .பத்து நிமிடங்களில் நந்தகுமாரின் ஆழ்ந்த சுவாசம் கேட்டது .

நல்லவேளை தூங்கிவிட்டாளென்று நிம்மதியாக தூங்குகிறான் பார் ...கணவனை பொறுமியபடி , இவ்வளவு நேரம் பயந்து , பயந்து விட்டுக் கொண்டிருந்த மூச்சை சுதந்திரமாக வெளியேற்றியவள் , தனது இந்த நிலைக்காக சத்தமின்றி விசும்ப ஆரம.பித்தாள் .

5

உதவாதென உதறிவிட்டு
திரும்பும் முன்
அறை முழுவதும் நிரம்பிவிடுகிறாய் ,
இலை முழுதும் சோறுடன்
சிறிது இறுமாப்பும் அள்ளி வைக்கிறாய் ,
சாகும் வரையிலும்
சண்டையிட்டுக்கொண்டே இருப்போம் ,
முடிவில் மீசை நுனி முறுக்க மட்டும்
மறந்துவிடாதே ...

மருதாணி சிவப்புடன் அந்த நீண்ட விரல்கள் தனது தட்டில் பரிமாறுவதை பார்த்தபடியிருந்தான் நந்தகுமார் .அழகான விரல்கள்தான் .விரல் மட்டும் பார்க்கும் யாரையும் நிமிர்ந்து முகம் பார்க்க நினைக்க தூண்டும் விரல்கள் .ஆனாலும் அப்படி நிமிர்ந்து முகம் பார்க்க எண்ணாமல் தட்டிலிலுள்ள இட்லிகளை எண்ணிக்கொண்டிருந்தான் நந்தகுமார் .

https://telegram.me/aedahamlibrary

அதேபோல் அவனது முகம் பார்க்கும் எண்ணமின்றி அதே இட்லிகளைத்தான் மீராவும்  எண்ணிக்கொண்டிருந்தாள் .சுந்தரியின் சொல்படித்தான் இந்த பரிமாறுகிற வேலையை அவள் செய்து கொண்டிருந்தாள் . அவள் மனம் போலென்றால்  நந்தகுமார் சாப்பிட கிச்சனிற்குள் வரவும் , அவள் அந்த வேப்பமரத்தடி கல்லுக்கு ஓடியிருக்க வேண்டும் .ஆனால் மாமியாரின் உத்தரவு ...வெளியே செல்ல முடியாமல் இப்படி சட்னியை ஊற்றிக் கொண்டிருக்கிறாள் .

ஊற்றிய சட்னியில் இட்லியை தோய்த்து வாயில் வைத்த நந்தகுமார் , சட்டென இருமி ..தூ..தூவென ...வாயிலிருந்த்தை துப்பினான் .அலுப்பான பார்வை ஒன்றுடன் நிமிர்ந்து மீராவை பார்த்து , கைகளை கன்னத்தில் தாங்கினான் .என்னதிது ..???எனக் கேட்ட அவனது பார்வைக்கு விழித்தாள் மீரா .

அப்போது அவசரமாக உள்ளே நுழைந்த சசிகுமார் " அம்மா எங்கே ...? எனக்கு லேட்டாயிடுச்சு ..." கத்தியபடி ஹாட்பேக்கிலிருந்து இரண்டு இட்லிகளை எடுத்து , தட்டில் போட்டுக் கொண்டு சடனி ஊற்றி சாப்பிட

ஆரம்பித்தான் .முதல் வாயிலேயே அவசரமாக தட்டை கீழே வைத்தவன் " உவ்வே ...தூ ...தூ ..." என இட்லியை துப்பிவிட்டு சின்க்கில் வாயை கொப்பளித்தான் .

" அம்மா ....சட்னி யார் அரைத்தது ...? பொரிகடலைக்கும் பதிலாக உப்பையே போட்டீர்களா ...? அண்ணியாரே ..இது உங்க வேலையா ...? " வாயை கொப்பளித்தபடி கேட்டான் .

மீரா நாக்கை கடித்தாள் .மறதியாக இரண்டு தடவை உப்பை போட்டு தொலைத்தேனா ....?

" சாரி ...சாரி ..நான் கவனிக்கவில்லை...." கொழுந்தனிடம் வாயால்

கேட்ட மன்னிப்பை கணவனிடம் கண்ணால் கேட்டாள் .

இப்போதுதான் அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றிய நந்தகுமார் " டேய் எங்கே போகிறாய் ...? " தம்பியிடம் கேட்டான்.

" எனக்கு காலேஜுக்கு நேரமாச்சுண்ணா ..."

" சட்னியை வச்சுடு .சாம்பார் தொட்டு சாப்பிட்டு போ ....அவனுக்கு சாம்பார் ஊற்று ..." மீராவிடம் இதை கூறியபோது அவனது பார்வை மீண்டும் தட்டிற்கு சென்றிருந்த்து .

https://telegram.me/aedahamlibrary

இருவருக்கும் வேறு தட்டு வைத்து பரிமாறியபடி மீண்டுமொரு முறை " சாரி ...." என்றாள் .

" அண்ணி தயவுசெய்து சொல்லிடுங்க .உங்களுக்கு சமைக்க தெரியுமா ...? தெரியாது ...? "

" இல்லை நான் நன்றாக சமைப்பேன் .இன்று ...புது இடம் ....அதுதான் கொஞ்சம் தடுமாற்றம் ..." சகோதர்ர்கள் இருவருக்கும் சேர்த்தே விளக்கினாள் .

" தெரியவில்லையென்றால் முதலிலேயே சொல்லிவிடுங்கள் அண்ணி .அதற்கேற்றாற் போல் நான் என்னை தயார் படுத்திக்கொண்டு சாப்பிட வருவேன் ..."

" டேய் போதும்டா ...உனக்கு நேரமாகலை .சீக்கிரம் சாப்பிட்டு போ ...." தம்பியை எழுப்பினான் நந்தகுமார் .

" அண்ணி எனக்கு மதிய சாப்பாடு காலேஜ் கேன்டீன்லதான் .ஈவ்னிங் வரும் போது அம்மா டிபன் தயாராக வைத்திருப்பார்கள் . எதற்கும்

இன்று ஒருநாள் மட்டுமாவது , அந்த டிபனை அம்மாவையே செய்ய சொல்லி விடுகிறீர்களா ....? "

," பார்த்தீங்களா ...திரும்ப ..திரும்ப ...கிண்டல் பண்றீங்களே ...இதற்காகவாது இன்று மாலை உங்களுக்கு டிபன் நான்தான் செய்ய போகிறேன் .சாப்பிட்டு பாரத்துவிட்டு அப்புறம் சொல்லுங்கள் .,"

" ம் ...என் விதியை மாற்ற யாரால் முடியும் ...? அண்ணா எதற்கும் நம்ம தெரு டாக்டரை ஈவினிங் ரெடியாக இருக்க சொல்லுங்கள் அண்ணா .அவசர கேஸ் ஒன்று வரலாமென்று சொல்லி வையுங்கள் ..."

"வாய் ஓவர்டா உனக்கு ..." சொல்லியபடி தம்பியின் தலையில் விளையாட்டாக கொட்டிய நந்தகுமாரின் பார்வை அநிச்சையாக மீராவின் முகத்தில் பதிய , அவளும் சங்கடமான புன்னகையோடு சசிகுமாரிடமிருந்து நகர்ந்த பார்வையை நந்தகுமாரின் மேல் போட்டாள் .

விநாடிக்கும் குறைவான நேரத்தில் சந்தித்து பிரிந்த தம்பதிகளின் பார்வை இருவருக்கும் எதையோ உணர்த்த முயன்று தோற்றது .

" ஏய் ..என்னடா இரண்டு பேரும் இன்னமும்  வெளியேறவில்லையா ...? " கேட்டபடி உள்ளே வந்த சுந்தரி தட்டில் குருநாதனுக்காக இட்லியை பரிமாறிக் கொண்டு , சட்னி கிண்ணத்தை தூக்க முயல , சிறு பதட்டத்துடன் அதனை தடுத்தாள் மீரா.உடனே சட்டென முகம் சிவந்தாள் .

சட்னி கிண்ணத்தை தூக்க முயன்ற தாயின் கைகளை பிடித்திருந்தான் நந்தகுமார் .அதே முயற்சியில் இருந்த மீராவின் கைகள் நந்தகுமாரின் கைகள் மேல் இருந்தன.

" என்னடா ...? " எனக் கேட்ட சுந்தரியை கவனிக்காது ஒருவரையொருவர் பார்த்தபடியிருந்தனர் இருவரும் .முதலில் விழித்துக் கொண்ட மீரா , கணவனின் கை மீது படிந்திருந்த தனது கைகளை பார்த்ததும் கலவரமாகி அவசரமாக தனது கைகளை எடுத்துக் கொண்டாள் .

" அம்மா சட்னி வேண்டாம்மா ...அதில் உப்பு கொஞ்சம் அதிகமாக இருக்கிறது .சாம்பார் கொண்டு போங்க ..." தாயிடம் கூறினான் நந்தகுமார் .

https://telegram.me/aedahamlibrary

" என்னது கொஞ்சம் அதிகமாக ...? அண்ணா அண்ணிக்கு சப்போர்ட் பண்ண வேண்டியதுதான் .அதற்காக இப்படியா ...? அம்மா உப்பு டப்பாவில் பாதி சட்னிக்குள்தான் கிடக்கிறது ..." கை கழுவியபடி சொன்னான் சசிகுமார் .

உன் அண்ணன்தானே ..எனக்கு சப்போர்ட் பண்ணிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார் மனதிற்குள் நினைத்தபடி டேபிள் விளிம்பை விரலால் கீறினாள் மீரா .

" டேய் ஓடிடு .இல்லை என்கிட்ட உதை படுவாய் ...." நந்தகுமார் தம்பியை விரட்டினான் .

சட்னி கிண்ணத்தை திறந்து பார்த்த சுந்தரி " ம் ...இவ்வளவு சடனியும் வேஸ்ட்டா ...? எனக்குன்னு வந்து சேருது பாரு ...." முணுமுணுத்தபடி சாம்பாருடன் நகர்ந்தாள் .

முகம் கன்ற அடுப்பு பக்கம் திரும்பிக் கொண்ட  மீராவின் ◌ காதில் " செய்து விட்டு டேஸ்ட் பார்த்திருக்கலாமில்லையா ....? " என்ற நந்தகுமாரின் கேள்வி விழுந்த்து .

ஏற்கெனவே சசிகுமாரின் கேலியிலும் , சுந்தரியின் வசவிலும் சோர்ந்திருந்த மீராவை நந்தகுமாரின் இந்த கேள்வி கோபமூட்டியது . " ம் ..." என்ற ஒரு சொல்லும் சொல்ல மனமின்றி அடுப்பை வெறித்தபடி நின்றிருந்தாள் .

" திவ்யா குட்டி கிளம்பலாமா ...? உன் அம்மாவை எங்கே ...? " வெளியே ஒரு ஆண்குரல் கேட்டது .

தனது பதிலுக்காக காத்திருந்த கணவனை உணராமல் , இந்த குரலினால் கவனம் கலைந்தாள் மீரா..இந்த குரல் ...

ஒரு பெருமூச்சுடன் அவளை பார்த்துவிட்டு நகர்ந்தான் நந்தகுமார் .

" வாங்க மச்சான் ...." வெளியே சென்று வரவேற்றான் .

" என்ன புது மாப்பிள்ளை , எப்படி இருக்கீங்க ...? " நந்தகுமாரிடம் கண் சிமிட்டினான் அவன் குமரேசன் .பிரவீணாவின் கணவன் .

" நாங்க கிளம்பிட்டோம் .நீங்க சாப்பிடுங்க போகலாம் " என வந்தாள் பிரவீணா .

" நான் சாப்பிட்டுத்தான்மா வந்தேன் .இப்போ கிளம்பினாதானே

https://telegram.me/aedahamlibrary

திவ்யாவை ஸ்கூலில் விட்டுட்டு போக முடியும் ...கிளம்பு .என்னம்மா ..எப்படி இருக்கிறாய் ...? " கிச்சன் வாசலில் வந்து நின்ற மீராவை விசாரித்தான் அவன் .

சிந்தனையோடு அவனை பார்த்தபடி வெறுமனே தலையசைத்த மீராவை பார்த்த நந்தகுமார் பின்னால் நகர்ந்து அவளருகே வாசலில் சாய்ந்து நின்று கொண்டு " அவர் பிரவீணா அக்காவின் கணவர் .உனக்கு அண்ணன் முறை .தெரியுமில்லையா ...? " என்றான் .

கணவனின் அறிவுறுத்தல் புரிந்த்து அவளுக்கு .இந்த வீட்டு மாப்பிள்ளை அவர் .உரியபடி பேசு என்கிறான்.

" நல்லாயிருக்கேன் அண்ணா .நீங்க எப்படி இருக்கீங்க ...? " சம்பிரதாயமாக கேட்டு வைத்தாள் .

," நான் நல்லாயிருக்கிறேன. நீங்களும் நல்ல்ல்லா ..இருக்கிறது போலத்தான் தெரிகிறது ...." புது மணமக்களை கிண்டல் பண்ணும் ஆவல் குமரேசன் குரலில் .

இப்போது எதற்கு இந்த கேலி ...? புரியாமல் விழித்த கணவனும் , மனைவியும் ...சட்டென அவசரமாக நகர்ந்து தள்ளி நின்று கொண்டனர் .குமரேசனை பற்றி மீராவுக்கு தெரிய வைக்க வேண்டி குரலை குறைத்து பேச , அவளருகே நெருங்கி நின்றிருந்தான் நந்தகுமார் .மீராவின் சேலை நுனி நந்தகுமாரின் தோள்களை தீண்டிக்கொண்டிருக்கும் அளவு நெருக்கமாக ...

சிறு குழப்பத்தில் இருந்ததால் இந்த நெருக்கத்தை கவனிக்காமல் விட்டிருந்தாள் மீரா.அக்கா கணவருக்கு மரியாதை தர வைக்கும் நோக்கில் அவனும் கவனிக்காமல் இருந்திருக்க வேண்டும் ...என நினைத்துக்கொண்டாள் .

" வேண்டாம் ..மச்சான் ...." சிரித்தபடி அவனை எச்சரித்நான் நந்தகுமார் .

" இது வேண்டாமா ...? " தனது சட்டை பாக்கெட்டிலிருந்து இரண்டு டிக்கெட்களை எடுத்து காண்பித்தான் .

" பொன்னியின் செல்வன் டிராமாவிற்கு இரண்டு டிக்கெட் .போய்விட்டு வருகிறீர்களா ...? "

மீராவின் விழிகள் விரிந்தன . அவளது பேவரைட் நாவல் அது .டிராமாவாக வந்த்திலிருந்து அதனை பார்க்க வேண்டுமென்று

ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள் .ஏதோ காரணங்களால் தட்டிப் போய் கொண்டேயிருந்த்து .

" ஐ ...எனக்கு ரொம்ப பிடிக்கும். ரொம்ப நாளாக பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன் ...." உற்சாகத்துடன் சொன்னவள்  கிட்டதட்ட இதே போன்ற வார்தைகளே , ஆண் குரலில் காதில் விழ திரும்பி பார்த்தாள் .

இதனையே நந்தகுமாரும் சொல்லிக் கொண்டிருந்தான் .திரும்பி மீராவை  பார்த்த நந்தகுமாரின் கண்களில் ஆச்சரியம் வந்த்து.

" அட..டா ....என்ன ஒற்றுமையான தம்பதி ..." குமரேசன் கிண்டலை

தொடர,

" உனக்கு பொன்னியின் செல்வன் பிடிக்குமா ...? " ஆச்சரியமாக அவளை பார்த்து கேட்டான் நந்தகுமார் .இதுதான் அவன் முதன்முதலாக அவளை நேரிடையாக முகத்தை பார்த்து கேட்ட கேள்வி .

" ரொம்ப பிடிக்கும்..." தரையை பார்த்தபடி பதில் கூறினாள் அவள் .

" டிக்கெட் கொடுங்க மச்சான் .நாங்கள் போகிறோம் ..." குமரேசனிடம் டிக்கெட்டை வாங்கிக் கொண்டான் .

https://telegram.me/aedahamlibrary

" புது மணத் தம்பதிகள் என்ஜாய் பண்ணுங்க ..." என்றுவிட்டு , சுந்தரி , குருநாதனின் விருந்தோம்பலை மறுத்துவிட்டு மனைவி , குழந்தையுடன் தனது வீட்டிற்கு கிளம்பினான் குமரேசன் .

அந்த பெரிய மிக்ஸியை பெட்டியோடு சேர்த்து தனது டி. வி . எஸ் பிப்டியின் பின்புறம் ஏற்ற சிரம்ப்பட்டுக் கொண்டிருந்த குருநாதனிடமிருந்து அதனை வாங்கி , அதனையும் மற்ற சாமான்களையும் வண்டியின் பின்புறம் எக்ஸ்டிராவாக போட்டிருந்த கேரியரில் அடுக்கி கட்டிக் கொடுத்தான் நந்தகுமார் .வண்டியை ஒரு முறை ஸ்டார்ட் பண்ணி சரி பார்த்தான் .

" பத்திரமாக போயிட்டு வாங்கப்பா ...."

இவ்வளவு வேலைகளுக்கும் குருநாதன் மகன் பக்கம் பார்க்கவில்லை ." ம் ...ம் ...." என்றபடி முகத்தை திருப்பியபடி வண்டியை எடுத்துக் கொண்டு போனார் .நந்தகுமாரும் தனது பைக்கில் கடைக்கு கிளம்பினான்

ஜூஸர் , வெஜிடபிள் கட்டர் , ப்ளாஸ்க் , டோஸ்டர் , மிக்ஸி போன்ற சாமான்களை மொத்த கடைகளில் வாங்கி , அவற்றை எளிய மக்களிடம் அவர்களின் வீட்டிற்கே கொண்டு போய் கொடுத்து , பணத்தை தவணை முறையில் வாங்கும் தொழில் குருநாதனுடையது .

நந்தகுமாரின் தொழிலும் அதேதான் .தந்தையின் இதே தொழிலைத்தான் அவனும் விரித்து பெரியதாக செய்து கொண்டிருந்தான் .ஊரின் முக்கிய கடைவீதியில் சிறியதாக ஆரம்பித்த கடை ,இன்று பெரிதாக ஷோரூமாக வளர்ந்திருந்த்து .

இந்த தொழிலை முழுக்க முழுக்க தந்தையின் உதவி சிறிதுமின்றி தானாகவே நந்தகுமார் ஆரம்பித்து இவ்வளவு தூரம் வளர்த்திருந்தான் .அதனால் குருநாதன் மகன் அழைத்த போது அவனுடன் அந்த வியாபாரத்தில் பங்கு கொள்ள மறுத்து விட்டார் .
தனது கடைசி காலம் வரை தனது தொழிலே தனக்கு போதுமென்று கூறிவிட்டார் .

" அவ்வளவு பிடிவாதமானவர் எங்கள் அப்பா ..." மீராவுக்கு குடும்ப விபரம் கூறினாள் மாளவிகா .

https://telegram.me/aedahamlibrary

" ஓ....அப்புறம் ..வேறு ...என்ன விபரங்கள் இருக்கிறது ...? "

" வேறு என்ன அண்ணி ...குடும்பத்தில் உள்ள எல்லோருடைய விபரங்களும் கூறிவிட்டேன் .அவ்வளவுதான் அண்ணி ..."

" இல்லையே ..மிருணாளினியை பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே ..." மெல்ல நாத்தனாரை துருவ தொடங்கினாள் மீரா

" மிருணாளினியா ....? " திரு திருவென விழிக்க ஆரம்பித்தாள் மாளவிகா .

# 6

முன்னெப்போதையும் விட வெக்கையள்ளி

வீசுகிறதிந்த வேனிற்காலம் ,
அள்ளி முடிந்த கொண்டைக்கூந்தலில்
நசநசக்கும் வியர்வை துளிகளை
எப்படி விலக்குவேன் ...??
கூடவே ...
பென்டுல மனதில் படபடக்கும் பட்டாம்பூச்சிகளையும் ....

மருதாணி சிவப்புடன் அந்த நீண்ட விரல்கள் தனது தட்டில் பரிமாறுவதை பார்த்தபடியிருந்தான் நந்தகுமார் .அழகான விரல்கள்தான் .விரல் மட்டும் பார்க்கும் யாரையும் நிமிர்ந்து முகம் பார்க்க நினைக்க தூண்டும் விரல்கள் .ஆனாலும் அப்படி நிமிர்ந்து முகம் பார்க்க எண்ணாமல் தட்டிலிலுள்ள இட்லிகளை எண்ணிக்கொண்டிருந்தான் நந்தகுமார் .

அதேபோல் அவனது முகம் பார்க்கும் எண்ணமின்றி அதே இட்லிகளைத்தான் மீராவும்  எண்ணிக்கொண்டிருந்தாள் .சுந்தரியின் சொல்படித்தான் இந்த பரிமாறுகிற வேலையை அவள் செய்து கொண்டிருந்தாள் . அவள் மனம் போலென்றால்  நந்தகுமார் சாப்பிட கிச்சனிற்குள் வரவும் , அவள் அந்த வேப்பமரத்தடி கல்லுக்கு ஓடியிருக்க வேண்டும் .ஆனால் மாமியாரின் உத்தரவு ...வெளியே செல்ல முடியாமல் இப்படி சட்னியை ஊற்றிக் கொண்டிருக்கிறாள் .

ஊற்றிய சட்னியில் இட்லியை தோய்த்து வாயில் வைத்த நந்தகுமார் , சட்டென இருமி ..தூ..தூவென ...வாயிலிருந்த்தை துப்பினான் .அலுப்பான பார்வை ஒன்றுடன் நிமிர்ந்து மீராவை பார்த்து , கைகளை கன்னத்தில் தாங்கினான் .என்னதிது ..???எனக் கேட்ட அவனது பார்வைக்கு விழித்தாள் மீரா .

அப்போது அவசரமாக உள்ளே நுழைந்த சசிகுமார் " அம்மா எங்கே ...? எனக்கு லேட்டாயிடுச்சு ..." கத்தியபடி ஹாட்பேக்கிலிருந்து இரண்டு இட்லிகளை எடுத்து , தட்டில் போட்டுக் கொண்டு சடனி ஊற்றி சாப்பிட ஆரம்பித்தான் .முதல் வாயிலேயே அவசரமாக தட்டை கீழே வைத்தவன் " உவ்வே ...தூ ...தூ ..." என இட்லியை துப்பிவிட்டு சின்க்கில் வாயை கொப்பளித்தான் .

" அம்மா ....சட்னி யார் அரைத்தது ...? பொரிகடலைக்கும் பதிலாக உப்பையே போட்டீர்களா ...? அண்ணியாரே ..இது உங்க வேலையா ...? " வாயை கொப்பளித்தபடி கேட்டான் .

மீரா நாக்கை கடித்தாள் .மறதியாக இரண்டு தடவை உப்பை போட்டு தொலைத்தேனா ....?

" சாரி ...சாரி ..நான் கவனிக்கவில்லை...." கொழுந்தனிடம் வாயால் கேட்ட மன்னிப்பை கணவனிடம் கண்ணால் கேட்டாள் .

இப்போதுதான் அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றிய நந்தகுமார் " டேய் எங்கே போகிறாய் ...? " தம்பியிடம் கேட்டான்.

" எனக்கு காலேஜுக்கு நேரமாச்சுண்ணா ..."

" சட்னியை வச்சுடு .சாம்பார் தொட்டு சாப்பிட்டு போ ....அவனுக்கு சாம்பார் ஊற்று ..." மீராவிடம் இதை கூறியபோது அவனது பார்வை மீண்டும் தட்டிற்கு சென்றிருந்த்து .

இருவருக்கும் வேறு தட்டு வைத்து பரிமாறியபடி மீண்டுமொரு முறை " சாரி ...." என்றாள் .

" அண்ணி தயவுசெய்து சொல்லிடுங்க .உங்களுக்கு சமைக்க தெரியுமா ...? தெரியாது ...? "

" இல்லை நான் நன்றாக சமைப்பேன் .இன்று ...புது இடம் ....அதுதான் கொஞ்சம் தடுமாற்றம் ..." சகோதர்ர்கள் இருவருக்கும் சேர்த்தே விளக்கினாள் .

https://telegram.me/aedahamlibrary

" தெரியவில்லையென்றால் முதலிலேயே சொல்லிவிடுங்கள் அண்ணி .அதற்கேற்றாற் போல் நான் என்னை தயார் படுத்திக்கொண்டு சாப்பிட வருவேன் ..."

" டேய் போதும்டா ...உனக்கு நேரமாகலை .சீக்கிரம் சாப்பிட்டு போ ...." தம்பியை எழுப்பினான் நந்தகுமார் .

" அண்ணி எனக்கு மதிய சாப்பாடு காலேஜ் கேன்டீன்லதான் .ஈவ்னிங் வரும் போது அம்மா டிபன் தயாராக வைத்திருப்பார்கள் . எதற்கும் இன்று ஒருநாள் மட்டுமாவது , அந்த டிபனை அம்மாவையே செய்ய சொல்லி விடுகிறீர்களா ....? "

," பார்த்தீங்களா ...திரும்ப ..திரும்ப ...கிண்டல் பண்றீங்களே ...இதற்காகவாது இன்று மாலை உங்களுக்கு டிபன் நான்தான் செய்ய போகிறேன் .சாப்பிட்டு பாரத்துவிட்டு அப்புறம் சொல்லுங்கள் .,"

" ம் ...என் விதியை மாற்ற யாரால் முடியும் ...? அண்ணா எதற்கும் நம்ம

தெரு டாக்டரை ஈவினிங் ரெடியாக இருக்க சொல்லுங்கள் அண்ணா .அவசர கேஸ் ஒன்று வரலாமென்று சொல்லி வையுங்கள் ..."

"வாய் ஓவர்டா உனக்கு ..." சொல்லியபடி தம்பியின் தலையில் விளையாட்டாக கொட்டிய நந்தகுமாரின் பார்வை அநிச்சையாக மீராவின் முகத்தில் பதிய , அவளும் சங்கடமான புன்னகையோடு சசிகுமாரிடமிருந்து நகர்ந்த பார்வையை நந்தகுமாரின் மேல் போட்டாள் .

விநாடிக்கும் குறைவான நேரத்தில் சந்தித்து பிரிந்த தம்பதிகளின் பார்வை இருவருக்கும் எதையோ உணர்த்த முயன்று தோற்றது .

" ஏய் ..என்னடா இரண்டு பேரும் இன்னமும் வெளியேறவில்லையா ...? " கேட்டபடி உள்ளே வந்த சுந்தரி தட்டில் குருநாதனுக்காக இட்லியை பரிமாறிக் கொண்டு , சட்னி கிண்ணத்தை தூக்க முயல , சிறு பதட்டத்துடன் அதனை தடுத்தாள் மீரா.உடனே சட்டென முகம் சிவந்தாள் .

சட்னி கிண்ணத்தை தூக்க முயன்ற தாயின் கைகளை பிடித்திருந்தான் நந்தகுமார் .அதே முயற்சியில் இருந்த மீராவின் கைகள் நந்தகுமாரின் கைகள் மேல் இருந்தன.

https://telegram.me/aedahamlibrary

" என்னடா ...? " எனக் கேட்ட சுந்தரியை கவனிக்காது ஒருவரையொருவர் பார்த்தபடியிருந்தனர் இருவரும் .முதலில் விழித்துக் கொண்ட மீரா , கணவனின் கை மீது படிந்திருந்த தனது கைகளை பார்த்ததும் கலவரமாகி அவசரமாக தனது கைகளை எடுத்துக் கொண்டாள் .

" அம்மா சட்னி வேண்டாம்மா ...அதில் உப்பு கொஞ்சம் அதிகமாக இருக்கிறது .சாம்பார் கொண்டு போங்க ..." தாயிடம் கூறினான் நந்தகுமார் .

" என்னது கொஞ்சம் அதிகமாக ...? அண்ணா அண்ணிக்கு சப்போர்ட் பண்ண வேண்டியதுதான் .அதற்காக இப்படியா ...? அம்மா உப்பு டப்பாவில் பாதி சட்னிக்குள்தான் கிடக்கிறது ..." கை கழுவியபடி சொன்னான் சசிகுமார் .

உன் அண்ணன்தானே ..எனக்கு சப்போர்ட் பண்ணிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார் மனதிற்குள் நினைத்தபடி டேபிள் விளிம்பை விரலால் கீறினாள் மீரா .

" டேய் ஓடிடு .இல்லை என்கிட்ட உதை படுவாய் ...." நந்தகுமார் தம்பியை விரட்டினான் .

சட்னி கிண்ணத்தை திறந்து பார்த்த சுந்தரி " ம் ...இவ்வளவு சடனியும் வேஸ்ட்டா ...? எனக்குன்னு வந்து சேருது பாரு ...." முணுமுணுத்தபடி சாம்பாருடன் நகர்ந்தாள் .

முகம் கன்ற அடுப்பு பக்கம் திரும்பிக் கொண்ட மீராவின் ் காதில் " செய்து விட்டு டேஸ்ட் பார்த்திருக்கலாமில்லையா ....? " என்ற நந்தகுமாரின் கேள்வி விழுந்த்து .

ஏற்கெனவே சசிகுமாரின் கேலியிலும் , சுந்தரியின் வசவிலும் சோர்ந்திருந்த மீராவை நந்தகுமாரின் இந்த கேள்வி கோபமூட்டியது . " ம் ..." என்ற ஒரு சொல்லும் சொல்ல மனமின்றி அடுப்பை வெறித்தபடி நின்றிருந்தாள் .

" திவ்யா குட்டி கிளம்பலாமா ...? உன் அம்மாவை எங்கே ...? " வெளியே ஒரு ஆண்குரல் கேட்டது .

தனது பதிலுக்காக காத்திருந்த கணவனை உணராமல் , இந்த குரலினால் கவனம் கலைந்தாள் மீரா..இந்த குரல் ...

https://telegram.me/aedahamlibrary

ஒரு பெருமூச்சுடன் அவளை பார்த்துவிட்டு நகர்ந்தான் நந்தகுமார் .

" வாங்க மச்சான் ...." வெளியே சென்று வரவேற்றான் .

" என்ன புது மாப்பிள்ளை , எப்படி இருக்கீங்க ...? " நந்தகுமாரிடம் கண் சிமிட்டினான் அவன் குமரேசன் .பிரவீணாவின் கணவன் .

" நாங்க கிளம்பிட்டோம் .நீங்க சாப்பிடுங்க போகலாம் " என வந்தாள் பிரவீணா .

" நான் சாப்பிட்டுத்தான்மா வந்தேன் .இப்போ கிளம்பினாதானே திவ்யாவை ஸ்கூலில் விட்டுட்டு போக முடியும் ...கிளம்பு .என்னம்மா ..எப்படி இருக்கிறாய் ...? " கிச்சன் வாசலில் வந்து நின்ற மீராவை விசாரித்தான் அவன் .

சிந்தனையோடு அவனை பார்த்தபடி வெறுமனே தலையசைத்த மீராவை பார்த்த நந்தகுமார் பின்னால் நகர்ந்து அவளருகே வாசலில் சாய்ந்து நின்று கொண்டு " அவர் பிரவீணா அக்காவின் கணவர் .உனக்கு அண்ணன் முறை .தெரியுமில்லையா ...? " என்றான் .

கணவனின் அறிவுறுத்தல் புரிந்த்து அவளுக்கு .இந்த வீட்டு மாப்பிள்ளை அவர் .உரியபடி பேசு என்கிறான்.

" நல்லாயிருக்கேன் அண்ணா .நீங்க எப்படி இருக்கீங்க ...? " சம்பிரதாயமாக கேட்டு வைத்தாள் .

," நான் நல்லாயிருக்கிறேன. நீங்களும் நல்ல்ல்லா ..இருக்கிறது போலத்தான் தெரிகிறது ...." புது மணமக்களை கிண்டல் பண்ணும் ஆவல் குமரேசன் குரலில் .

இப்போது எதற்கு இந்த கேலி ...? புரியாமல் விழித்த கணவனும் , மனைவியும் ...சட்டென அவசரமாக நகர்ந்து தள்ளி நின்று கொண்டனர் .குமரேசனை பற்றி மீராவுக்கு தெரிய வைக்க வேண்டி குரலை குறைத்து பேச , அவளருகே நெருங்கி நின்றிருந்தான் நந்தகுமார் .மீராவின் சேலை நுனி நந்தகுமாரின் தோள்களை தீண்டிக்கொண்டிருக்கும் அளவு நெருக்கமாக ...

சிறு குழப்பத்தில் இருந்ததால் இந்த நெருக்கத்தை கவனிக்காமல் விட்டிருந்தாள் மீரா.அக்கா கணவருக்கு மரியாதை தர வைக்கும் நோக்கில் அவனும் கவனிக்காமல் இருந்திருக்க வேண்டும் ...என நினைத்துக்கொண்டாள் .

https://telegram.me/aedahamlibrary

" வேண்டாம் ..மச்சான் ...." சிரித்தபடி அவனை எச்சரித்நான் நந்தகுமார் .

" இது வேண்டாமா ...? " தனது சட்டை பாக்கெட்டிலிருந்து இரண்டு டிக்கெட்களை எடுத்து காண்பித்தான் .

" பொன்னியின் செல்வன் டிராமாவிற்கு இரண்டு டிக்கெட் .போய்விட்டு வருகிறீர்களா ...? "

மீராவின்  விழிகள் விரிந்தன . அவளது பேவரைட் நாவல் அது .டிராமாவாக வந்த்திலிருந்து அதனை பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள் .ஏதோ காரணங்களால் தட்டிப் போய் கொண்டேயிருந்த்து .

" ஐ ...எனக்கு ரொம்ப பிடிக்கும். ரொம்ப நாளாக பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன் ...." உற்சாகத்துடன் சொன்னவள்  கிட்டதட்ட இதே போன்ற வார்தைகளே , ஆண் குரலில் காதில் விழ திரும்பி பார்த்தாள் .

இதனையே நந்தகுமாரும் சொல்லிக் கொண்டிருந்தான் .திரும்பி

மீராவை  பார்த்த நந்தகுமாரின் கண்களில் ஆச்சரியம் வந்த்து.

" அட..டா ....என்ன ஒற்றுமையான தம்பதி ..." குமரேசன் கிண்டலை தொடர,

" உனக்கு பொன்னியின் செல்வன் பிடிக்குமா ...? " ஆச்சரியமாக அவளை பார்த்து கேட்டான் நந்தகுமார் .இதுதான் அவன் முதன்முதலாக அவளை நேரிடையாக முகத்தை பார்த்து கேட்ட கேள்வி .

" ரொம்ப பிடிக்கும்..." தரையை பார்த்தபடி பதில் கூறினாள் அவள் .

" டிக்கெட் கொடுங்க மச்சான் .நாங்கள் போகிறோம் ..." குமரேசனிடம் டிக்கெட்டை வாங்கிக் கொண்டான் .

" புது மணத் தம்பதிகள் என்ஜாய் பண்ணுங்க ..." என்றுவிட்டு , சுந்தரி , குருநாதனின் விருந்தோம்பலை மறுத்துவிட்டு மனைவி , குழந்தையுடன் தனது வீட்டிற்கு கிளம்பினான் குமரேசன் .

அந்த பெரிய மிக்ஸியை பெட்டியோடு சேர்த்து தனது டி. வி . எஸ் பிப்டியின் பின்புறம் ஏற்ற சிரம்ப்பட்டுக் கொண்டிருந்த குருநாதனிடமிருந்து அதனை வாங்கி , அதனையும் மற்ற சாமான்களையும் வண்டியின் பின்புறம் எக்ஸ்டிராவாக போட்டிருந்த கேரியரில் அடுக்கி கட்டிக் கொடுத்தான் நந்தகுமார் .வண்டியை ஒரு முறை ஸ்டார்ட் பண்ணி சரி பார்த்தான் .

https://telegram.me/aedahamlibrary

" பத்திரமாக போயிட்டு வாங்கப்பா ...."

இவ்வளவு வேலைகளுக்கும் குருநாதன் மகன் பக்கம் பார்க்கவில்லை ." ம் ...ம் ...." என்றபடி முகத்தை திருப்பியபடி வண்டியை எடுத்துக் கொண்டு போனார் .நந்தகுமாரும் தனது பைக்கில் கடைக்கு கிளம்பினான்

ஜூஸர் , வெஜிடபிள் கட்டர் , ப்ளாஸ்க் , டோஸ்டர் , மிக்ஸி போன்ற சாமான்களை மொத்த கடைகளில் வாங்கி , அவற்றை எளிய மக்களிடம் அவர்களின் வீட்டிற்கே கொண்டு போய் கொடுத்து , பணத்தை தவணை முறையில் வாங்கும் தொழில் குருநாதனுடையது .

நந்தகுமாரின் தொழிலும் அதேதான் .தந்தையின் இதே தொழிலைத்தான் அவனும் விரித்து பெரியதாக செய்து கொண்டிருந்தான் .ஊரின் முக்கிய கடைவீதியில் சிறியதாக ஆரம்பித்த கடை  ,இன்று பெரிதாக ஷோரூமாக வளர்ந்திருந்த்து .

இந்த தொழிலை முழுக்க முழுக்க தந்தையின் உதவி சிறிதுமின்றி தானாகவே நந்தகுமார் ஆரம்பித்து இவ்வளவு தூரம் வளர்த்திருந்தான் .அதனால் குருநாதன் மகன் அழைத்த போது அவனுடன் அந்த வியாபாரத்தில் பங்கு கொள்ள மறுத்து விட்டார் .
தனது கடைசி காலம் வரை தனது தொழிலே தனக்கு போதுமென்று கூறிவிட்டார் .

" அவ்வளவு பிடிவாதமானவர் எங்கள் அப்பா ..." மீராவுக்கு குடும்ப விபரம் கூறினாள் மாளவிகா .

" ஓ....அப்புறம் ..வேறு ...என்ன விபரங்கள் இருக்கிறது ...? "

" வேறு என்ன அண்ணி ...குடும்பத்தில் உள்ள எல்லோருடைய விபரங்களும் கூறிவிட்டேன் .அவ்வளவுதான் அண்ணி ..."
" இல்லையே ..மிருணாளினியை பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே ..." மெல்ல நாத்தனாரை துருவ தொடங்கினாள் மீரா
" மிருணாளினியா ....? " திரு திருவென விழிக்க ஆரம்பித்தாள் மாளவிகா .

https://telegram.me/aedahamlibrary

6

அலைபேசி தழுவலுக்கு கூட
அகப்படுவதில்லை நீ ...
அன்று பேசிய வார்த்தையின்
கடைசி மெய்யெழுத்தின் மேற்புள்ளியைதான்
இன்னமும் உணர்ந்து கொண்டிருக்கிறேன்

" மிருணாளினியா ....???," அவளைப் பற்றி இப்போது எப்படி ...என்ன சொல்ல முடியும்...? கண்களை உருட்டி விழித்தாள் மாளவிகா .

" என்ன மாளு ...சத்தத்தையே காணோம் ...? "

" அது ...அண்ணி ...வந்து ..அவள் ...." இழுத்தாள் .

" ம் ...சொல்லு ..."

" அவளை எப்படி உங்களுக்கு தெரியும் ...? "

" தெரிந்து கொண்டேன் .சொல்லு .."

மதிய உணவு முடிந்த்தும் இருவருமாக அந்த வேப்பமரத்தடி கல்லில் வந்து உட்கார்ந்திருந்தனர் .

ஐய்யய்யோ நானும் பிரவீணா அக்காவை மாதிரியே காலையிலேயே என் வீட்டை பார்த்து ஓடியிருக்க வேண்டுமோ ...?அம்மா வீட்டில் கூட ஒருநாள் தங்க ஆசைப்பட்டது இப்போது எனக்கே பிரச்சினையாகி விட்டதே ....நகத்தை கடித்தபடி யோசித்தாள் .

" உன் ஆசைப்படியே நான் உன்னை மாளு என்றே அழைக்கிறேன் பார்த்தாயா ....? " மீரா மாளவிகாவின் அருகே அமர்ந்து அவள் கைகளை பிடித்துக்கொண்டாள் .

" அவள் ...எங்கள் தாய் மாமா மகள் . அம்மாவோட அண்ணன் மகள் . " திணறியபடி சொன்னாள் மாளவிகா .

" கல்யாணத்திற்கு அவர்கள் யாரும் வரவில்லையா ...? "

" அதுதான் பெரிய தகராறு ஆகிவிட்டதே .பிறகு எப்படி வருவார்கள் ....? "

https://telegram.me/aedahamlibrary

" என்ன தகராறு ..? "

" அண்ணி இதை உங்களிடம் சொல்லலாமோ ....கூடாதோ ...எனக்கு தெரியவில்லை .அண்ணன் உங்களிடம் எதுவும் சொல்லவில்லையா ...?.."

" இல்லை சொல்லவில்லை .நீ சொல்லு ..."

மாளவிகாவிறகு இப்போதும் சொல்ல விருப்பமில்லைதான் .இப்போது அண்ணியிடம் சொல்லிவிட்டு பிறகு அம்மாவிற்கு என்ன பதில் சொல்வது ...என்ற திண்டாட்டம்தான் ...ஆனாலும் இதோ அவளை ஒரு மனுஷியாக மதித்து , புன்னகையோடு அருகமர்ந்து கைகளை பற்றிக்கொண்டு மென்மையாக கேட்கும் இந்த புத்தம் புதிய அண்ணியை மறுக்க முடியவில்லை அவளால் ...இந்த அண்ணி வேறு அவளது ஆசைப்படியே அவளை " மாளு " என்று அழைப்பவள் .

" நான் சொல்லுவேன் அண்ணி .ஆனால் நான்தான் சொன்னதாக நீங்கள் யாரிடமும் சொல்லக்கூடாது ..." ஒற்றைவிரலை ஆட்டி கண்டிசன் போட்டாள் .

" இல்லை ...சொல்லு ..." பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு கேட்டாள் மீரா .

" அண்ணனுக்கும் மிருணாளினிக்கும்தான் திருமணம் என்பது ..எனது சிறுவயதிலிருந்தே ..அதற்கு முன்பு அண்ணனின் சிறுவயதிலிருந்தே முடிவு செய்யப்பட்ட விசயம் அண்ணி .மிருணா ...நான் அவளை அப்படித்தான் அழைப்பேன் . அண்ணி என்று அழைத்தால் அவளுக்கு பிடிக்காது .வயது அதிகமாக தெரிகிறது என்பாள் .அவள் என்னை விட இரண்டு வயது மூத்தவள் அண்ணி .ஆனால் அவளை பார்த்தால் அப்படி தெரியாது .சின்ன பெண் போல் இருப்பாள் ரொம்ப அழகாக இருப்பாள் .சந்தனம் போல் நல்ல நிறம் , வட்ட முகம் , நீள முடி ,பெரிய கண்கள் ....சிரித்தால் கன்னத்தில் அழகாக ஒரு குழி விழும் தெரியுமா ...? " மாளவிகா கண்களை மூடியபடி அந்த  மிருணாளினியை வர்ணிக்க ...

மீரா மிகவும் கடினப்பட்டு தன்னை அடக்கிக்கொண்டு உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அமர்ந்திருந்தாள் .

" அவளோட வாய்ஸ் அப்படியே குயில் கூவுவது போலிருக்கும் .அந்த மாதிரி குயிலாக கூவிக்கொண்டு அவள் ஒரு விசயம் கேட்டாளானால் , அதனை மறுக்கும் எண்ணம் யாருக்கும் வராது .எனக்கெல்லாம் அவளுடன் வெளியே போவதே மிகவும் பெருமையாக இருக்கும் தெரியுமா ...? என் ப்ரெண்ட்ஸ் கிட்டேயெல்லாம் இவள்தான் எனக்கு அண்ணியாக வரப்போகிறாள் என்று ரொம்ப பெருமையாக சொல்லிக்கொள்ளுவேன் .....அவள் ..."

https://telegram.me/aedahamlibrary

மாளவிகா தொடர்ந்து அந்த மிருணாளினியின் பெருமையையே பாடியபடி இருக்க , தானாக நிறுத்த வைக்காமல் இவளாக நிறுத்த மாட்டாளென உணர்ந்து கொண்ட மீரா ,அவள் தோள்களில் பட்டென தட்டினாள் .

" அவர்கள் திருமணம் ஏன் நடக்கவில்லை ...? " தனது வெறுமையை அடக்கிக்கொண்டு கேட்டாள் .

" இருங்கள் இதோ வருகிறேன் ...." என உள்ளே ஓடினாள் மாளவிகா .

என்ன கேட்டுக்கொண்டிருந்தால் இந்த பெண் என்ன செய்கிறது பார்

....விசயத்தை சொல்லாமல் விபரங்களை தட்டிக்கொண்டிருக்கிறாளே ...இவளை நான் இப்போது அவள் அழகை வர்ணித்து சொல்லென்றா கேட்டேன் .எழுந்த கோபத்தை பற்களை கடித்து அடக்கிக்கொண்டாள் மீரா .உலையில் போட்ட அரிசியாக கொதித்துக் கொண்டிருந்த்து அவள்

உள்ளம் .

நீ எந்த விபரமும் சொல்லவேண்டாமென்று எழுந்து போய்விடுவோமா ....? ஆனால் பிறகு அவளை பற்றி ...இந்த திருமணம் நின்றதை பற்றி யாரிடம் கேட்க முடியும் ...? இன்னமும் சிறுபிள்ளைத்தனம் மறையாத இவள் மட்டுமே தனக்கு அந்த விபரங்களை சொல்வாளென மீராவிற்கு தோன்ற ...மிகவும் கடினப்பட்டு தன்னை அங்கே அமர்த்திக்கொண்டிருந்தாள் .

திரும்பி வரும் போது கையில் ஒரு போட்டோ ஆல்பத்துடன் வந்தாள் மாளவிகா .

" அண்ணி மிருணாவிற்கு எந்த டிரஸ் போட்டாலும் அப்படியே பொருந்திவிடும் தெரியுமா ...? நிறைய சுடிதார்தான் போடுவாள் .அதை எப்படித்தான் அப்படி அழகாக தைத்து போடுவாளோ ...அளவெடுத்தது போல் அவள் உடலுடன் பொருந்தி நிற்கும் அது .சேலை கட்டி தலையில் பூ வைத்து வந்தால் கையெடுத்து கும்பிட தோன்றும் ...."என்றவள் குரலை தழைத்து " ஒரு தரம் யாருக்கும் தெரியாமல் அவளும் , நானும் ..ரூமிற்குள் வைத்து ஜீன்ஸ் , டாப்ஸ் கூட போட்டு பார்த்தோம் .ஜீன்ஸ் போடவும் பக்கா மாடர்ன் கேர்ள்ளா மாறிட்டா தெரியுமா ...? என்னா உடம்பு ஸ்ட்ர்க்சர் ....அவளுக்கு ...." மீராவிற்கு காதினுள் பஞ்சை திணித்து கொள்ளலாம் போலிருந்த்து .

" அண்ணி எங்கே எழுந்து விட்டீர்கள் ....? "

" நீ நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வது போல் தெரியவில்லை .நான் உள்ளே ஏதாவது வேலையிருந்தால் போய் பார்க்கிறேன் . " முயன்று வெற்றிடமாகிவிட்ட தொண்டையை செருமியபடி பேசினாள்.

" ஐயோ ...இல்லைண்ணி ...இதோ மிருணாவை உங்களுக்கு காட்டத்தான் இந்த போட்டோ கொண்டு வந்தேன் .பாருங்களேன் ....இதிலிருப்பது எல்லாம் போன வருடம் அவளது பிறந்தநாளன்று நம் வீட்டில் வைத்து எடுத்தது .ஆசையாக ஒவ்வொரு டிரஸ்ஸாக மாற்றி மாற்றி போட்டுக்கொண்டு எடுத்தாள் .அண்ணன்தான் எடுத்தார் ....பாருங்களேன் ..."

மாளவிகா காட்டிய போட்டோக்களை மனமின்றி பார்த்த மீராவின் விழிகள் வியப்பால் விரிந்த்து .அவள் ...அந்த மிருணாளினி ..மாளவிகா வர்ணித்ததெல்லாம் சும்மா என்பது போல் ...அப்படி ஒரு அழகுடன் இருந்தாள் .பாவாடை,தாவணி ..சுடிதார் என வகைவகையான

உடைகளில் விதவிதமான போஸ்களில் ....அந்த ஆல்பம் முழுவதும் நிரம்பியிருந்தாள் .

இவளை காதலித்த ஒருவனால் வேறொருத்தியுடன் வாழ்வதென்பது மிகவும் கடினம் என மீராவிற்கு தோன்றியது .அவளை எப்படியம்மா மறக்க முடியும் ...என முன்தினம் நந்தகுமார் புலம்பியது நினைவு வந்த்து .இவளை இழக்க வேண்டி வந்த்து அவனுக்கு மிகவும் துரதிர்ஷ்டம் என தோன்றியது .அவன் மேல் பரிதாபம் வந்த்து .

ஒன்றுக்குள் ஒன்று உறவான ...முன்பே நிச்சயிக்கப்பட்ட இவர்கள் திருமணம் எதனால் நின்றிருக்க கூடும் ...? இன்னமும் மிருணாளினியை பரவசத்துடன் புரட்டி , புரட்டி பார்த்துக்கொண்டிருந்த மாளவிகாவை பார்த்து ....

" இந்த கல்யாணம் ஏன் நடக்கவில்லை மாளு ...? " என்றாள் .

" எல்லாம் நம்ம பாட்டியாலதான் ...." கண்களை போட்டோவிலிருந்து எடுக்காமல் சொன்னாள் அவள் .

" பாட்டியா ....? அவர்கள் ஏன் ....? "

" மாளு ....மீரா ....." சுந்தரியின் குரல் கேட்டது .

https://telegram.me/aedahamlibrary

ஆல்பத்தை அவசரமாக தனது சேலையினுள் மறைத்தவள் " அண்ணி அம்மாகிட்ட சொல்லிடாதீங்க .நாம் பிறகு பேசலாம் ..." என்றுவிட்டு ஓடிவிட்டாள் .அதன்பிறகு அவளிடம் பேசும் சந்தர்ப்பம் மீராவிற்கு கிடைக்கவில்லை .ஏனெனில் அன்று மாலையே மாளவிகா அவளது கணவன் பாஸ்கரனுடன் அவள் வீட்டிற்கு போய்விட்டாள் .

இப்போது அந்த வீட்டுடன் அதிகமாகவே ஒட்டாத தன்மை தோன்றியது மீராவிற்கு .மிக அதிகமாக தாய்வீட்டு நினைவு வந்த்து .

மாலை டிபன் தயாரித்துக்கொண்டிருந்த சுந்தரியின் பின்புறம் மெல்ல வந்து நின்றாள் .

" அத்தை ...." தயக்கத்துடன் அழைத்தாள் .

" அந்த உப்பு டப்பாவை எடு .பஜ்ஜி போட்டுக்கொண்டிருக்கிறேன் .உப்பு அளவு எப்படி பார்த்து போட வேண்டுமென்று சொல்லிவிடுகறேன் ...." என்றாள் சுந்தரி .

மீரா உப்பு டப்பாவை எடுத்து கொடுத்தத்தும் ..." இதோ பார் தராசு

வைத்து நிறுத்தோ , ஸ்கேல் வைத்து அளந்தோ சமையலில் அளவு பார்க்க வேண்டியதில்லை .நம் கை அளவு , கண் அளவே போதும் .இங்கே பார் இப்போது கடலைமாவும் , அரிசிமாவும் சேர்த்து அரைக்காப்படி எடுத்திருக்கிறேன் .இதற்கு இதோ பார் என் கையளவு ....இந்த அளவு உப்பு ...கல் உப்பென்றால் இந்த அளவு .தூள் உப்பென்றால் இந்த அளவு ...சரியா பார்த்துக்கொள் .சமையல் நன்கு பழகும் வரை சமைத்து முடித்ததும் கண்டிப்பாக வாயில் வைத்து பார்த்து டேஸ்ட் பார்த்துவிட வேண்டும் ...."

மீரா கவனமாக பார்த்துக்கொண்டாள் .தொடர்ந்து வாழைக்காய் , உருளைக்கிழங்கு , வெங்காயம் என விதம் விதமான பஜ்ஜிகளுக்காக காய்களை சீவும் முறையையும் , அதை பக்குவமாக மாவில் தோய்த்து எண்ணெயில் போடும் முறையையும் கவனித்திக்கொண்டாள் .

வேலை முடிந்த்தும் அடுப்பை துடைத்தபடி தயக்கமாக மீண்டும் " அத்தை ..." என்றாள .

" நா ..நான் அம்மா வீட்டிற்கு போய்விட்டு வரட்டுமா ...? "

" என்ன அதற்குள் ...? " சுந்தரியின் குரலில் எரிச்சல் இருந்த்து .

https://telegram.me/aedahamlibrary

" அம்மாவை பார்க்க வேண்டும் போலிருந்த்து ...." தலைகுனிந்து முணுமுணுத்தாள் மீரா .

கொஞ்சநேரம் அவளை பார்த்தபடியிருந்த சுந்தரி பிறகு " எப்படி போவாய் ....? " என்றாள் .

" ஆட்டோவில் போய்விடுகிறேன் அத்தை ...." உற்சாகமாக சொன்னாள் மீரா .

மீராவுடைய பிறந்தவீட்டிற்கும் , புகுந்த வீட்டிற்குமான பயணதூரம் நான்கு தெருக்கள் , பதினைந்து நிமிடங்கள்தான் .

" சரி போ ...ஆனால் இரவு படுக்க வந்துவிட வேண்டும் .அங்கே போனின் அருகே இருக்கும் டைரியில் ஆட்டோக்கார்ர் போன் நம்பர் எழுதி வைத்திருப்பேன் .அவர் தெரிந்தவர்தான் .பத்திரமாக கொண்டு போய்விடுவார் .போன் போட்டு அழைத்துக்கொள் ...." வேலை முடிந்த்து போல் கைகளை கழுவிவிட்டு டிவி போட்டு சீரியல்களில் ஆழ்ந்துவிட்டாள் சுந்தரி .

அனுமதி கிடைத்த மகிழ்ச்சியில் போனை எடுத்து ஆட்டோவை

அழைத்து அதில் ஏறக்கொண்ட மீராவின் மனதில் என் அம்மா வீட்டிற்கு என் அம்மாவை பார்க்க போக இவர்களிடம் நான் சம்மதம் வாங்க வேண்டுமா ...? இரண்டு நாட்களுக்கு முன்பு எனது நிலை இப்படியா இருந்தது ...? பெண்ணாக பிறந்தால்தானே இத்தனை கட்டுப்பாடுகள் ....? என்ற எண்ணங்கள் ஓடியபடி இருந்தன.

வீட்டிற்குள் போனதும் முதலில் அம்மாவின் மடியில் சிறிதுநேரம் படுத்திருக்க வேண்டும் .என்னை அம்மா எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் ...மிகவும் சந்தோசப்படுவார்கள் ..கற்பனையில் அன்னையின் மகிழ்ச்சியை ரசித்தபடி அங்கே போய் இறங்கினாள் மீரா .

வாசலில் ஆட்டோ சத்தத்தை கேட்டு எட்டிப்பார்த்த அன்பரசி அதிலிருந்து இறங்கிய மகளை கண்டு திகைத்தாள் .ஆட்டோ கிளம்பும் வரை காத்திருந்தவள், பிறகு அவசரமாக மகளின் கைகளை பிடித்து இழுத்து வீட்டினுள் அழைத்து சென்றாள் .

" மீரா ..என்னடி திடீரென்று வந்து நிற்கிறாயே ...? ஏன் ...? " என்றாள் பதட்டத்துடன் .

அம்மாவின் சந்தோசத்தை எதிர்பார்த்து வந்திருந்த மீரா , இந்த பதட்டத்தில் தொந்து போனாள் .

https://telegram.me/aedahamlibrary

" என்னம்மா ...? ஏன் வந்தாய் என கேட்கறீர்களா ....? "

" இல்லைம்மா கல்யாணம் ஆன இரண்டாம் நாளே உன் கணவர் இல்லாமல் நீ மட்டும் தனியாக வந்து நிற்கவும் எனக்கு பக்கென்றிருந்தது ...என்னம்மா எதுவும் பிரச்சினை இல்லைதானே ...? "

" இல்லை .சும்மா உங்களை பார்க்க வேண்டும் போலிருந்தது .அத்தையிடம் கேட்டேன் .போய்விட்டு வர சொன்னார்கள்...."

" ஓ...அப்படியா சரி ...சரி ...ஒரு மணிநேரம் இருந்துவிட்டு நைட் அங்கே போய்விடு ...என்ன ...? " மகள் திரும்பி போகும் நேரத்தையும் உறுதி செய்தபிறகே ...மகளுக்கு காபிக்கென உள்ளே போனாள் அன்பரசி .

அம்மாவின் மடியில் படுத்துக்கொள்ள வேண்டுமென்ற மீராவின் எண்ணம் கரைந்து போய் , ஓடிக்கொண்டிருந்த டிவியை வெறிக்க ஆரம்பித்தாள் அவள் ....

# 7

முதுகோடும் வியர்வை கோடுகள் மீதாக ,
துடைக்க துடைக்க மேலும் வழிகின்றது
உன் அந்த
குத்தும் கூரியவாள் சூரியக்கோபம் ,
கொதிக்கும் இவ்வேளையில்
தகிக்கும் ஓர் கூடல் வேண்டாமடா ,
ஸ்பரிசித்து ...ஸ்பரிசித்து விலகிப்போகும்
உன் தீங்குரலின் தீஞ்சுவை போதும் .

அந்த ஸ்பீட் ப்ரேக்கர் மேல் பைக் வேகமாக ஏறி இறங்க , தடுமாறிய மீரா அநிச்சையாக நந்தகுமாரின் தோள்களை அழுந்த பற்றிவிட்டு அவசரமாக தனது கைகளை எடுத்துக்கொண்டாள் .நடுங்கிய கைகளால் பக்கவாட்டு  கம்பியை பிடித்துக் கொண்டாள் .லேசான அந்த ஸ்பரிசத்திற்கே அவளுக்கு வியர்த்து வந்த்து .கொஞ்சம் நகர்ந்து தள்ளி உட்கார்ந்து கொண்டாள் .

https://telegram.me/aedahamlibrary

அது போன்ற பாதிப்புகள் ஏதுமின்றி அவன் அலட்சியமாக வண்டி ஓட்டிக்கொண்டிருந்தான் .தன் முன் அமர்ந்து பைக் ஓட்டிக்கொண்டிருந்தவனின் பரந்து விரிந்த தோள்களிலிருந்து பார்வையை ரோட்டிற்கு திருப்பிக்கொண்டாள் மீரா .

இப்படி திடீரென்று நந்தகுமாரே தன்னை அழைத்துப் போகவென்று வருவான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை .

காலேஜ் முடிந்து வந்த வினோத் வாசலில் கால் வைத்ததும் இவளை பார்த்துவிட்டு இரு கைகளையும் விரித்து " அக்கா ...." என்றான் .

அம்மாவின் ஒட்டாத தன்மையில் முகம் சுருங்கி மீரா வருத்தத்தில் இருந்த போது ...தம்பியின் இந்த பாச அழைப்பு புத்துணர்வை கொடுத்தது .

" டேய் வினோ .." என தானும் கைகளை விரித்தாள் .வேகமாக ஓடிவந்து அவளருகில் அமர்ந்து கொண்டான் .

" அக்கா எனக்கே உன்னை பார்க்க வேண்டும் போலிருந்த்து ஃஇன்று நீ வரவில்லையென்றால் நானே உன்னை பார்க்க வந்திருப்பேன்

தெரியுமா ...? "

" உன் நினைப்பு எனக்கு முதலிலேயே தெரிந்துவிட்டது .அதனால் உனக்கு முன்பே நானே வந்துவிட்டேன் தெரியுமா ....? " தம்பியை போலவே தானும் பேசிய மீராவிற்கு ஏனோ தொண்டை அடைத்தது .

" அக்கா இன்னைக்கு மேட்ச் இருக்குது .நீயில்லாமல் மேட்ச் பார்க்கவே பிடிக்காமல் இருந்த்து .இப்போ நீயும் வந்துட்டியா ...? இனி நாம் ஜாலியாக மேட்ச் பார்க்கலாம் .இரு முகம் கழுவி விட்டு வருகிறேன் ..."

" மேட்ச்  பார்க்க போகிறீர்களா ...? அவள் இப்போது கிளம்பி விடுவாளடா ...." என்ற அன்பரசியின் குரல் இருவர் காதிலும் விழவில்லை .

இருவரும் கத்தலும் , ஆர்ப்பாட்டமுமாக மேட்ச் பார்க்க ஆரம்பிக்க , வேலை முடிந்து வீட்டுக்கு வந்த திருக்குமரனும் இவர்களுடன் சேர்ந்து கொள்ள வீடு எப்போதும் போல் கலகலப்பும் , கும்மாளமுமாக மாறியது .மீரா திருமணம் முடிந்து போனதிலிருந்து வெறிச்சோடியிருந்த வீடு திரும்பவும் பழைய நிலைக்கு மாறியதில் மகிழந்த அன்பரசியும் அவர்களுடன் சேர்ந்து கொள்ள கை தட்டலும் , கத்தலுமாக இருந்த்து வீடு .

பேட்ஸ்மேன் உயர்த்தி அடித்த பந்தை " சிக்ஸ் " என மீராவும் ..." அவுட் " என வினோத்தும் சொல்லிக்கொண்டு  பார்த்தபடி இருந்தனர். , அந்த பந்து மீராவின் ஆசைப்படியே சிக்ஸாக மாற ...சோபாவில் உட்கார்ந்தபடியே குதித்து  கை தட்டியவள் , தம்பியின் கைகளுடன் தன் கைகளை தட்டிக்கொண்டு  சிக்ஸ் என கத்தியபடி திரும்பிய போது  , வாசலில் சாய்ந்து நின்றபடி அவளை பார்த்துக்கொண்டிருந்தான் நந்தகுமார் .

அவ்வளவு நேரம் இருந்த உற்சாகம் துணி கொண்டு துடைத்தது போல் மறைந்த்து மீராவிற்கு .சட்டென வீடும்  அமைதியானது .எல்லாருமாக அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த சோபா மாப்பிள்ளைக்காக அவசரமாக ஒதுக்கி தரப்பட்டது .ஸ்னாக்ஸ் , காபி என உபச்சாரங்கள் ஆரம்பிக்க பட சத்தம் குறைக்கப்பட்டு  டிவியில் கிரிக்கெட் மேட்ச் அநாதையாக ஓட ஆரம்பித்தது .

" அம்மா மீராவை அழைத்து வரச்சொன்னார்கள் ...."

அது தெரியும் .நீயாக என்னை கூப்பிட வந்திருக்கிறாய் என நான் நினைத்துக்கொள்ள மாட்டேன் ....மனதிற்குள் நினைத்தபடி அவனுக்காக அன்பரசி கொடுத்த உபச்சாரங்களை தட்டில் அடுக்கி கொண்டு போய் நீட்டினாள் .

" போகலாமா மீரா ....? " அவளது உபச்சாரங்களில் தின்பண்டங்களை ஒதுக்கிவிட்டு காபியை மட்டும் எடுத்தபடி கேட்டான் .

உனக்கு என் பெயரெல்லாம் தெரியுமா ....என நினைத்தபடி தலையாட்டினாள் .அநேகமாக இப்போதுதான் முதன் முறையாக அவளை பெயர் சொல்லி அழைக்கிறானென நினைத்தாள் .

திடீரென பைக் பிரேக் போடப்பட , முன்னால் போய் நந்தகுமாரின் முதுகில் ஒட்டிவிட்டு விலகினாள் .நந்தகுமார் பைக்கை நிறுத்தியிருந்தான் .

வீடு இன்னமும் வரவில்லையே ..இங்கே எதற்கு நிறுத்தியிருக்கிறான் ...யோசித்தபடி வண்டியிலிருந்து இறங்கினாள் மீரா .

" பேசவேண்டும் .வா ..." என்றபடி அந்த பார்க்கினுள் நடந்தான் .

https://telegram.me/aedahamlibrary

இவன் கையாட்டியதும் நான் பின்னாலேயே போக வேண்டுமா ....? கட்டிய மனைவியுடன் பேசும் இடத்தை பார் ...,மீரா அசையாமல் அதே இடத்தில் நின்றாள் .

நாலெட்டு நடந்துவிட்டு நின்று திரும்பி பார்த்துவிட்டு " "உன்னுடன் தான் பேசவேண்டும் .வா ...." என்றான் .

மீரா அசைந்தாளில்லை .பாதங்களை தரையில் அழுத்தி ஊன்றி நின்றுகொண்டாள் .தள்ளி சாலையில் போகும் வாகனங்களை வேடிக்கை பார்க்க தொடங்கினாள் .

சிலநொடிகள் அவளை பார்த்தபடியிருந்த நந்தகுமாரின் முகத்தில் புன்னகையின் சாயல் வந்தது .
" அங்கே நம் வீட்டில் ப்ரீயாக பேச முடியாதும்மா.யாராவது எதற்காவது கூப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள் .நமது அறைக்குள் இருந்து கொஞ்சம் சத்தமாக பேசினாலும் வெளியே கேட்கும்மா .அதனால்தான்மா இங்கே பேசலாமென்று நினைத்தேன் . " சமாதானமாக பேசினான் .

ஒரு நொடி திரும்பி அவன் முகத்தை பார்த்துவிட்டு மீண்டும் சாலைக்கே

தலையை திருப்பிக்கொண்டாள் மீரா .

" அதனால் தான் மீரா இங்கே உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசலாமென்று நினைத்தேன்...." என்றான் .

ம் ...அது ...என்ற பார்வையுடன் போனால் போகிறது என்ற பாவனையுடன் காலெடுத்து வைத்து அந்த பார்க்கின் பக்கம் நட்ந்தாள் .அவளை முன்னால் விட்டு தான் பின்னால் வந்தான் நந்தகுமார்.

ம் ...இது சரி என்ற திருப்தி மீராவின் மனதில் பரவினாலும் , இவன் இதற்காக தன்னை கோபிப்பானோ ...என்ற பயம் லேசாக இருந்த்து .சும்மாவே என்னை பிடிக்காது ...இதில் நான் வேறு இப்படி செய்தால் .....

ஆனால் அவளது பயம் அர்த்தமற்றது என்பது போல் பார்க்கின் உள்ளே உள்ள ஒரு பெஞ்சில் அமர்ந்த நந்தகுமாரின் முகத்தில் சிறிய புன்னகை போல் ஏதோ ஒன்று தெரிந்த்து.இல்லை ...இல்லை அது புன்னகைதான் என தன்னை தானே சமாதானப்படுத்திக்கொண்டு பேசு என்பது போல் அவன் முகத்தை பார்த்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" இங்கே பாரம்மா ...." என ஆரம்பித்தவன் ,அவள் ...

" என் பெயர் மீரா ...." என கறாராக சொல்லவும் ...

" ஓ.கே ...ஓ.கே ..."என இரு கைகளையும் உயர்த்தியவன் ...

" பார் மீரா நமது திருமணம் நான் எதிர்பாராத நேரத்தில் திடீரென என்னை மீறி ...ஒரு விபத்து போல் நடந்துவிட்டது .இது ...இந்த அதிர்விலிருந்து மீண்டு வர எனக்கு கொஞ்ச நாட்கள் ஆகலாம் .அதுவரை நீ கொஞ்சம் பொறுத்து போகவேண்டும் ...."

" புரியவில்லை..." தலையை சரித்து பார்த்தபடி அழுத்தமாக சொன்னாள் .

" அது ...வந்து ....எனக்கு இப்போது திருமணம் செய்யும் எண்ணமே இல்லை .ஒரு வருடம் போகட்டும் என நினைத்திருந்தேன் .ஆனால் பாட்டியும் , அப்பாவும் சேர்ந்து ஏதேதோ பேசி ...இந்த திருமணத்தை முடித்து வைத்துவிட்டார்கள் ....அதனால் என்னால் மனம் ஒன்றி ...இந்த நமது புதுவாழ்வை மனம் ஒன்றி வாழமுடியவில்லை ...நீ எனக்கு கொஞ்சம் டைம் கொடுத்தால் ...."

அவன் முடிக்கும் முன் ," எதற்கு ....? " என்றாள் .

அவன் சிறிது திகைத்து " நம் வாழ்வை நாம் வாழ ஆரம்பிப்பதற்கு ..." என்றான் .

அவள் சிறிது நிறுத்தி பின் மெல்ல " ஏன் ...? " என்றாள் .

" என்ன ...ஏன் ...? இங்கே பாரம்மா ..." என ஆரம்பித்துவிட்டு அவள் பார்வையை கண்டதும் " பார் மீரா ..இங்கே வந்திலிருந்து ஒற்றையெழுத்து கேள்விகளாகவே கேட்டுக்கொண்டிருக்கிறாய் ...? என்ன காரணத்திற்கு எந்த எழுத்தை போடுகிறாய் ..என சத்தியமாக எனக்கு புரியவில்லை .அதனால் ப்ளீஸ் இரண்டு வார்த்தைகளை சேர்த்து போட்டு பேசிவிடேன் ..."

" இந்த திருமணத்தில் விருப்பமில்லையென்றால் நீங்கள் முதலிலேயே வீட்டில் சொல்லி ..இந்த திருமணத்தை ...." நிறுத்தியிருக்க வேண்டியதுதானே என சொல்ல மனம் வராமல் பாதியிலேயே வார்த்தைகளை விட்டாள் .

" நான் எந்த அளவு சொன்னேனென்று உனக்கு தெரியுமா ....? ஆனால் எங்கே ....நான்தான் சொன்னேனே எதுவும் என் கையில் இல்லை ..." கைகளை கட்டக்கொண்டு பெஞ்சில் பின்னால் சாய்ந்து வானத்தை வெறித்தான் .

என்னை பார்த்து பேசக்கூட உனக்கு அவ்வளவு வெறுப்பாக இருக்கறதா ...?என நினைத்தபடி ...தலை குனிந்து கொண்டாள் .

" பெண்களால்தான் வீட்டில் இது போலெல்லாம் பேச முடியாது .நீங்கள் ஆண் .வெற்றிகரமாக தொழில் நடத்தி வருகிறீர்கள் ..பிறகும் ஏன் தயங்கினீர்கள் ....? "

" ஒழுங்கான கட்டுப்பாடோடு முறையாக வளர்க்கப்படும் பிள்ளைகளில் ஆணென்ன ..? பெண்ணென்ன .. மீரா ...பெற்றவர்கள் மனது நோகக்கூடாதென்று நாங்கள் ஆண்கள் மட்டும் நினைக்கமாட்டோமா ...? " அவன் இயல்பாக மீரா என்றது நன்றாக இருக்க ...

" ம் ..." என்றவள் ." இப்போது சரி ..பிறகு அவர்கள் வருத்தப்பட மாட்டார்களா ...? "

" பிறகு ...? எதற்கு பிறகு ...? "

" அதுதான் ..நா...நாம் பிரிந்த பிறகு ...."

" என்ன உளறுகிறாய் ...? " எரிந்து விழுந்தான் .

மீராவின் கணக்குப்படி இவ்வளவு நேரமாக அவள் நந்தகுமாருக்கு பிடிக்காத விதமாக பேசி வருகிறாளென நினைத்தாள் .இதோ இப்போது பிரிவை பற்றி பேசுவதுதான் அவனுக்கு பிடித்தமானதாக இருக்கும் ...என எண்ணியே மனமின்றி அந்த வார்த்தைகளை கேட்டாள் .

ஆனால் பிடிக்காத வார்த்தைகளுக்கு பொறுமையாக பதில் சொன்னவன் இந்த கேள்வியில் கோபமானான் .

" நாம் பிரியவேண்டுமென்று நான் எப்போது சொன்னேன் ...? "

பிறகு இவ்வளவு நேரம் நீ என்னதான்டா சொல்லிக்கொண்டிருந்தாய் ...?

மீராவிற்கு தலையை பிய்த்துக்கொள்ளலாம் போலிருந்த்து .

" மனதிற்கு பிடிக்காத வாழ்வை நாம் எத்தனை நாட்கள்தான்

அர்த்தமில்லாது வாழந்து கொண்டிருக்க முடியும் ..? "

" இங்கே பார் .எனக்கு பிடிக்கவில்லையென்றாலும் , உனக்கு பிடிக்கவில்லையென்றாலும் நமக்கு விதிக்கப்பட்ட இந்த வாழ்வை நாம் இருவருமாக கடைசி வரை ஒன்றாகத்தான் வாழ்ந்து முடிக்க போகிறோம் .அதனை மனதில் நன்றாக நினைவில் வைத்துக்கொள் ."

நந்தகுமாரின் இந்த கோபம் மனதிற்கு மிக இதமளித்தாலும் , அதனை வெளிக்காட்டிக் கொள்ளாது அவனை முறைத்தாள் மீரா .

" சும்மா முட்டைக் கண்ணை உருட்டாதே ...இன்னொரு முறை பிரிவு ..அது இதுவென்று பேசினாயானால் ..." என்று நிறுத்தியவன் ஒற்றைவிரலை ஆட்டி ஜாக்கிரதை என்றான் .

" என் பெயர் கூட தெரியாதென்பீர்கள் .இந்த லட்சணத்தில் வாழும் வாழ்வு ..எப்படி காலம் முழுவதும் .ஓடும்..."

" அதெல்லாம் சரியாகிவிடும் . நீ மட்டும் இந்த பெயரை சொல்லி அழைக்காத சின்ன விசயத்திற்காகவெல்லாம் கோபித்துக்கொண்டு உன் அம்மா வீட்டிற்கு போகாமல் கொஞ்சம் பொறுமையாக இருந்தாயானால் எல்லாம் சரியாகி விடும் ...."

மீரா மீண்டும் அவனை முறைத்தாள் ." நான் அதற்காகத்தான் அம்மா வீட்டிற்கு வந்தேனென உங்களுக்கு தெரியுமா ...!? "

" வேறு காரணங்கள் இல்லையே .நான் கடையிலிருந்து வந்தவுடன் வீட்டிற்குள் கூட நுழையவில்லை .உடனே போய் உன் பொண்டாட்டியை அழைத்து வா என அம்மா விரட்டுகிறார்கள் .வேறு ஏதாவது அவளை சொன்னாயா ...என்ற சந்தேக்க் கேள்வி வேறு ...இது எனக்கு ரொம்ப தேவை பார் ..." அலுத்துக்கொண்டான் .

ஆக இவன் அம்மாவிற்காகத்தான் ...அவன் அம்மா முன் நான் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டுமென்றுதான இங்கே என்னை உட்கார வைத்து இவ்வளவு நேரமும் பேசிக்கொண்டிருக்கிறான கசப்புடன் நினைத்தாள் .

" அம்மாவிற்காக நடித்துக் கொண்டே இருக்க வேண்டுமென்கிறீர்கள் ...."

" ஆமாம் .நான் அம்மாவிற்காக என்ன வேண்டுமானாலும் ...எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்க தயாராக இருக்கிறேன்..." நந்தகுமாரின் குரலில் மிகுந்த அழுத்தம் இருந்த்து .

" அப்படித்தான் அந்த மிருணாளினியை விட்டுக்கொடுத்தீர்களா ...? " கேட்டுவிட்டு நாக்கை கடித்துக்கொண்டாள் .

https://telegram.me/aedahamlibrary

இதனை கேட்க வேண்டுமென அவள் நினைக்கவில்லை .ஏதோ ஓர் ஆதங்கத்திலோ , அவசரத்திலோ இந்த வார்த்தைகள் வெளியே வந்துவிட்டன.

" உனக்கு ...எப்படி தெரியும் ...? " அவளை கூர்ந்து பார்த்தபடி கேட்டான் .

" தெரியும் ...." முணுமுணுத்தாள் .

" நேற்று இரவு நீ எங்கே இருந்தாய் ...? அந்த வேப்பமரத்திற்கு பின்னால் ...நின்றிருந்தாயா ...? "

நந்தகுமார் இப்படி உடனடியாக ஊகிப்பானென எதிர்பார்க்காத மீரா திணறினாள் .

" வீட்டினுள் உன்னை காணவில்லையென அம்மா சொல்லக்கொண்டிருந்தார்கள் ...நாங்கள் பேசியதை நீ ...."

" ஒட்டுக் கேட்கவென்றெல்லாம் நான் அங்கே வந்து இருக்கவில்லை .நான் சும்மா அந்த கல்லில் உட்கார்ந்திருந்தேன் .நீங்கள் வேகமாக

வரவும் ...அந்த மரத்திற்கு பின்னால் நகர்ந்தேன்.பிறகுதான் உங்கள் அம்மா வந்தார்கள் ...." ரோசமாக கூறினாள் .

" ம் ...இதுவும் நல்லதிற்குத்தான் .என்னை எப்படி உனக்கு புரியவைப்பது என குழம்பிக்கொண்டிருந்தேன் .இப்போது நீயே புரிந்து கொண்டிருப்பாயென நினைக்கிறேன் ...."

மிருணாளினி போன்ற ஒரு அழகான பெண்ணை இழக்க எந்த ஆணும் தயாராக இருக்கமாட்டான் .ஆனால் அவளையே அன்னைக்காக ஒதுக்குவதென்றால் ....நந்தனின் அம்மா பாசம் புரிய ...ஏனோ அவன் மீது ஒரு மரியாதை உண்டானது மீராவிற்கு .

" அம்மாவிற்கும் இந்த திருமணத்தில் விருப்பமில்லை மீரா .ஆனால் என்னைப் போன்றே அதனை அவர்களும் வெளியே காட்டமுடியாது .இந்த நம் கணவன் , மனைவி உறவில் சிறு விரிசல் போல் ஒன்று தென்பட்டு விட்டாலும் கூட , அதனால் அப்பாவிடம் , பாட்டியிடமும் வாங்கிக் கட்டிக்கொள்ள போவது அம்மாதான் .அந்த நிலைமை அவர்களுக்கு வர நான் காரணமாக இருக்க நிச்சயம் விரும்பமாட்டேன் .எங்கள் இருவரின் நிலையையும் நீ புரிந்து கொண்டால் நன்றாக இருக்கும் ...." கெஞ்சுதல் கலந்து ஒலித்தது நந்தகுமார் குரல் .

https://telegram.me/aedahamlibrary

இவன் அம்மாவை ....அப்பா , பாட்டியிடமிருந்து காப்பாற்ற நான் பலிகடாவாக வேண்டுமா ...? எவ்வளவு தைரியமாக எனக்கும் , அம்மாவிற்கும் உன்னை பிடிக்கவில்லையென என்னிடமே சொல்கிறான் ...அவமானமாக உணர்ந்தாள் மீரா .

" உங்கள் குடும்பத்திற்கு மட்டுமே நன்மை தரும் இந்த திட்டத்திற்கு நான் எப்படி ஒத்துழைப்பேனென நினைக்கிறீர்கள் ....? " கேலியுடன் கேட்டாள் .

நந்தகுமாரின் முகம் கருமையடைந்த்து .

எனக்கென்னவோ இப்படி ஒரு பொம்மை வாழ்வு சாத்தியமில்லையென்று தோன்றுகிறது ...." அலட்சியமாக தோள்களை குலுக்கினாள் .

உனக்காக நான் ஏனடா என்னை சமரசம் செய்து கொள்ள வேண்டும் ...? என கேட்காமல் கேட்டாள் .

" அப்படியென்றால் ...மனம் மரத்த ஒரு ஒப்பனை வாழ்விற்கு நீ

உன்னை தயார் படுத்திக்கொள்ள வேண்டியதுதான் ...." கடின குரலில் கூறியவனை புரியாமல் பார்த்தாள் .

" அறைக்குள் விளக்கை அணைத்துவிட்டால் அருகிலிருப்பவள் யாரென தெரியவா போகிறது ....? அவள் ஏதோ ஓர் பெண் என்பதை தவிர...." வறண்டிருந்தாலும் உறுதியாக வந்து விழுந்தன இந்த வார்த்தைகள் .கூடவே அவள் அருகில் நெருங்கியமர்ந்து அவள் கைகளை பற்றி நெரித்தான் .

இப்போது அவன் கூறியது புரிந்துவிட மீராவிற்கு கொதித்து வந்த்து .

" சை ...." என அவன் கைகளை உதறியவள் சட்டென அவன் அருகிலிருந்து எழுந்தாள் .வேகமாக பார்க்கை விட்டு வெளியேறினாள் .

8

https://telegram.me/aedahamlibrary

சுழன்று சுழன்று சுற்றிக்கொண்டே
உள்ளே இழுத்துக்கொள்ளும் இது
சுழலினை விளக்குகிறாய் ,
போடா....
உன்னைத் தெரியாதா எனக்கு !!

" சாரிம்மா ...ஏதோ வேகத்தில் அந்த வார்த்தைகள் வந்துவிட்டன ...." கிசுகிசுப்பான குரலில் பேசினான் நந்தகுமார் .

நீல நிறத்தில் ஒளி சிந்தியபடியிருந்த இரவு விளக்கை பார்த்தபடி தரையில் பாய் விரித்து படுத்திருந்தாள் மீரா .கட்டிலில் உட்கார்ந்து அவளை  பார்த்தபடி பேசிக்கொண்டிருந்தான் நந்தகுமார் .

உன் மனதில் இல்லாமல் அதெப்படி அந்த வார்த்தைகள் வரும் ...? உனக்கு ஆண்பிள்ளை திமிர் .அத்தோடு தாலி கட்டிய திமிர் .அதுதான் இப்படி பேச வைத்திருக்கிறது .போடா ...போ இப்படி ஒரு வாழ்க்கை எனக்கு தேவையில்லை .மனதில் நினைத்ததையே வெளியேயும் சொன்னாள் .

" இதோ இந்த வார்த்தைகளுக்காக நான் இப்போதே இந்த வீட்டை விட்டு வெளியேறி விடலாம் .ஆனால் இந்த இரண்டு நாட்களில் இந்த வீட்டு நிலைமையை நானும் கொஞ்சம் புரிந்து வைத்திருக்கிறேன் .உங்கள் அம்மாவிற்காக கொஞ்சநாட்கள் நான் என்னை சமாதானப்படுத்திக் கொண்டு இங்கே இருக்க சம்மதிக்கிறேன் ...பிறகு ...." என்றவளை அவன் நிறுத்தினான் .

" பிறகு என்ற சொல்லுக்கு இங்கே இடமில்லை மீரா .நாம் எப்போதும் பிரியப்போவதேயில்லை .உனக்காகவோ ...எனக்காகவோ இல்லை .நம்மை பெற்றவர்களுக்காக. என் வீட்டினர்க்கு மட்டுமல்ல ....உன் வீட்டினர்க்கும் நமது பிரிவு பிடிக்காத்துதான் .இதனை நீ மறுக்க முடியாது .அதனால் பொம்மை வாழ்வென்றாலும் நமது வாழ்வை நாம் இப்படியே என்றாலும் வாழத்தான் போகிறோம் ...." என்று அவன் கட்டிலிலும் , அவள் தரையிலுமாக இருந்த நிலையை கையை அசைத்து சுட்டிக்காட்டினான் .

எவ்வளவு அலட்சியமான கையசைவு என்று நினைத்தாலும் அங்கே பார்க்கில் வைத்து பேசிய கொடூர பேச்சிற்கு இந்த பேச்சு பரவாயில்லை போல் தோன்றியது மீராவிற்கு .இருவரும் குரலை முணுமுணுப்பாக்கி மிக மெதுவாக பேசிக்கொண்டிரந்தனர் .

https://telegram.me/aedahamlibrary

" ரொம்ப சந்தோசம் .என் பக்கத்தில் வருவதோ ...என்னை தொடுவதோ ...இது எதையும் நான் விரும்பவில்லை .அதையும் மனதில் வைத்துக்கொண்டு பழகுங்கள் ..." வெட்டென கூறிவிட்டு போர்வையை முகத்திற்கு மேலே மூடிக்கொண்டாள் .

அதற்கு பதிலின்றி அழுத்தமான காலடியுடன் எழுந்து நின்றவன் அவளை நோக்கி வரலானான் .முகம் மூடியிருந்தாலும் அவனது இந்த வரவை உணர்ந்த மீராவின் மனது திடுக்கிட்டது .

என்ன இவன் ...வராதே என்றால் ...இப்போதுதான் வேகமாக வந்து கொண்டிருக்கிறான் .இப்போது என்ன செய்ய ...? எழுந்து கதவை திறந்து வெளியே ஓடிவிடலாமா ...? ஆனால் வெளியே இவன் அம்மா படுத்திருப்பாரே .அவருக்கு என்ன பதில் சொல்ல ....?இப்போதுதானே நமது பிரச்சினை நம்மோடு ...அதனை வெளிக்காட்டிக்கொள்ளகூடாது என பேசியிருந்தோம் ....பேசியபடி இருக்க இவன் விட மாட்டான்

போலவே ....

திக் திக் மனதுடன் மீரா இவற்றை யோசித்த நேரம் இருபது விநாடிகள்

கூட இருக்காது .ஏனென்றால் கட்டிலுக்கும் அவள் படுத்திருந்த பாயிற்கும் இடைப்பட்ட தூரம் நான்கே எட்டுக்கள்தான் .

நிதானமாக அவளருகில் வந்து குத்திட்டு உட்கார்ந்த நந்தகுமார் " அதற்காக இப்படி போர்வையால் மூக்கை மூடி மூச்சை அடைக்க வேண்டிய தேவையில்லை .உனக்கு மூச்சடைக்கும் கஷ்டம் இல்லாமலேயே நீ  சொன்னதை நான் புரிந்து கொண்டேன் . அதனால் நன்றாக மூச்சு விட்டுக்கொண்டே தூங்கு ...." மீரா தலை வரை இழுத்து மூடியிருந்த போர்வையை விலக்கி கீழே இறக்கி விட்டபடி சொன்னவன் எழுந்து " குட்நைட் ...." சொல்லிவிட்டு போய் படுத்துக் கொண்டான் .

மீராவிற்கு உண்மையில் இப்போதுதான் மூச்சு திணற தொடங்கியது .

" அண்ணி பத்து ஆச்சு .கொஞ்சம் கருணை காட்டுங்கள் ...." காதுகளை பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டபடி  பரிதாபமாக கெஞ்சிக்கொண்டிருந்தான் சசிகுமார் .

" இல்லை முடியாது .நம் கணக்கு இருபது .நீங்க ஏற்கெனவே ஆறு போட்டுட்டு பத்துன்னு கணக்கு சொல்லிட்டு இருக்கீங்க .அதற்கும் சேர்த்து பனிஷ்மென்டா இன்னும் கூடுதலாக ஐந்து ....," கரண்டியை ஆட்டியபடி கண்டிப்பாக கூறினாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" ஐய்யய்யோ ....இது அநியாயம் .இதை கேட்க இந்த வீட்டில் ஆளே இல்லையா ...?" வேண்டுமென்றே குரலை உயர்த்தி கத்தினான் .

" இதோ அதற்காகத்தான்டா நான் வந்திருக்கிறேன் ...." என்றபடி உள்ளே வந்தாள் பிரவீணா .உடன் திவ்யா .

" ஐ...ஜாலி ..மாமா ...அழகா தோப்புக்கரணம் போடுறாங்க .அத்தை எத்தனை போடனும் அத்தை ...? "ஆவலாக கேட்டாள் திவ்யா .

" இருபத்தியைந்து திவு .வாங்கண்ணி ...." வரவேற்றாள்.

" ம் ...என்னம்மா என்ன பந்தயம் உங்களுக்குள்....? " கேட்டபடி டைனிங் டேபிள் சேரை இழுத்து போட்டு உடகார்ந்தாள் பிரவீணா .

" அக்கா நீங்களே கேளுங்கள் .இந்த ஒரு வாரமாக தினமும் ஒரு பாயாசம் வைக்கவேண்டுமென்று எங்களுக்குள் அக்ரிமென்ட் .ஆறு நாட்களாக விதம் விதமாக பாயாசம் வைத்து அசத்திவிட்டார்கள் அண்ணி .இன்று இதோ பாருங்கள் இதை வைத்துவிட்டு பாயாசம் என்று சாதிக்கிறார்கள் .நான் மறுத்தால் கேட்காமல் தோற்றுவிட்டேனென தோப்புக்கரணம்

போட சொல்லி...கொடுமைபடுத்தி ....எனக்கு அழுகை அழுகையாக வருகிறது ..." இல்லாத கண்ணீரை தனது சட்டையை உயர்த்தி துடைத்தான் .

" அது என்ன ஐட்டம்மா ...அந்த பிரச்சினைக்குரிய ஐட்டம் ...? " சிரித்தபடி கேட்ட பிரவீணாவின் கைகளில் அந்த கிண்ணத்தை வைத்தாள் மீரா .

" சாப்பிட்டு பார்த்து சொல்லுங்கள் அண்ணி ...திவ்யாக்குட்டி நீயும் சொல்வியாம் ..." என்றாள் .

" சூப்பர் ...." என சாப்பிட்டுவிட்டு  சப்பு கொட்டினாள் பிரவீணா .

" அத்தை எனக்கு இன்னொரு கிண்ணம் ..." காலி கிண்ணத்தை நீட்டினாள் தவ்யா.

" அக்கா ...அந்த டிஸ் சூப்பர்னு எனக்கும் தெரியும் .அது என்ன டிஸ் ...? அதுதான் பிரச்சினை இப்போ ..."

" அட மடையா இது கூட தெரியலையா உனக்கு .அது பாயாசம்டா ..."

" என்னது ...? அக்கா இது அநியாயம் .பாயாசத்திற்குரிய எந்த சாமானும் இதில் இல்லை .இது எப்படி பாயாசமாக முடியும் ...? " சொன்னபடி ஒரு கிண்ணத்தை எடுத்துக்கொண்டு அதில் மீண்டும் பாயாசம் நிரப்ப தயாரானான் சசிகுமார் .

" பாயாசத்திற்கு அப்படி என்ன சாமான்களடா வேண்டும் .உனக்கு ரொம்ப தெரியுமோ ...? இது நொங்கு பாயாசம் சரிதானே மீரா ...? "

" ஆமாம் அண்ணி .நொங்கும் இளநீரின் உள்ளே இருக்கும் வழுக்கை தேங்காயும் சேர்ந்து செய்த பாயாசம் இது .நேற்று நம் வீட்டு தென்னை மரத்தில் நிறைய இளநீர் பறித்தார்களே .அதில் வந்த வழுக்கை தேங்காயில் செய்தேன் .இந்த வெயில் காலத்திற்கு ஏற்றது ..." என்றபடி சசிகுமாருக்கு பாயாச பாத்திரத்தை கொடுக்காமல் அங்குமிங்கும் நகர்த்தினாள் .

" ஓ...அப்படியா அண்ணி .நொங்கிலெல்லாம் பாயாசம் செய்வார்களா .நீங்கள் கிரேட் அண்ணி .கொஞ்சம் இனிப்பு கம்மி போல் தோன்றியது .எதற்கும் இன்னொருமுறை சாப்பிட்டு பார்த்துவிடுகிறேனே...." சசிகுமார் தொடர்ந்து பாயாச சட்டிக்கு முயன்றான் .

http://telegram.me/aedahamlibrary

" ஒண்ணும் தேவையில்லை .நாங்கள் எல்லோரும் கரெக்டாக டேஸ்ட் பார்த்தாச்சு .நீங்க மீதி தோப்புகரணத்தை முடிங்க ..." பாயாச பாத்திரத்தை தனக்கு பின்னால் தூக்கி வைத்து மறைத்துக்கொண்டாள் .

" அண்ணி ரொம்ப டயர்டாகிட்டேன் .நீங்க மட்டும் இன்னும் ஒரே ஒரு கிண்ணம் இந்த பாயாசம் கொடுத்தீங்கன்னா ...சாப்பிட்டு ப்ரிஸ்க் ஆகி ...இன்னமும் பத்து தோப்புக்கரணம் சேர்த்து போடுவேன் ...."

" அப்படி வாங்க வழிக்கு .அப்போ ...இது பாயாசம்னு ஒத்துக்கிறீங்க ...."

" பாயாசமேதான் ....தாங்க ...தாங்க ...." என்று அவன் பறக்க ...

" என்னடா சசி உன் சத்தம் வாசல் வரை கேட்கிறது ..." என்றபடி வந்தான் நந்தகுமார் .

இவனெங்கே இந்த நேரம் இங்கே வந்தான் ...என அவனை பார்த்தாள் மீரா .நந்தகுமார் இரவு வீட்டிற்கு வர எட்டு மணிக்கு மேல் ஆகும் .இப்போது மாலை ஐந்து மணிக்கே வந்து நிற்கிறானே ...

" நமது தெருவில் ஒரு வேலை .அதை பார்க்க வந்தேன் .அப்படியே ஒரு காபி குடித்துவிட்டு போகலாமென வீட்டிற்கு வந்தேன் ....நீ எப்போது வந்தாய் அக்கா ...? என்ன இங்கே ஏதோ பிரச்சினை போலவே ...? மீராவின் மன ஓடடத்திற்கு பதிலளித்தபடி கேட்டான் .

" ஐ...மாமா ...." என அவன் கைகளை பிடித்த திவ்யா ...இங்கு நடந்த போட்டியை தன் தாய்மாமனுக்கு விளக்க ஆரம்பித்தாள் .

" ம் ....அப்போ ..உன்னால் பாயாசத்தை எடுக்க முடியவில்லை ...? " சசிகுமாரிடம் கேட்டான் .

" ஆமாம் அண்ணா ...இன்னும் இதோ இவ்வளூண்டுதான் கேட்டேன் . அண்ணி தர மாட்டேனுட்டாங்க ...." என்றபடி சசிகுமார் முன்னால் நீட்டிய கிண்ணத்தின் அளவை பார்த்த நந்தகுமாருக்கு சிரிப்பு வந்த்து .

" ஆமான்டா ...ரொம்ப கம்மியாகத்தான் கேட்டிருக்கிறாய் ...." என்றபடி சாதாரணம் போல் மீராவின் பக்கம் நகர்ந்தவன் , சட்டென அவள் கிச்சன் மேடையில் தன் பின்புறம் மறைத்து வைத்திருந்த பாயாச பாத்திரத்தை எட்டி எடுத்தான் .

திடீரென அவன் தன் மேல் மோதுவது போல் வரவும் மீரா திகைத்து பின் சற்று தன்னை குறுக்க , அதை பயன்படுத்தி அந்த பாத்திரத்தை

எடுத்துவிட்டான் நந்தகுமார் .

" ஹேய் ...." என கத்தியபடி நந்தன் , சசி , திவ்யா மூவரும் ஒருவரோடு ஒருவர் கை தட்டிக்கொள்ள , சிரித்துவிட்டு பிரவீணாவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள் .இப்படி அவளை விட்டு மற்ற நான்கு பேரும் சேர்ந்து கொண்டது மீராவை கோபம் கொள்ள வைத்தது .

" ம்க்கும் ...போங்க .இது அழுகுணி ஆட்டம் .நான் இதை ஒத்துக்க மாட்டேன் ...." மூக்கை சுருக்கியபடி கோபமாக கூறியவள் வேகமாக கிச்சனை விட்டு வெளியேறினாள் .

" ஏய் ...மீரா ..." நந்தன்தான் முதலில் அழைத்தான் .பின்னாலேயே ஒவ்வொருவராக அழைக்க , மீரா அதனை காதில் வாங்காமல் வெளியே வந்து அந்த வேப்பமரத்தடி கல்லில் அமர்ந்து கொண்டாள் .

அவளுக்கு அந்த பாயாச பாத்திரத்தை எடுக்கும் போது ஒரே ஒரு விநாடி அவள் உடல் மீது பட்டு விலகிய நந்தனின் ஸ்பரிசத்தை ஜீரணிக்க வேண்டியிருந்த்து .அதற்கு தனிமை வேண்டியிருந்த்து .அதனால் இங்கே ஓடிவந்துவிட்டாள் .

https://telegram.me/aedahamlibrary

இரண்டு நிமிடம் கூட இருக்காது ...பின்னாலேயே எல்லாரும் வந்துவிட்டனர் .பிரவீணாவும் , திவ்யாவும் ஆளுக்கொரு பக்கமாய் அவளருகில் அமர்ந்து கொள்ள நந்தனும் , சசியும் எதிரே நின்றார்கள் .

" அண்ணி சும்மா விளையாட்டுக்குத்தான் அண்ணி ..." சசி சமாதானப்படுத்தினான்.

பிரவீணா சின்ன சிரிப்புடன் " என்னம்மா இதற்கெல்லாமா கோபம் ....? " என...

" சாரி ...அத்தை ..." என அவள் மேல் சாய்ந்து கொண்டாள் திவ்யா.

நந்தகுமார் மட்டும் ஒன்றும் சொல்லாமல் அவளை குறுகுறுவென பார்த்தபடி இருந்தான் .

" ஐய்யே ...நானும் சும்மா விளையாட்டுக்குத்தான் ...கோபம் மாதிரி நடித்தேன் ...." அனைவருக்கும் ஒரே பதிலை சொன்னவள் நந்தன் புறம் மட்டும் திரும்பவில்லை .

இவன் ஏன் இப்படி ஒருவிதமாக பார்த்து தொலைகிறான் ....என எண்ணிக்கொண்டாள் .

இவர்கள் இங்கே இருப்பதை அங்கே தனது வீட்டினுள்ளிருந்து பார்த்த பாட்டி குரலை உயர்த்தி " பிரவீணா ...." என கூப்பிட ...சிறிது தயங்கிய அவள் பிறகு எழுந்து திவ்யாவையும் அழைத்துக்கொண்டு பாட்டியின் வீட்டிற்குள் நுழைந்தாள் .

" அண்ணா அடுத்து பாட்டி நம்மைத்தான் கண் வைப்பார்கள் .நான் எஸ்கேப் ...." என உள்ளே ஓடிவிட்டான் சசிகுமார் .

நந்தகுமார் நகராமல் மீராவை பார்த்தபடி நின்றான் .

" எதற்கு மீரா இந்த திடீர் கோபம் ...? "

" நான்தான் கோபமில்லையென்று சொன்னேனே ...." தன் முன்னால் அழுத்தி நின்ற அவன் கால்களின் பெருவிரல் நகங்களை பார்த்தபடி சொன்னாள் .

" ம் ....அப்படியா ...." நம்பாதவன் போல் அவளை யோசனையோடு பார்த்தான் .

ஒரே வாரத்தில் நந்தனிடம் நிறைய மாற்றங்கள் தெரிந்தன. முதலில் போல் அவளை பார்க்காமலேயே திரும்பாமல் அடிக்கடி அவளை அழைத்தான் ...பேசினான் .இயல்பாக அவளுடன் இருக்க முயன்றான் .பிடிக்காத திருமணமென்றாலும் அதனை பிடித்தமானதாக மாற்றிக்கொள்ள அவன் செய்யும் முயற்சிகள் மீராவிற்கு புரிந்தன.

மீராவால்தான் அப்படி இருக்கமுடியவில்லை. உன்னை பிடிக்காமல் மணம் முடித்தேன் என்ற அவனது சொற்கள் அவளை உள்ளுக்குள் உறுத்தியபடியே இருந்தன. எனவே குடும்பத்தில் மற்றவர்களுடன் இணைந்து பழகுமளவு நந்தனுடன் பழக அவளால் முடியவில்லை .

" நீங்க போங்க .நான் வருகிறேன் ...." கால்களை கட்டிக்கொண்டு அழுத்தமாக உட்கார்ந்து கொண்டாள் .

" என்னம்மா ...? ஒரு காபிக்காகத்தானே இங்கே வந்தேன் . அது கூட கிடைக்காதா...? " கிண்டல் போல் கேட்டான் .

" உள்ளே உங்கள் அம்மா இருக்கிறார்கள் .அவர்களிடம் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள் ..." எழும் எண்ணமின்றி தனது முட்டியில் தலையை சாய்த்துக்கொண்டாள் .

" உங்கள் அம்மாவா ...? அவர்களை அத்தை என்று அழைத்து பழகு மீரா

...இது போல் தள்ளி நிறுத்துவது போல் உறவுமுறை சொல்லாதே ..." கண்டிப்புடன் சொன்னான் .

நிமிர்ந்து அவனை பார்த்தாள் .உனக்கு அதுதானே ...உன் வீட்டாரும் , அவர்கள் நினைப்பும் தானே முக்கியம் .அவர்களுக்காகத்தானே நீ இப்போது என்னை சமாதானப்படுத்த முயன்று கொண்டிருக்கிறாய் ...சட்டென இதழ்களை இழுத்து இளித்தவள் ....

" உள்ளே என் மரியாதைக்குரிய மாமியார் இருக்கிறார்கள் .போய் அவர்களிடமே காபி வாங்கி குடித்து கொள்ளுங்கள் ...." என்றாள் .

" ஹைய்யோ ...போய் குடிடான்னு சொன்னால் குடித்துவிட்டு போகிறேன் .அதற்காக இப்படியெல்லாம் பயமுறுத்தாதேம்மா ...." நந்தன் பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி சொன்னான் .

" ஆமாடா ...போடா...போய் குடி ..." தலையை குனிந்து முணுமுணுத்துக் கொண்டாள் .

நந்தனின் புன்னகை மேலும் விரிந்த்து .தலையை குனிந்து நிமிர்ந்தவன் ....

https://telegram.me/aedahamlibrary

" தேங்க்ஸ் பார் யுவர் காம்ப்ளிமென்ட் .எதற்கும் அம்மாவிடம் இது பற்றி ஒரு வார்த்தை போட்டு வைக்கிறேன் ...." உள்ளே நகர முயன்றாற் போல் பாவனை காட்டினான் .

" எ...எது ...எதைப் பற்றி ...? "

" அதுதான் மீரா கொஞ்ச நேரம் முன்பு என்னை மிகவும் பாராட்டிக்கொண்டிருந்தாயே ..அதைத்தான் ...."

மீராவிற்கு திக்கென்றது . சற்று முன்பு இவனை " டா "போட்டது இவனுக்கு கேட்டுவிட்டதா ...? அதையா அவன் அம்மாவிடம் ....இல்லை அத்தையிடம் சொல்லப் போவதாக சொல்கிறான் .

" எதை சொல்ல போகிறீர்கள் ...? " சந்தேகத்தோடு கேட்டாள் .

" அதுதான்மா ...கொஞ்ச நேரம் முன்பு தலையை குனிந்து கொண்டு என்னை மிகவும் பாராட்டினாயே ...அதையேதான் ...."

எந்த அம்மா தன் மகனை மருமகள் " டா " போட்டு பேசுவதை ரசிப்பார்கள் ...? சுந்தரியின் எரிக்கும் பார்வை மனதிற்குள் வலம் வர திணறினாள் மீரா .

" அ...அது ...நான் சும்மா ...ஏதோ ...தெரியாமல் ...."தடுமாறிய மீராவை கைகளை கட்டிக்கொண்டு ரசித்தான் நந்தகுமார் .

" ப்ளீஸ் வேண்டாமே ...." கெஞ்சுதலாக அவனை பார்த்தாள் .

" ம் ...வா ...வந்து எனக்கு ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி போட்டு கொடு ..." என்றவனை முறைத்தாள் .

இத்தனை நாட்களாக உனக்கு நான்தான் காபி கொடுத்தேனா ...? இல்லை இந்த ஒரு வாரமாக என்னை கேட்டு கேட்டு உன் தேவைகளை வாங்கிக் கொண்டாயா ...? இன்று மட்டும் ஏன் அடம் பிடிக்கிறாய் ...?

" நான் இன்னும் உன் நொங்கு பாயாசம் சாப்பிடவேயில்லையே மீரா ..." என நந்தன் இழுக்க ...

மீராவிற்கு தனது புது சமையலை உடனே கணவனுக்கு கொடுக்க வேண்டுமென்ற ஆசை உண்டானது .

" சூப்பராக வந்திருக்குங்க .சாப்பிட்டு பார்க்கிறீர்களா ...? " ஆவலுடன் எழுந்து உள்ளே நடந்தாள் .

https://telegram.me/aedahamlibrary

அப்போது பிரவீணா பாட்டி வீட்டு வாசலில் நின்றபடி " நந்தா உன்னை பாட்டி கூப்பிடுகிறார்கள் " என்றாள் .

இலகுவாக நின்று சாவதானமாக அவளுடன் பேசிக்கொண்டிருந்த நந்தகுமாரின் உடல் இறுகியது .புன்னகை முகம் மாறி வெம்பி கறுத்தது .

" எனக்கு கடையில் வேலை இருக்கிறது ...." சொல்லிவிட்டு வேகமாக வீட்டினுள் போனான் .

அவன் வேகத்திற்கு நடக்க முடியாமல் மீரா வீட்டினுள்ளே ஓடிப்போய் பார்த்த போது , அவன் வெளியே போயிருந்தான் .

"

9

காதலற்ற கைகளும்

கவிதையற்ற கண்களும்
வழங்கலற்ற இதழ்களும்
சரி ...விடு...
முந்த துடிக்கும் முந்திரி விதையென,
இதுவும் நன்றாகத்தானிருக்கிறது .

அந்த பாயாச பாத்திரத்தை பார்த்தாலே மீராவிற்கு எரிச்சலாக வந்த்து .ஒரு பெரிய பாத்திரத்தை எடுத்து அந்த பாத்திரத்தின் மீது கவிழ்த்து வைத்து அதை மறைத்தாள் .

உன் புருசனின் பாராமுகத்திற்கு நான் என்ன செய்வேன் ...என அந்த பாத்திரம் அவளிடம் கேட்பது போலிருக்க மேலும் எரிச்சல் கூட கிச்சனை விட்டே வெளியே வந்து ஹாலில் உட்கார்ந்து கொண்டாள் .

எவ்வளவு இலகுவாக பேசிக்கொண்டிருந்தான் .விநாடியில் எப்படி மாறிவிட்டான் ....அப்படியா அந்த மிருணாளினி இன்னமும் அவனுள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறாள் .அவளை திருமணம் செய்து கொள்ள முடியாத ஆத்திரந்தானே இன்னமும் பாட்டியிடம் இவனை முகம் திருப்ப வைக்கிறது .

https://telegram.me/aedahamlibrary

ஏதோ இந்த வாரத்தில் அவளிடம் அவன் கொஞ்சம் முகம் திருப்பாமல் இருப்பதினாலேயே , அந்த மிருணாளினியை மறந்துவிட்டானென்று நினைப்பது முட்டாள்தனம் இல்லையா ..?

பாட்டி எவ்வளவு பெரியவர்கள் .வயதில் ...அனுபவத்தில்.அவர்களையே அலட்சியம் செய்வதென்றால் , நந்தனின் மனதில் மிருணாளினியை பிரிந்த்து எவ்வளவு பெரிய காயமாக இருக்கும் ...?

ஆனாலும் அவளை மனைவியாக மனதில் வரித்தபின்பு பிரிவதென்பது , யாருக்கும் மிகவும் கடினமான ஒன்றுதான் ...மீராவின் மனதில் போட்டோவில் பார்த்த மிருணாளியின் உருவம் வந்து அமர்ந்த்து .அவள்தான் எவ்வளவு அழகாக இருந்தாள் ...? அந்த உயரமும் , நிறமும் ...அந்த கண்கள்தான் எவ்வளவு அழகு ...! மீரா விட்ட பெருமூச்சில் அனல் இருந்த்து .

" மீரா ...ஏய் ...மீரா ...." அவள் தோள்களை தட்டினாள் சுந்தரி .

" அத்தை ...சொல்லுங்கத்தை ...." பதட்டத்துடன் அவசரமாக எழுந்தாள் .

" நாலு தடவை கூப்பிட்டுட்டேன் .எந்த உலகத்தில் இருக்கிறாய் ...? " அதட்டினாள் .

" அ...அது ...வந்து நான் ஏதோ ஞாபகத்தில் ...சாரி அத்தை .என்ன வேண்டும் அத்தை ...? "

" என்ன குழப்பம் மனதிற்குள் ஓடிக்கொண்டிருந்தாலும் ஒரு பொண்ணு எப்போதும் சுற்றி என்ன நடக்கிறதென்பதில் எப்போதும் கவனமாக இருக்க வேண்டாமா ...? ம் ..."

" இனி கவனமாக இருக்கிறேன் அத்தை .என்ன கேட்டீர்கள் அத்தை ? "

" டிவி ரிமோட்டை காணோம் ...பார்த்தாயா ...? எனக்கு ஒரு கப் காபி வேண்டும் " கீழே தரையில் சுவரில் சாய்ந்து அமர்ந்து கால்களை நீட்டிக் கொண்டு சீரியல் பார்க்க ஆயத்தமானாள் சுந்தரி .

அங்குமிங்கும் தேடி பார்த்துவிட்டு சோபா அடியில் கிடந்த ரிமோட்டை எடுத்து மாமியாரிடம் கொடுத்துவிட்டு , காபி கலந்து கொண்டு வந்து கொடுத்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

பிரவீணா பின்புறம் அந்த வேப்பமரத்தடி கல்லில் அமர்ந்திருப்பது பார்த்தவள் தானும் அங்கே சென்றாள் .
" என்ன அண்ணி இங்கே உட்கார்ந்து விட்டீர்கள் ..? நீங்கள் சீரியல் பார்க்க மாட்டீர்களா ...உங்களுக்கு காபி தரட்டுமா ..? என கேட்டபடி அவள் அருகே அமர்ந்தாள் .

" இன்னும் கொஞ்சநேரம் போகட்டும் மீரா . சீரியல் பார்ப்பேன் .இன்று உள்ளே ஒரே புழுக்கமாக இருந்த்து .இங்கே நல்லா காத்து வந்த்து .அதுதான் அப்படியே உட்கார்ந்துவிட்டேன் .நீ சீரியல் பார்க்க மாட்டாயா ...? "

" பார்ப்பேன் அண்ணி .இங்கே உங்களை பார்க்கவும் அப்படியே வந்துவிட்டேன் ..."

சிறிது நேரம் என்ன பேசுவது என்று தெரியாமல் இரு பெண்களும் அமர்ந்திருந்தனர் .பிறகு மீராதான் மெல்ல ஆரம்பித்தாள் .
" அண்ணி ...அவர்கள் உங்கள் மாமா மகளுடன் ...இவருக்கு நிச்சயித்த திருமணம் எதனால் நடக்காமல் போனது ...? "

இந்த கேள்வியில் பிரவீணா அதிர்ந்து திரும்பினாள் .

" மீரா ...இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும் ...? "

" மாளவிகா கொஞ்சம் சொன்னாள் ..."

" ஓட்டைவாய் .உளறி வைத்தாளா ...என்ன சொன்னாள் ..? " கவலையாக கேட்டாள் .

" அவரும் கொஞ்சம் சொன்னார் ." தலை குனிந்தபடி சொன்னாள் மீரா .

" யார் ...நந்துவா சொன்னான் ...? " ஆச்சரியமாக கேட்டாள் பிரவீணா .

" ம் ....இது மாதிரி திருமணம் நடப்பதாக இருந்த்து .நடக்கவில்லையென்று சொன்னார் .மாளவிகாவும் அதேதான் சொன்னாள் .ஏன் நடக்கவில்லையென்று தெரிந்து கொள்ள வேண்டும் போலிருந்த்து .அதுதான் ...."

" என்ன பெரிய காரணம் ..? நீயே இப்போது நம் வீட்டு நிலைமையை புரிந்து கொண்டிருப்பாய் மீரா .பாட்டிக்கு அம்மாவை ...அம்மா வழி உறவினர்களை பிடிக்காது .மிருணா அம்மாவின் அண்ணன் மகளாகிவிட்டாளே .அந்த ஒரே காரணம்தான் .பாட்டி இந்த திருமணம் நடக்க கூடாது என்பதில் ஒரே பிடிவாதமாக இருந்து , அப்பாவையும் அவர்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு இறுதியில் ஜெயித்து விட்டார்கள் " பெருமூச்சு விட்டாள் .

https://telegram.me/aedahamlibrary

" உங்கள் அனைவருக்கும் ரொம்ப கஷ்டமாக இருந்திருக்கும் .இல்லையா அண்ணி ..? "

" என்ன கஷ்டம் ...? கொஞ்சம் ஏமாற்றம் அவ்வளவுதான் .எத்தனையோ துயரங்கள் நம் வாழ்வில் வருகிறது .இதெல்லாம் பெரிய விசயமா...? " என்றவள் மீராவின் முகத்தை பற்றி தன்புறம் திரும்பினாள் .

" மீரா ...நந்தன் எப்போதும் எட்டாக்கனிக்கு ஆசைப்படுபவன் அல்ல. கிடைத்ததை வைத்து திருப்தி கொள்பவன் .நீ கண்டதையும் நினைத்து உன் மனதை குழப்பிக் கொள்ளாதே ...." என்றாள் .

பாரமான மனதுடன் தலையசைத்தாள் மீரா .

" சரி வா ..நாமும் உள்ளே போய் கொஞ்ச நேரம் அழலாம் " எழுந்தாள் .

புரியாமல் பார்த்த மீராவை " அட சீரியல் பார்க்கலாம் .வாம்மா ..." என்றதும் சிரித்தபடி உள்ளே போனாள் மீரா .

இரவு

தூக்கம் வராமல் விடிவிளக்கை வெறித்தபடி படுத்திருந்தபோது ...அது இல்லாவிட்டால் இது ...என்று ஏதோ சமாளித்து திருப்தி கொள்ளும் பதார்த்தமா நான் ...? என தனக்குள் கேட்டுக்கொண்டிருந்தாள் மீரா .அவளது பிறந்தவீட்டில் அவள் தேவதை .அவள் பேச்சு அம்மா , அப்பா ,தம்பி என அனைவர்க்கும் வேதவாக்கு .எழுதப்படாத சட்டங்களை உருவாக்கி , பிறகு அவற்றை அடிக்கடி திருத்தவும் செய்யும் அன்பு சர்வாதிகாரி அவள் ...அங்கே .இங்கோ ஏதோ வந்துவிட்டாய் ...சத்தமில்லாமல் ஒரு மூலையில் இருந்துவிட்டு போ ...என்ற நிலையா அவளுக்கு .

மீராவிற்கு கண் கலங்க தொடங்கியது .இப்படித்தான் அவள் காலம் முழுவதும் அவள் நிலை இந்த வீட்டில் தொடர போகிறதா ...? பிரிவென்பது நிச்சயம் கிடையாது என்று நந்தகுமார் உறுதியாக கூறிவிட்டான் .அப்படியென்றால் ...இன்னமும் பாட்டியின் ஒரு அழைப்பிலேயே அந்த மிருணாளினியின் நினைவில் தடுமாறும் இந்த கணவனுடன் இப்படி ஒரு வெறுமையான வாழ்வைத்தான் அவள் வாழ போகிறாளா ...?

" உனது நொங்கு பாயாசத்தை நான் இன்னமும் சாப்பிட்டே பார்க்கவில்லையே ...? " நந்தகுமார்தான் கட்டிலில் படுத்தபடி கேட்டுக்கொண்டிருந்தான் .

https://telegram.me/aedalamlibrary

இவன் தூங்கவில்லையா ...? என நினைத்தபடி மௌனமாக இருந்தாள் மீரா .

" மீரா ...விழித்துதானே இருக்கிறாய் ...? "

" உங்களுக்குத்தான் கடையில் வேலை வந்துவிட்டதே ..." குத்தலாக கூறினாள் .

" இரவு சாப்பிடும்போது கொடுத்திருக்கலாமே....? "

நீ கேட்டிருக்கலாமே ...என நினைத்தபடி " பாயாசம் காலியாகிவிட்டது ." பேச்சு முடிந்து என அவனுக்கு சொல்வது போல் அவனுக்கு முதுகு காட்டி திரும்பி படுத்துக்கொண்டாள் .

" ம் ...அப்படியா .சரி .நாளை நொங்கு வாங்கி வருகிறேன் .திரும்ப பாயாசம் வைத்து தருகிறாயா ...? " பேசாதே என்ற அவளது செய்கையை அலட்சியப்படுத்தி அவளை பார்த்து திரும்பி படுத்தபடி கேட்டான் .

" அதற்கு இளநீர் வழுக்கையும் வேண்டும் ..."

" ஏய் என்ன நீ ...அப்போ என்னை மரமேறி இளநீர் பறித்து போடு என்கிறாயா ...? "

நந்தகுமார் கால்களில் கயிறை கோர்த்துக்கொண்டு மரமேறும் தோற்றம் மனதினுள் விரிய , மீராவிற்கு புன்னகை வந்த்து .

" நான் செய்கிற பாயாசம் வேண்டுமென்றால் மரமேறித்தான் ஆகனும் ..." துடுக்காக சொல்லிவிட்டு ...ஐயோ தவறாக நினைத்து கொள்வானோ ...என பயந்தபடி அவன்புறம் திரும்பி பார்க்க ,அவனோ பற்கள் தெரிய புன்னகைத்துக் கொண்டிருந்தான் .

" வேண்டாம் மீரா .விட்டுவிடு ...நான் பாவம் .மரமேறுவதெல்லாம் ரொம்ப ரிஸ்க் ...." என்றான் என்னவோ இப்போதே அவள் கைகளில் குச்சியோடு அவனை மரமேற விரட்டுவது போன்ற பாவனையில் .

அந்த இருளில் மின்னிய அவன் பல் வரிசைகளிலிருந்து தனது பார்வையை மீட்டுக்கொண்டவள் " சரி பிழைத்துப்போங்கள் ..." என கைகளை அசைத்தாள் .

https://telegram.me/aedahamlibrary

வலதுகையை தலைக்கு முட்டு கொடுத்தபடி ஒருக்களித்து படுத்து அவளை பார்த்தபடியிருந்த நந்தகுமாரனின் குறுகுறு பார்வையிலிருந்த தப்ப , " எனக்கு தூக்கம் வருகிறது..." என்றபடி போர்வையை தலைக்கு மேல் மூடிக்கொண்டாள் .

பிறகுதான் அவன் அன்று வந்து போர்வையை விலக்கிவிட்டு போனது நினைவு வர , அவசரமாக தானே போர்வையை முகத்திலிருந்து விலக்கிவிட்டாள் .
அதற்காக கட்டிலில் எழுந்து அமர்ந்துவிட்ட நந்தகுமார் " குட் ..." என்றபடி மீண்டும் படுத்துக்கொண்டான் .

" குட்நைட் மீரா ..." என்றான் .

" ம் ....." என்றபடி கண் மூடிய மீராவிற்கு லேசான மனதுடன் சுகமான தூக்கம் வந்த்து .

" அம்மா நேற்று செய்த பாயாசத்தில் எனக்கு ஒரே ஒரு ஸ்பூன் கூட கிடைக்கவில்லையம்மா ...." மொறுமொறுவென்று தோசை சுட்டு வந்து தனது தட்டில் வைத்த மீராவை ஓரக்கண்ணால் பார்த்தபடி தாயிடம் முறையிட்டான் நந்தகுமார் .

திக்கென நிமிர்ந்து அவனை கோபமாக பார்த்தாள் மீரா .இதழினுள் ஒளித்துக் கொண்ட புன்னகையுடன் சாம்பாரிலிருந்த கறிவேப்பிலையை கவனமாக ஒதுக்கினான் அவன் .

" ஏன் ...?நேற்று  சாயந்தரம் கூட வீட்டிற்கு வந்தானே  ஏன்மா நந்துவிற்கு கொடுக்கவில்லையா நீ ...? " சுந்தரி கேட்டாள் .

" எடுத்து வருவதற்குள் வேலையென்று போய்விட்டார் அத்தை ..." அடிக்கண்ணால் கணவனை முறைத்தபடி சொன்னாள் மீரா .

" இரவு கொடுத்திருக்கலாமே ...? " சுந்தரி விடாமல் கேட்க ...மீரா விழிக்க ...

" ஐயோ என்னண்ணா ...அப்போ நீங்க இன்னும் அந்த பாயாசம் சாப்பிடவேயில்லையா ...நான் காலையில் கூட ஒரு கிண்ணம் சாப்பிட்டேனே ..." என்றபடி அருகில் வந்து அமர்ந்தான் சசிகுமார் .

" ஓ...அப்போ பாயாசம் இன்னமும் காலியாகவில்லையா ...? " மீராவை பார்த்தபடி கேட்டான் நந்தகுமார் .

" இல்லையண்ணா நான் தோசை சாப்பிட்டு விட்டு  இன்னொரு கிண்ணம் சாப்பிட போகிறேன் ..."

https://telegram.me/aedahamlibrary

நந்தகுமாரின் கூர் பார்வையை பார்க்க முடியாது அடுப்பிடம் திருப்பிக்கொண்டாள் மீரா .

" இரண்டு பேருக்கும் கொடு மீரா ..." சுந்தரி சொல்லிவிட்டு கணவனுக்கு சாப்பாடு தட்டில் எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

பாட்டிக்கு குடிப்பதற்கு வைத்த சுடுதண்ணீர் பாத்திரத்தை அடுப்பிலிருந்து இறக்கிய மீராவின் கைகள் நடுங்கியது .நேற்று ஏதோ வேகத்தில் பாயாசம் காலியென்று சொல்லிவிட்டாள் .இப்போது பொய் சொன்னாயா ...என கணவன் கோபிப்பானோ ...என பயந்தாள் .

பதட்டத்தில் கீழே வைத்த சுடுதண்ணீர் பாத்திரம் தளும்பி கொஞ்சம் கொதிநீர் மீராவின் கையில் கொட்டிவிட  கைகளை உதறியபடி ஆ.....என மெல்லிய ஒலியெழுப்பினாள் .

" என்னம்மா ...என்ன ஆச்சு ...? " வினாடியில் எழுந்து வந்து அவள் கைகளை பிடித்திருந்த நந்தகுமார் அவளை இழுத்து சிங்க் அருகில் கூட்டிச்சென்று குழாயை திறந்துவிட்டு தண்ணீரில் அவள் கையை

காட்டினான் .

" ஐஸ் வைங்கண்ணா ..." ப்ரிட்ஜை திறந்து ஐஸ் க்யூப்ஸை எடுத்துக் கொடுத்த சசிகுமார் ...

" அண்ணா எனக்கு காலேஜிக்கு லேட்டாயிடுச்சு .உங்க தோசையை எடுத்துக்குறேன் ..." என்றபடி நந்தகுமாரின் தட்டிலிருந்த தோசையை தனது தட்டில் எடுத்து வைத்து சாப்பிட ஆரம்பித்தான் .

" ம் ...ஒரு சுடுதண்ணி வச்சு இறக்க தெரியலை .என்ன பொண்ணோ ...."
முணுமுணுத்தபடி தோசை தட்டுடன் வெளியேறினாள் சுந்தரி .
ஐஸை எடுத்து அவள் கைகளில் ஒத்தடம் வைத்தபடி " என்ன கேர்லெஸ்ஸா வேலை பார்க்கிறாய் ...? " என கடிந்தான் நந்தகுமார் .
பதில் சொல்லாது அவன் அகன்ற கரங்களுக்குள் அடங்கியிருந்த தனது மெல்லிய கரங்களை பார்த்தபடியிருந்தாள் மீரா .

ஏனோ இந்த ஐஸ் ஒத்தடம் அவளுக்கு சூடாக தெரிந்து .அதெப்படி ஐஸ் இப்படி சூடாக இருக்க முடியும் ..? ஒரு வேளை இது சுடு தண்ணீர் பட்ட எரிச்சலா ...இல்லை இவன் ...அவள் கணவனின் கை சூடா ...?

https://telegram.me/aedahamlibrary

இவ்வளவு ஐஸை வைத்து ஒத்தடம் கொடுக்கும் போதும் , அவன் கை சூடு இந்த அளவு தகித்து அவள் கைகளுக்குள் இறங்குமா ....இது எப்படி சாத்தியம் ...? ஆனால் இது வலிக்கும்படி எரியவில்லையே .இதமான ஒத்தடம் போல் தகித்து சுடுகிறதே .

கீழுதட்டை அழுத்தி கடித்தபடி தனது கைகளை அவனிடமிருந்து உருவிக்கொள்ள முயன்றாள் .

" அசையாதே..." அதட்டினான் .

" லேசாக சிவந்திருக்கறது .பெரிய காயமில்லைன்னு நினைக்கிறேன் .எதற்கும் மருந்து போடுங்கள் அண்ணி .நான் காலேஜிற்கு கிளம்புகிறேன் ...." என்று அவள் கைகளை எட்டிப் பார்த்து சொல்லிவிட்டு போனான் சசிகுமார் .

" எரிச்சல் குறைந்துவிட்டது .கையை விடுங்கள் ...."

அவள் கையை விட்டவன் " பார்த்து வேலை செய் மீரா ...." என்றான் .

" ம் ...உட்காருங்கள் .உங்களுக்கு இன்னொரு தோசை ஊற்றுகிறேன் ..."

" இல்லைம்மா எனக்கு போதும் ...." நந்தகுமார் வெளியேற போக , சரியாக சாப்பிடாமல் போகிறானே என்ற பதட்டத்தில் அவனை அவசரமாக தடுத்தாள் மீரா .

" ஒரு தோசைதானே சாப்பிட்டீர்கள் அது எப்படி போதும் ..? " என்றவள் அவனது வித்தியாச பார்வையை பார்த்ததும் தன்னை கவனித்தவள் திடுக்கிட்டாள் .

அவசரமாக அவனை தடுக்க எண்ணி வேகமாக அவனது சட்டையை பற்றி இழுக்க கைகளை போட்டவள் அவனது இடையோடு வலது கையை சுற்றி வளைத்து இழுத்தபடியிருந்தாள் .

" சாரி ...." தனது கைகளை எடுத்துக்கொண்ட மீராவின் குரலில் சிறு அவமானம் இருந்த்து .

" இன்னொரு தோசை சுடு ..." என்றபடி மீண்டும் டேபிளில் அமர்ந்து கொண்டான் நந்தகுமார் .கைகள் நடுங்க மாவை கல்லில் ஊற்றினாள் .

" சின்ன விசயத்திற்கெல்லாம் டென்சன் ஆகாதே மீரா ....அடுப்பில் வேலை பார்க்கும் போது கவனமாக இரு ..." நடுங்கும் அவள் கைகளை பார்த்தபடி கூறினான் நந்தகுமார் .எப்படியோ சமாளித்து இரண்டு தோசைகளை சுட்டு அவன் தட்டில் வைத்துவிட்டாள் .

https://telegram.me/aedahamlibrary

அவன் சாப்பிட்டு வெளியேறிய பிறகுதான் நினைவு வர , பாயாசத்தை கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு வேகமாக வந்தாள் மீரா .வீட்டிற்குள் அவனைகாணாமல் தேடியபடி வேகமாக வெளிவராண்டாவிற்கு வந்தவள் பக்கவாட்டில் இருந்த மாமனாரின் அறைக்குள் அவன் பேச்சு சத்தம் கேட்கவே வேகமாக அங்கே நுழைந்து விட்டாள் .

அங்கே கட்டிலில் அமர்ந்து முன்னாலிருந்த ஸ்டூலில் வைக்கப்பட்டிருந்த தோசையை பிய்த்தபடி , எதிரே நின்றிருந்த மனைவியையும் , மகனையும் கோபமாக முறைத்தபடி " எப்படியாவது உங்கள் பக்கம் என்னை இழுத்துடனும்..அதுதானே அம்மாவுக்கும் மகனுக்கும் நினைப்பு ...? " என கேட்டுக்கொண்டிருந்தார் குருநாதன் .

திடீரென உள்ளே நுழைந்த மீராவை மூவருமே ஏன் வந்தாய் என்பது போல் பார்க்க ...

" வந்து பா...பாயாசம் கொடுக்கலாம்னு வந்தேன் ...." தயக்கத்துடன் கை நடுங்க கிண்ணத்தை நீட்டினாள் .

நந்தகுமார் அவள் பக்கமே திரும்பவில்லை .சுந்தரி அவளை எரிச்சலாக பார்த்தாள் .

" உன் நொங்கு பாயாசம்தானே ...கொடும்மா கொடு .நேற்றே ரொம்ப ருசியாக இருந்த்து ." குருநாதன் கைகளை நீட்ட அவரிடம் கிண்ணத்தை கொடுத்தபடி மீரா ஓரக்கண்ணால் பார்த்தபோது ...

" நான் வருகிறேன் ...." என்றுவிட்டு வெளியேறி நந்தகுமார் பைக்கை எடுத்துக்கொண்டு போய்விட்டான் .

10

மனம் மயக்கும் மல்லிகை பந்தலில்
கணம் கொதிக்கும் காவிய நதிகளை பாய்ச்சுகிறாய் ,
நிமிடங்களை நிறுத்தி
பொழுதுகளை நீட்டித்திட ,
சுவர்கடிகாரத்தை இறைஞ்சுகிறேன் .

https://telegram.me/aedahamlibrary

திரும்பவும் அலட்சியப்படுத்தி போகிறாயா ...? போடா போ ...இனியொருதரம் என்னிடம் பேசவென்று வந்து நின்று பார் .அப்போது இருக்கிறது உனக்கு ...பொருமியபடி உள்ளே போனாள் மீரா .

" பிரவீணா , திவ்யா ..." என குரல் கொடுத்தபடி வந்தான் குமரேசன் .

" வாங்கண்ணா ...சாப்பிட வாங்க " வரவேற்றாள் மீரா .

" சாப்பிட்டுத்தாம்மா வர்றேன் .பிரவீணாவை எங்கே ...? "

" அண்ணி பாட்டிகிட்ட பேசிட்டிருக்காங்க .போய் பாருங்க ..."

" இல்லையில்லை .நான் போகலை .எனக்கு வெளியே நிறைய வேலை இருக்குது .நான் இங்கே இருக்கேன் .நீ போய் கூட்டிட்டு வாம்மா " குமரேசன் சோபாவில அமர்ந்துகொண்டான் .

பாட்டியை பார்க்க போக சொன்னால் இவனுக்கு எதற்கு இந்த பதட்டம் என எண்ணியபடி " காபி போட்ட்டுமாண்ணா ....? " என்றாள் .

" நீ முதலில் போய் பிரவீணாவையும் , திவ்யாவையும் கூட்டிட்டு வா ...மற்றதெல்லாம் பிறகு பார்க்கலாம் ." குமரேசன் குரலில் இழுத்து பிடித்து வைத்த பொறுமை தெரிந்த்து .

அவனை விநோதமாக பார்த்தபடி பாட்டி வீட்டிற்கு போனாள் மீரா .அங்கே பாட்டியின் கட்டிலில் அமர்ந்து பாட்டி கையை பிடித்தபடி குறைந்த குரலில் பேசிக்கொண்டிருந்தாள் பிரவீணா .திவ்யா தள்ளி ஒரு சேரில் அமர்ந்திருந்தாள் .

" அண்ணி அண்ணன் வந்திருக்காங்க .உங்களை கூப்பிடுறாங்க ..." வீட்டு வாசலில் நின்று பிரவீணாவிடம் சொன்னாள் .

" அவனை இங்கே வரச்சொல்லு .நான் அவனிடம் பேசனும் ..." என்றார் கருணாகரி .

" நான் சொன்னேன் பாட்டி .அவருக்கு ஏதோ அவசரமான வேலை இருக்கிறதாம் .ஹாலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் .அண்ணி உங்களை சீக்கிரம் வரச்சொன்னார் ..."

" நான் கிளம்புகிறேன் பாட்டி .இன்னொரு நாள் பேசலாம் ...திவ்யா வாடி " பிரவீணா வெளியேறினாள் .

https://telegram.me/aedahamlibrary

அவள் பின்னாலேயே போகப் போன மீராவை " நில்லும்மா ..." என நிறுத்தினாள் கருணாகரி .

" என்னம்மா வீட்டில் வேலை அதிகமா...? ஒருதரம் கூட என்னை பார்க்க வரவில்லையே நீ ...? "

" அதெல்லாம் இல்லை பாட்டி .நான் பிறகு வருகிறேன் .அண்ணனுக்கு காபி போடவேண்டும் ...." மீரா நடந்தாள் .
உண்மையில் அவளுக்கு பாட்டியிடம் பேச அவ்வளவாக விருப்பமில்லாமலேயே இருந்த்து . இவரால்தானே இப்படி ஒரு விருப்பமில்லாத வாழ்வை நந்தகுமார் வாழவேண்டியதாயிற்று என நினைத்தாள்.அதன்பிறகும் பாட்டியை பார்க்க மீரா போகவில்லை .

அன்று என்னவோ மீராவிற்கு அம்மா வீட்டிற்கு போகவேண்டும் போலிருந்த்து . மத்தியான வேலை முடிந்த்தும் சுந்தரியிடம் அனுமதி வாங்கிக்கொண்டு கிளம்பிவிட்டாள் .

அம்மா கையால் சாப்பிட்டு விட்டு டிவி பார்த்தபடியே காலை நீட்டி ஹாலில் படுத்துக்கொண்டு ஒரு குட்டி தூக்கம் போட்டு எழுந்த போது "

அக்கா .." என கத்தியபடி வினோத் வந்தான் .அவனது கல்லூரி கதைகளை  கேட்டபடி மாலை ஸ்னாக்சை ஒரு பிடிபிடித்தனர் அக்காவும் தம்பியும் ...

" அக்கா உனக்கு ஒன்று தெரியுமா ...? நான் கிரிக்கெட் கோச்சிங்கில் சேர்ந்திருக்கிறேன் ...."

" ஏய் படிக்கிறதை விட்டுட்டு இதெல்லாம் எதற்கடா ...? "

" அதெல்லாம் கரெக்டா படிச்சிடுவேன் .எங்க கோச் என்ன சொன்னார் தெரியுமா ...? நான் ரொம்ப நல்லா பேட் பண்றேனாம் .ஒருநாள் நிச்சயம் நம்ம இந்தியா டீம்ல சேர்ந்து நம்ம நாட்டுக்காக விளையாடுவேன்னு சொன்னாரு ..."

" அடப்பாவி இதென்னடா நம்ம நாட்டுக்கு வந்த கேடு காலம் ..." மீரா தலையில் கைவைத்து போலியாய் பெருமூச்சு விட்டாள் .

" ஏய் குரங்கே உனக்கென்ன திமிரா ...? " சாதாரணமாக வினோத் மீராவிடம் பேசும் முறை இதுதான் .ஆனால் இப்போதோ  அக்கா திருமணமாகி இன்னொரு வீட்டிற்கு போய்விட்டாள் .அவளில்லாத தனிமை அவனை அழுத்த அந்த குரங்கு , நாயெல்லாம் அன்பான அக்காவாக மாறியிருந்த்து .ஆனால் இன்று மீராவின் சீண்டலில் அக்கா திரும்பவும் ஒவ்வொரு மிருகமாக மாறிக்கொண்டிருந்தாள் .

" எனக்கில்லடா நாயே உனக்குத்தான் கொழுப்பு ..." மீராவும் பதிலுக்கு எகிறினாள் .

" எருமை மாடே எத்தனை தடவை உன்னை சொல்றேன் என் விசயத்தில் தலையிடாதேன்னு .ஒரு தடவையாவது உன் மரமண்டையில் ஏறுதா ...? "

சரிதான் போடா கழுதை .நான் அப்படித்தான்டா பேசுவேன்.என்னடா பண்ணுவ ...? " சொன்னதோட ஆட்காட்டி விரலை கொக்கியாக்கி தம்பியை பார்த்து " வெவ்வெவ்வே." என வக்கலம் காட்டினாள் மீரா .

என்ன நடந்தாலும் சரிதான் என்ற முடிவோடு அக்காவின் மேல் பாய்ந்து அவள் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு அவள் முதுகில் மொத்த தொடங்கினான் வினோத் .

" வக்கலமா காட்டுற ...? இனிக் காட்டுவியா ...? "

கிச்சனிலிருந்து வந்த அன்பரசி இவர்களை பார்த்து அதிர்ந்து வினோத்தின் முதுகில் ஓங்கி ஒரு அறைவிட்டு விலக்கினாள் .

" டேய் பொம்பளை பிள்ளை மேல கை நீட்டுவியா ...? அதுவும் அவள் கல்யாணமான பொண்ணு .உனக்கெதுக்குடா கை இப்படி நீளுது ...? " மேலும் இரண்டு அடி வைத்தாள் .

" அப்போ அவளை பொம்பளை புள்ளையா லட்சணமா இருக்க சொல்லுங்க.எப்போ பாரு என் கூட வம்பிழுத்துட்டு அலையிறா .இதோ இப்படி வக்கலம் காட்டுறாம்மா ◌..." அவளைப் போன்றே செய்து காட்டினான் .

" சரிதான் போடா .நீ உள்ளே போ...." அன்பரசி மகனை வைதாள் .

" ம்க்கும் ...எப்போ பாரு அவளுக்கே சப்போர்ட் பண்ணுங்க ...."

என்றபடி உள்ளே போக போனவன் நின்று அவள் தலையில்

நறுக்கென்று ஒரு கொட்டு வைத்துவிட்டு உள்ளே ஓடினான் .

" டேய் ...." என்றபடி ஆவேசமாக அவனை பிடிக்க எழுந்த மீராவை பிடித்து இழுத்து அமர வைத்த அன்பரசி " ஏய் மீரா என்னடி இது சின்னக்குழந்தையாட்டம் ...." எனக் கடிந்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" அம்மா ...சும்மாம்மா ...விளையாட்டுக்கு ...." என்றபடி அப்படியே அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டாள் .

" ரொம்ப நாளாச்சும்மா .தம்பி கூட சண்டை போட்டு .அதுதான் வேணும்னே அவன்கிட்ட வம்பிழுத்தேன் ..."

" இனி இப்படியெல்லாம் விளையாடாதே மீரா .அவன்பாட்டுக்கு கை நீட்டுறான் பாரேன் .உனக்கு ஒரு காயம் வந்தால் உங்கள் வீட்டு ஆட்களுக்கு யார் பதில் சொல்வது ...? " மீராவின் தலையை வருடியபடி அன்பரசி சொல்ல ...அப்போ நீங்க என் வீட்டு ஆட்கள் இல்லையா ...? என்ற கேள்வி மீராவின் மனதில் எழுந்த்து .

" அதெல்லாம் நாங்க ஒண்ணும் சொல்ல மாட்டோம் .நீங்க கன்ட்டினியூ பண்ணுங்க ...." நந்தகுமாரின் குரல் .

சோபாவில் அமர்ந்திருந்த அம்மாவும் ,மகளும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தனர் .

" வாங்க ....வாங்க ..." என்ற பதட்டமான அழைப்போடு அன்பரசி

உள்ளே போய்விட்டாள்.

" நீங்கள் எப்போது வந்தீர்கள் ...? " சந்தேகமாக கேட்டாள் மீரா .

அவளுக்கு எதிர் சோபாவில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக்கொண்டு , அவளை குறும்பாக பார்த்தபடி " கொஞ்ச நேரத்திற்கு முன்பு இங்கே நாய் , கழுதை , எருமை , குரங்கெல்லாம் வலம் வந்த்தே அப்பவே வந்துட்டேன் ...." என்றான் .

மீராவிற்கு வெட்கம் பிடுங்கித் தின்றது .சை ...இப்படி இவன் முன்னால் போய் சின்னப்பிள்ளைத்தனமாக சண்டை போட்டுக்கொண்டிருந்து விட்டேனே ...அவனை முறைத்தாள் .

" வந்தவர் உடனே உள்ளே வர வேண்டியதுதானே .அதென்ன வாசலில் நின்று உள்ளே நடக்கறதை நோட்டம விடுறது ..."

"இந்த தெரு முனை திரும்பும்போதே உங்க சண்டை சத்தம்  காதில் விழுந்திடுச்சு .இங்கே வந்த்தும் இரண்டு தடவை கூப்பிட்டுக் கூட பார்த்தேனே ...நீங்க இரண்டு பேரும் என்னை எங்கே கவனித்தீர்கள் ....உன் முடியை நான் பிடிக்கவா ..என் முடியை நீ பிடிக்கவா என தீவிரமாக இருந்தீர்கள் ..."

https://telegram.me/aedahamlibrary

அப்படியா இவன் கூப்பிடுவது கூடக் கேட்காமல் இருவரும் சண்டை போட்டுக் கொண்டிருந்தோம் ...என்று நகத்தை கடித்தபடி ஒரு நிமிடம் யோசித்த மீரா ...பிறகு சை ..நான் அந்த அளவு பொறுப்பற்றவள் கிடையாது ...தனக்கு தானே ஒரு சர்ட்டிபிகேட்டை அவசரமாக வழங்கிக்கொண்டு ...

" பொய் ...நீங்க பொய் சொல்றீங்க ..." விரலை அவன்புறம் நீட்டி கோபித்தாள் .

" இல்லைம்மா நிஜம்தான் ....நீ இப்படி பண்ணும்போது கூட ஒரு தடவை கூப்பிட்டேனே ...." நந்தகுமார் அவளைப்போன்றே விரலை ஆட்டி வக்கலம் போல் சைகை செய்தான் .

ஐய்யோ அதையும் பார்த்தானா ...கூச்சத்தில் முகம் சிவக்க முகத்தை கைகளால் மூடியபடி சோபாவில் அமர்ந்துவிட்டாள் மீரா .

" அதென்ன மீரா அங்கே நம்ம வீட்டில் அவ்வளவு அமைதியாக இருக்கிறாய் .இங்கே என்னவென்றால் ...கண்ணகிக்கு அடுத்த வாரிசாக அவதாரம் எடுத்திருக்கிறாய் .உண்மையில் உன் உண்மையான

உருவம்தான் எது ...? அமைதியான மீராவா ...ஆக்ரோசமான கண்ணகியா ...? " தான் அமர்ந்திருந்த சோபாவிலிருந்து நகர்ந்து நுனிக்கு வந்து எதிர் சோபாவில் தலையை பிடித்து அமர்ந்திருந்த மீராவை நெருங்கி குனிந்து கேட்டான் நந்தகுமார் .

அவனது அந்த கேலி கோபமூட்ட சட்டென வினோத்தின் நினைவில் அவன் கைகளில் அடித்துவிட்டாள் ." கொழுப்புடா உனக்கு ..." என்ற வார்த்தைகளோடு .அடித்த பிறகே தான் செய்த தவறு புரிய அவள் விழிக்க ஆரம்பக்கும்போது ....

" மீரா என்ன இது ...? கையும் ...வாயும் நீளுது ....மாப்பிள்ளைகிட்ட சாரி கேளு ..." கோபமாக வந்தாள் அன்பரசி .

" அட இதிலென்ன அத்தை இருக்கு .சும்மா ஒரு கேலிதானே ..."

அன்பரசியின் கோபத்தை நந்தகுமார் சமாளிக்கும்போதே .....

குற்றவுணர்வுடன் " சாரி ..." என்றாள் மீரா .

" அவள் சின்ன பிள்ளை மாதிரி மாப்பிள்ளை .நீங்க தப்பா எடுத்துக்காதீங்க ..." அன்பரசி தடுமாறினாள் .

https://telegram.me/aedahamlibrary

" அட விடுங்கத்தை .சாதாரண விசயத்தை பெரிசாக்கிட்டு ...அதென்ன காபிதானே .கொடுங்க ..குடிச்சிட்டு நாங்க கிளம்புறோம் ..."

" இன்னைக்கு ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க ...? " அவனுடன் வண்டியில் போகும் போது கேட்டாள் .

" இன்று காலையிலேயே எனக்கு ஒரு பட்சி சொன்னதே ....டேய் நந்தகுமார் பொண்டாட்டி இல்லாமல் உன்னால் வீட்டிற்கு போக முடியாது அதனால் போகிற வழியிலேயே அவளை கூட்டிட்டு போயிடுன்னு .அதுதான் வீட்டிற்கு கூட போகலை ◌நேரா இங்கேதான் வர்றேன் .உன்னைக் கூட்டிட்டு போக ...."

"நான் இன்று அம்மா வீட்டிற்கு வரப்போவது உங்களுக்கு எப்படி தெரியும் ...? "

" தெரியும் மீரா .உனக்கு இன்று என் மேல் கொஞ்சமே கொஞ்சம் கோபம் இருந்த்து .அதனால் நீ இங்கேதான் வந்திருப்பாயென்று எனக்கு தெரியும் "

" அ...அதெல்லாம் ஒண்ணுமில்லை .நான் இன்னைக்கு இல்லை நேற்று

வந்து ...ம் ...உங்க அக்கா ..இல்லை பிரவீணா அண்ணி நம்ம வீட்டிற்கு வந்திருந்தார்களே ...அதைப்பார்த்ததும் எனக்கும் அம்மாவை பார்க்க வேண்டும் போலிருந்தது .அதனால்தான் வந்தேன் ..." அப்பாடி ஒரு வழியாக சமாளித்தாயிற்று என அவள் பெருமூச்சு விடும்போதே ....நந்தகுமாரின் மெல்லிய சிரிப்பு கேட்டது .

" அக்கா நம்ம வீட்டுக்கு வரும்போதெல்லாம் நீயும் உன் அம்மாவை பார்க்க போவதென்றால் ...வாரத்திற்கு நான்கு நாட்கள் நீ உன் அம்மா வீட்டில்தான் இருக்கவேண்டும் .கல்யாணமாகி பதினைந்து வருடமாகிவிட்டது .இன்னமும் சின்ன விசயத்திற்கெல்லாம் கோபித்துக்கொண்டு அக்கா இங்கே வந்துவிடுவாள் .பின்னாலேயே அவளை சமாதானப்படுத்தி கூட்டிப் போக மச்சானும் வந்துவிடுவார் ...."

" ஓ...ஆனால் அப்படி சின்ன விசயத்திற்கெல்லாம் சண்டை போடுமளவு சிறுபிள்ளைத்தனம் அவர்களிடம் இல்லையே ...." யோசனையோடு கூறினாள் .

" ஆமாம் ஆமாம் ..உன்னளவு சிறுபிள்ளைத்தனம் அக்காவிடம் கிடையாது ..." கிண்டலாக சொன்னான் .

https://telegram.me/aedahamlibrary

அவன் தோள்களில் அடிக்கும் வேகத்தில் உயர்ந்துவிட்ட கைகளை கஷ்டப்பட்டு அடக்கி வைத்தாள் .சும்மாவே சின்ன பிள்ளையென கிண்டல் செய்து கொண்டிருக்கிறான் .

" வண்டி ஓட்டிக்கொண்டிருக்கிறேன் மீரா .கிள்ளுவது , அடிப்பது போன்ற எண்ணங்கள் எதுவுமிருந்தால் நம் வீட்டில் போய் வைத்துக் கொள்ளலாம்மா ...ப்ளீஸ் ...." கெஞ்சுதல் சிறிதுமின்றி கெஞ்சும் குரல் .

" சரிதான் போடா ..." தனது கோபத்தை தலைகுனிந்து முணுமுணுத்து குறைத்துக்கொண்டாள் .

" என்ன சொன்னாய் மீரா ....? எதிர் காற்றில் ஒன்றும் கேட்கவில்லை ..." பின்னால் சாய்ந்து அவள் குரலை கேட்க முயன்றவனை ...

" ஒழுங்காக முன்னால் பார்த்து வண்டி ஓட்டுங்க ..." நுனிவிரல்களால் அவன் தோள்களை பிடித்து தள்ளிவிட்டாள் .

" காலையில் ஏன் அவ்வளவு கோபமாக போய்விட்டீர்கள் ...? "

பதிலேதுமில்லாமல் அமைதியாக வண்டி ஓட்டிக்கொண்டிருந்தான் .இவ்வளவு நேரம் நான் பேசியது காதில் விழுந்ததே .இப்போது மட்டும்

விழவில்லையாக்கும் ...மீரா பொருமிய போது நந்தகுமார் திடீரென ப்ரேக் அடித்து வண்டியை நிறுத்திய இடம் அந்த பார்க் .அதென்ன எப்போது பார்த்தாலும் பார்க்கில் வைத்தே பேசுவது ....

" நான் பார்க்கிற்கெல்லாம் வரமாட்டேன் ..." கால்களை தரையில் அழுத்தி ஊன்றிக்கொண்டாள் .

" அங்கே யார் போகப்போவது .நான் அங்கே போகப்போகிறேன் ...வா ..." என முன்னே நடந்தபடி நந்தகுமார் காட்டிய இடத்தில் பார்க்கிற்கு எதிரே அந்த  ஐஸ்க்ரீம் கடை இருந்த்து .

கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் இருக்க இந்த ஐஸ்க்ரீம் சமாதானமா ...அப்படி ஒன்றும் எனக்கு ஐஸ்க்ரீம் தேவையில்லை .மீரா நகராமல் நின்றாள் .

" சாக்கோபார் உனக்கு பிடிக்கும்தானே ....? "முன்னால் நடந்தபடி நந்தகுமார் கேட்ட கேள்வி , ஐஸ்க்ரீம் வேண்டாமென்று கூறிவிட வேண்டுமென்ற மீராவின் எண்ணத்தை மாற்றியது .

ஒரே ஒரு சின்ன ஐஸ்க்ரீம் மட்டும் சாப்பிட்டு கொள்ளலாம் ..தன்னை தானே சமாதானித்துக்கொண்டு அவனுடன் நடந்தாள் .

https://t.me/aedahamlibrary

" இரண்டு சாக்கோபார் ..." ஆர்டர் செய்தான் .ஐஸ்க்ரீமின் கவரை பிரித்து அவளிடம் ஒன்று நீட்டினான் .தனக்கு ஒன்று பிரித்துக்கொண்டான் .அவளை பார்க்காமல் ஐஸ்க்ரீமை பார்த்தபடி ஏதோ யோசனையில் இருந்தான் .

நீ ஐஸ்க்ரீமை குடிக்கும் ஐடியாவில் இருந்தால் எனக்கு ஒன்றுமில்லை ...மனதிற்குள் நினைத்தபடி தனது ஐஸ்க்ரீமை சாப்பிட ஆரம்பித்தாள் மீரா .விழிகளை சுழற்றி அந்த கடையை பார்த்தாள் .அந்த கடைக்கு அதற்கு முன்பும் பலமுறை வந்திருக்கிறாள் .அப்பா ..அம்மாவுடன் ...தம்பியுடன் .ஓரிருமுறை தோழிகளுடன் கூட .

ஆனால் கணவனுடன் இப்போது வந்திருப்பது ..ஏனோ ஒரு புது உணர்வை தோற்றுவித்தது .ஏதோ ஒரு சிலிர்ப்பு .அவன் உன்னை திரும்பி கூட பார்க்க மாட்டேங்கிறான் .நீ ஐஸ்க்ரீமை விட மோசமாக உருகிக்கொண்டிருக்கிறாய் .எதிரிலிருப்பவளை உணராமல் எங்கோ வெறித்தபடியிருந்தவனை பார்த்த மீராவின் மனசாட்சி கேலி செய்த்து .

" அப்பா கடுமையான உழைப்பாளி மீரா ...." நந்தகுமார் உருக

ஆரம்பித்த ஐஸ்க்ரீமை வாய்க்குள் வைத்தபடி பேச ஆரம்பித்தான் .மீரா அவன் பேச்சை கவனிக்க ஆரம்பித்தாள் .

11

கட்டைவிரல் மடங்கி ,கால் நடுங்கி
நகம் பெயர்த்தெடுத்து ,
தடுமாற வைக்கும் வாசல்படிகளை
விரும்ப ஆரம்பித்திருக்கிறேன் ,
மறுபுறம் நீ நின்றுகொண்டிருக்கும் பொழுதுகளில் ...

...அப்பாவை பற்றி பேச போகிறானா ...? அதுதான் இவ்வளவு யோசனையா ...? நான் கேட்ட கேள்விக்கு பதிலா ...? அவனை கவனிக்க ஆரம்பித்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" கிராமத்தில் விவசாயம் பார்த்தவர் அப்பா .அங்கே பங்காளிகளுக்குள் நிலப்பிரச்சினை வர , எனக்கு எதுவும் தேவையில்லையென எல்லாவற்றையும் உதறிவிட்டு இருபது வருடங்களுக்கு முன்பு எங்களை கூட்டிக்கொண்டு இங்கே வந்தார் .அம்மாவிற்கு இங்குதான் பிறந்தவீடு .அம்மாவின் பிறந்த வீட்டினருக்கு அப்பா இப்படி படக்கென எல்லாவற்றையும் உதறிவிட்டு வந்துவிட்டாரே என்ற குறை உண்டு .அதனால் அப்பாவிற்கும் , அம்மாவின் அண்ணனிற்கும் ...அவர் பெயர் சண்முகசுந்தரம் ...அவருக்கும் முதலில் இருந்தே அவ்வளவாக ஒத்து போகாது .

சண்முகம் மாமாவிற்கு இருந்த சொத்துக்களை வீம்பிற்காக விட்டு விட்டு வந்து இப்போது தன் தங்கையையும் , தங்கை குழந்தைகளையும் கஷ்டப்படுத்துகிறார் என்ற மனத்தாங்கல் அப்பாவின் மீது இருந்த்து .இதனால் அவர் சில நேரங்களில் அதிகப்படியாக விட்டு விட்ட வார்த்தைகளால் அப்பாவிற்கும், மாமாவிற்கும் பிடிக்காமல் போனது .

அம்மா கஷ்டப்பட்டு இருவருக்குமிடையே நிரந்தர பிரிவு ஏற்படாமல் காத்து வந்தார்கள் .பாட்டி அப்பாவின் பக்கம் .அப்பா இதோ இப்போது

பார்க்கிறாரே இந்த வேலையில் சேர்ந்து ஓரளவு சம்பாதிக்க தொடங்கிவிட்டார் .பிறகு கொஞ்சம் பிரச்சினைகள் குறைந்து .மாமாவும் மாமா குடும்பத்தினரும் வரப்போக இருக்க அப்பா கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார் .அம்மாவிற்கும் பிறந்தவீட்டு சொந்தங்களின் மீது மிகுந்த பாசம் உண்டு .

கஷ்டமென கூறி அண்ணனிடமிருந்து ஒரு பைசா வாங்கிக் கொள்ள கூடாது என்பதுதான் அப்பா அம்மாவிற்கு போட்ட கண்டிப்பான உத்தரவு .அவர்கள் உதவியில்லாமல் தனது குடும்பத்தை நிமிர்த்தி காட்டவேண்டுமென்ற வேகம் அப்பாவிற்கு. அதனை திருப்தியாகவே செய்தார் அப்பா .அக்காவிற்கு திருமணம் செய்து ,சொந்தமாக வீடு வாங்கி., என்னை படிக்க வைத்து ....எல்லாமே அப்பாதான். அவர் உழைப்புதான்.

எனது படிப்பு முடிந்த பிறகு நான் ஏதாவது கம்பெனியில் வேலை பார்க்க வேண்டுமென்பது அப்பாவின் விருப்பம் .ஆனால் எனக்கு தொழிலின் மீது ஆர்வம் .லீவு நாட்களில் அப்பாவோடு சேர்ந்து அவருடைய வியாபாரத்திற்கு போய் வந்த்திலிருந்து அந்த தொழிலை நானே செய்ய வேண்டுமென்ற எண்ணம் .அப்பாவிற்கு இது அவ்வளவாக பிடிக்கவில்லையென்றாலும் எனக்காக சம்மதித்தார் .

https://telegram.me/aedahamlibrary

வேலை பழகுவதற்காக அவர் வழக்கமாக பொருட்களை வாங்கும் கடையிலேயே என்னை வேலைக்கு சேர்த்துவிட்டார் .ஒரு வருடம் அங்கே வேலை பார்த்தேன் .இந்த தொழிலின் பல நுணுக்கங்களை அங்கேதான் கற்றுக்கொண்டேன் .அந்த கடை முதலாளி மிகவும் நல்லவர். எனது சுறுசுறுப்பு பிடித்து போய் ஒளிவின்றி இந்த தொழிலின் சூட்சுமங்கள் அனைத்தையும் சொல்லிக்கொடுத்தார் .

இப்போது தொழில் எனக்கு நன்றாக பிடிபட்டு விட , நானே தனியாக தொழில் தொடங்க எண்ணி அப்பாவிடம் பேசினேன் .அப்பா பயந்தார் .மறுத்தார் .இப்போது ஓரளவு நல்ல நிலையில்தான் இருக்கிறோம் .இது போதும் என்றார் .ஆனால் நான் பிடிவாதமாக இருந்தேன் .ஏனென்றால் அப்பாவிற்கு முன்பு போல் அலைய முடியாத்தால் அவரது வருமானம் குறைந்து கொண்டே வந்த்து .நிச்சயம் அது குடும்பத்தற்கு போதாது .அதனால் வருமானத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் நான் இருந்தேன் .

வீட்டில் அம்மா ,அக்கா , மாளு, சசி ...எல்லோரும் என் பக்கம் .அப்பாவும் பாட்டியும் ஒரு பக்கம் .கொஞ்ச நாட்கள் வீட்டில் இதே

பிரச்சினையாக இருந்த்து .பிறகு நான் பாட்டியிடம் , அப்பாவின் முதலாளியிடம் பேசி ஒரளவு அப்பாவை சமாளித்து பேங்கில் லோன் வாங்கி தொழில் தொடங்கினேன் .ஒரு வருடத்தில் நிலைத்து இரண்டு வருடத்தில் திரும்பி பார்க்க வைத்து மூன்றாவது வருடத்திலேயே எதிர்பாராத அளவு லாபம் வரத்தொடங்கியது .ஆறு வருடங்களாகிவிட்டது .இப்போது வரை லாப சதவிகிதம் வருடா வருடம் அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை .

எனது முன்னேற்றத்தில் அப்பாவிற்கு மிகவும் பெருமை என்றாலும் , கடையில் முதலாளி சேரில் அப்பாவை அமர வைக்க வேண்டுமென்ற எனது ஆசை நிறைவேறவில்லை. இது முழுக்க முழுக்க உனது உழைப்பு .நீ மட்டும்தான் இதற்கு உரிமையானவன் என உறுதியாக கூறிவிட.டார் .மகனை கூட சார்ந்திருக்க கூடாது என்ற  மிகுந்த தன்மானம் அவருக்கு .

மீராவிற்கு தனது மாமனாரின் மேலிருந்த மதிப்பு அதிகமாகிக்கொண்டே போனது .

" மிகவும் உயர்ந்த மனிதர் மாமா ..." என்றாள் .

" நிச்சயமாக ..." தலையாட்டி ஒத்துக்கொண்டவன் எதிரேயிருந்து எழுந்து வந்து மீராவின் அருகில் அமர்ந்து கொண்டான் .

" அந்தப்பெண் கொஞ்சம் நம்மையே கவனிப்பது போல் தெரிந்த்து மீரா .அதுதான் கொஞ்சம் சத்தம் குறைத்து பேசலாமே என்றுதான் ...." அந்த கடை விற்பனை பெண்ணை காட்டி கூறியவன் அவளருகே தனது நாற்காலியை ஒட்டினாற் போல் நகர்த்தி போட்டுக்கொண்டு அவள்புறம் குனிந்து கொஞ்சம் மெலிந்த குரலில் தொடர்ந்து பேச தொடங்கினான் .

திடீரென்ற இந்த அருகாமையில்  மீராவிற்கு வியர்க்க தொடங்கியது .முகம் திருப்பி பார்த்தால் அவனது மீசையில் தனித்து தெரியும் முடிப்பிசிறலை கூட பார்க்க முடிகிற இந்த நெருக்கம் விளக்க முடியாத ஒரு பிடித்தத்தையோ , பிடித்தமின்மையையோ அவளுக்குள் அளித்தது .வம்பெதற்கு என கண்களை தாழ்த்தியபடியே டேபிளில் வைத்திருந்த தனது கைகளில் பார்வையை பதித்தபடி " ம் ..." என்றாள் .

"இப்போது சண்முகம் மாமா கல்யாண பேச்சை எடுத்தார் ..." மீராவின் உடல் விரைத்தது .மிருணாளினி ...இவளை எப்படி மறந்தேன் .இதோ அவளைப் பற்றிய பேச்சு வரும்போதே இவன் குரல் இப்படி குழைகிறதே .இன்னமும் அவளிடமே இருக்கும் மனதை மீட்கமுடியாமல் திணறுபவனை , இப்படி அருகிருந்து பார்த்து ரசிக்கிறேனே .

https://telegram.me/aedahamlibrary

சிலிர்த்த உடலை கட்டுக்குள் கொண்டு வந்து பறவையாய் பறந்த மனதின் தலையில் கொட்டி அடக்கினாள் .

" அம்மாவிற்கு முதலிலிருந்தே மிருணாவை மருமகளாக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அதிகமாக உண்டு . அண்ணன் குடிம்பத்திற்கும் தனது குடும்பத்திற்கும் இந்த திருமணத்தால் நெருக்கம் ஏற்படும் .கடைசி வரை இரண்டு குடும்பமும் ஒற்றுமையாக இருக்கலாம் என நினைத்தார்கள் .அதனால் எனக்கு விபரம் தெரிந்த நாள் முதலே மிருணாவை திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை எனக்கு சொல்லிக்கொண்டேயிருந்தார்கள் .

" பாட்டியோ , அப்பாவோ ...இந்த திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்களென நினைத்தோம் .ஆனால் ஆச்சரியமாக மாமா வந்து கேட்டதும் அப்பா உடனே ஒத்துக்கொண்டார் ..."என்றவன் சற்று நிறுத்தி "மிருணாவை மறுக்க யாராலும் முடியாது ..." என்று சொல்லிவிட்டு மௌனமானான் .

பறவை மனது கண்ணியில் சிக்கிய காயத்துடன் அவனது நெகிழ்ந்த மனதை மறுக்கும் வேகத்துடன் " உங்கள் மாமா ஒன்றை வேண்டி தன்னிடம் வந்து நின்றதே போதுமென்றிருந்திருக்கும் என் மாமனாருக்கு ..." என்றாள் மாமனாரில் அழுத்தம் கொடுத்து .

https://telegram.me/aedahamlibrary

அவளை ஆச்சரியமாக பார்த்தான் நந்தகுமார் ." அப்படியும் இருக்கலாமோ ..? எனக்கு இவ்வளவு நாடகளாக இது தோன்றியதில்லை மீரா ...." என்றான் .

எப்படி தோன்றும் ...நீங்கள்தான் குடும்பத்தோடு அந்த மிருணா பின்னால் பல்லிளித்துக்கொண்டு திரிந்தீர்களே ....பற்களை கடித்து வார்த்தைகளை அடக்கியபடி " அப்படியேதான் ....," என உறுதியாக கூறினாள் .

" இருக்கலாம் .." அலட்சியமாக தோள்களை குலுக்கினான் ."அப்பாவும் , பாட்டியும் ஒத்துக்கொண்டனர் .மாளுவின் திருமணத்திற்கு பின் எங்கள் திருமணமென்று வாய் வார்த்தையாக பேசி வைக்கப்பட்டது .மிருணா ...எங்கள் வீட்டு மருமகளாகவே வீட்டினுள் வலம் வரத் துவங்கினாள் "

மீராவிற்கு தலை வலிப்பது போல் இருந்த்து .இந்த கதை கன்றாவியெல்லாம் இப்போது கேட்டுத்தான் ஆகவேண்டுமா ..என்றிருந்த்து .ஏதேதோ பேச நேரம் வேண்டுமென்பதற்காக ஒன்றிற்கு இரண்டாக இந்த ஐஸ்க்ரீமை விழுங்கி தொலைத்திருக்க கூடாது

.எனக்கு சம்பந்தமில்லாத ஒருத்தியை பற்றிய புகழுரைகளை கேட்டிருக்க கூடாது .கண்டதையும் தின்று கழுதை கதையெல்லாம் கேட்டு இப்போது தலைவலிப்பது எனக்குத்தானே .உனக்கென்ன ஜாலியாக அனுபவித்து உன் காதல் கதையை சொல்லிக்கொண்டிருக்கிறாய் .

சற்றுமுன் தென்றலாய் சுகித்துக் கொண்டிருந்த நந்தகுமாரின் அருகாமை இப்போது அனல் அடுப்பாக கொதித்தது .போதும்டா , உன் வீரப்பிரதாபங்களையெல்லாம் நீயே மூட்டை கட்டி வைத்துக்கொள் .என்னை விட்டு விடு ....எனக் கத்த வேண்டும் போலிருந்த்து .ஆனாலும் அதை சொல்லும் தைரியமற்று தலைகுனிந்து அமர்ந்திருந்தாள் .

" வீட்டிற்குள்ளே வளைய வந்த மிருணாவை அப்பாவிற்கும் , பாட்டிக்கும் பிடிக்கவில்லையென்றாலும் சிறு சிறு குற்றம் கண்டுபிடித்தலை தவிர பெரிதான குறையொன்றும் சொல்லவில்லை .இப்போது வரை எங்கள் திருமணத்தை எதற்காக தடுத்தனர் என எனக்கு தெரியவேயில்லை ..." நந்தகுமாரின் குரலில் பெரிய சோகம் இருந்த்து .

" உங்கள் அம்மாவிற்கு ...அத்தைக்கு தெரிந்த்தா ...? "

https://telegram.me/aedahamlibrary

" ம்ஹூம் .என்னை போன்றே அம்மாவும் இன்று வரை காரணம் தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறார்கள் .மாளுவின் திருமணம் வரை பாட்டி எதுவும் பேசவில்லை .திருமணம் முடிந்த மறுநாளே இந்தக் கல்யாணம் நடக்காது என்று கூறிவிட்டார்கள் .அப்பாவும் பாட்டி பக்கம் சேர்ந்துவிட்டார் .திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்கள் அனைவரையும் வைத்துக்கொண்டே அப்பா இப்படி சபையில் கூறுவது போல் சொல்லிவிட்டார் .

மாமா கோபத்தோடு சண்டை போட அத்தையும் , மிருணாவும் அழ....கல்யாணவீடு எப்படியிருந்த்து தெரியுமா ...? நான் இதையெல்லாம் பிறகு பார்க்கலாமென பிரச்சினையை தள்ளி வைக்க முயன்றேன் .ஆனால் அவர்கள் பக்கம் நான் பேசவில்லையென்று மாமா , அத்தை , மிருணா ...மூவரும் கோபித்துக் கொண்டு போய்விட்டனர் .

மாளுவிற்கு வந்த சம்பந்தம் மாமா கொண்டு வந்த்துதான் .மிகவும் நல்ல இடம் .அதற்காகத்தான் அப்பாவும், பாட்டியும் இவ்வளவு நாட்களாக வாயை மூடிக்கொண்டு இருந்ததாக மாமா குற்றஞ்சாட்ட , அப்பா அவரை அடிக்க போக ....ஷ் ..ஷப்பா ...மிகவும் மோசமான நாட்கள் அவை .

இருவீட்டாரையும் சமாதானப்படுத்த சில உறவினர்கள் எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை .என் பொண்ணு வேணும்னா அவனை இங்கே வரச்சொல்லு என மாமாவும் , என் பையன் வேணும்னா அவன் என் காலில் விழுந்து மன்னப்பு கேட்கட்டும் என அப்பாவும் இடையில் ஆட்களிடம் சொல்லி அனுப்ப , எதுவும் நடக்காமல் தனியாக நின்றது எங்கள் பேசி வைத்த திருமணம் .

மாமா மிருணாவிற்கு வேறு மாப்பிள்ளை பார்ப்பதாக தகவல் வர , அவளுக்கு முன் எனக்கு திருமணம் நடத்த வேண்டுமென்று அப்பா அவசரம் அவசரமாக பார்த்து ஒரே மாதத்தில் முடிவு செய்து ...திருமணம் ...." என தங்களிருவரையும் விரலால் காட்டினான் .

" அன்றிலிருந்து இன்னமும் வீட்டில் பழைய சுமூகம் திரும்பவில்லை .அம்மாவும் , அப்பாவும் தொட்டதிற்கெல்லாம் கோப்பப்பட்டு சண்டை போட்டுவிடுகின்றனர் .இன்று காலை கூட அப்படித்தான் ..ஒரு ஒன்றுக்கும் உதவாத சாதாரண விசயத்திற்கு அப்பா ..அம்மாவின் அப்பா வரை இழுத்து  வசவுகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தார் .அப்போதுதான் நீ பாயாசத்துடன் வந்தாய் .அந்நேரம் நான் மிகுந்த எரிச்சலில் இருந்தேன் .பிறகு நடந்த்துதான் ..." உனக்கே தெரியுமே ...என ஜாடை கூறி முடித்தான் .

" போகலாம் ..." என எழுந்தாள் மீரா .

" எனக்கென்னவோ எல்லாவற்றையும் உன்னிடம் சொன்னதும் மனது பாரமிறங்கி லேசாக நிம்மதியாக இருக்கிறது மீரா ...." வண்டியை ஓட்டியபடி சொன்னான் நந்தகுமார் .

அதுவே உண்மை போல் அன்றிரவு படுத்ததுமே ஆழ்ந்து தூங்கியும்விட்டான் .

வெறுமனே கண்களை மூடிப் படுத்திருந்த மீரா அவன் தூங்கியது தெரிந்த்தும் மெல்லிய விசும்பல்களாக அழத்துவங்கினாள் .

## 12

தூங்கட்டுமென துடிக்காத இதழ்களால்
நெற்றியுரசி செல்வாயே ,

உறுத்தா அவ்வுதடுரசல்களில்
தலையணை இறுக்கி
காலமெல்லாம்
உறங்க தோணுகிறதடா ...

குமிழ்கள் முட்டையிட அடுப்பில் குருமா கொதித்துக் கொண்டிருந்த்து . வெளித்தெரியாமல் மீராவின் மனது உள்ளேயே கொதித்துக் கொண்டிருந்த்து .தன் மன வெறுமையை பிசைந்து கொண்டிருந்த மாவிடம் காட்டிக்கொண்டிருந்தாள் அவள் .

" மிருணாவை மறுக்க யாராலும் முடியாது "

" மிருணா எங்கள் வீட்டு மருமகளாக வலம் வரத் துவங்கினாள் ...."

இரண்டு மாதங்களாக இந்த வாசகங்கள் அவள் மனதினுள் ஸ்குரோலிங்கில் ஓடுவது போல் இடைவிடாது ஓடிக்கொண்டே இருந்த்து . இவர்கள் குடும்பத்திற்குள் நடக்கும் சண்டைக்கு நான் பலியாகிவிட்டேனே ....கழிவிரக்கம் கூடி கண்ணீர் தயாரானது .

https://telegram.me/aedahamlibrary

அந்த வீட்டில் சசிகுமார் மட்டும்தான் அவளிடம் கொஞ்சம் ஒட்டுதலாக பேசுபவன் .அவனிடம் மிருணாளினி பற்றி மீரா பேசியதில்லை .பேசினால் ஒரு வேளை அவனிடமும் ஏதாவது மிருணா பஜனை இருக்கலாம் .எதற்கு வம்பென்று மீரா அந்த ரிஸ்க் இதுவரை எடுக்கவில்லை .எனவே அவளுக்கும் சசிகுமாருக்குமான பேச்சு இதுவரை சுமூகமாகவே இருந்த்து .

சுந்தரி வேலை சம்பந்தமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் , விளக்கங்கள் பேசுவதோடு சரி .அநாவசியமாக ஒரு அதிக வார்த்தை கூட அவள் வாயிலிருந்து வராது .இதனை மாமியார்த்தனமென்று எடுத்துக் கொள்வதா ...இல்லை பிடிக்காத மருமகளென்ற முறையில் எடுத்துக் கொள்வதா என தெரியாமல் விழித்தாள் மீரா .

மாளவிகா அம்மா வீட்டிற்கு அடிக்கடி வருவதில்லை . வந்தாலும் அதிக நாட்கள் இருப்பதில்லை .அப்படி இருக்கும் நாட்களிலும் ஏதாவது பேசிவிடுவோமோ என்ற பயத்திலேயே மீராவை பார்க்கும் போதெல்லாம் வாயை இறுக மூடிக்கொள்வாள் .

பிரவீணா அடிக்கடி வந்தாலும் அதிகம் தனிமையை நாடுகிறவள் .அடிக்கடி அந்த வேப்பமரத்தடி கல்லில்தான் போய் அமர்ந்து

கொள்வாள் .மீராவே பேச்சுக் கொடுத்தாலும் ஓரிரண்டு வார்த்தைகளில் முடித்துக்கொள்வாள் .

குருநாதன் வீட்டில் அனைவரிடமும் எரிந்து விழுந்தாலும் மீராவிடம் கனிவாகவே பேசுவார் .ஆனால் வேலையே சரியாக இருப்பதால் அவர் வீட்டில் இருக்கும் நேரமே குறைவு .

கருணாகரி மீராவிடம் பேச மிகவும் விரும்புவார் .அதனை மீராவும் உணர்ந்தே இருந்தாள் .இருப்பினும் தனது இந்த நிலைமைக்கு பாட்டியும் , மாமனாரும்தான் காரணமென்று அவள் எண்ணியதால் அவர்களிருவரிடமும் பேசுவதையே தவிர்த்தாள் .

எஞ்சியிருப்பது நந்தகுமார் .அவள் கணவன் .இன்று வரை அந்த எண்ணம் சிறிதும் இல்லாதவன் .ஏதாவது கூட.டத்தில் தான் தொலைந்து போனால் , தனனை இவனால் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா ...? என்ற சந்தேகம் மீராவிற்கு உண்டு .அந்த லட்சணத்தில்தான் இது நாள்வரை அவள் முகம் பார்த்துக் கொண்டிருக்கிறான் .

அன்று தனது  முன்கதையை அவளிடம் கூறியதிலிருந்து பாரம் இறங்கிய உணர்வுடன் மூச்சு விட்டவன் ஏதோ அத்தோடு தனது கணவன் கடமை முடிந்தாற் போல் தனது அன்றாட வேலைகளை பார்த்துக்கொண்டிருந்தான் .

https://telegram.me/aedahamlibrary

இந்த திருமணம் நடந்த்து எதற்காக என்ற கேள்வியுடன் உள்ளுக்குள் பொங்கிக் கொண்டிருக்கிறாள் மீரா .மீராவின் குழப்ப மனதிற்கு ஏற்றாற் போல் சப்பாத்தி வடிவம் பெற்றுக் கொண்டிருந்த்து .கை போன போக்கில் மாவை இழுத்துக் கொண்டிருந்தாள் அவள் .

" ஐய்யோ என்ன அண்ணி இது மேப் மேப்பாக செய்து வைத்திருக்கறீர்கள் .இது நியூசிலாந்து , இது ஆஸ்திரேலியா ...இது என்ன அண்ணி வெஸ்ட் இன்டீசா ....? " சசிகுமாரின் கேலிக் குரலில் மீண்டு தான் தேய்த்திருந்த சப்பாத்திகளை பார்த்தவள் அசடு வழிந்தாள் .ஒழுங்கற்று ஒவ்வொன்றும் ஒரு உருவத்துடன் பல்லிளித்தது .

அவசரமாக எல்லாவற்றையும் மீண்டும் திரட்டியவள்  " சாரி .ஏதோ ஞாபகத்தில் இருந்துவிட்டேன் ." என்றபடி மாவை மீண்டும் உருட்டினாள் .

" சப்பாத்தி தேய்ப்பதற்கு தனியாக டியூசன் எதுவும் வைப்போமா ...? " இடுப்பில் ஒரு கையை வைத்தபடி நக்கலாக கேட்டுக் கொண்டிருந்தாள்

சுந்தரி .

சீரியல்தானே பார்த்துக் கொண்டிருந்தார்கள் .இங்கே எப்போது வந்தார்கள் ...? என்னை ஏதாவது குறை சொல்வதென்றால் அம்மாவிற்கும் , பிள்ளைக்கும் அல்வா சாப்பிடுவது போல ...என எண்ணியபடி

" சாரி அத்தை .இதோ சரி பண்ணி விடுகிறேன்...." மீண்டும் தேய்க்க தொடங்கினாள் .சுந்தரி திரும்ப சீரியலுக்கு போய்விட்டாள் .

" அண்ணி பசிக்குது .மேப்பாக இருந்தாலும் பரவாயில்லை முதலில் அதிலேயே ஒன்று போட்டுவிடுங்கள் ..." தட்டோடு உட்கார்ந்தான் .

" இதோ இரண்டே நிமிடம் ..." என அவனுக்கு பதிலளித்தவள் வேகமாக சப்பாத்திகளை கல்லில் போட்டு எடுக்க துவங்கினாள் .

" அன்னைக்கு ஒருநாள் இப்படித்தான் அண்ணி டிவி பார்த்துட்டே சாப்பிட்டுட்டு இருந்தேனா ...முக்கோணம் , சதுரமால்லாம் சப்பாத்தி தட்டில் வந்து விழுந்த்து .நானும் பொறுத்து பொறுத்து பார்த்திட்டு அந்த அறுங்கோண சப்பாத்தியை தூக்கிட்டு போயி மனுசன் தின்பானா இதை ...அப்படின்னேன் .அம்மா ஒரு முறை முறைச்சாங்க .அண்ணா கண்ணை ஒரு உருட்டு உருட்டுனார் .இப்போ எது பேசினாலும் நமக்கு கிடைக்கிற சோறும் கிடைக்காமல் போயிடும்னு பேசாம வந்திட்டேன் ..." சப்பாத்திகளை விழுங்கியபடி சொன்னான் சசிகுமார் .

" ஏன் ...? " சப்பாத்தியை அழகாக வட்டமாக தேய்த்தபடி கேட்டாள் மீரா .

" ஏன்னா அன்னைக்கு சப்பாத்தி சுட்டுட்டிருந்த்து மிருணா. அம்மா அவளுக்கு டியுசன எடுக்க , அண்ணா அவள் என்னென்ன சைசிலெல்லாமோ சுட்டுப் போட்ட சப்பாத்திகளை சத்தமில்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் .இங்கே நம்ம பேச்சு வேலைக்காகாதுன்னு திரும்பி வந்துட.டேன் ."

" உங்க அ..அம்மாவும் ...அண்ணாவும் இப்படித்தான் எப்பவுமே மிருணாவிற்கு சப்போர்ட் பண்ணுவாங்களா ....? " மரத்து விட்ட மனதுடன் கேட்டாள் மீரா .

" ம் ..அம்மா எப்பவுமே நிறைய சப்போர்ட் பண்ணுவாங்க .அண்ணன் ...பொதுவாக எல்லாருக்குமே சப்போர்ட் பண்ணுவார் .யார் மனதும்

நோக்கூடாது என்பார் .அன்னைக்கு இப்பதான் சமையல் கத்துட்டிருக்காள் .அவளை நாம் என்கரேஜ் பண்ணனும்டா .இப்படி பேசினால் அவள் மனது கஷ்டப்படாதா என்றார் ..."

ஆமாம் உன் அண்ணனுக்கு என் மனதை தவிர வேறு யார் மனது கஷ்டப்பட்டாலும் தாங்காது விரக்தியுடன் நினைத்தபடி அடுத்த சப்பாத்தியை தேய்த்தாள் .

சாப்பிட்ட தட்டை சிங்கில் போட்ட சசிகுமார் அவளருகே வந்து ரகசியம் போல் குனிந்து " அண்ணி உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லவா ...? அந்த மிருணா இருக்காளே ...அவளை எனக்கும் பிடிக்காது ..." என்றான் .

ஆனந்த்த்தில் விழிகள் விரிய நிஜம்மாகவா ..என்பது போல் அவனை பார்த்தாள் மீரா .

" ஆமாண்ணி அவளும் , அவள் மூஞ்சியும் ...பெரிய அலட்டி அவள் .உங்களை மாதிரியே நானும் அவளை வெறுக்கிறேன் .இப்போதும் எப்போதும் ..." என அறிவித்தான் .

https://telegram.me/aedahamlibrary

புதிதாக தோன்றிய பாசத்துடன் தன் கொழுந்தனை பார்த்தாள் மீரா ." ஒருத்தர் .நீங்கள் ஒரே ஒருத்தர்தான் சசி .இந்த வீட்டில் என் பக்கம் ..." என்றாள் .

" அப்போ சியர்ஸ் சொல்லிக்கலாம் அண்ணி ..." என தன் கைகளை உயர்த்தி அவள் கைகளுடன் தட்டியவன் ...

" அண்ணனையும் சீக்கிரமே நம்ம பக்கம் இழுத்திடாலாம் அண்ணி .நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள் ..." என்றான் மெல்லிய குரலில் .

இப்போது மீரா இந்த வீட்டில் உள்ள அனைவரும் தாங்கள் வாழும் ஒட்டாத வாழ்வை அறிந்தே வைத்துள்ளனர் என உணர்ந்தாள் .

கிடைத்த சந்தர்ப்பத்தில் தனக்கு ஆறுதல் சொன்ன கொழுந்தனை பாசத்தோடு பார்த்தவள் " ம் ..சசி ..." என்றாள் .

வின்னிங் என அவன் கட்டை விரலை உயர்த்தி காட்ட தானும் விரலுயர்த்தி அவன் விரலுடன் மோதினாள் .

" என்னடா அண்ணியும் ,கொழுந்தனும் எதற்காக சண்டை போட்டுட்டு

இருக்கீங்க ...? " என்றபடி உள்ளே நுழைந்தான் நந்தகுமார் .
" சண்டையா போடுறோம் ...? " என மீரா அவனை முறைக்க ...
" அண்ணா ..மதினி ...மைத்துனன் விசயத்திலெல்லாம் நீங்கள் தலையிடாதீர்கள் அண்ணா ..." அலட்டாமல் சொன்னான் சசிகுமார் .
" சரியடா நான் தலையிடவில்லை .எதற்கும் ஒரு சின்ன எச்சரிக்கை விடுத்து வைக்கிறேன் .நீ என தம்பியாக போய்விட்டாய் பார் .அதற்காக ...." என ஆரம்பித்து சஸ்பென்ஸ் போல் நிறுத்தினான் .
" என்னண்ணா ...? " சசிகுமார் ஆவலாக கேட்க , மீரா இவன் ஏதோ தன்னை கலாட்டா பண்ண போகிறான் என உணர்ந்தாள் .

" இப்படி கைகளை பிடித்து முதுகில் மொத்துவது , இப்படி கைகளை மடக்கி பின்னால் வளைத்து தலையில் கொட்டுவது ...இதிலெல்லாம் உன் அண்ணி எக்ஸ்பெர்ட் தெரியுமா உனக்கு ...? " சசிகுமாரின் கைகளை பற்றி செய்கையாக செய்து விளக்கினான் நந்தகுமார் .

" என்ன அண்ணியா ...? போங்கண்ணா பொய் சொல்கிறீர்கள் .அண்ணி எவ்வளவு சாப்ட் .இதெல்லாம் அவர்களுக்கு செய்ய தெரியாது ..."

https://telegram.me/aedahamlibrary

" அப்படித்தான்டா நம்ப வைத்துக் கொண்டிருக்கிறாள் .உன்னை மட்டுமல்ல நம் வீட்டில் எல்லோரையும் .ஆனால் அவள் சுயரூபம் வேறு .அது எனக்கு மட்டும்தான் தெரியும் ...."

அவன் அன்று வினோத்துடன் போட்ட சண்டையை பற்றி சொல்கிறான் என உணர்ந்த மீரா " ஏங்க போதும் ...." என ஒற்றை விரலை ஆட்டி எச்சரித்தாள் .

" அட இரு மீரா ..நான் அன்று நீ இதோ இப்படி செய்தாயே ...அதோடு வாயால் இப்படி சத்தம் கூட எழுப்பினாயே ...அதை பற்றி இன்னும் சசியிடம் சொல்லக்கூட இல்லை ...." என்று அந்த வக்கலத்தின் ஓசையையும் , செய்கையையும் தெளிவாக செய்து காட்டினான்.

மீராவின் முகம் கூச்சத்தில் சிவக்க கணவனை முறைக்க துவங்கினாள் அவள் .

" என்னடா சசி ...இப்போது உன் அண்ணியை பற்றி தெரிந்து கொண்டாயா ...? ," கேலியில் தன்னுடன் பங்கு கொள்ளுமாறு தம்பிக்கு அழைப்பு விடுத்தபடி பார்த்தவன் ,அவன் ஒற்றை விரலால் தன்

நெற்றியை தட்டியபடி தீவிர ஆலோசனை பாவனை காட்டவும் , எதையோ எதிர்பார்க்கும் ஜாக்கிரதையுடன் அவனை புன்னகையுடன் நோக்கினான் .

சசிகுமார் வேகமாக எழுந்து " அண்ணா ...உங்களுக்கு ஒன்றுமில்லையே .பெரிய காயம் எதுவும் ...முதுகில் ...கைகளில் "என அண்ணனை ஆராய ஆரம்பித்தான் .

" ஏய் எனக்கென்னடா ....ஒன்றுமில்லை விடு ...."

" அண்ணி அந்த மாதிரி அதுதான் அண்ணா நீங்கள் கொஞ்சம் முன்பு அடித்து காண்பித்தீர்களே ...அப்படியெல்லாம் உங்களை செய்திருந்தால் ....ஐய்யோ ....உங்கள் உடல் முழுவதும் காயமாக இருக்குமே .எப்படி இருக்கிறீர்கள் ...? ரொம்ப வலிக்கிறதா ...? சை இதெல்லாம் தெரியாமல் நான் வேறு இவ்வளவு நேரம் அண்ணி பக்கம் பேசிவிட்டேன் .ஆனால் ஒன்று அண்ணா...பொண்டாட்டி கையால் அடி வாங்குபவர் நீங்கள் என்று என்னால் நம்பவே முடியவில்லை தெரியுமா ....? "

மீராவிற்காக நந்தகுமார் விட்ட அம்பினை சாமர்த்தியமாக அவன்புறமே திருப்பி விட்டான் சசிகுமார் .

https://telegram.me/aedahamlibrary

மீரா பக்கென வாயை பொத்தியபடி சிரிக்க " டேய் உன்னை ....இப்போ உதை வாங்க போற பாரு ...." என்று எழுந்த நந்தகுமாரிடமிருந்து தப்பிய சசி வாசலில் போய் நின்று கண் சிமிட்டி கட்டை விரல் உயர்த்தி மீராவிற்கு ஜாடை செய்துவிட்டு போனான் .

இந்த ஜாடையை நந்தகுமார் பார்த்து விட்டால் கோபிப்பானோ என பயந்து மீரா அவன் பக்கம் திரும்பி பார்த்த போது அவன் மீராவைத்தான் பார்த்தபடி நின்றிருந்தான் .இதற்கு முன் இல்லாத ஒரு வித்தியாச பார்வையை அவனிடமிருந்து கண்ட மீரா சிறு தடுமாற்றத்துடன் ....

" உ...உங்களுக்கு சப்பாத்தி போட்ட்டுமா ....? " என்றாள் .

" இந்த மச்சம் வித்தியாசமாக இருக்கிறதே மீரா ..." என்றான் அவன் அவள் முகத்தில் பார்வையை பதித்தபடி .

மொட்டைத்தலை ...முழங்கால் முடிச்சு போன்ற அவனது இந்த பேச்சில் குழம்பிய மீரா அவனை புரியாமல் நோக்க...

" உனது முகத்தில் இருக்கிறதே ...அந்த மச்சத்தைத்தான் சொல்கிறேன்

..." என அவள் முகத்திலிருந்த மச்சத்தின் இடத்தை தன் முகத்தில் விரல் வைத்து சுட்டிக் காட்டினான் .

அந்த மச்சம் கன்னத்திலும் இல்லாமல் நாடியிலும் இல்லாமல் இரண்டுக்கும் இடையில் தாடையில் உடனே கண்ணில் படாமல் ஒரு ரகசியம் போல் ஓரமாக மீராவின் முகத்தில் அமைந்திருந்த்து .அவள் முகத்தின் நேர் பார்வையில் அது பார்க்க கிடைக்காது .முகத்தை பக்கவாட்டில் திருப்பும் போதுதான் தெரியும் .அதனால் அந்த மச்சம் அவள் முகத்திலிருப்பது மீராவுடன் மிக நெருங்கி பழகுபவர்களுக்கு மட்டுமே தெரியும் .

" மூன்று மாதம் கழித்து இந்த மச்சம் இப்போதுதான் உங்கள் கண்ணுக்கு தெரிகிறதா ...? " தனது மச்சத்தை தொட்டபடி கொஞ்சம் ஏமாற்றமான குரலில் கேட்டாள் .

" இல்லை ...இல்லை முன்பே பார்த்திருக்கிறேன்.ஆனால் இன்றுதான் ...சசி சொன்னதற்கு வாயை பொத்தி சிரித்தாயே ..அப்போதுதான் ...அந்த மச்சம் எடுப்பாக வெளியே தெரிந்த்து .உன்னோடு சேர்ந்து அந்த மச்சமும் சிரித்தது தெரியுமா...? " என்றவனின் பார்வை அந்த மச்சத்தின் மேலேயே இருந்த்து

https://telegram.me/aedahamlibrary

13

மறுத்துவிடத்தான் வேண்டுமென நினைப்பேன் ...
உன் மறுபடிகளை ,
சிலீரென்ற சிரிப்பில்
ஆநிரை மேய்க்கும் அநிருத்தனை
நினைவுறுத்திவிடுவாய் ,
ம் ...இனி எங்கே ...?
திரும்ப முதலிலிருந்து....

" இது என்ன அடுத்த கலாட்டாவா ...? " உடலில் ஜிவ்வென்று எழுந்த உணர்வை அடக்கியபடி மெல்ல கேட்டாள் .

" இல்லை மீரா நிஜமாகத்தான் சொல்கிறேன் .அந்த மச்சம் உன் முகத்திற்கு வெகு அழகாக பொருந்தியுள்ளது ...."

" உண்மையில் எனக்கு இந்த மச்சம் பிடிக்காது .என் முகத்தில் அது ஒரு மரு போல் இருப்பதாக நினைப்பேன் .அதனால் போட்டோ எடுக்கும் போது கூட முகத்திற்கு பக்கவாட்டு போஸ் கொடுக்கமாட்டேன் ...."

" ம்ஹூம் ..உன் நினைப்பு தவறு .உன் முகத்திற்கே அதுதான் அழகு .நீ ஒரு முறை அந்த மச்சத்தோடு சேர்த்து உன் முகத்தை போட்டோ எடுத்து பார் .அப்போது உனக்கு புரியும் ...." என்றவன் பேசிக்கொண்டே தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து போனை எடுத்துக்கொண்டு அவளருகில் வந்தான் .

" ம் இப்போது அந்த மச்சம் தெரிகிறது போல் ஒரு போஸ் கொடு பார்ப்போம் ...." போனை அவள் முன் வைத்தபடி கேட்டான் .

" பிறகு எடுக்கலாமே ...இப்போது எனக்கு வேலை இருக்கிறது ...." தயங்கினாள் .

" போட்டோ எடுத்துவிட்டு அடுப்பை பார்க்கலாம் .இங்கே வா .நானும் வருகிறேன் ..." என அவளருகில் தானும் நின்று கொண்டவன் போனை தூக்கிப் பிடித்துக் கொண்டு ...

https://telegram.me/aedahamlibrary

" இங்கே இந்தப் பக்கம் என்னைப் பார்த்தாற் போல் திரும்பு மீரா .அப்போதுதான் அந்த மச்சம் நன்றாக தெரியும் ..." என்றான் .

அது போல் திரும்பிய மீராவின் கண்களுக்கு முடிகளடர்ந்த அவனது பரந்த மார்பு மிக அருகில் தென்பட அவள் மனம் படபடக்க தொடங்கியது .வேகமாக முகத்தை திருப்ப முயற்சித்தவளின் முகத்தை கன்னத்தில் தனது ஒற்றைவிரலால் தொட்டு தள்ளி மீண்டும் தன்புறம் திருப்பினான் .

" மேலே பார் ..." என கேமிராவை சுட்டிக் காட்டினான் .

அவன் சொன்னது போல் செய்த மீராவிற்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றே தெரியவில்லை .போனை கையில் வைத்து பார்த்தவன் " சூப்பர் .நான் சொன்னேனே நீ நம்பவில்லை .இப்போது பார் ...." என அவளிடம் காட்டினான் .

அதில் சிவந்த கன்னங்களும் , மலர்ந்த இதழ்களுமாக கனவு சுமந்த கண்களுடன் அழகாக இருந்தாள் மீரா .தான் இத்தனை அழகா ....என அவளுக்கே சந்தேகம் வந்த்து .செந்தாமரை மலராக மலர்ந்திருந்த அவள் முகத்தின் ஓரம் தேனருந்தும் கரு வண்டென அந்த மச்சம் இருந்த்து .

மேலே பார் என அவளை சொன்னாலும் தான் மேலே பார்க்காமல் திரும்பி அவள் முகத்தை பார்த்தபடி இருந்தான் நந்தகுமார் .மீராவின் பார்வை அவன் முகத்தையோ , மார்பையோ சந்திக்கும் துணிவின்றி அவனது சட்டை காலரை நோக்கியபடியிருந்த்து .ஆனால் காதல் வழிந்தபடிந்தபடிநிருந்த்து .

இந்த போஸ் மிகவும் மனம் ஒன்றி வாழும் ஒரு ஆத்மார்த்தமான தம்பதிகள் ஒருவரையொருவர் காதலுடன் பார்த்துக் கொள்வதை போலிருந்த்து .கண்களை விலக்க மனமின்றி அந்த போட்டோவையே பார்த்தபடியிருந்த மீரா , சை ...என்ன இப்படி பார்க்கிறேன் .அவன் என்ன நினைப்பான் என கூசியபடி திரும்பினாள்.அங்கே ... நந்தகுமாரும் விழியெடுக்காமல் அந்த போட்டோவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான் .

" இந்த போட்டோ மிக அழகாக வந்திருக்கிறது மீரா ...." என்றான் கண்களை விலக்காமல் .

நீதான்டா ...காரணம் .உனது  அருகாமைதான் எனது முகத்திற்கு ஒரு தேஜஸ்சை தந்து என்னை இவ்வளவு அழகாக்கி இருக்கிறது ...செல்லமாக கணவனுடன் மனதிற்குள் பேசியபடி வெளியே தலையசைத்து ம் கொட்டினாள் .

https://telegram.me/aedahamlibrary

போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டவன் " ம் ...இப்போது சப்பாத்தி சுடு ..." என்று டேபிளில் அமர்ந்து கொண்டான் .

ஏதோ கனவில் மிதப்பது போல் சப்பாத்திகளை சுட்டெடுக்க தொடங்கினாள் மீரா .மௌனமாக சாப்பிட்ட நந்தகுமாரின் நிலை அவனும் ஏதோ யோசனையிலிருப்பதை காட்டியது .

என்ன யோசனை ...? என்னைப் பற்றியதாகத்தான் இருக்குமோ ....? இறக்கையில்லாமலேயே மனம் வானமேற கணவனின் ஒரே ஒரு உயிரோட்டமான பார்வைக்காக ஏங்கத் தொடங்கினாள் மீரா.

" என்னடா சாப்பிட்டாச்சா ....? " என்றபடி உள்ளே வந்தாள் சுந்தரி .

" ம்....இங்கே உட்காருங்கள் அம்மா .உங்களிடம் பேச வேண்டும் ..." என்றான் .

அவள் அமர்ந்தும் கொஞ்ச நேரம் தயங்கியபடி இருந்தவன் " அம்மா ...இன்று கடைக்கு மாமா வந்திருந்தார் ...." என்றான் .

சப்பாத்தியை தேய்த்துக் கொண்டிருந்த மீராவின் கை நின்றது . மாமாவா ...எந்த மாமா ...?

" என்னவாம் ...? " சுந்தரியின் குரல் ஜாக்கிரதையுடன் மெலிந்து ஒலித்தது .

" கல்யாண சீர்வரிசை சாமான்கள் பார்க்க வேண்டுமென்று வந்தார் ..."

" அதாவது ..."

" மிருணாவிற்கு மாப்பிள்ளை பார்க்கிறாராம் .அவளுக்கு சீர் சாமான்கள் கொடுக்க நம் கடையில் பார்க்க வந்தாராம் ..."

அவன் குரலில் லேசான திணறல் இருந்ததோ ...?

" இதை நம்மிடம் காட்டுவதற்கு ...." அழுகை குரலில் ஆரம்பித்த சுந்தரி திரும்பி ...

" மீரா ...நீ....போய் ....ம் .. தலைவலி தைலத்தை எங்கேயோ வைத்துவிட்டேன் .நீ போய் அதை தேடி எடும்மா ...." என்றாள் .

" சரி அத்தை ...." வறண்ட குரலில் கூறிவிட்டு நகர போன மீராவை தடுத்தான் நந்தகுமார் .

https://telegram.me/aedahamlibrary

" அம்மா அவள் இருக்கட்டும்மா .அவளுக்கு எல்லாம் தெரியும் .அவளுக்கு தெரியாத்து , மறைக்க வேண்டியது எதுவும் நான் இப்போது பேச போவதில்லை .நீ வேலையை பாரு மீரா ...." என்றான் .

ஒரு நிமிடம் மௌனமாக இருந்த சுந்தரி " என் மகளுக்கும் கல்யாணம் பண்ண போகிறேன் என காட்டுவதற்காக வந்தாராக்கும் ...." என்றாள் .

" ம் ...அதற்காகத்தான் .நான் எதுவும் கண்டுகொள்ளவில்லை .சாதாரணமாக பேசி அனுப்பிவிட்டேன் ..."

கணவனின் குரலில் ஏதாவது கவலையோ , கஷ்டமோ தெரிகிறதா என கூர்ந்து ஆராய முயன்றாள் மீரா .

" ம் ...பிறகு அவரும்தான் வேறு என்ன செய்வார் ...? என் கூட பிறந்த பாவம் அவரையும் , அவர் குடும்பத்தையும் பிடித்து ஆட்டுகிறது " கலங்கிய குரலில் கூறியவள் ,
எழுந்து நின்று மெல்ல மகனின் தலையை வருடியபடி

" மறக்க முடியாத்து எதுவும் கிடையாது நந்து.நீ விபரமானவன் உனக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை ." போய்விட்டாள் .

இவன் அவன் மாமனை பற்றி அந்த மாமன் மகளை பற்றி யோசித்துக் கொண்டிருந்திருக்கிறான் .அவளை எப்படி மறப்பது என திணறிக் கொண்டிருந்திருக்கறான் .நான் ஏதோ என்னைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என லூசு மாதிரி கனவு கண்டு கொண்டிருந்திருக்கிறேன் .

இந்த எண்ணத்தில் மீராவிற்கு கொஞ்சமும் மாற்றுக் கருத்து இல்லை .ஏனென்றால் அன்று இரவு நந்தகுமார் தனியாக அந்த வேப்பமரத்தடி கல்லில் அமர்ந்து கொண்டிருந்தான் .மிகத் தீவிரமான சிந்தனையில் இருந்தான் .

தங்கள் அறை ஜன்னல் திண்டில் அமர்ந்தபடி அவனை பார்த்துக் கொண்டிருந்தாள் மீரா .எல்லாரும் சாப்பிட்டு படுத்துவிட்டனர் .ஆனால் அறைக்குள் வரும் எண்ணமில்லாமலோ ...விருப்பமில்லாமலோ ...அங்கே அமர்ந்து கொண்டிருக்கிறான் .பாரமாய் கனத்த தலையை சன்னல் கம்பிகளில் சாய்த்தபடி அந்த குறுகலான திண்டில் அமர்ந்தபடி அவனை பார்த்தபடியிருந்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

சற்று முன் அவனோடு சேர்ந்து போட்டோ எடுத்துக் கொண்ட உற்சாகம் காணாமல் போயிருந்த்து .தனது வேதனையை விட நந்தகுமார் அப்படி தளர்ந்து அமர்ந்திருந்த்து கவலையளித்தது .போய் அவனிடம் சமாதானமாக ஏதாவது பேசலாமா ...? ஆனால் அதனை அவன் விரும்பாவிட்டால் ....பலவிதமாக சிந்தித்தபடியே அவனை பார்த்தபடியிருந்த போது அவன் எழுந்தான் .

மீரா உடனே எழுந்து அவசரமாக விரித்து வைத்திருந்த பாயில் படுத்துக்கொண்டாள் . அறைக்கதவை பூட்டிவிட்டு கட்டிலில் படுத்தான் நந்தகுமார் .

முதல் நாள் ஞாபகமோ என்னவோ ...பேச்சு எதுவுமின்றி அமைதியாக தட்டிலிருந்த பூரிகளை சாப்பிட்டபடியிருந்தான் நந்தகுமார் .சசிகுமார் இருந்திருந்தால் ஏதாவது கலாட்டா பண்ணிக்கொண்டிருப்பான் .வீடு கலகலவென இருக்கும் .இன்று ஏதோ ஸ்பெசல் கிளாசென முன்பே கிளம்பி போயிருந்தான்.அதனால் வீடு முழுவதும் ஒரு விரும்பத்தகாத அமைதி பரவியிருந்த்து .

சிலீரென்ற ஓசையோடு அந்த தட்டு தரையில் விழுந்து உருண்டது

.தெளிவில்லாத குரலில் சத்தமாக குருநாதன் கத்துவது கேட்டது .நந்தகுமார் அவசரமாக தட்டிலேயே கை கழுவிவிட்டு எழுந்தான் .மீரா அடுப்பை அணைத்துவிட்டு அவனை பின் தொடர்ந்தாள் .

அங்கே குருநாதனின் அறையில் சுந்தரி அவருக்காக பூரிகள் வைத்து கொண்டு போயிருந்த தட்டு தரையில் அரை வட்டமாக சுழன்றபடியிருந்த்து .பூரிகள் அறை முழுவதும் சிதறியிருந்தன.கண்கள் கலங்க கன்னத்தை பிடித்தபடி நின்றிருந்தாள் சுந்தரி .குருநாதன் அடித்திருக்க வேண்டும் .

" என்னடி உன் குடும்ப திமிரை என்னிடம் காட்டுகிறாயா ...? நான் நினைத்தால் இப்போதே போய் உன் அண்ணனை வெட்டிவிட்டு ஜெயிலுக்கு போய்விடுவேன் .அதற்கெல்லாம் பயப்பட மாட்டேன் .இனி ஒரு தடவை அவனை பற்றிய பேச்சு இந்த வீட்டிற்குள் வரக்கூடாது .வந்தால் நிச்சயம் நான் சொன்னதை செய்வேன் ...."

" எதை செய்வீர்கள் மாமா ...? " மீராதான் குரல் கொடுத்தாள் .

சுந்தரி முன்தினம் நந்தகுமாரின் கடைக்கு வந்த தனது அண்ணனை பற்றி ஏதோ கூறியிருக்க வேண்டும் .எதையாவது சொல்லி தனது கணவனையும் , அண்ணனையும் சேர்த்து வைத்துவிட முயன்றிருக்க வேண்டும் .அதற்கான குருநாதனின் பிரதிபலிப்புகள்தான் இவை .

https://telegram.me/aedahamlibrary

மாமியாரை கை நீட்டி அடித்த மாமனாரின் செய்கையை ஏற்றுக்கொள்ள முடியாத மீரா , துணிந்து பேசிவிட்டாள் .கேட்ட பின்பே தன்னையறியாமலேயே தனது வாயிலிருந்து வந்து விட்டவார்த்தைகளை உணர்ந்தவள் , இத்தோடு இதை நிறுத்திவிட்டு பின்வாங்கி விடுவோமா ...என ஒரு நிமிடம் யோசித்தாள் .பிறகு முன்தினம் நந்தகுமார் தளர்ந்து போய் மரத்தடியில் அமர்ந்திருந்த தோற்றம் நினைவு வர, அதற்கும் இவரது இந்த அவசர புத்திதானே காரணம் என தோன்ற ஆனது ஆகட்டுமென்று தொடர்ந்து பேசத் தொடங்கினாள் .

அவளது கேள்வியில் சுந்தரியும் , நந்தகுமாரும் திகைத்து நிற்க , ஒருநிமிடம் அப்படியே நின்றுவிட்டு , பிறகு " மீரா உனக்கு இவளை தெரியாதம்மா .நீ இவளுக்கு சப்போர்ட் பண்ணாதே ..." என்றார் .

" எனக்கு அவர்களை தெரியாமலேயே இருக்கட்டும் மாமா .ஆனால் மனைவியை கைநீட்டி அடிக்கும் ஆணை என்னால் ஒத்துக் கொள்ளவே முடியாது ..."

" அவள் செய்த தப்பு அப்படி ...."

" அப்படி என்ன தப்பு மாமா செய்துவிட்டார்கள் ...? நீங்கள் சேர்த்து வைத்த பணத்தை எடுத்து புடவைகளாக மாற்றி விட்டார்களா ...? இல்லை அவர்கள் பிறந்தவீட்டிற்கு கொண்டு போய் கொடுத்து விட்டார்களா ..? ... அதற்காகத்தான் நீங்கள் சண்டை போடுகிறீர்களா ...? "

" அப்படி ஏதாவது செய்தால் கூட நான் இவளை மன்னித்துவிடுவேன் ..."

" ஓ...அதைவிட பெரிய தப்பு ...அவர்கள் அண்ணன் குடும்பத்தை பற்றி பேசிவிட்டார்கள் அப்படித்தானே .உங்களை பொறுத்தவரை அதுதானே பெரிய தப்பு ..."

" ஆமாம் .இவளது பிறந்த வீட்டை பற்றி பேசுவதுதான் எனக்கு மிகப்பெரிய தப்பு ...இங்கே பாரும்மா நீ இந்த வீட்டிற்கு நேற்று வந்தவள் .உனக்கு நடந்தவைகள் தெரியாது .நீ சின்னபெண் ...."

மேலே பேசப் போன மீராவை கையுயர்த்தி தடுத்தவர் " எனக்கு வேலைக்கு நேரமாகிவிட்டது .நாம் இன்னொரு நாள் பேசலாம் ..." வேகமாக வெளியேறிவிட்டார் .

https://telegram.me/aedahamlibrary

பிரமிப்பு கலந்த ஆச்சரியத்துடன் தன்னை பார்த்துக்கொண்டிருந்த கணவனை பார்த்து அவஸ்தையுடன் சிரித்தவள் ,மாமியாரை பார்த்து திடுக்கிட்டாள் .

சுந்தரி ஒரு மாதிரி முறைத்த பார்வையுடன் இவளை பார்த்தாள் ." என் கணவரை யார் எதிர்த்து பேசினாலும் எனக்கு பிடிக்காது .என் பிள்ளைகளுக்கே அந்த உரிமையை நான் இதுவரை கொடுத்ததில்லை .என் பக்கம் பேசுவதாக நினைத்துக் கொண்டு இனி இது போன்ற முட்டாள்தனங்களை செய்யாதே .நந்து ...அப்பா சாப்பாடு எடுத்துக் கொள்ளாமல் போய்விட்டார் .காலையிலும் சரியாக சாப்பிடவில்லை .நான் டிபன் அடைத்து தருகிறேன் .நீ அவரிடம் கொண்டு போய் கொடுத்து விடு..." என்றுவிட்டு உள்ளே போனாள் .

" ஆமாம் மீரா . அம்மா எப்போதும் இப்படித்தான் அப்பாவிற்கு எதிராக எங்கள் யாரையும் ஒரு வார்த்தை கூட பேச விட மாட்டார்கள் ...." என்றவன் அவளுக்கு ஆதரவை தெரிவிக்கும் விதமாகவோ என்னவோ அவள் தோள்களை பற்றி அழுத்திவிட்டு போய்விட்டான்

எத்தனை தலைமுறை மாறினாலும் இந்த பெண்கள் மாறப்போவதில்லை ...பெருமூச்சுடன் நினைத்தபடி உள்ளே போனாள் மீரா . .

14

வசீகரங்களை வாரி இறைத்துவிட்டு
உறி மேல் வெண்ணெய்
திருட போய்விடுகிறாய் ,
யசோதையாய் ...ராதையாய் ...
உனையணைக்கும்
தருணம் தேடுகிறேன் நான் .

பின்மதிய வேளை .வேலைகளை முடித்துவிட்டு சீரியல்களை பார்த்தபடியிருந்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" மீரா ..." பின்னாலிருந்து அழைத்த பாட்டியின் குரலுக்கு எழுந்து போனாள் .

" தண்ணீர் வேண்டும்மா ...,"

அருகிலிருந்த தண்ணீரை தம்ளரில் சரித்து பாட்டியை ஏந்தி வைத்து வாயில் ஊட்டினாள் .

" வீட்டில் யாரும் இல்லையாம்மா ? "

" இல்லை .அத்தை பக்கத்து ஊர் கோவிலுக்கு போயிருக்கறாங்க .வர சாயந்தரம் ஆகும்னு சொன்னாங்க ..."

" ம் ....இன்னைக்கு உன் மாமியாருக்கும் , மாமனாருக்கும் என்ன பிரச்சினை ...? "

" உங்களுக்கு தெரியாததா பாட்டி ..? " கிண்டலாக கேட்டாள் .

" இல்லைம்மா நீ நினைப்பது போல் அவர்கள் இருவருக்குமடையே வரும் சண்டைகளுக்கு நான் காரணமில்லை .சுந்தரியின் அப்பாவித்தனம்தான் காரணம் .அதுதான் குருவை கோபம் கொள்ள

வைக்கிறது ...."

மீராவிற்கு ஆயாசமாக இருந்த்து .

"எந்த மனிதன்தான் தன் தவறை தான் ஒத்துக்கொள்கிறான் .அகப்பட்டவர்கள் தலையில் போட்டுவிட்டு தப்பக்கத்தானே நினைக்கிறான் ."

துணிந்து பேசினாள் .

" உன்னிடம் பேச வேண்டும் மீராம்மா .ஆனால் இன்று இல்லை .ஏனோ இன்று எனக்கு ரொம்ப சோர்வாக இருக்கிறது .தூக்கம் வருகிறது .எனக்கு போர்த்திவிட்டு போம்மா .நாம் இன்னொருநாள் பேசலாம் ..." கண்களை மூடிக்கொண்டார் .

தப்பித்தோம் என ஓடிவந்து விட்டாள் மீரா .பாட்டியின் பேச்சுக்கள் சுந்தரியை குறை கூறுவதாகவே இருக்கும் என்பதில் அவளுக்கு சந்தேகம் இல்லை .அதனை இப்போது கேட்க அவள் தயாரில்லை .

டிவியை பார்த்தபடி மெல்ல கண்ணயர்ந்தவளை காலிங்பெல் எழுப்பியது .

https://telegram.me/aedahamlibrary

கதவை திறந்தவள் முன் நந்தகுமார் நின்றிருந்தான் .

" இந்தப்பக்கம் ஒரு வசூல் மீரா .அப்படியே ஒரு சின்ன ரிலாக்சேசன் .வெயில் இன்னைக்கு ஓவர் .ஏதாவது குளிர்ச்சியாக குடிக்க கொடேன் " என்றான் .

கணவனின் வருகையே மீராவிற்கு குளுமையை வாரி இரைக்க ...எலுமிச்சம்பழத்தை பிழிய ஆரம்பித்தாள் .

" என்ன மீரா இன்னைக்கு காலையில் அப்பாவிடம் அவ்வளவு தைரியமாக பேசிவிட்டாய் ..? " அவள் பின்னாலேயே அடுப்படிக்கு வந்து அடுப்பு மேடையில் சாய்ந்து நின்றபடி கேட்டான் .

" இதில் என்ன தைரியம் ...? என் அம்மாவை என் அப்பா இப்படி பேசினால் கேட்க மாட்டேனா ..? "

" ஆனால் நாங்கள் எல்லாம் அப்பாவிடம் பேசவே பயப்படுவோம் தெரியுமா ...? "

" அப்பாவிடம் பயம் எதற்கு ...? மரியாதை போதாதா ...? "

" அதென்னவோ சின்ன வயதிலிருந்து இப்படியே  பழக்கமாகிவிட்டது .அம்மா அப்படியே ...அப்பாவிடம் பேசாதே ...தள்ளி நில் ...என்று சொல்லி சொல்லியே எங்களை பழக்கி வைத்துவிட்டார்கள் ...."

" ஓ...எங்கள் வீட்டில் நாங்கள் எங்கள் அப்பாவுடன் ப்ரெண்ட் போல் பேசி பழகுவோம் ..."

" அப்போது உனக்கு இங்கே நம் வீட்டு சூழ்நிலை பிடித்தமில்லாமல் இருக்கிறதில்லையா ...? "

" பிடித்தமில்லாமல் என்றில்லை ...வித்தியாசமாக இருக்கிறது ..."

" ஆமாம் அத்தோடு முறைத்து கொண்டு நிற்கும் புருசன் வேறு ...." நந்தகுமார் கிண்டல் போல் சொன்னாலும் அதிலிருந்த வருத்தம் தெரிய ...

" அப்படி ஒன்றும் இல்லை ..." அவசரமாக சொன்னாள் .

" இதில் உனக்கு வருத்தமில்லையா மீரா ...? நான் எனக்கு ....நீ கொஞ்சம் டைம் கொடுக்கவேண்டும் மீரா .நமது வாழ்வு குழம்பிய குட்டையில் ஆரம்பிக்காமல் தெளிந்த நீரோடையில் ஆரம்பிக்க வேண்டுமென நினைக்கிறேன் .புரிந்து கொள்கிறாயில்லையா ...? "

https://telegram.me/aedahamlibrary

கண்ணில் காணும் பெண்களுடனெல்லாம் பார்வையாலேயே குடும்பம் நடத்த துடிக்கும் ஆண்களுக்கிடையே , கட்டிய மனைவியையே உறுத்தலற்ற உண்மை மனதுடன் தொட நினைக்கும் தன் கணவனை ஆசையுடன் பார்த்தாள் மீரா .

இவனல்லவா ..உண்மையான ஆண்மகன் .

" உங்களுடன் ஒரு உண்மையான வாழ்விற்காக நான் காலம் முழுவதும் கூட காத்திருக்க தயார் ...." உணர்ச்சியோடு கூறினாள் .

" ஏய் ...அவ்வளவு காலமெல்லாம் ஆகாது .இன்னும் கொஞ்ச நாட்கள்தான் ....சரியா ..? " மெல்ல அவள் கன்னம் வருடினான் .

இதனை பேசுவதற்காகத்தான் இந்த நேரம் வந்தானோ ..? என மீரா நினைத்தபோதே ...

" நான் கிளம்புகிறேன் மீரா .கடையில் சரியான ஆள் இல்லை ...."

" இன்னொரு க்ளாஸ் ஜூஸ் குடித்துவிட்டு போங்கள் ..." தம்ளரை

நீட்டினாள் .வாசலில் காலிங்பெல் அழைத்தது .
" இந்நேரம் யார் மீரா ..? "

" தெரியவில்லையே .பார்க்கிறேன் ...." கதவை திறந்தவள் ..வாடி ....கருத்து ..அசந்து போய் வெளியே நின்ற திவ்யாவை கண்டதும் திகைத்தாள் .

" அத்தை ...." இரு கைகளையும் நீட்டியபடி இவளிடம் தஞ்சம் புகுந்தாள் திவ்யா .

" என்னம்மா ...? என்ன ...? " என பதறிய மீராவிற்கு அங்கே நின்றிருந்த ஆட்டோவிலிருந்து இறங்கி வந்த சற்று பெரிய வகுப்பு பெண்ணைக் கண்டதும் புரிந்தாற்போல் இருந்த்து .

அவளது சந்தேகத்தை உறுதிப்படுத்தி விட்டு போனாள் அந்த பெரிய பெண் .பயத்துடன் நின்ற திவ்யாவை அணைத்து சமாதானப்படுத்தி உள்ளே அழைத்து வந்தாள் மீரா .

" திவ்யா ...என்னடா ...உடம்பு சரியில்லையா ...ஏன் ஸ்கூலில் இருந்து பாதியில் வந்துவிட்டாய் ....? " கவலையாய் கேட்டபடி தலை வருட வந்த தாய்மாமனுக்கு பதில் சொல்ல முடியாமல் திவ்யா வெட்கமும் , கூச்சமுமாக தன் முகத்தை மீராவிற்குள் புதைத்துக்கொண்டாள் .

https://telegram.me/aedahamlibrary

" திவ்யா பெரிய பெண்ணாகிவிட்டாள் ...." அவளது தலையை ஆதரவாக வருடியபடி சொன்னாள் மீரா.

15

சிறு சிறு பறவைகளை தள்ளிவிட்டு
பெருங்கழுகாய் வியாபித்துவிட்டாய்
என் பிரபஞ்சமெங்கும் ,
பேசு ...ஏதாவது...எதையாவது...
உன் சிறு வார்த்தையின் " அ " வில் கூட
பாதுகாப்பாய் சுருண்டு கொள்வேன்.

" அத்தை எனக்கு இது வேண்டாம் அத்தை .இது எனக்கு பிடிக்கவில்லை .ரொம்ப வலிக்கிறது ..." வயிற்றை பிடித்துக்கொண்டு துடித்துக்கொண்டிருந்தாள் திவ்யா .

ஒரு பெண்ணாக அவளது வேதனையை உணர்ந்து கொண்ட மீரா , அவளை சமாதானப்படுத்த முயன்றாள் .

" திவ்யா ...இதோ பாரம்மா .இது எல்லா பெண்களுக்கும்  வருவதுதான் . நீ பெரிய பிள்ளையாக வேண்டாமா ...? அதற்காகத்தான் இதெல்லாம் நடக்கிறது .கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாகிவிடும் ...."

" இல்லை வேண்டாம் .நான் பெரிய பெண்ணாக வேண்டாம் .சின்ன பிள்ளையாகவே இருந்துவிட்டு போகிறேன் .இந்த வலியும் , வேதனையும் மட்டும் எனக்கு வேண்டாம் ..." கத்தினாள் திவ்யா .

" நீ சின்ன பிள்ளையாகவே இருந்தாயானால் எப்படி நிறைய படிப்பாய் ...?  பெரிய வேலைக்கெல்லாம் போய் உன் அம்மாவை காப்பாற்றுவாய் ...? ...." நந்தகுமாரனின் குரல் கேட்டதும் திவ்யா இன்னமும் கொஞ்சம் தன்னை மீராவினுள் குறுக்கினாள் .

https://telegram.me/aedahamlibrary

இந்த சூழ்நிலையில் ஒரு ஆணை சந்திக்க கூசும் அவளது பெண்மையை புரிந்துகொண்ட மீரா ...

" நீங்கள் கொஞ்சம் வெளியே இருங்கள் .நான் பேசிக்கொள்கிறேன் ..." என்றாள் .

ஆனால் அவன் நகராமல்  " ஏன் ...? " என்றான் .

" ஏன்னா.... இப்போது அவளுக்கு கூச்சமாக இருக்காதா ...? " கோபமாக கேட்டாள் .

" எதற்கு கூச்சம் ...? ஏதாவது தப்பு செய்துவிட்டாளா என்ன ....வெட்கமும் கூச்சமும் பட ....திவ்யா இங்கே திரும்பு மாமாவை பார் ..."

மீராவின் மடியில் சாய்ந்திருந்த திவ்யாவை வலுக்கட்டாயமாக எழுப்பி தன் முகம் பார்க்க வைத்தான் .

" இது வேதனையோ வெட்கமோ பட வேண்டிய விசயம் இல்லை .இப்போதுதான் நீ நல்ல உடல்நிலையுடன் ,  இருக்கிறாய் என்று அர்த்தம் .உனது உடல் ஆரோக்கியத்தை இயற்கை இப்படி எடுத்து காட்டுகிறது .இதற்கு போய் யாராவது அழுவார்களா ...? " தலையை

வருடியபடி மென்மையாக பேசினான் .

" ஆனால் இது எனக்கு ரொம்ப வலிக்குதே ...."

" இந்த உலகத்தில் நல்ல விசயங்கள் எல்லாமே ஆரம்பத்தில் வேதனையாகத்தான் இருக்கிறது .வேதனை இல்லாமல் சாதனைகள் இல்லை .நீ பெரிய படிப்பு படித்து வேலை பார்த்து சம்பாதித்து உன் அம்மாவிற்கு நகையாக வாங்கிப் போடவேண்டுமென்ற உன் கனவுகளெல்லாம் என்ன ஆவது ...? இப்படி ஒரு சிறு உடல் வலிக்கே சோர்ந்து போகிறவள் நாளை எப்படி மாவட்ட கலெக்டராக போகிறாய் ...?

அக்காள் மகளை லட்சியங்களை நினைவு படுத்தி அவளை வலியிலிருந்து மீட்க முயற்சித்தான் .அவனது இந்த இதமான அணுகுமுறையை பிரமிப்பாய் பார்த்தாள் மீரா.

" உனக்கு ஐ.ஏ.எஸ் கோச்சிங்கிற்காக என் நண்பன் ஒருவன்  மூலமாக சப்கலெக்டர் ஒருவரிடம் விபரம் கேட்டு வைத்திருந்தேன் .அடுத்த வருடத்திலிருந்தே கோச்சிங் ஆரம்பித்துவிடலாமென அவர் சொல்லியிருந்தார்  .முதலிலிருந்தே கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கும் என்றார் .எங்கள் வீட்டு பெண் தைரியசாலி .உழைக்க அஞ்சாதவள் ...என்றெல்லாம் சொல்லியிருந்தேனே .நீ என்னவென்றால் ....."

https://t.me/aedahamlibrary

" இல்லை ....இல்லை ...நான் தைரியசாலிதான் .நான் எதற்கும் பயப்படமாட்டேன் ...." முகத்தை துடைத்தபடி நிமிர்ந்தாள் திவ்யா .

" என்னம்மா பெண்கள் அனுபவித்தே ஆகவேண்டிய இந்த இயற்கையான சிறிய வேதனைக்கே இப்படி துவண்டுவிட்டாய் .கலெக்டருக்கு படிப்பதும் பிறகு அந்த பதவியில் இருப்பதும் எவ்வளவு பெரிய விசயங்கள் தெரியுமா ...? இதையெல்லாம் நீ ...."

" அதெல்லாம் நான் சமாளித்துக்கொள்வேன் .மாமா என்னை அந்த சப்கலெக்டரிடம் அழைத்து போங்கள் .நானே அவரிடம் கோச்சிங் விபரம் பேசுகிறேன் .நாளையே போகலாம் மாமா ...."

விபரம் தெரிந்தது முதல் கலெக்டர் ஆகவேண்டுமென்பது திவ்யாவின் கனவு .அந்தக்கனவை நினைவுபடுத்தியதும் உடல் உபாதைகளை புறந்தள்ளி நிமிர்ந்தாள் சிறுமி .

இது பொதுவாக பெண்களின் குணம் .தனக்கான தேவைகளில் அவள் உறுதியாகும் போது , எதிர்படும் இடையூறுகளெல்லாவற்றையும் எளிதாக அவள் உதறிவிடுவாள் .பெண்ணின் மென்னுடலை காட்டி அவளை பலவீனமானவளாக காட்ட முயன்றாலும் மிகுந்திருக்கும் மனவலிமையால் அவள் ஆணை விட ஆயிரம் மடங்கு பலம் பெறுவாள் .அதனால்தான் அவளை சக்தி என்கிறோம் .

இதனாலேயே இயற்கையே அவளுக்கு தந்திருக்கும் பல உடல் இன்னல்களையும் தாண்டி ஆணுக்கு நிகராக அவளால் உடலாலும் சாதிக்க முடிகிறது .பெண்ணினுள் இருக்கும் இந்த வன்குணத்தை தூண்டிவிட ஒரு சிறு தூண்டுகோல் போதும் .அன்பான பார்வை , அனுசரணையான பேச்சு போதும் .இந்த உலகையே வென்று காலடியில் போட்டுவிடுவாள் .

அதனைத்தான் இப்போது நந்தகுமார் செய்து கொண்டிருந்தான் .தன் பலம் தெரியாமல் தவித்திருந்த குழந்தைக்கு நல்வழி காட்டிக்கொண்டிருந்தான் .

" வெரிகுட் குட்டிம்மா .இப்போதான் நீ இந்த மாமாவோட செல்ல மருமகள் . ஓடிப்போய் முகம் கழுவிவிட்டு வா .அவளுக்கு குடிக்க ஏதாவது கொடு மீரா. பாவம் அழுதழுது தொண்டை காய்ந்திருக்கும் ...." கிண்டலாக சொன்னான் .

https://t.me/aedutamilibrary

" ம் ...நான் ஒண்ணும் அழலை .சும்மாதான் ...."

" ஓ...அழலையா ...? கண்ணு வேர்க்குதா ...? "

" திரும்ப திரும்ப கிண்டலா பண்றீங்க ...? " மாமனின் முதுகை மொத்த ஆரம்பித்தாள் .

" திவ்யா இந்த ஜூஸை குடித்து உடம்பில் தெம்பு ஏற்றிக்கொண்டு பிறகு உன் மாமாவை தைரியமாக அடி ...." மீரா ஜூஸை நீட்டினாள் .

" அடிப்பாவி புருசனை அடிக்கிறவங்களுக்கு ஜூஸெல்லாம் கொடுத்து பலமேற்றி விடுவாயா நீ...? திவ்யா பாருடா இந்த கொடுமையை .இவள் கூட நான் எப்படி குடும்பம் நடத்த ...? "

" வேணும் ...உங்களுக்கு அப்படித்தான் வேணும் ...." உடல் உபாதை மறந்து மலர்ந்த முகத்துடன் குதிக்க தொடங்கினாள் திவ்யா .

ஆதரவாய் அவள் தலை வருடியவன் " திவுக்குட்டி இப்போ மாமாவை

பார்த்து சொல்லு .வலி இல்லைதானே உனக்கு ...? " என்றான் .

" இதெல்லாம் இல்லை மாமா .நாம் அந்த சப்கலெக்டரை பார்க்க நாளை போகலாமா ...? "

" அடுத்த வாரம் போகலாம் .நீ அதுவரை வீட்டில் இருந்து நல்லா சத்தான சாப்பாடு சாப்பிட்டு உடம்பை தேற்றி வைப்பாயாம் .சரியா ...? இப்போது எல்லோரும் வரும் முன் ஒரு குட்டி தூக்கம் போடு போ ...."

அவளை உள்ளே அழைத்து சென்று பூப்படைந்த பெண்ணிற்கான தேவைகளை மீரா விளக்கி கொண்டிருந்த போது , வெளியேயிருந்து அழைத்த நந்தகுமார் ....

" மீரா ....கடையில் எதுவும் வாங்கவேண்டுமா ..? " குறிப்பாக கேட்டான் .

" இல்லை என்னிடம் இருக்கிறது ...." என்றுவிட்டு சிறுமியிலிருந்து பெரியவளாகி திகைத்து நின்று கொண்டிருந்த சிறுபெண்ணிற்கு அவளுடைய பாதுகாப்புகளை பக்குவமாக விளக்கி அவளை தூங்கவைத்து விட்டு வந்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

இடையில் அழைத்த பாட்டியிடம் தான் பேசுவதாக சொல்லி சென்ற நந்தகுமார் ...பாட்டிக்கு சொல்லிவிட்டு தனது அக்காவிடம் அவள் மகள் விசயம் பேசிவிட்டு அம்மா , அப்பா என ஒவ்வொருவராக அழைத்து பேசத்தொடங்கினான் .

அவன் பேசி முடிக்கும் வரை அவனைப் பார்த்தபடியிருந்த மீரா அவன் போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுவிட்டு " நிறைய வேலை இருக்கிறது மீரா ..." என்றபோது அவனருகில் நெருங்கி நின்றாள் .

நிமிர்ந்து அவன் கண்களுக்குள் தன் கண்களை கலந்தவள் ...

" சற்று முன் இந்த கணவனை அடைந்த்தற்காக நீ வருத்தப்படவில்லையா ...என்று கேட்டீர்கள் . இப்போது சொல்கிறேன் . பெண்ணை ...பெண் உணர்வுகளை மதிக்கும் உங்களை கணவனாக அடைந்த்தற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன் .இதை நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை. இப்போது என் மனதில் பொங்கிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளை என்னால் இப்படித்தான் ...."

என்றவள் அப்படியே அவன் மேல் சாய்ந்து அவனை இறுக கட்டியணைத்தாள் .அவனது பரந்த முதுகில் படர்ந்த தனது கைகளை

இறுக்கியபடி ஒரு நிமிடம் நின்றவள் , பிறகு நுனிக்கால்களால் எம்பி அவனது கன்னத்தில் தனது இதழ்களை அழுந்த பதித்தாள் . நந்தகுமாரின் உடல் இறுகி கல்லானது .

16

சிக்கிய வார்த்தைகளை சிரமமாய் கோர்த்து ,
வெள்ளை விழி சிவப்பாக்கி
நாக்கை துருத்தி ...ஒற்றை விரலாட்டி
முறைப்பென முயல்கிறாய் ,
ஏனிந்த குழந்தை குறுவாளெடுக்கிறது...?
விழிக்கிறேன் நான் ....

கன்னத்திலிருந்து தன் இதழ்களை எடுத்துக்கொண்டவள் கணவனின் மார்பில் முகம் புதைத்தாள் .

ஆழ்ந்து இழுத்து அவன் வாசனையை தன்னுள் நிரப்பிக்கொண்டவள் " என் புருசன் ..." என்றாள் .குரல் பெருமிதத்தில் கரகரத்து நெகிழ்ந்த்து .தனது அணைப்பை மேலும் இறுக்கிக் கொண்டபோதுதான் மீரா அதை உணர்ந்தாள் .

இவ்வளவு நேரத்திற்கு அவளுடன் அணைப்பில் ஒன்றி குழையாமல் நந்தகுமாரின் உடல் இறுகி விரைத்திருந்த்து .கணவனின் விருப்பமற்ற நிலையை உணர்ந்தவள் ..சிறு அவமானம் தோன்ற அவனை விட்டு விலக முயன்றபோது அவள் தலையை மென்மையாக வருடியவன் ...

" அக்கா புறப்பட்டுவிட்டதாக சொன்னார்கள் மீரா .உடனே வந்துவிடுவார்கள் .அம்மா , அப்பா , மச்சான் அடுத்தடுத்து வந்து விடுவார்கள் . இரவு நிறைய சடங்குகள் இருக்கிறதாமே .அதற்குள் நீ வீட்டை கொஞ்சம் ஒதுக்கி வைக்கிறாயா ...? " என்றான் .

ஒரு கணவனாக இல்லை ...திவ்யாவின் தாய்மாமாவாக இருந்த்து அவனது பேச்சு .உதட்டை கடித்து தன்னை அடக்கிக்கொண்ட மீரா அவனிடமிருந்து விலகிக்கொண்டு ....

" சாரி ..." என்றாள் .

" எதற்கு சாரி ...அதற்கெல்லாம் அவசியமில்லை ...நான் போய் கடையை பூட்டிவிட்டு வருகிறேன் .நீ வேலையைப்பார் ...." அவள் கன்னத்தில் தட்டிவிட்டு போய்விட்டான் .

கவலை எதற்கு ...அவன்தான் தன் நிலையை தெளிவாக சொல்லியிருக்கிறானே ....என்று நினைத்து ...நினைத்து தன்னை தானே சமாதானப்படுத்திக் கொண்டபோதும் ...கணவனின் இந்த ஒட்டாத தன்மை மீராவை மிகவும் வருத்தப்படுத்தவே செய்த்து .

" மீரா ...திவ்யாவை எங்கே ...? " பரபரத்தபடி வந்த பிரவீணாவிடம் முதன்முதலாக தன் மகளை பெண்ணாக மாற்றிய இயற்கைக்கான பயத்துடன் கூடிய தடுமாற்றம் இருந்த்து .

" எதற்கண்ணி இந்த டென்ஷன் ...? அவளுக்கு எல்லா விபரமும் சொல்லிவிட்டேன் .சாப்பாடும் கொடுத்து தூங்கவும் வைத்துவிட்டேன் .போய் பாருங்கள் ..." என்றாள் மீரா .

உள்ளே போய் உறங்கும் மகளை பார்த்து விட்டு வந்த பிரவீணா " ரொம்ப நன்றி மீரா .நீ பொறுப்பாக எல்லாவற்றையும் பார்த்துவிட்டாய் .நானாக இருந்தால் இந்த நேரம் நிச்சயம் தடுமாறி இருப்பேன் .நானும் பயந்து குழந்தையையும் பயமுறுத்தியிருப்பேன் ..." என்றாள் .

https://telegram.me/aedahamlibrary

நம்நாட்டில் நிறைய பெண்களின் நிலைமை இதுதான் .தான் அனுபவித்ததுதான் ....ஆனாலும் தங்கள் பிள்ளைக்கென்று வரும்போது குழம்பிவிடுகிறார்கள் .செய்வதறியாது குழந்தையாய் மாறி விழித்துக்கொண்டு நிற்கிறார்கள் .

" நானா ...? நான் இல்லை அண்ணி .அழுது கொண்டிருந்த பிள்ளையை தேற்றி அவளுக்கு ஆறுதல் சொல்லி அந்த வலியிலிருந்து மீட்டு வந்து ...என்று எல்லாம் செய்த்து உங்கள் தம்பிதான் அண்ணி ..." மீராவின் குரலில் கணவனுக்கான பெருமை இருந்த்து .

" ஆமாம் நந்து எப்பவும் அப்படித்தான் .பெண்களை அவர்களின் வேதனைகளை புரிந்துகொள்வான் .சின்ன பிள்ளையிலிருந்தே எனக்கும் , மாளவிகாவிற்கும் எல்லாவித உதவிகளையும் நாங்கள் கேட்க கூசிக்கொண்டு இருக்கும் போதே அவனாக உணர்ந்தே செய்வான் ...." மனைவியின் பெருமை இப்போது அக்காவினுடையதாயிருந்த்து .

" நான் நிறைய தடவை நினைப்பேன் மீரா .இவனுக்கு மனைவியாக வரும் பெண்ணும் மகளாக பிறக்கும் பெண்ணும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்று ...."

பிரவீணாவின் இந்த சொற்கள் மீராவை ஏதோ ஒரு வகையில் பாதிக்க அவள் மௌனமானாள் .

அந்த மௌனத்தை உணர்ந்து கொண்ட பிரவீணா அவள் கைகளை பற்றிக்கொண்டு " நந்து ஒரு வைரம் மீரா .எந்த அளவு கடினமானவனோ அந்த அளவு மென்மையானவன் .அமைதியான ஓடையாய் ஓடிக்கொண்டிருக்கும் அவன் அன்பு பிரவாகமெடுத்துவிட்டால் அந்த வேகத்தை நம்மால் தாங்கமுடியாது ....அன்பால் கொல்லுவதாக சொல்வார்களே ...அது இவனுக்கு அப்படியே பொருந்தும் ..." என்றாள் .
" ஐயோ ...என்ன அண்ணி இது ...வேகம் ....கொல்வது ...என்று ஏதேதோ சொல்லி பயமுறுத்துகிறீர்களே ...." கேலி போல் சொல்லி சிரித்தாள் .
அப்போது பரவசத்துடன் சுந்தரி வந்தாள் .

" அப்பனே முருகா , தாங்காத மனத்துயரத்துடன் இன்று உன்னை பார்க்க வந்தேன் .அதற்கு எனக்கு இன்று ஒரு நல்ல செய்தி சொல்லிவிட்டாய் ..."தூங்கிய பேத்தியை பார்த்துவிட்டு வந்தவள் போய்வந்த கோவில் தெய்வத்திற்கு நன்றி கூறினாள் .

https://telegram.me/aedahamlibrary

தன் மாமியாரை போய் பார்த்து சடங்கு சம்பிரதாயங்களை கேட்டுக்கொண்டாள் .பிறகு மருமகளுக்கு செய்ய வேண்டிய வேலைக்கான உத்தரவுகளை சொல்ல தொடங்கினாள் .

தூங்கி எழுந்த திவ்யாவை கூட்டிக்கொண்டு பாட்டியை போய் பார்த்தாள் பிரவீணா . பெரிய பெண்ணாகி விட்ட கொள்ளு பேத்திக்கான பத்திரங்களையும் ,பாதுகாப்பையும் விளக்கி சொன்னார் பாட்டி .

இரவு தலைக்கு தண்ணீர் ஊற்றுவதற்கான ¡சம்பிரதாயங்களை விளக்கினார் .சுந்தரி அக்கம் , பக்கத்தினரை விபரம் சொல்லி அழைத்தாள் .இரவு சாப்பாட்டிற்கு பக்கத்து ஹோட்டலில் சொல்லப்பட்டது .மாளவிகா கணவன் குழந்தையுடன் வந்தாள் .படபடவென திவ்யாவிடம் அவள் உடல் நிலையை விசாரித்துவிட்டு தன்னால் இயன்ற ஆலோசனைகளை சொல்ல ஆரம்பித்தாள் .

குருநாதன் கண்கள் கலங்க பேத்தியை ஆசீர்வதித்தார் .
" ஹேய் குட்டி ...டேக் கேர் ...." என்றான் சசிகுமார் .

பிரவீணாவும் , நந்தகுமாரும் திவ்யாவிற்கான புது உடைகளுக்காக கடைக்கு போக , சுந்தரியும் , சசிகுமாரும் சீர்தட்டில் அடுக்க சாமான்கள் வாங்க போக , குருநாதன் போட்டோ, வீடியோ ..என சொல்ல போக ....ஒரு மணிநேரத்தில் வீடு ஒரு விசேஷ தினத்திற்கான சுவடோடு கலகலத்தது .

மாளவிகா திவ்யாவின் அருகே அமர்ந்து வளவளத்துக் கொண்டிருக்க , வீட்டை ஒதுக்கி வரும் விருந்தினருக்கேற்றாற் போல் மாற்றி அமைத்துக் கொண்டிருந்தாள் மீரா .

வீடு முழுவதும் கழுவி தள்ளி , சோபாக்களை ஓரம் ஒதுக்கி , கிணற்றடியை ஒதுக்கி வைத்து ...வாசலில் அழகாக ரங்கோலி வரைந்து என வியர்க்க விறுவிறுக்க முகம் கழுவ நேரமின்றி விருந்தினர்கள் வரும்வரை வேலை இருந்து கொண்டே இருந்த்து மீராவிற்கு .

ஹோட்டலில் சாப்பிட சொன்ன சாமான்களோடு அவித்த முட்டை ஒன்றை ஒவ்வொரு இலையிலும் வைக்கலாமென கடைசி நேரம் யோசித்து முட்டைகளை அவித்து வைக்கும்படி மீராவிடம் கூறிவிட்டு சென்றிருந்தாள் சுந்தரி .

வாசல் கோலத்தை முடித்துவிட்டு அடுப்பு வேலைக்காக மீரா அவசரமாக உள்ளே செல்ல திரும்பிய போது ...சர்ரென சடன் பிரேக்குடன் பைக்கில் வந்து நின்றான் குமரேசன் .

மகளின் நல்ல செய்திக்கான சந்தோசத்தை அவன் முகத்தில் எதிர்பார்த்து நிமிர்ந்த மீரா ,அதில் தெரிந்த கோபத்தில் திகைத்தாள் .
" பிரவீணாவை எங்கே ...? கூப்பிடு அவளை ...."

" அண்ணி கடைக்கு போயிருக்காங்க .உள்ளே வாங்க அண்ணா .திவ்யா உள்ளே இருக்கா ..."

" நீங்க எல்லாரும் மனசில் என்ன நினைச்சிட்டு இருக்கீங்க ...? என் பொண்ணுக்கு ஒரு நல்லது நடக்கறப்ப நீங்க இங்கே கூட்டி வச்சிக்கிட்டீங்கன்னா என்ன அர்த்தம் ..? "

" அதனால் என்ன அண்ணா ...? இது உங்கள் வீடில்லையா ...? நல்ல காரியம் எங்கு நடந்தால் என்ன ...?வீட்ல இப்போ எல்லோரும் வெளியே

https://telegram.me/aedahamlibrary

போயிருக்காங்க . நீங்க உள்ளே வாங்க பேசலாம் ..."

" ஓஹோ ...மகளை உள்ளே தனியா விட்டுட்டு அம்மா ஊர் சுத்த போயிட்டாளா ...? "

மீராவிற்கு வெறுத்து போனது .

" என்ன அண்ணா ...நாங்கெல்லாம் இருக்கோமே .நீங்க முதல்ல உள்ளே வாங்களேன் ..." அக்கம் பக்கத்தினர் இந்த சத்தத்திற்கு வந்துவிடுவார்களோ என்ற கவலை அவளுக்கு .

" இல்லை நான் வரவில்லை .என் மகளை வரச்சொல் நான் அவளை கூட்டிக்கொண்டு போகிறேன் ...."

ஆணித்தரமாக குமரேசன் பேச ...மீரா அதிர்ந்து நின்றாள் .

17

https://telegram.me/aedahamlibrary

காலடி ஓசைக்கே
கழைக்கூத்தாடும் மனதை வைத்துக்கொண்டுதான்
நேற்றெல்லாம் சங்கல்பம்
செய்து கொண்டிருந்தேன் ,
உன்னை விட்டு விட போவதாக ....

" என்ன மச்சான் ...என்ன பிரச்சினை ...? " நந்தகுமாரின் குரல் கேட்கவும்தான் மீராவிற்கு மூச்சு வந்த்து .

" ஏங்க எதுவாக இருந்தாலும் உள்ளே போய் பேசலாம் .வாங்க ..." நந்தகுமாருடன் வந்த பிரவீணா கெஞ்சலக கணவனை பார்த்தாள் .

" இந்த சடங்கெல்லாம் நடக்க வேண்டியது நம் வீட்டில் .இங்கே எதற்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள் ...? " முன்பு போல் வேகம் இல்லை .நந்தகுமாரை பார்த்ததும் தொனி மாறிவிட்டது குமரேசனுக்கு .

" அதை உள்ளே வந்து பேசலாமே ..." சொன்னபடி உள்ளே நடந்தான் நந்தகுமார் .

வாசல் வழியில் நின்றிருந்த மீராவை  பார்த்து " இங்கே என்ன வேடிக்கை ...? உள்ளே போயேன் ...." எரிந்து விழுந்தான் .

முகம் சுருங்கிய மீரா வேகமாக உள்ளே போனாள் .

" மச்சானுக்கு காபி கொண்டு வா மீரா .இங்கே உட்காருங்கள் மச்சான் ..." குமரேசன் அருகிலேயே தானும் அமர்ந்து கொண்டு அவன் முகத்தை உற்று பார்த்தான் .

உள்ளேயிருந்து வந்த திவ்யா " அப்பா நான்தான் பாட்டி வீட்டிற்கு போவேன்னு ஸ்கூல்ல டீச்சர்கிட்ட கேட்டு இங்கே வந்தேன் ." என்றாள் .

குமரேசன் எச்சில் விழுங்கினான் .

" சொல்லுங்க மச்சான் ...வீட்டிற்கு வெளியே நின்று என்னவோ சொல்லிட்டு இருந்தீங்களே ..." காபி தம்ளரை எடுத்து குமரேசனுக்கு கொடுத்தபடி கேட்டான் .

" என் பொண்ணு .அவளுக்கு என் வீட்டில் வைத்து விசேசம் செய்து பார்க்க எனக்கு ஆசை இருக்காதா ..? "

" உங்கள் வீட்டில் வைத்து செய்தாலும் தாய்மாமன் முறையில் நானும் , சசிகுமாரும்தான் சீர் செய்ய போகிறோம் .அதை இங்கேயே வைத்து செய்வதில் என்ன இருக்கிறது ...? "

" எங்கள் மருமகளுக்காக பத்தாயிரம் ருபாய்க்கு பட்டுச்சேலை வாங்கியிருக்கிறோம் .மோதிரமும் , வளையலும் வாங்கியிருக்கிறோம் .எங்கள் வீட்டில் வைத்து இதையெல்லாம் செய்து பார்க்க எங்களுக்கு உரிமையில்லையா ...? "

" இவ்வளவு செய்யுங்கள் என்று நான் கேட்டேனா ...? " குமரேசன் கோபமாக கேட்டான் .

" நீங்கள் கேட்கவில்லை .அப்படி எதிர்பார்க்கிற ஆள் நீங்கள் இல்லை என்பதும் எனக்கு தெரியும் .நாங்கள் செய்யும் சீரின் அளவை சொன்னது எங்கள் பெருமை பேச இல்லை .எங்கள் மருமகளின் மேல் நாங்கள் வைத்திருக்கும் பாசத்தை காட்ட .ஸ்கூலில் இருந்து அழுதுகொண்டே தனது வலியை சொல்ல பாட்டியிடம் ஓடி வர வேண்டும் என்று அந்தக் குழந்தை க்கு தோன்றியிருக்கிறது .அந்த குழந்தையின் உணர்ச்சியை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் ...."

https://telegram.me/aedahamlibrary

குமரேசன் வாயடைத்து போனான் ...

" எட்டு மணிக்கு போட்டோ ஸ்டுடியோக்காரன் வந்திடுவான் ..." தகவல் சொல்லியபடி வந்த குருநாதன் ...அங்கிருந்த இக்கட்டான சூழ்நிலையை ஊகித்துக்கொண்டார் .

" வாங்க மாப்பிள்ளை .குழந்தை நல்ல செய்தி சொல்ல பாட்டி வீடு தேடி ஓடி வந்துட்டா .அதுவும் நல்லதுதான் .உங்க வீட்டில் விபரம் சொல்லித்தர , எடுத்து செய்ய பெரியவங்க இல்லையே .இங்கே நாங்க எல்லோருமா ஆளுக்கொரு வேலையா எடுத்து செஞ்சு விசேசத்தை நல்லபடியா முடிச்சிடுறோம் .நீங்களும் பிரவீணாவும் நம்ம , உங்க சொந்தக்காரங்க எல்லோருக்கும் போனில் தகவல் சொல்லிடுறீங்களா ...? "

குமரேசனின் தலை தானாக ஆடியது .

மீராவிற்கு ஆச்சரியம் தாளவில்லை .பெரிய பிர்ச்சினையாக இது வெடிக்க போகிறதோ ..என எண்ணி அவள் பயந்து கொண்டிருந்தாள் .அதனை மாமனாரும் , கணவனுமாக சேர்ந்து மிக எளிதாக சமாளித்த விதம் அவளுக்கு ஆச்சரியமூட்டியது .

https://telegram.me/aedahamlibrary

நான்கு பிள்ளைகள் பிறந்த குடும்பத்தில் ஒவ்வொரு உறவையும் மனம் நோகாமல் கொண்டு செல்வதென்பது பெரிய கலை .அதனை கற்று தேர்ந்த குடும்பங்கள்தான் இன்றைய விஞ்ஞான யுகத்திலும் சிதையாத உறவுகளுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

மீரா முட்டைகளை அவிக்க தொடங்கினாள் .பிறகு விருந்தினர்கள் வரவும் அவர்களுக்கு கொடுக்க என ஒரு உடனடி பானத்தை தயாரித்து வைத்தாள் .

" இன்னமும் என்ன செய்கிறாய் ...? போ ...போய் முகம் கழுவி உடை மாற்று ..." சுந்தரி அவளை விரட்டினாள் .

ஹாலில் அடுக்கி இருந்த சீர் தட்டுக்களை சரி பார்த்தாள் .விருந்தினர்கள் ஒவ்வொருவராக வர தொடங்கினர் . தன்னை திருத்திக் கொள்ள தங்கள் அறைக்குள் நுழைய போனவள் ...வாசலுக்கு நேராக அடைந்தாற் போல் கிடந்த விருந்தினர்களின் செருப்புகளை பார்த்துவிட்டு ...அவற்றை ஒதுக்கி ஓரமாக தள்ள ஆரம்பித்தாள் .

அப்போது அடர் பச்சை நகச்சாயமிட்ட இரு அழகிய வெண்ணிற

கால்கள் அவளது கைகளுக்கு நேராக தனது செருப்புகளை விட்டன. அதுதான் ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறேனே ...ஓரமாக போடாமல் திரும்பவும் இப்படி நடுவில் போட்டால் எப்படி ...மீராவின் கோபத்தின் அளவை அந்த கால்களின் அழகு குறைத்தது .

என்ன அழகான கால்கள் ...ரசனையோடு அந்த பாதங்களுக்குரிய முகத்தை காண நிமிர்ந்தவள் அதிர்ந்தாள் .

இ...இவள் ...அ...அந்த ...மி...மிருணாளினிதானே ....

இவள் இங்கு வருவாளா ...? ஆனால் ஏன் வந்தாள் ...? எப்படி வரலாம் ...? வெளியே போ என்று சொல்லிவிடலாமா ...? அவசரமாக ஒரு தீர்மானத்தை மனதினுள் எடுத்தவள் அதை செயல்படுத்த வாயை திறந்தாள் .

" வாங்க ...வாங்க ஏன் அங்கேயே நின்னுட்டீங்க ..? உள்ளே வாங்க ."ஆர்ப்பாட்டமாய் பின்னால் கேட்ட வரவேற்பு குரலில் நொந்து போனாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

18

மீண்டும் ....மீண்டும் எனக்கே ஓட்டு போட்டு முதல்வராக்குகிறாய் , இனி சர்வாதிகாரியாகிவிடலாமென்ற முடிவெடுக்கையிலெல்லாம் சத்தமின்றி உன் அடிமையாகிவிடுகிறேன் ...

இதுதான் உங்க மருமகளா ...? " அந்த மிருணாளினியின் அம்மா சங்கீதா கேட்டாள் .

சங்கீதாவும் , மிருணாளியும் லேசர் பார்வை கொண்டு மீராவை அளந்து கொண்டிருந்தனர் .

" ஆமாம் அண்ணி இவள்தான் .நீங்க உள்ளே வாங்க .மிருணா வாடா ..." இடையில் நின்ற மீராவின் கையை பற்றி ஒதுக்கிவிட்டு அந்த மிருணாளினியின் கையை பற்றி அழைத்தாள் சுந்தரி .

" எப்படி இருக்கீங்க அத்தை ..? " கண்களை மீரா மேல் வைத்தபடி அத்தையை விசாரித்தாள் மிருணாளினி .

" உன் பேரென்ன ...? " சங்கீதா மீராவை கேட்டாள் .

பதில் சொல்ல மீராவிற்கு தோணவில்லை .

" ரொம்ப அழகாய் இருக்கிறாய்டா மிருணா ..." சுந்தரியின் வர்ணனையில் அந்த மிருணாவை நிமிர்ந்து பார்த்த மீரா சோர்ந்தாள் .

நிறைய வெள்ளியில் கொஞ்சம் தங்கம் சேர்த்து செய்த சிலை போல அவள் மின்னினாள் .விசேச வீட்டிற்கான அவளது அலங்காரம் வைரமாக மினுங்கியது .கலைந்த தலையும் , வழியும் வியர்வையுமாக நின்ற தனது தோற்றம் மீராவிற்கு அசிங்கமாக தோன்றியது .

மிக நேர்த்தியாக பார்த்து பார்த்து அலங்கரித்தால் தான் அந்த மிருணாளினி அருகில் அவளால் வர முடியும் .அப்படி இருக்கையில் இந்த மாதிரி களைத்த தோற்றத்துடன் நின்றால் ...மீரா உடனடியாக அந்த இடத்தை விட்டு நகர எண்ணி உள்ளே திரும்பினாள் .

" இவுங்களுக்கு ஜீஸ் கொடு மீரா ..."

https://telegram.me/aedahamlibrary

" அந்த பெட்ஷீட்டை இங்கே விரி ..."

" இந்த டம்ளரையெல்லாம் கழுவு ..."

மீராவிற்கு சொல்ல அடுத்தடுத்து சுந்தரிக்கு வேலை இருந்த்து .

சாலை அசிங்கம் தன் மேல் தெறித்திருந்த்தது போன்ற அருவெறுப்பை தனது தோற்றத்தில் உணர்ந்திருந்த மீரா பற்களை கடித்தபடி இந்த வேலைகளை செய்தாள் .

" இந்த வெற்றிலைகளை கழுவி இந்த தட்டில் அடுக்கு ...கூடவே பாக்கும் , சுண்ணாம்பும் வை....சாப்பிட்டு  முடித்தவர்கள் போட்டுக் கொள்ள ...."

" ஐயோ அத்தை அவர்களை கொஞ்சம் விடுங்க ...அவுங்க முதல்ல டிரஸ் மாத்தட்டும் ...."

ஆதரவாக ஒலித்த மிருணாளினியின் குரலை ஆச்சரியமாக பார்த்தாள் மீரா .

" சரி ..சரி போ ...போய் சேலையை மாற்று ....," சுந்தரி விடுதலையளித்தாள் .

இந்த மிருணாளினியை எந்த கணக்கில் சேர்ப்பது ....பட்டுச்சேலை மடிப்பை சரி செய்தபடி யோசித்தாள் மீரா .கதவு தட்டப்பட்டது .மிருணாளினிதான் வெளியே நின்றிருந்தாள் .

" உள்ளே வரலாமா ...? " புன்னகைத்தாள் .

" வாங்க ..." அவளை உள்ளே விட்டு விட்டு தனது தலையை பின்னிக்கொள்ள தொடங்கினாள் மீரா .

" சேலை அழகாக கட்டியிருக்கீங்க ...." சொன்னபடி உள்ளே வந்து அறையை விழிகளை சுழற்றி பார்த்தாள் .

" நன்றி .என்ன பாக்குறீங்க ...? "

" இந்த ரூம்ல எத்தனை நாள் எப்படியெல்லாம் நாங்க எல்லோரும் விளையாண்டிருக்கிறோம் .புதையல் விளையாட்டு விளையாடுவோம் .நந்து அத்தான்தான் எங்களுக்கு ஹெட் .அவர்தான் ஒளித்து வைத்து டிப்ஸ் அங்கங்கே வைத்திருப்பார் .நாங்க எல்லோரும் வீடு பூராம் சுத்துவோம் .இந்த ரூம்லதான் அடிக்கடி புதையலை வைப்பார் ....ம் ...இதெல்லாம் ஒரு காலம் ..." பெருமூச்சு விட்டவள் ஒரு நாள் இந்த பீரோவில் ஒளித்து வைத்துவிட்டார் ...." என்றபடி அங்கிருந்த பெரிய மரபீரோவை திறந்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" என்ன பேச்சை நிறுத்திட்டீங்க ...? " மிருணாளியின் சிறுவயது விளையாட்டு கதைகளை கேட்க பிடிக்காமல் கண்ணாடியில் விழிகளை பதித்திருந்த மீரா திரும்பி கேட்டாள் .

மிருணாளினி பீரோவை பார்த்தபடியிருந்தாள் .

" உன் டிரஸ்ஸெல்லாம் ஏன் இங்கே இருக்கு ...? "

நந்தகுமாருடைய துணிகளுடன் சேர்த்து அடுக்கப்பட்டிருந்த மீராவின் துணிகளை பார்த்து கேட்டாள் .

திடீரென அவள் ஒருமை உறுத்த .." ஏன் என் கணவருடைய உடைகளோடு என்னுடைய உடையை அடுக்கியிருக்கிறேன் ...." என்றாள் அழுத்தமாக .

" நீயும் இதே அறையில்தான் தங்குகிறாயா ...? "

" அர்த்தமற்றதாய் இருக்கிறது உங்கள் கேள்வி .கணவனும் , மனைவியும் ஒரே அறையில்தானே தங்குவார்கள் ...."

" ஓ....அத்தானுக்கு இதே பீரோவில் நானே எத்தனை முறை துணிகளை அடுக்கி கொடுத்திருக்கிறேன் தெரியுமா ...? இதோ இந்த பீரோவில் ஒரு ரகசிய அறை உண்டு அது உனக்கு தெரியுமா ...? "

பபீரோ தட்டோடு தட்டாக இருந்த அறையை உயர்த்தி காட்டினாள் .

வலிக்கும் மனதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் " ஓஹோ ..." என கண்ணாடியிடம் திரும்பக்கொண்டாள் மீரா .

பீரோவை மூடி விட்டு கட்டிலில் படுத்துக்கொண்டாள் மிருணாளினி .கை , கால்களை பரப்பி ஒய்யாரமாக படுத்திருந்தவளை கண்டபோது தான் இன்னமும் ஒரு முறை கூட அந்த கட்டிலில் படுத்ததில்லை என்பது மீராவிற்கு கசப்பாய் நினைவு வந்த்து .

" இந்த கட்டிலை அத்தான் யாருக்கும் தரமாட்டார் .ஆனால் நான் வந்தால் மட்டும் எனக்கு கொடுத்துவிட்டு வெளியே போய் படுத்துக்கொள்வார் ...." தானாக சொல்லிக்கொண்டாள் .

https://telegram.me/aedaalamlibrary

இனி அந்தக் கட்டிலில் தான் படுக்கத்தான் வேண்டுமா ...? யோசிக்க ஆரம்பித்தாள் மீரா .

" எவ்வளவு ஆசையாக ..நாங்கள் பழகினோம் ...? எதற்காக எங்களை பிரித்தார்கள் ...? " மிருணாளியின் குரல் தழுதழுக்க மீராவிற்குமே கொஞ்சம் வேதனையாக இருந்த்து .

இவள் பாவம்தானே ...திருமணம் நிச்சயம் என்ற உறுதியோடு பழகிவிட்டு திடீரென  கிடையாது என்றால் ...ஆனால் திரமண உறுதியோடு பழகிய இவர்களின் பழக்கம் எந்த அளவில் இருந்திருக்கும் ..? இது போல் ஒரு வீட்டிற்குள் சுற்றி சுற்றி வரும் ...காதல் கலந்திருந்த இவர்களின் பழக்கம் ....மீராவிற்கு வேர்க்க தொடங்கியது .

உடனேயே இல்லை அவள் கணவன் அப்படிப்பட்டவன் கிடையாது .தாலி கட்டிய மனைவியையே தொடாமல் தள்ளி வைத்திருப்பவன் .தாலி கட்டாத இவளுடன் கண்டிப்பாக கட்டுப்பாடோடுதான் பழகியிருப்பான் .ஆனால் ....அளவு மீறிய காதல் எந்த கட்டுப்பாட்டிற்கும் அடங்காத்துதானே ....அத்தோடு பிடிக்காத மனைவியிடம் காதல் பொங்கி வரவா செய்யும் ...?

தனக்குள்ளேயே இரு கூறாக பிரிந்து வாதிட்டுக் கொண்டிருந்தவள் ....

" உன்னிடம் அத்தான் எப்படி பழகுகிறார் ...? " மிருணாளியின் இந்த அதிரடிக் கேள்வியில் திகைத்தாள் .இவளென்ன இப்படி கேட்கிறாள் ...?
" எ..என்ன கேட்கிறீர்கள் ..? "

" என் நந்து அத்தான் உன்னோடு எப்படி பழகுகிறார் ..என்று கேட்டேன் " இப்போது மிருணாளினி எழுந்து வந்து , அவள் முகத்தை உறுத்தபடி நின்றிருந்தாள் .

சுதாரித்துக் கொண்ட மீரா " ஒரு கணவன் மனைவியிடம் பழகுவது போல் பழகுகிறார் ..." அழுத்தி சொன்னாள் .

அவளை கூர்ந்து பார்த்தவள் " பொய் ...என்னை தவிர வேறு யாருடனும் அவரால் அப்படி பழக முடியாது ..." உறுதியாக கூறினாள் .

தன் நிராதரவான நிலை உணரப்பட தடுமாறி மீரா நின்றபோது வெளியே சுந்தரி அழைக்கும் குரல் கேட்டது .

" அத்தை கூப்பிடுறாங்க ..." வேகமாக வெளியேறப்போனவளை ...

https://telegram.me/aedahamlibrary

" எத்தனை வருடமானாலும் என் அத்தான் மனதில் மனைவியின் இடத்தில் நான் மட்டும்தான் இருப்பேன் ..." மீண்டும் கட்டிலில் ஒய்யாரமாய் சாய்ந்து அமர்ந்து சொன்னபடி மீராவை காயப்படுத்தி அனுப்பினாள் .

கலங்கிய கண்களுடன் வெளியேறிய மீரா கை நிறைய பைகளுடன் வெளியிலிருந்த வந்த நந்தகுமாருடன் மோதிக்கொண்டாள் .அவன் கை பைகள் கீழே விழுந்தன.

" பார்த்து வரக்கூடாதா மீரா .எல்லாம் சிந்திவிட்டது பார் ..." கோபமான கணவனின் குரலில் மேலும் கலங்கிய தன் விழிகளை குனிந்து மறைத்தபடி கீழே அமர்ந்து சிதறிய சாமான்களை சேர்க்க தொடங்கினாள் .

தானும் அவளுடன் குனிந்து சாமான்களை எடுத்தவன் திடீரென அவள் முகத்தை தன் விரலால் உயர்த்தினான் .
" மீரா ...என்னம்மா ...? கண்ணெல்லாம் கலங்கியிருக்கிறதே .அழுதாயா என்ன ..? " ஆதரவான அவன் குரலில் மீராவின. கண்கள் மேலும் கலங்கியது .

" என்னத்தான் தரையில் எதுவும் புதையல் எடுக்கிறீர்களா ....? அறை வாசலில் ஒயிலாய் சாய்ந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த மிருணாளியின் குரலில் எல்லாவற்றையும் போட்டுவிட்டு எழுந்து நின்றான் நந்தகுமார் .

" மிருணா ...நீயா ...? " அவன் குரலில் என்ன இருந்த்து ....?

19

ஐவிரலால் தலைகோதி
நுனிவிரலால் மீசை வருடி
முதுகு சாய்த்து டிவி பார்த்து
இயல்பாய் இருந்து தொலையாதே,
பெண்ணியல் தொலைந்து
தடுமாறுகிறது என் மனது .

https://telegram.me/aedahamlibrary

" குழந்தையை கூட்டிட்டு போய் கிணற்றடியில் உட்கார வைங்க ..." வெளியே குரல் கேட்க ,

" மீரா போம்மா .நீதான் தலைக்கு தண்ணி ஊத்தனும் ..." அடுப்படியில் மகளுக்கு உதவியாக நின்றிருந்த மீராவின் அம்மா சொல்ல விளக்குமாற்றை கீழே போட்டுவிட்டு மீரா பின்னால் கிணற்றடிக்கு போனாள் .

சுற்றிலும் பெண்கள் சூழ்ந்திருக்க திவ்யா மனையில் உட்கார வைக்கப்பட்டிருந்தாள் .அவளது தலையில் தேய்ப்பதற்கு சீகைக்காயுடன் , எண்ணெய்யும் எடுத்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி .

வேக நடையுடன் போன மீரா அவள் கையிலுருந்த பொருட்களை ' வெடுக்கென ' பறித்துக்கொண்டாள் .

" இது திவ்யாவின் அத்தை செய்ய வேண்டிய சடங்கு .நான்தான் செய்வேன் ..." சண்டையிட தயாராக நின்றபடி சொன்னாள் .

" நானும் அவள் அத்தைதான் ...." மிருணாளினியும் சண்டைக்கு தயாரானாள் .

" திவ்யாவின் தாய் மாமா மனைவியான அத்தைக்குரிய சடங்கு இது .இதனை நான் மட்டுமே செய்ய முடியும் .நீ தள்ளி நில்லு ...."

" எவ்வளவு திமிர் ...சொந்தமென்று இவ்வளவு நாட்களாக நாங்கள் வாழ்ந்த்தெல்லாம் வீணா ...? " சங்கீதாவும் , மிருணாளினியும் சண்டையை பெரிதுபடுத்த ஆரம்பிக்க....சுற்றியிருந்த உறவின பெண்கள் திகைக்க , உள்ளே வேலையாக இருந்த சுந்தரி பதட்டமாக வந்தாள் .

" மிருணா ...மீரா கையில் சீகைக்காயை கொடுத்துட்டு உள்ளே வா ..." என்றாள் .

" இப்படி அவமானப்படுத்தத்தான் எங்களை வர வைத்தீர்களா அண்ணி ..." சங்கீதா கத்தினாள் .

" அத்தை ...உங்கறளுக்கு அப்பாவை தெரியும்தானே .சும்மாவே உங்களை இங்கே அழைத்ததற்காக கோபித்துக் கொண்டு வீட்டிற்கு வெளியிலேயே உட்கார்ந்திருக்கிறார் .இப்போது இப்படி பிரச்சினையென்றால் அவ்வளவுதான் ..." பிரவீணா கெஞ்சினாள் .

https://telegram.me/aedahamlibrary

பிரவீணாவும் , குமரேசனும் சேர்ந்து போனில் சண்முகசுந்தரத்தையும் , சங்கீதாவையும் அழைத்திருந்தனர் .ஏற்கெனவே நந்தகுமாரின் திருமணத்தில் பிரிந்திருந்த தங்கை குடும்பத்துடன் இந்த சந்தர்ப்பத்தை வைத்து சேர்ந்து கொள்ளலாமென்று சண்முகசுந்தரம் குடும்பத்தோடு வந்திருந்தார் .

குருநாதன் இதற்காக பிரவீணாவை கோபித்துக்கொள்ள குமரேசன் இடையில் வந்து நான்தான் அவர்களை அழைத்திருக்கிறேன் .என் மகளின் விசேசம் என ஆரம்பிக்க ....ஏற்கெனவே மனத்தாங்கலுடன் இருக்கும் மாப்பிள்ளையை மேலும் கோபிக்க வழியின்றி குருநாதன் பேசாமல் இருக்க வேண்டியதாயிற்று .

ஆனாலும் சண்முகசுந்தரத்தை ...வா என்று அழைக்கவில்லை .அவர் வீட்டில் முன்பக்கம் இருந்தால் குருநாதன் பின்பக்கம் இருந்தார்

.குருநாதன் அழைக்கவில்லையென சண்முகசுந்தரமும் வீட்டினுள்ளேயே வராமல் வீட்டு முன் ஒரு சேரை போட்டு அதிலேயே அமர்ந்திருந்தார் .

சுந்தரிதான் பாவம் ....வாசலுக்கும் , பின்கட்டுமாக மாறி ...மாறி அண்ணனுக்கும் , கணவனுக்குமிடையே அலைந்து கொண்டிருந்தாள் .அவள் இப்போது சங்கீதாவிடம் ...

" அண்ணி இப்போது பிரச்சினை வந்தால் பிறகு நாம் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்க முடியாமலேயே போய்விடக்கூடும் .தயவுசெய்து பொறுத்துக் கொள்ளுங்கள் ...." கெஞ்சினாள்.

சங்கீதாவும் , மிருணாளினியும் மூஞ்சியை  தூக்கிக் கொண்டு வீட்டினுள் போய்விட்டனர் .சுந்தரி மீராவை கடுமையாக முறைத்தாள் .உள்ளே போய்விட்டாள் .

மீரா கனத்த மனத்துடன் திவ்யாவிற்கு எண்ணெய் வைத்து , சீகைக்காய் தேய்த்து குளிக்க வைக்க ஆரம்பித்தாள் .

சேலையின் முன்பக்க கொசுவத்தை சீராக எடுத்து விட்டு விட்டு திருப்தியாக எழுந்தாள் மீரா .தலை அலங்காரத்தை சரி செய்து , மல்லிகைசரங்களை கையில் எடுத்து அழகாக தலையில் வைக்க ஆரம்பித்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" அத்தை நான் அழகாக இருக்கிறேனா ...? " கண்ணாடியில் பார்த்தபடி கேட்டாள் திவ்யா .

குச்சிக்கு கனமான போர்வையை சுற்றி விட்டது போன்ற தோற்றத்தில் நின்ற மருமகளை பார்த்தாள் மீரா .கனத்த சேலையும் , அடுக்கிய மல்லிகையுமாய் இச்சிறு பெண்ணிற்கு எதற்கிந்த பாரம் ...என தோன்றினாலும் மலர்ந்த முகத்தோடு தன் அலங்காரத்தை பார்த்துக் கொண்டிருந்த அந்த குழந்தையை கண்டதும் ...தானும் முகம் மலர்ந்து ...

" உனக்கென்னடா அப்சரஸ் மாதிரி இருக்கிறாய் ...." கன்னம் வலித்து திருஷ்டி கழித்தாள் .

" பொய்தானே சொல்றீங்க ...சோளக்கொல்லை பொம்மை போல இருக்கேன் ..." சிணுங்கினாள் திவ்யா .
" அத்தை பொய் சொல்வேனாடா ...? அழகா இருக்கிறாய் நீ ..."

" ஆமாம்டா உன் அத்தை பொய் சொல்ல மாட்டாங்க .இன்னைக்கு நீ நிஜம்மாவே ரொம்ப அழகாய் இருக்கிறாய் ..." சசிகுமார் உள்ளே

வந்தான் .

" ஐ...அப்படியா சசி மாமா சொன்னா சரியாத்தான் இருக்கும் ..." என்ற திவ்யாவின் திருப்தியை ...

" இத்தனூன்டு உருவத்துக்கு இவ்வளவு பெரிய பட்டுச்சேலையை சுத்தினா எப்படி இருக்கும் ...கண்ணால் பார்க்க முடியலை ..." சிதறடித்தபடி வந்தாள் மிருணாளினி .

திவ்யாவின் முகம் விழுந்து விட்டது .

" சின்ன பிள்ளைகிட்ட இப்படித்தான் பேசுவியா மிருணா ...? " சசிகுமார் முறைத்தான் .

" அவளை அண்ணின்னு கூப்பிடுன்னு உன்னை எத்தனை தடவை சொல்லியிருக்கேன் ..." சசிகுமாரை முறைத்துக் கொண்டே சங்கீதா வந்தாள் .

" அண்ணியா ...அப்படிக் கூப்பிட எனக்கு எங்க அண்ணி இருக்காங்க ◌இவள் எனக்கு மாமா மகள் மட்டும்தான் ...." சசிகுமாருக்கு கை தட்ட வேண்டும் போல இருந்த்து மீராவிற்கு .

https://telegram.me/aedahamlibrary

" தப்பு சசி .அவள் உன்னை விட ஒரு வயது மூத்தவள் .அவளை நீ சொந்தம் சொல்லித் தான் கூப்பிட வேண்டும் ..." குரலை உயர்த்தியபடி வந்தான் நந்தகுமார் .

சசிகுமார் எப்படியும் போங்க ரீதியில் தோள்களை குலுக்கிவிட்டு வெளியே போய்விட்டான் .

இவன் ஒருத்தன் ...பஞ்சாயத்து தலைவர் மாதிரி நியாயம் சொல்ல மட்டும் எங்கேயிருந்தாலும் ஓடி வந்துடுவான் ...கணவனை முறைக்க கூட அவன் முகம் பார்க்க விரும்பாது திவ்யாவின் அலங்காரத்தை சரி செய்ய தொடங்கினாள் மீரா .

அந்த மிருணாளினியை பார்த்ததும் இவன் எப்படி உறைந்து நின்றான் .சுற்றிலும் நடப்பதே இவனுக்கு தெரியவில்லையே ...

" மிருணா ...நீ...நீயா ...நீ ...எப்படி ...? " கீழே விழுந்த சாமான்களை ...அருகிலிருந்த மனைவியை மறந்து அவன் மாமன் மகளிடம் பார்வை பதித்திருக்க ...உடல் கொதிக்க அங்கிருந்து ஓடி வந்துவிட்டாள் மீரா .

இப்போதும் தேடி வந்து இவளுக்கு சப்போர்ட்டா ...?

நந்தகுமார் தன் பக்கம் பேசியதில் மகிழ்ந்த மிருணாளினி புதிதாய் தோன்றிய பாசத்தில் " திவ்யா குட்டி வாடா ..உன்னை அத்தை கூட்டிட்டு போறேன் ..." என அவள் கைகளை பிடிக்க ...

" நான் மீரா அதகையோட  வர்றேன் ...." திவ்யா மீரா கையை பிடித்தாள் .

" திவ்யா மிருணா கூட போடா ..." அவளுக்கு முதுகு காட்டி நின்ற கணவனின் முதுகில் ஒன்று போட்டாலென்ன என தோன்றியது மீராவிற்கு .

திவ்யா மிருணாளினியின் கையை பிடித்து வெளியே நடக்க அவர்கள் பின்னால் போன மீராவின் பின்னால் வந்த நந்தகுமார் " முதுகில் ஒன்று போடுவதனால் இந்த ரூமிற்குள்ளேயே வைத்து போட்டுவிடு மீரா ..." என்றான் தாழ்ந்த குரலில் .

அப்படித்தான் இவனை அடித்துக் கொண்டிருக்கிறேனாக்கும் ....

" ஆஹா ...அப்படி முதுகை காட்டுவீர்களே ...? " முகத்தை நொடித்தாள் .

" நிச்சயம் காட்டுவேன் .உள்ளே வா ..." என்றவன் குரலில் குறும்பு இருக்க ...அவன் உள்ளே வந்து அவளுக்கு அடிக்க தோதாக முதுகை திரும்பி காட்டும் காட்சி மனதினுள் விரிய , மீராவின் இதழ்கள் விரிந்தன .

https://telegram.me/aedahamlibrary

" ஹப்பா ..சிரிச்சாச்சா ...இதற்காக சட்டையை சுழட்டி அடியெல்லாம் வாங்க வேண்டியதாயிற்று ..." பலமாக அடி வாங்கியது போல் முதுகை தடவிக்கொண்டான் .

படக்கென சிரித்துவிட்டாள் மீரா .இந்த சத்தத்தில் திரும்பி பார்த்த மிருணாளினியின் கண்கள் கன்றன .
" என்ன நீங்க இரண்டு பேரும் இப்படி கொஞ்சிக்கிட்டே நிற்க போறீங்களா ...? " கணகளை உருட்டியபடி கேட்டாள் .

" திவ்யா ..வா நாம் பாட்டியிடம் ஆசீர்வாதம் வாங்கிவிட்டு பிறகு போகலாம் ..." மீரா திவ்யாவின் கையை பிடித்திழுத்துக் கொண்டு பாட்டி வீட்டினுள் நுழைந்தாள் .

பாட்டி சந்தோசமாக பேத்தியை ஆசீர்வதித்து தலையணைக்கடியில் இருந்த சிறிய பெட்டியிலிருந்து ஒரு இரட்டை வட சங்கிலியை எடுத்து திவ்யாவின் கழுத்தில் போட்டார் .தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்

.

பிறகு விருந்தினர்கள் ஒவ்வொருவராய் திருநீறு பூசி திவ்யாவை ஆசீர்வதித்தனர் .

மருமகளுக்கான சீர்வரிசை தட்டை கொடுக்கும் போது மீராவையும் அழைத்து அவளோடு சேர்ந்து கொடுத்தான் நந்தகுமார் .மிரணாளினி முகம் கருப்பதை திருப்தியாக ஓரக் கண்ணால் பார்த்தாள் மீரா .

பிறகு சாப்பாட்டு பந்தி .குனிந்து குனிந்து பரிமாறி இடுப்பு வலித்தது மீராவிற்கு .சசிகுமாரும் , குமரேசனும் , பிரவீணாவும் சேர்ந்து பரிமாறினாலும் மீராவால் சமாளிக்க முடயவில்லை .

" நந்துவை கூப்பிட்டு பரிமாற சொல்லிவிட்டு ...நீ கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடும்மா மீரா ..." அவளது அசந்த தோற்றத்தை பார்த்துவிட்டு சொன்னாள் பிரவீணா .

சரியென்று விட்டு ...வீடு முழுவதும் நந்தகுமாரை தேடினாள் .கண்ணில் படவில்லை .திடீரென ஒன்று தோன்ற மிருணாளினியை தேட அவளும் கண்ணில் படவில்லை .

ரயில் ஓடும் நெஞ்சத்துடன் பின்பக்கம் பார்த்துவிட்டு காணாமல் உள்ளே திரும்பியவள் ..திடீரென ஓரமாக இருந்த மொட்டை மாடி படிகளை பார்த்துவிட்டு தயக்கத்துடன் அதில் ஏறினாள் .

https://telegram.me/aedahamlibrary

அங்கே ...மொட்டை மாடியில் ஒருவரையொருவர் அணைத்தபடி நின்றிருந்தனர் நந்தகுமாரும் , மிருணாளினியும் .

## 20

சிவப்பு வெல்வெட் பாப்பாத்தி பூச்சியாய்
கையாள்கிறாய் என்னை ,
கண்ணன் கை வெண்ணை உருண்டையாய்
நெகிழ்கிறேன் நான் .

கதவை திறந்த அன்பரசி மகளை பார்த்ததும் " வாம்மா மீரா .நானே

போன் பண்ணி உன்னை கூப்பிடலாம்னு நினைத்தேன் .நீயே வந்துவிட்டாய் ..." சந்தோசமாக வரவேற்றாள் .

" எதற்கும்மா ...எதுவும் விசயம் இருக்கிறதா ..? " சோபாவில் அமர்ந்தபடி கேட்டாள் .

" ஒண்ணுமில்லைடா ...நேற்று ஒரு இடத்தில் நில்லாமல் ஓடி ஓடி வேலை பார்த்துக் கொண்டிருந்தாயே .இங்கே நம் வீட்டிற்கு வந்தால் கொஞ்சநேரம் ஓய்வெடுப்பாயே என்றுதான் ..."

மீரா அம்மாவின் மடியில் தலைவைத்து சோபாவில் காலை

நீட்டிக்கொண்டாள் .அவள் தலையை வருடியபடி ...

" என்னடா ரொம்ப டயர்டா இருக்கா ...?"என்றாள் .

அசதி உடம்பிற்கு இல்லையம்மா .மனதிற்கு ...தனக்குள் சொல்லிக் கொண்ட மீராவின் மனதில் நந்தகுமாரும் , மிருணாளினியும் அணைத்து நின்ற தோற்றம் வர ..சட்டென அவளையறியாமலேயே உடல் தூக்கிப் போட்டது .

" மீரா ..என்னடாம்மா செய்கிறது ...? " அன்பரசி கவலையோடு அவள் நெற்றியை தொட்டு பார்த்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" ஒன்றுமில்லையம்மா .நீங்கள் சொன்னதுபோல் வேலை செய்த அலுப்புதான் .நான் உள்ளே போய் படுத்து கொஞ்சநேரம் தூங்குகிறேன் .அப்பாவும் , தம்பியும் வந்தும் என்னை எழுப்புங்கள் ...." பெட்ரூமினுள் போய் கட்டிலில் படுத்து கண்களை மூடிக்கொண்டாள் .

விழாக்கால கோலங்களையெல்லாம் வீட்டில் சரி செய்துவிட்டு மதிய உணவு வேலை முடிந்த்தும் சுந்தரியிடம் கேட்டு அம்மா வீட்டிற்கு வந்துவிட்டாள் .

அந்த வீட்டிலிருந்து வெளியேறியதும்தான் அவள் சுவாசம் சீரானாற் போலிருந்த்து .கீழே வீடு நிறைய உறவினர்கள் இருக்க மொட்டை மாடி அரை இருளில் அணைத்தபடி நின்ற அந்த ஜோடிகளின் தோற்றம் இப்போதும் அவளை கொதிக்க வைத்தது .

அவர்களை அப்படியே விட்டு வந்திருக்க கூடாது .அங்கேயே எல்லோரையும் கூட்டிவந்து காண்பித்திருக்க வேண்டும் ...என நினைத்து விட்டு ...சே ...சே குடும்ப மானம் என்னாவது ...என நினைத்துக்கொண்டாள் .

பிறகு ..பெரிய குடும்பம் ..எனக்காக பேசாத ...செய்யாத குடும்பம் இவர்களுக்காக நான் ஏன் பார்க்க வேண்டும் ...? ..முன்னுக்கு பின் முரணாக யோசனைகள் ஓடியபடி இருந்த போது ...

" இந்த காபியை கொஞ்சம் சூடாக குடித்துவிட்டு படுத்துக்கொள்ளம்மா ...." அம்மாவை மறுக்க முடியாமல் காபியை விழுங்கி வைத்தாள் .

" உன்னை கூப்பிட மாப்பிள்ளை எத்தனை மணிக்கு வருவார் ...? "

போகற போக்கில் அன்பரசி கேட்டு செல்ல மீராவிற்கு திக்கென்றது .

அவன் வருவானா ...? மீராவிற்கென்னவோ வரமாட்டான் என்றுதான் தோன்றியது .அவன்தான் அந்த மிருணாளினி மயக்கத்தில் இருக்கிறானே .விழா முடிந்து எல்லோரும் போகும் வரை அவர்கள் மாமன் வீட்டினர் பின்தானே சுற்றிக் கொண்டிருந்தான் .வாசல் வரை போய் கையசைத்து அவர்களை அனுப்பிவிட்டு வந்த பிறகுதானே வீட்டினுள் இருந்த மற்றவர்கள் கண்ணுக்கு தெரிந்தனர் ...

அவள் நினைவில் மூழ்கியிருப்பவன் என்னை எப்படி கூப்பிட வருவான் .நல்லவேளை தொலைந்தாள் என இருப்பான் .ஒரு வேளை வந்தாலும் அவன் அம்மா விற்காக வருவான் .நான் போகப்போவதில்லை .வரமாட்டேன் என்று சொல்லிவிடுவேன் .அவன் அம்மாவிற்கு என்ன பதில் சொல்கிறானென பார்ப்போம் ....

https://telegram.me/aedahamlibrary

விழிகளை மூடியபடி தனக்குள் புலம்பியபடி இருந்தவள் கண்கள் சொருக தூங்கிப் போனாள் .

மென்மையாய் மீராவின் நெற்றியை ஒரு கை வருட " இன்னும் கொஞ்சநேரம் தூங்குறேன்மா ப்ளீஸ் .." என்றபடி அந்த கைகளை இழுத்து தனது கழுத்திற்குள் புதைத்துக் கொண்டு தூக்கத்தை தொடர்ந்தாள் .

அம்மாவின் கை இவ்வளவு கடினமாக இருக்காதே ...எனத் தோன்ற வேகமாக கண்களை திறந்தவளின் பார்வை முதலில் மங்கலாக இருந்த்து .

எதிர் தெரிந்தது அவன்தானா ..? அம்மா வீட்டிற்கு தானே வந்தோம் .இல்லை மாமியார் வீட்டில்தான் இருக்கிறோமா ....? குழப்பத்துடன் சோம்பலாய் கண்ணிமைகளை தேய்த்தாள் .

" நான்தான் மீரா .என்னடா ரொம்ப டயர்டாக இருக்கிறதா ..? "

ஆதரவாக ஒலித்த குரல் நந்தகுமாருடையதேதான் .

அவசரமாக தன் கழுத்தை வருடியபடியிருந்த அவன் கைகளை தட்டியவள் வேகமாக எழுந்தாள் .

" ஏன்டா ...படுத்திரு கொஞ்சநேரம் ...." அவள் தோள்களை பற்றி படுக்க வைத்தான் .

" அத்தை அனுப்பி வைத்தார்களா ...? " கண்களை மூடிக்கொண்டு கேட்டாள் .

" ஆமாம் ...அம்மாதான் உன்னை கூட்டி வர சொன்னார்கள் ..."

அதானே நீயாக ஏன் வரப்போகிறாய் ....கண்ணை திறக்காமலேயே

நினைத்துக் கொண்டாள் .

" பரபரவென்று இவ்வளவு வேலை செய்து அவளுக்கு பழக்கமில்லை தம்பி .அதுதான் அசந்துவிட்டாள் ...." டிபன் தட்டோடு வந்தாள் அன்பரசி .

" ஓ...வேலைக்கு ஆட்களை ஏற்பாடு செய்திருக்க வேண்டும் .திடீரென்று வந்த விசேசமென்பதால் ஒன்றும் ஓடவில்லை ...."

" பரவாயில்லை .சாப்பாடெல்லாம்தான் ஹோட்டலில் சொல்லி விட்டீர்களே ...வீடென்றால் இது போல் திடீர் வேலைகள் இருக்கத்தானே செய்யும் .இரண்டுநாள் மீரா இங்கேயிருந்தால் கொஞ்சம் சரியாகிவிடுவாள் ..." நாசூக்காக தனது எண்ணத்தை மருமகனிடம் கூறிவிட்டு சென்றாள் .

" மீரா ரொம்ப அசதியாக இருக்கிறாயா ...? ஓய்வெடுக்க போகிறாயா ...? "

கண்களை திறக்காமலேயே " ஆமாம் ..." என்றாள் .

" ஆனால் ..நான் உன்னுடன் முக்கியமான விசயம் பேசவேண்டுமே .நம் வீட்டிற்கு வருகிறாயா ..அங்கேயே உனக்கு அதிக வேலையில்லாமல் பார்த்துக்கொள்கிறேன் ...," நந்தகுமாரின் குரல் மிக அருகே கேட்க கண்களை திறந்து பார்த்த மீரா திகைத்தாள் .

கட்டிலின் அருகே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தவன் இப்போது அவளுக்கருகே கட்டிலில் அமர்ந்திருந்தான் .அவளுக்கு இருபுறமும் தன் கைகளை கட்டிலில் ஊன்றியவன் அவள் அருகே குனிந்து ...

" வருகிறாயா மீரா ...? " என்றான் .குரலில் ஏதோ ஒன்று ...இதுவரை மீரா அறியாத ஒன்று ...மீரா விழிகளை அகற்றி விழித்தாள் .

" பேசும் விழிகள் மீரா உனக்கு .நீ வாயே திறக்க வேண்டியதில்லை .உன் கண்களே பாதி வேலையை செய்துவிடுகிறது ..." ஆட்காட்டி விரலை நீட்டி அவள் கண்ணிமைகளை மெல்ல வருடினான் .

மீரா திணறலுடன் அவனை பார்த்த போது அவன் குனிந்தான் .அவளது கன்னங்களை குறி வைத்து முன்னேறிய அவனது இதழ்களை கடைசி நேரத்தில் தடுத்து நிறுத்தினாள் .

" நான் இரண்டு நாட்கள் இருந்துவிட்டுத்தான் வரப்போகிறேன் ..." முகத்தை திருப்பிக்கொண்டான் .

" ஓ..." என நிமிர்ந்தவன் தனது ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு எழுந்து நாற்காலியில் அமர்ந்தான் .

காபி கொண்டு வந்த அன்பரசியிடம் " மீரா இரண்டு நாட்கள் ரெஸ்ட் எடுக்கட்டும் அத்தை .நாளை மறுநாள் நானே வந்து அழைத்து செல்கிறேன் .தயாராக இரு மீரா ..." அழுத்தமான குறிப்பு கொடுத்துவிட்டு வெளியேறினான் .

இவன் ...இப்போது என்ன செய்ய வந்தான் ...? எழுந்து அமர்ந்து யோசித்தாள் மீரா .முத்தமிட வந்தானா ...என்னையா ...எப்படி ....ஆனால் ஏன் ...?

முதல்நாள்தான் முழுவதுமாக அவனை அணைத்து நின்றபோதும் முத்தமிட்ட போதும் சிறிதும் நெகிழாமல் நின்றவன் , இரவு ...அவன் காதலியை அணைத்து நெகிழ்ந்து நின்றவன் இப்போது எப்படி ...என்னிடம் இப்படி ...?

மீராவிற்கு தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்த்து .மண்டையை தட்டி ..தட்டி யோசித்து அவள் முடிவு செய்த்து ...இவனுக்கு அவன் அம்மா சொன்னதை நடத்தியே ஆகவேண்டும் .எந்த வழியிலாவது என்னை அழைத்து சென்று ஆகவேண்டும் ...அதற்குத்தான் இந்த அருகாமையும் , கொஞ்சலும் ....

அப்படியா நான் கைபொம்மையாகி விட்டேன்..? .பொங்கிய கண்களை

தன் வீட்டினரிடம் காட்டாமல் இருக்க மிகவும் சிரம்ப்பட்டாள் மீரா .

ஒரு வாரத்திற்காவது உன் வீட்டு பக்கம் திரும்புகிறேனா பார்

...மனதிற்குள் கணவனை கறுவிக்கொண்டாள் .

ஆனால் அந்த நினைப்பிற்கு எதிராக மறுநாளே மீரா அங்கே போகும் நிலைமை வந்த்து .

21

வரிகளினாலே எனை வளைக்க
வாள் தீட்ட  வேண்டாமடா வசீகரா
வாசல் கடக்கையில் வீசும்
ஓர விழிப் பார்வை போதும்
உன் பல்லிடுக்கில் எழுத்துக்களாய்
வழிய ஆரம்பித்துவிடுவேன்.

நந்தகுமார் போன ஒரு மணிநேரத்தில் மீராவிற்கு போன் வந்துவிட்டது .சுந்தரியிடமிருந்து ....

https://telegram.me/aedahamlibrary

" என்னாச்சு ...உடம்பு ரொம்ப முடியலையா ...? "

" இல்லை அத்தை ...லேசான உடல் வலிதான் ...."

" அதற்கு இரண்டுநாள் எதற்கு ...? "

இவனை ....அப்படியே போய் அம்மாவிடம் ஒப்பிக்க வேண்டுமா ...? பற்களை கடித்தாள் மீரா .

என் அம்மா வீட்டீல் கூட ஒருநாள் தங்க எனக்கு உரிமையில்லையா ...அலறிய மனதை அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தாள் .

" சரி ...சரி ...காலாகாலத்தில் வரப்பார் ...." போனை வைத்துவிட்டாள் சுந்தரி .

அம்மாவும் , மகனும் ரொம்பத்தான் பண்ணுகிறார்கள் .இருக்கட்டும் ஒரு வாரம் கழித்துத்தான் போகவேண்டும் துரித முடிவென்றை எடுத்துக்கொண்டாள் .

அன்று இரவே திவ்யாவிடமிருந்து போன் .பிரவீணாவும் , அவளும் பதினோரு நாள் கணக்கிற்கு அங்கேதான் தங்கியிருக்க முடிவு

செய்யப்பட்டிருந்த்து .முகத்தை சுளித்தபடி குமரேசன் மட்டும் கிளம்பி போயிருந்தான் .

" அத்தை நீங்கள் இல்லாமல் போரடிக்கிறது .சீக்கிரம் வாங்க அத்தை ...," சிணுங்கினாள் .

நாளையே வருகிறேன் என மீரா சொல்லும் வரை அவள் போனை வைக்கவில்லை .

பிறகு அவளிடமிருந்து போனை வாங்கி பிரவீணா வேறு .எப்போது வருகிறாளென்ற விசாரணை .

அரைமணி நேரத்தில் சசிகுமார் ..." அண்ணி என்னதிது சொல்லாமல் கொள்ளாமல் இப்படி எஸ்ஸாயிட்டீங்க ...? " என்றான் .

" தப்பிச்சி வந்துட்டேன் பார்த்தீங்களா ...? " உள்ளே உண்மை வைத்து வெளிப்பேச்சில் விளையாட்டு காட்டினாள் .

" ம் ...நீங்க லக்கி அண்ணி .என்னாலெல்லாம் தப்பிக்க முடியுதா ....? என் தலையெழுத்து காலம் பூராம் இதே வீடுதான்னு இருக்கு பாருங்க ..." அலுத்துக்கொண்டான் .

https://telegram.me/aedahamlibrary

" வர்றேன் ...வந்து அத்தைகிட்ட சொல்றேன் ...," மிரட்டினாள் .

" அப்போ  நாளைக்கே வர்றேங்கிறீங்க ...? "

" என்ன ...நாளைக்கா ...? "

" ஆமாண்ணி ...நாளைக்கே ...." உறுதியாக்கிவிட்டு போனை வைத்தான் .

" நம்ம மீரா வந்து நான்கு மணிரேரம் ஆகவில்லை .அதற்குள் அவளுக்கு அங்கே அழைப்பை பார்த்தீர்களா ...? " அன்பரசி பெருமையாக கூறினாள் .

" என் பொண்ணாச்சே ...எல்லோரும் அவளை தேடத்தான் செய்வாங்க ...." திருக்குமரன் மீசையை நீவிக்கொண்டார் .

அந்த வீட்டில் யாருக்கும் என் தேவையில்லை ...என் நினைப்பில்லை நான் எதற்கு அங்கிருக்க வேண்டுமென நினைத்தவளுக்கு இந்த வரவேற்றல்  படையெடுப்பு ஆச்சரியத்தை அளித்தது .

இதையெல்லாம் விட கூடுதல் ஆச்சரியம் மறுநாள் அவளுக்கிருந்த்து .சசிகுமாரின் போனிலிருந்து பாட்டி அவளை அழைத்தார் .

" பாட்டி ...நீங்கள் ...? "

" சசிகிட்ட உனக்கு போன் போட்டு தரச்சொல்லி கேட்டு வாங்கி பேசுகிறேன் ....,"

" சசிதான் பேச சொன்னாரா பாட்டி ...? "

யார் பாட்டியை தூண்டிவிட்டிருப்பார்கள் என தெரிந்து கொள்ள கேட்டாள் .

" எனக்கு யாரும் செல்ல வேண்டியதில்லை .சசி கூட பக்கத்தில் இல்லை .அனுப்பிவிட்டேன் .சொல்லு என்ன விசயம் ...? "

பாட்டியின் நேரடி கேள்வியில் அதிர்ந்தாள் .

" எ...என்ன பாட்டி ...? "

" அந்த மிருணாளினி ஏதாவது சொன்னாளா ...? " அடுத்த அதிரடி .

" அ...அது வந்து ..." ஒப்புதலுக்கும் , மறுத்தலுக்குமிடையே திணறினாள் மீரா .

" அவள் எதை சொன்னாலும் நம்பாதே ..."

காதை வேண்டுமானால் நம்பாமலிருக்கலாம் .ஆனால் கண்களை ...??? அது பார்த்ததை ...கண்ணுக்குள்ளேயே உறைந்து நின்றிருக்கும் அந்த காட்சியை ....

" நீ நாளை கிளம்பி இங்கே வா .உன்னுடன் நிறைய பேசவேண்டும் ...."

" அ...அத்தையை பற்றியா பாட்டி ...,? " இது மீராவாக ஊகித்திருந்த்து .பாட்டி தன்னிடம் பேச விரும்புவது சுந்தரி பற்றிய செய்திகள்தான் ...அதாவது மாமியாரை பற்றி மருமகளிடம் புகார் ....என்றுதான் எண்ணியிருந்தாள் .

" அவளை பேச என்ன இருக்கு ...? உன்னைத்தான் ...உன் வாழ்க்கைதான் ...அத்தோடு ....பிரவீணா .அவளை பற்றியும் பேச வேண்டும் .சீக்கிரம் வா ..." உத்தரவு போல் கூறிவிட்டு போனை வைத்துவிட்டாள் .

பிரவீணா பற்றியா ...என்னவாக இருக்கும் ...? அதன் பிறகு மீராவிற்கு அம்மா வீட்டில் இருப்பு கொள்ளவில்லை .கிளம்பிவிட்டாள் .

மீரா போன போது .பிரவீணா வெளியே போயிருந்தாள் .டிவி பார்த்துக் கொண்டிருந்த திவ்யா ஓடி வந்து அணைத்து வரவேற்றாள் . சுந்தரி மதிய சமையலில் இருந்தாள்...

" நான் செய்கிறேன் அத்தை ..." கரண்டியை வாங்க போனவளிடம் ...

" நீ போய் படுத்திரு .நானே முடித்து விடுகிறேன் " என்றாள் .

" அ..அந்த அளவு உடம்பு முடியாமல் இல்லை அத்தை .நான் நன்றாக இருக்கிறேன் ..."

" அதனாலென்ன ...கொஞ்சநேரம் படுத்திரு ..." வேலையை தொடர்ந்தாள் .

" சாரி அத்தை ...உடனே கிளம்பி அம்மா வீட்டற்கு போனதற்கு ...." சுந்தரிக்கு அதில் கோபமென நினைத்தால் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" அம்மா வீட்டிற்கு போகும் உரிமையை ஒரு பெண் எந்த நேரத்திலும் விட்டுக் கொடுக்க கூடாது .நான்தான் அதை ஆரம்பத்தில் விட்டுக் கொடுத்து விட்டு இப்போது வரை அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறேன் ◌நீயும் அதே தவறை செய்யாதே ...."

இப்போது இவர்கள் என்னதான் சொல்ல வருகிறார்கள் ..? மீராவிறகு அலுப்பாக இருந்த்து .இப்படி மண்டையை உடைப்பதற்கு போய் படுத்துக் கொள்வோம் என எண்ணி போய் படுத்துக்கொண்டாள் .

பாட்டி இந்நேரம் தூங்குவார் .எழுந்த்தும் பேசலாம் நினைத்தபடி தூங்கிப் போனாள் .

எழுந்த்தும் பாட்டிக்கு சாப்பாடு கொடுக்கும் வேலையை தான் வாங்கிக்கொண்டு பாட்டியிடம் போனாள் .

" அந்த மிருணாளினி சொன்ன எதையும் நம்பாதே ...." பாட்டி முதலில் இதைத்தான் சொன்னார் .

" அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை பாட்டி ..."

" மரியாதையெல்லாம் அவளுக்கு வேண்டாம் .அவள் ...இவளென்றே சொல்லு .ஒன்றும் சொல்லாமலிருந்திருக்க மாட்டாள்

.சொல்லியிருப்பாள் .சாதாரண விசயத்தையும் பெரிதாக சொல்பவள் அவள் .எப்படியோ அவளிடமிருந்த இந்த குடும்பத்தை காப்பாற்றி விட்டேன் ..."

மீராவின் நினைவுகளில் அன்றைய அவர்களின் நெருங்கிய தோற்றம் வந்து நின்றது .தலையை உலுக்கி அழித்தாள் .உங்கள் பேரனல்லாவா அவளை விலக்கி விட்டதாக சொல்லவேண்டுமென நினைத்துக்கொண்டாள் .

" அவளை விடு ...அவளெல்லாம் நமக்கு முக்கியமில்லை .நான் பிரவீணாவை பற்றி சொல்லத்தான் ....இதை பேச இந்த வீட்டில் நீ மட்டுமதான் சரியான ஆளாக தோன்றினாய் ...."

" சொல்லுங்க பாட்டி .அண்ணிக்கு என்ன ...? "

" அவளுக்கு ஏதோ பிரச்சனை இருக்கறது .கொஞ்சநாட்களாக அவள் சரியில்லை .இதை இந்த வீட்டில் யாரும் உணரவில்லை .அவளிடமே துருவிப்பார்த்துவிட்டேன் ்அவள் வாயை திறக்க மாட்டேனென்கிறாள் .குருகிட்ட விவரம் சரியா தெரியாமல் சொல்ல முடியாது .அவன் ரொம்ப உணர்ச்சி வசப்படுவான்,மாளவியும் , சசியும் சின்ன பிள்ளைங்க ...

" நந்து புரிந்து கொள்வான் .ஆனாலும் இந்த விசயத்தில் ஒரு பெண்ணாக இருந்தால் ...பிரவீணாவை புரிந்து கொள்ள எளிதாக இருக்குமென்று நினைக்கிறேன் .

" சுந்தரி புரிந்து கொள்வாள்தான் .ஆனால் ...பாவம் மகளுக்கு பிரச்சினையென்றால் ரொம்ப மனம் நொந்து போவாள் .மெல்லவே அவளுக்கு தெரியட்டுமென்று நினைக்கிறேன் ...."

இவர்களுக்கு ஆகாத மருமகளென்று தனது மாமியாரை நினைத்திருந்த மீரா பாட்டியின் கரிசனத்தை கேட்டு ஆச்சரியமானாள் .

" நீ மெல்ல பிரவீணாகிட்ட பேசி ஏதாவது சொல்றாளான்னு பாரேன் .இந்தப் பொண்ணு திவ்யா ....ஏன் தன் வீட்டை விட்டு பாட்டி வீட்டிற்கு ஓடி வந்தாள் ...? அங்கே ஏதோ ...குமரேசனிடம் பிரச்சினை இருக்கிறது ..."

மீராவிற்கு தங்கள் திருமணத்திற்கு முன்பு குமரேசனை சந்தித்த சூழ்நிலை நினைவு வந்தது .அவனை பார்த்த முதல் நாளே அந்த நினைவில் குழம்பிய போதும் , பின்பு வீட்டு மாப்பிள்ளையாக அவனது

நடவடிக்கையில் முன்தின நிகழ்வுகளை மறந்திருந்தாள் .

இப்போது அதனை கொஞ்சம் கிளறி பார்த்தால் என்ன ...என தோன்றியது .பாட்டியிடம் சொல்ல வாயெடுத்து விட்டு ...இல்லை வேண்டாம் ...யாரை  பற்றியும் முழுதாக அறியும் முன்பு நாமாக எதுவும் சொல்லக்கூடாது ...என நினைத்துக்கொண்டாள் .

பிரவீணா வந்தும் அவளிடம் மெல்ல பேச்சு கொடுத்து பார்த்தாள் .அண்ணன் ரொம்ப கோபக்கார்ரோ ....நேற்று ரொம்ப கோபமாக இருந்தாரே ...சாதாரணமாக இப்படித்தான் கோபித்துக்கொள்வாரா ...? என மெல்ல நோட்டம் விட்டு பார்த்தாள் .

வேறு பேச்சுக்களில் கலகலவென பேசியவள் அவள் கணவன் பேச்சு வந்தும்  வாயில் பசை போட்டு ஒட்டியது போல் மாறிப்போனாள் . அவளது அநத மாற்றமே அவளுக்கிருந்த பிரச்சினையை கோடிட்டு சொல்லியது .

இதனை யாரிடம் பகிர்ந்து கொள்ள ...? வேறு யாரும் இல்லாமல் கணவனிடமே சொல்ல எண்ணி காத்திருந்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

நந்தகுமாரின் பைக் சத்தம் தெருவில் கேட்டதுமே " போய் கதவை திற ..." சுந்தரி டிவியில் கண்ணை பதித்தபடி சொன்னாள் .

மீரா வாசல் விளக்கை போட்டுவிட்டு கதவை திறந்தும் மெல்லிய விசில் சத்தமொன்று காதில் விழுந்த்து .

" ஹேய் மீரா ...வந்துட்டியா நீ ...? "

" ஏன் வந்தேன்னு நினைக்கிறீங்களா ..? " அவன் கை பையை வாங்கியபடி கேட்டாள் .

" ஏன் இவ்வளவு லேட்டா வந்தேன்னு நினைக்கிறேன் ..." அவள் கைகளில் பையை கொடுத்துவிட்டு பையோடு கையை சேர்த்து இழுத்தான் .

" ப்ச் , பையை விடுங்க .அதென்ன சின்னபசங்க மாதிரி விசில் அடிச்சிட்டு ...."

" எல்லாம் ஒரு உற்சாகம்தான் ...விளக்கை போட்டதும் கண் கூசியது .ஒரு நொடி இமை மூடி திறக்கும் போது நீ தேவதை போல் முன்னால் நிற்கிறாய் .விசில் தானாக வந்துவிட்டது ...,"

இவனுக்கு என்ன ஆனது ...? இப்படியெல்லாம் பேச மாட்டானே ...முகத்தை நிமிர்ந்து பார்க்கவே மீட்டிங் போட்டு முடிவெடுக்கலாமா ....என யோசிப்பவன் .இப்போதென்னவோ ஒரு காதல் கணவன் போல் இது போன்ற பேச்சு ....

மீராவின் குழப்பத்திற்கான விடையை அன்று இரவே நந்தகுமார் சொன்னான் .

" போதும் மீரா ..நாம் தள்ளியிருந்த்து . இனி திருமணம் முடிந்த இயல்பான கணவன் , மனைவி போல் நாமும் நம் வாழ்க்கையை இயற்கையாக தொடங்குவோம் ....ம் ...சரியா ...? " குரல் குழைந்து வழிய கண் நிறைந்த வேட்கையோடு அவளை நெருங்கினான் கணவனாக .

தன்னை சுற்றி உலகம் தட்டாமாலை சுற்றுவதாக உணர்ந்தாள் மீரா .

22

https://telegram.me/aedahamlibrary

பிடறிக்குள் புதைந்த பெருவிரல்
சொல்கிறது
உன் பேரன்பின் பேரிரைச்சலை ,
சத்தங்களற்ற அச்சந்திர கணங்களில்
சகடையாய் உருளுது பேதையின் பெண்மை.

முதல் நாள் திவ்யாவின் பங்சன் முடிந்த்தும் வெற்றிலை போட்டுக்கொண்டு வம்பை ஆரம்பித்தாள் உறவுப் பெண் ஒருத்தி ....

" என்ன சுந்தரி ...உன் மருமகள் பம்பரமா சுத்தி வேலை செய்யுறாளே .கல்யாணம் முடிச்சு மூணு மாசமாகலை , அதுக்குள்ளே நல்லா டிரெயினிங் கொடுத்திட்ட போல ...."

அந்தப்பெண்ணின் மருமகள் எருமைக்கு சொந்தக்காரி போல ....டிவியை விட்டு நகராமல் நடுவீட்டில் உட்கார்ந்திருக்கும் ரகம் . சிட்டாக பறந்து வேலை செய்து கொண்டிருந்த மீராவை பார்த்ததும் சுந்தரி மேல் பொறாமை அப்பெண்ணிற்கு ...

" நானா ...? நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை அக்கா

.சொல்லாமலேயே புரிந்து செய்வாள் என் மருமகள் ..." சுந்தரியின் குரலில் பெருமிதம் .

," ம் ....உன் அண்ணன் மகள் மிருணாளினியை முடித்திருந்தால் இதை விட சுறுசுறுப்பாப செய்திருப்பாள் .சொந்தமில்லையா ....ஓடி ஒடி செய்தாலும் இவள் அந்நியம்தானே ...அது சரி ...மூணு மாசமாச்சே ஏதும் விசேச செய்தி சொன்னாளா உன் மருமகள் ...? "

" இ...இல்லை ..."

" ஏன் ...புருசன் பொண்டாட்டிக்கிடையே எந்த பிரச்சினையும் இல்லையே ...."

" அ...அதெல்லாம் ...இல்லை ...."

" இல்லைன்னா ....பின்னே ஏன் லேட்டாகுது .எதுக்கும் உன் மருமகளை டாக்டர்கிட்ட கூட்டிட்டு போய் செக் பண்ணிடு .இதையெல்லாம் ஆரம்பத்திலேயே பார்த்திடனும் ...." ஏதோ தன்னால் முடிந்த நெருஞ்சியை வீசி விட்டு ஆசுவாசமாய் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவ தொடங்கினாள் அந்த பெண் .

" அதெல்லாம் ஒண்ணுமில்லக்கா ....அடுத்து நாம் சந்திக்கும் போது நான் நிச்சயம் உங்களுக்கு நல்ல செய்தி சொல்லுவேன் ...." சுந்தரியின் பார்வை சாப்பிட்ட இடத்தை சுத்தம் செய்து கொண்டிருந்த மீராவிடமும் , ஹோட்டல் பாத்திரங்களை ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்த நந்தகுமாரிடமும் இருந்த்து .

https://telegram.me/aedahamlibrary

சற்று முன் கண்ட மொட்டை மாடி காட்சியில் உடல் கொதித்துக் கொண்டிருந்த மீராவிற்கு இந்த பேச்சு மிகுந்த அசூசையாக இருக்க வேகமாக அந்த இடத்தை விட்டு நகன்றாள் .

ஆக , இவன் அம்மாவின் அந்த வாக்குறுதிக்காக இதோ இப்போது இப்படி வந்து நிற்கிறான் .இல்லையென்றால் முன்தினம் வரை கொஞ்ச காலம் போகட்டும் என்றவன் ...மொட்டை மாடியில் பழைய காதலியை அணைத்து நின்றவன் ...இப்போது மனைவியுடன் கட்டிக் குலாவ எப்படி வருவான் ...?

ஆழ்ந்த யோசனையுடன் நின்றிருந்த மீராவின் உடலில் அனல் பறக்கும் தீப்பொறியொன்று ஊர்வது போன்றதொரு உணர்வு ...ஆனால் ஜில்லென்று நகர்ந்த்து பரவியது அந்த தீத்தீண்டல் .

மெல்ல தனை மறந்து கொண்டிருந்த மீராவின் உடல் , ஒரு அத்துமீறல் தொடுகையில் இயல்பான பெண்ணின் விழிப்புடன் மீண்டு கொண்டது .தொடுவது கணவனேயானாலும் ...முழுதும் அவனுடன் மனம் ஒன்றாத இந்த பொழுதில் தன்னை எளிதாக மீட்டுக் கொண்டாள் மீரா .

" வேண்டாம் ...விடுங்க ...."

" ஏன் ...மீரா ...? " இம்மியும் விலகும் எண்ணம் நந்தகுமாரின் குரலிலோ , உடலிலோ இல்லை .

" இ...இப்போ ...வேண்டாம் .விடுங்க ...."

" பிறகு எப்போ ....ஏற்கெனவே நிறைய நாள் பிரிந்திருந்து விட்டோம் மீரா . இன்னும் தள்ளியிருக்க முடியாது .," நந்தகுமார் தீவிரமானான் .

" நா ...நான் யோசிக்க வேண்டும் ....பிறகுதான் ...." சிரம்ப்பட்டு அவனை தள்ள முயன்றாள் .

" இப்போது என்ன யோசனை ...? " கொஞ்சம் தன் பிடியை தளர்த்திக் கொண்டு கேட்டவனின் குரலில் எரிச்சல் .

அந்த தளர்ச்சியை பயன்படுத்தி அவனை உந்தித் தள்ளிவிட்டு ஓடிப்போய் சன்னல் திண்டில் அமர்ந்து கொண்டாள் மீரா .படபடத்த தன் நெஞ்சை நீவி விட்டு தன்னை தானே சமாளித்துக் கொள்ள முயன்றாள் .

https://telegram.me/aedahamlibrary

கைகளை கட்டிக்கொண்டு அவள் செயகைகளை பார்த்தபடியே சொல்லு என்பது போல் நின்றிருந்தான் .

" நா ...நான் ...எ..எனக்கு கொஞ்சநாள் டைம் வேண்டும் ..."

" எனக்கு டைம் வேண்டியிருந்த்து போலவா ...? "

" ஏன் உங்களுக்கு மட்டும்தான் அப்படியா ...? எனக்கு அது போன்ற நேரங்கள் தேவைப்படாதா ...? "

" அதற்கு ஒரு காரணம் வேண்டுமில்லையா ...? "

காரணம் ...நந்தகுமாரின் டைம் கேட்டலுக்கு ஒரு காரணம் இருந்த்து .அது மிருணாளினி. மீராவின் டைம் கேட்டலுக்கும் அதே காரணம்தான் .ஆனால் அதை மீராவால் வெளியே சொல்ல முடியாது .

நந்தகுமார் ஆமாம் ...அப்படித்தான் ...இப்போது அம்மாவிற்காவது நாம் இல்லற வாழ்வை ஆரம்பிப்போமென்று விட்டானால் ....முதலிலேயே அப்படி ஒரு வாழ்விற்கும் தயாராக இருந்தவன்தானே அவன் ...??? எனவே ...

" காரணம் எனக்கும் இருக்கும் .அதை உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை ..." ஜன்னல் வழியே வெளியே இருளை பார்த்தாள் .

" ஓஹோ ...அப்போது காரணத்தை எனக்கு சொல்ல மாட்டாய் ...," அவளருகே வந்து சன்னலை பிடித்தபடி நின்றவனை அண்ணாந்து பார்த்து எச்சில் விழுங்கினாள் .சமனமாகி இருந்த இதயம் மீண்டும் குதிரையாக தொடங்கியிருந்த்து .எச்சில் விழுங்கினாள் .

அவள் முகத்தருகே குனிந்தான் " உன் காரணத்தை யோசித்து தயார் செய்து வை .நாளை கேட்பேன் ..அது வரை ...ம் ....குட்நைட் " போனால் போகிறது போ ...என குழந்தையை பார்க்கும் தகப்பன் பார்வையுடன் போய் படுத்துவிட்டான் .

உடனே தூங்கியும்விட்டான் .கொஞ்சமாவது சலனமிருக்கிறதா பார் ...எப்படி நிம்மதியாக தூங்குகிறான் .அது சரி மனதில் ஏக்கமோ ...எதிர்பார்ப்போ இருந்தால்தானே துக்கம் கெட ...? ஆனால் எனக்கு ஏன் தூக்கமே வந்து தொலைய மாட்டேங்குது ...புரண்டு புரண்டு படுத்து ரொம்ப நேரம் உறங்காமல் கிடந்தாள் மீரா .

" பின்னால் நிற்கும் ஸ்கூட்டி யாருடையது ..? ஓடும் நிலைமையில்தானே இருக்கிறது ...? " ஊடுறும் கணவனின் பார்வையை திசை மாற்ற , அவன் தட்டில் பரிமாறியபடி கேட்டாள் .

" அது மாளுவோடது .இப்போ சும்மாதான் இருக்கு .நல்லா ஒடுகிற கண்டிசன்தான் .ஏன்  கேட்கிறாய் ..? "

" எனக்கு வேண்டும் . ஒரு ப்ரெண்டை பார்க்க போக வேண்டும் ."

" நீ ஸ்கூட்டி ஓட்டுவாயா மீரா ...? "

" காலேஜுக்கு ஸ்கூட்டியில்தான் போனேன் ...."

ஸ்கூட்டியை வெளியே எடுத்து துடைத்து மிதித்து ஸ்டார்ட் பண்ணினான் .அவளிடம் கொடுத்து ...

" அந்த தெரு முனை வரை ஓட்டிக்கொண்டு போய் திரும்பி வா .ஹாரன் ,

ப்ரேக் எப்படியிருக்கிறதென்று சொல்லு ..." என்றான் .

மீரா தெரு முனை வரை ஓட்டிப்போய் வந்து நிறுத்தினாள் .

" ஹாரன் கொஞ்சம் சவுண்ட் கம்மியா இருக்கு.ப்ரேக் கரெக்டா இருக்கு ...." என்றபடி இறங்கியவள் அவன் பார்வையில் முகம் சிவந்தாள் . நடுத்தெருவில் வைத்துக்கொண்டு என்ன பார்வை இது ....?

" இந்த ஸ்கூட்டி உனக்கு அழகாக பொருந்தியிருக்கிறது மீரா .ஓட்டும் போது பார்க்க ரொம்ப நன்றாயிருக்கிறது ..."

" நன்றி ...மத்தியானமா ப்ரெண்டை பார்க்க போய்விட்டு வருகிறேன் ," முணுமுணுத்து விட்டு ஸ்கூட்டியை உள்ளே தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தினாள்.

" ம் ...அம்மாவிடம் சொல்லிவிட்டு போ ...."

எனக்கும் தெரியும் போடா ...சும்மா ...சும்மா ...அம்மா ....

மனதிற்குள் அவனை திட்டி தீர்த்தாள் .

https://telegram.me/aedahamlibrary

மதிய சமையலை முடித்துவிட்டு , சுந்தரியிடம் சொல்லிவிட்டு கிளம்பினாள் .

அன்று பார்த்த தெருவை யோசிக்காமலேயே கண்டுபிடிக்க முடிந்தது . அந்த வீட்டை ... வாசல் செம்பருத்தி , கதவின் பச்சை கலர் பெயின்ட் ..எதிர்ப்புறமிருந்த வேப்பமர பிள்ளையார் என யோசித்து நினைவு கூட்டினாள் .

இந்த வீடாகத்தான் இருக்கும் ...யோசனையுடனேயே அந்த பிள்ளையார் கோவிலின் பின்னே மறைந்து நின்றாள் .அரை மணி நேரமானது .தப்பான விலாசத்தில் நிற்கிறோமோ ...என்ற அவளது குழப்பத்தை ....இல்லை என சொன்னபடி பைக்கில் வந்தான் குமரேசன் .

சரியாக அந்த வீட்டின் முன் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே போய்விட்டான் .மதிய உணவிற்காக அவன் இந்நேரம் வருவான் என்று கணித்து ...எதிர்பார்த்துதான் வந்திருந்தாள் மீரா .

ஆனாலும் நெஞ்சம் படபடத்தது .இதுவரைதான் யோசித்திருந்தாள் .இனி என்ன செய்வது ...? போய் கதவை தட்டலாமா ...? அதற்கு மீராவிற்கு தைரியம் வரவில்லை .

தொய்ந்து போன மனதுடன் ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.கண்ணால் பார்த்தாயிற்று ...யாரிடம் சொல்ல ...? என்ன நடவடிக்கை எடுக்க ...? கை ஸ்கூட்டியை ஓட்ட நினைவுகள் குழம்பிக்கொண்டிருந்தன.

" மீரா ...." பின்னால் அழைத்த சத்தத்திற்கு ஸ்கூட்டியை ஸ்லோ செய்து நிறுத்தினாள் .

நந்தகுமார்தான் . அங்கிருந்த மெக்கானிக் ஷாப் வாசலில் நின்றிருந்தான் .

" இந்தப்பக்கம்தான் உன் ப்ரெட்ண் வீடு இருக்கிறதா ...? " பக்கத்தில் வந்தான் .

" ஆமாம் .நீங்கள் இங்கே எங்கே ...? "

" இந்தப் பக்கம் ஒரு வேலையாக வந்தேன் .என் பைக் பங்ஞர் ஆகிவிட்டது .பங்ஞர் பார்த்துக் கொண்டிருக்கிறேன் .கொஞ்சம் வெயில் குறையவும் கிளம்பியிருக்கலாமே ...பார் முகமெல்லாம் கருத்து சோர்ந்து தெரிகிறாய் ...." அக்கறையாய் பார்த்தான் .

https://telegram.me/aedahamlibrary

என் சோர்வுக்கு காரணம் வெயில்ல்ல...மனதில் நினைத்தபடி பேசாமல் நின்றாள் மீரா .

" சரி ...வா என்னை நம் கடையில் இறக்கி விட்டு விடு ..." சட்டென அவள் ஸ்கூட்டியின் பின்னால் ஏறி உட்கார்ந்து கொண்டான் .

" அண்ணே பங்ஞர் பார்த்துட்டு வண்டியை என் கடையில் கொண்டு வந்து விட்டுடுங்க ...ம் வண்டியை எடு மீரா...."

" நீங்க ஓட்டுங்களேன் .நான் பின்னால் உட்கார்ந்துக்கிறேன் ..." மீரா திணறினாள் .

" ம்ஹூம் ..நீ வண்டி ஓட்டுவதை நான் பார்க்கவேண்டும் .ம் ஸ்டார்ட் பண்ணு "

பின்கழுத்தை  வருடும் அவன் மூச்சுக்காற்று மிக மிக சூடாக இருக்க இந்த அனலடிக்கும் வெயில் காரணமோ ...?இந்த சுடு காற்றுக்கு குளிர் கண்டாற் போல் உடம்பு ஏன் நடுங்குகிறது ....? நடுங்கும் கைகளை கட்டுப்படுத்த முயன்றபடி ஆக்ஸிலேட்டரை திருகினாள் மீரா .

# 23

விறுவிறுப்பும்
சுறுசுறுப்பும்
மதமதப்புமாக
சிலீரென்று என்னை தாக்கிவிட்டு
ஒன்றுமறியாத அன்றைய உன்னைப்போலவே ,
இதோ
இன்றைய மழை .

" அங்கே ஸ்பீட் ப்ரேக் மீரா .பார்த்து போ ..." அவள் தோள்களை பற்றி அழுத்தினான் .

" எனக்கு தெரியுது ..." பல்லைக் கடித்தாள் .

" அழகாக ஓட்டுகிறாய் மீரா .எப்போதிருந்து ஓட்டுகிறாய் ...? " குனிந்து அவள் காதிற்குள் கேட்டான் .

https://telegram.me/aedahamlibrary

பின்னங்கழுத்தை சுட்ட மூச்சு இப்போது காதில் .மீராவிற்கு உடல் கூசியது .இவன் வேண்டுமென்றே செய்கிறான் .

" பத்தாவது படிக்கும் போதிலிருந்து .கொஞ்சம் தள்ளி உட்காருங்க "

" இதற்கு மேல் தள்ளி உட்கார்ந்தால் கீழே விழுந்து விடுவேன் மீரா .."

இன்னமும் நெருங்கி அமர்ந்தான் .

பேசாமல் இருந்திருக்கலாம் ...மீரா மூச்சை பிடித்துக்கொண்டு வண்டி ஓட்டிக்கொண்டிருந்தாள் .

" இன்று சீயக்காய் தேய்த்து குளித்தாயா மீரா ...? ஜம்மென்று மணக்கிறதே ..." அவள் கூந்தலை முகர்ந்தான் .

" ஒழுங்காக உட்காரவில்லையென்றால் வண்டியை எங்கேயாவது கொண்டு போய் விட்டு விடுவேன் ..." மிரட்டினாள் .

" இதோ நேரே உட்கார்ந்துவிட்டேன் ."நல்ல பிள்ளை போல் கொஞ்ச நேரம் தள்ளியமர்ந்தான் ...

" பழைய கார் ஒன்று விலைக்கு வருகிறது மீரா .நாம் வாங்கலாமா ... ?

கார் டிரைவிங்கும் கற்றுக் கொள்கிறாயா ...? " அவன் கைகள் மீண்டும் அவள் தோள்களை வருட ஆரம்பித்தது .

" ம் ..ம் ...வாங்கலாம் ..." இவன் ஏன் இவ்வளவு குனிந்து பேசுகிறான் ...மீராவின் மனதில் வேறு படபடப்பு .

" கார் வாங்க வேண்டுமென்பது எனது ரொம்ப நாள் ஆசை மீரா .இப்போது நீ வண்டி ஓட்டுவதை பார்த்ததும் உன்னை கார் ஓட்ட வைத்து பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது . அந்தக் காருக்கு அட்வான்ஸ் கொடுத்து விட போகிறேன். பர்டிகுலர்ஸெல்லாம் முடித்து பத்து நாட்களில் வாங்கிவிடலாம் .ஓ.கே "

மீராவிற்குள் நெகிழ்ச்சி அலையடித்தது ...

" எனக்காக காரா ....? " தடுமாறி கேட்டாள் .

" எப்படியும் வாங்க வேண்டுமென்றுதான் எண்ணியிருந்தேன் மீரா .உன்னால் இப்போது சீக்கிரம் வாங்க வேண்டுமென்று தோணுகிறது .உன்னை , அம்மாவை , அக்காவை , தங்கச்சியை காரில் உட்கார வைத்து ஊரை சுற்றி வர வேண்டும் .நீ எப்போது கார் ஓட்ட கற்றுக்கொள்ள போகிறாய் ...? நானே கற்றுத் தரவா ...? "

மீரா வண்டியை நிறுத்தினாள் .நந்தகுமாரின் அக்கா அவள் மனதில் பிரவீணாவின் நினைவை கொண்டு வந்த்து .

" இப்போது உங்களுக்கு கடையில் முக்கியமான வேலை இருக்கிறதா ...? "

" லஞ்ச் டயம்தானே ...பெரிய வேலையெல்லாம் இல்லை .என்ன மீரா ...? என்ன விசயம் ...? "

" என்னோடு வாருங்கள் ..." ஸ்கூட்டியை திருப்பினாள் .

" எங்கேடா ..?? "

" நான் இன்று போன ப்ரெண்ட் வீட்டுக்கு ..."

" அங்கே நான் ....என்ன விசயம் மீரா ...? "

" சொல்கிறேன் ..."

அந்த பிள்ளையார் கோவிலின் பின்புறம் வண்டியை மறைவாக

நிறுத்திவிட்டு கோவிலினுள் மறைவாக அமர்ந்து கொண்டு தனக்கு பின்னால் கணவனை இழுத்தாள் .

" சத்தமில்லாமல் இங்கே மறைந்து உட்காருங்கள் ...." அவனை மறைத்தாற் போல் முன்னால் அமர்ந்து கொண்டாள் .

" என்னை நீ மறைக்கிறாயா ...? " சிரித்தான் .

உயரமும் , அகலமுமாக ஆகிருதியாக இருந்தவனை மெலிந்து கொடியாய் இருப்பவள் மறைக்க முயற்சித்தால் ...மலையை மறைக்க முயலும் கொடியாய் இருந்த்து அந்த தோற்றம் .

புதிராய் இருந்த மனைவியின் செய்கையை கவனித்தபடி இருந்த நந்தகுமார் இப்போதோ ...அதிர்ஷ்டமாய் வாய்த்துவிட்ட மனைவியின் அருகாமையை அனுபவித்தபடி இருந்தான் .

" அதோ அந்த எதிர்வீட்டு வாசலை கவனித்தபடி இருங்கள் ...." என்றபடி திரும்பி பார்த்தவள் , அவள் தலைபின்னலை கையில் எடுத்து வருடிக் கொண்டிருந்தவனை முறைத்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" உன் பின்னலை எண்ணிக்கொண்டிருந்தேன் மீரா .எண்ண எண்ண வந்துகொண்டேயிருக்கிறதே ..."

அவன் கையிலிருந்து பின்னலை உருவிக்கொண்டவள் " அங்கே கவனியுங்கள் ...," என்றாள் .

குனிந்து அவள் தோள்களில் தன் நாடியை வைத்துக்கொண்டான் ...

" ஒதுங்கு மீரா ...எனக்கு மறைக்கிறது ..."

" ஏங்க ...நான் முக்கியமான விசயமாக வந்திருக்கிறேன் .நீங்களென்னவென்றால் ...." வருத்தம் தொனித்த அவள் குரலை கண்டவன் , குறும்புகளை விட்டு தள்ளி அமர்ந்தான் .

" என்னடா ...சொல்லு ...." கேட்டுக் கொண்டிருக்கும் போதே அந்த வீட்டு கதவு திறந்த்து .

வெளியே வந்த குமரேசனை கண்டதும் நந்தகுமாரின் வேடிக்கைகள் துணி கொண்டு துடைத்தாற் போல் மறைந்த்து .முகம் சிறுத்தது .

தன்னை வழியனுப்ப வந்த அந்த வீட்டு பெண்ணின் கன்னத்தில் தட்டி விடை பெற்றான் குமரேசன் .

கைகளில் தலையை தாங்கி அமர்ந்து விட்ட கணவனின் தோற்றம் மீராவிற்கு கஷ்டமளித்தது .

" தேற்றிக்கொள்ளுங்கள் .மேலே ஆக வேண்டியதை யோசிப்போம் .வாங்க வீட்டிற்கு போகலாம் ..." அவன் கைகளை பிடித்து எழுப்பினாள் .

" நான் கடையில் இறங்கிக் கொள்கிறேன் .நீ வீட்டிற்கு போ மீரா ..." வண்டி அருகே வந்தவன் ...

" இப்போதும் நீதான் வண்டி ஓட்ட வேண்டும் .என்னால் ஓட்ட முடியாது ..." வறண்டு ஒலித்தது அவன் குரல் .

இப்போதும் அவன் கைகள் அவள் தோள்களை அழுந்த பற்றியிருந்த்து ஆனால் அதில் முன்பு போல் காதலோ , குறும்போ இல்லை .வெறுமை நிறைந்த வேதனை இருந்த்து .

" முடிவில்லாத பிரச்சினை என்று எதுவும் கிடையாதுங்க .தைரியமாக இருங்க .நாம் சமாளிப்போம் ...." அவனை இறக்கிவிட்டு சொன்னாள் .

அரை கவனத்துடன் தலையாட்டி கேட்டபடி படியேறி கடையினுள் சென்றவன் ...நினைத்தாற் போல் வெளியே வந்து ...

https://telegram.me/aedahamlibrary

" நீ பார்த்து போ மீரா...." என்றான் .

அன்று இரவு நந்தகுமார் வீட்டிற்கு வர ரொம்ப நேரமானது .எல்லோரும் தூங்கிய பிறகு பதினொரு மணிக்கு மேல்தான் வந்தான் .சரியாக சாப்பிடாமல் சாப்பாட்டை பிசைந்து கொண்டிருந்து விட்டு எழுந்தான் .கட்டாயப்படுத்தி மீரா கொடுத்த பாலை சுவை தெரியாமல் விழுங்கி விட்டு படுக்கையில் விழுந்தான் .

விளக்கணைத்து படுத்த பிறகும் படுக்கையில் தூங்காமல் அவன் உருண்டு கொண்டிருப்பதை அறிந்த மீராவின் மனது தவித்தது .

கடவுளே ...நேற்றுத்தானே நிம்மதியாக உறங்குகிறான் என பொறாமை பட்டேனே ...ஒரே நாளில் இப்படி அதற்கு மாறுதலாக நிகழ்ந்துவிட்டதே .என் மனதால் ஏன் அப்படி நினைத்தேன் ...?

" அலட்டாமல் தூங்குங்கள் .எல்லாம் நல்லபடியாக நடக்கும் ..." கணவனின் வேதனையை தூண்ட வேண்டாமென்றுதான் இவ்வளவு நேரம் பேசாமல் இருந்தாள் மீரா .ஆனால் இப்போது ...மனது

கேட்காமல் சொன்னாள் .

" எல்லாம் விசாரித்துவிட்டேன் மீரா .அவள் பெயர் அபர்ணா .மூன்று வருடங்களாக இவர்கள் இரண்டு பேருக்கும் பழக்கம் இருக்கிறது ..." கட்டிலில் எழுந்து அமர்ந்தான் .

" மீரா ...நான் அங்கே உன் அருகே வந்து படுத்துக்கொள்கிறேனே .கொஞ்சநேரம் ..." கெஞ்சுதலாக கேட்டான் .

மௌனமாக தன் கைகளை நீட்டினாள் மீரா .புதைகுழிக்குள் புதைந்து கொண்டிருப்பவன் வெளியேற கிடைத்த குச்சியை பற்றும் ஆர்வத்துடன் அவள் கைகளை பற்றியவன் ...தளர்ந்து அவளருகில் படுத்தான் .அவள் கைகளை பற்றி தன் நெஞ்சில் வைத்துக்கொண்டான் .

" உனக்கு எப்படி மீரா தெரிந்த்து ...? "

" நம் கல்யாணத்திற்கு முன்பே ஒருநாள் நாங்கள் எல்லோரும் சினிமாவிற்கு போனோம் .நானும் அம்மாவும் ஸ்கூட்டியில் வந்தோம் .அப்பா தம்பிக்கு வண்டி ஓட்ட சொல்லிக் கொடுத்துக்கொண்டே அவனுடன் வண்டியில் வந்தார் .அந்த தெருவில் அவன் தடுமாறி அந்த வீட்டின் வாசலில் நிறுத்தி வைத்திருந்த பைக்கின் மீது மோதி விட்டான் .

https://telegram.me/aedahamlibrary

அவ்வளவுதான் அந்த பெண் வெளியே வந்து காச்மூச்சென்று கத்த தொடங்கிவிட்டாள் .ஆட்கள் கூட ஆரம்பிக்க , அப்பா என்னையும் , அம்மாவையும் பக்கத்திலிருந்த சந்துக்குள் மறைந்து நிற்க சொன்னார் .

அப்போதுதான் அந்த வீட்டு சந்துக்குள் நின்று கொண்டிருக்கும் போதுதான் , சன்னல் வழியாக தற்செயலாக பார்த்தேன் .அங்கே உங்கள் மச்சான் உடகார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார் .இந்தப் பொண்ணு வந்து அவரிடம் ...

" ஊரார் பார்க்க எனக்கு கௌரவமான வாழ்க்கைதான் தர மாட்டீர்கள் .இந்த தெரு ஆட்கள் பார்க்க என் கௌரவத்தை காப்பாற்ற மாட்டீர்களா ..? தெருவில் போகிற எவனோ உங்கள் வண்டியை இடித்துவிட்டு போகிறான் .நான் போய் கேட்டால் பதிலுக்கு கத்துகிறான் .வந்து என்னவென்று கேளுங்கள் .என்றாள் .

இவர் உடனே எழுந்து கை கழுவி விட்டு  வாசலுக்கு வந்து தம்பியை பார்த்து கத்த துவங்கினார் .அதறகுள் கூட்டம் அதிகமாக ஆளாளுக்கு பேசி சமாதானம் செய்து ஒரு வழியாக அங்கிருந்து வந்தோம் ...,"

" ஓ...உன் அம்மா , அப்பா எல்லோரும் பார்த்தார்களா ...? " சிறு மனத்தாங்கல் அவன் குரலில் .

அவன் மனவோட்டத்தை உணர்ந்து " ம்ஹூம் இல்லைங்க .அன்னைக்கு நான்தான் கொஞ்சம் பதட்டமில்லாமல் இருந்தேன் . அம்மா , அப்பா , தம்பி எல்லோரும் டென்சனாக இருந்ததால் குமரேசன் அண்ணாவை கவனித்திருக்க மாட்டார்கள் .நீங்க எதுவும் நினைக்கவேண்டாம் ..." சமாதானப்படுத்தினாள் .

மீராவின் இதமான அணுகுமுறை நந்தகுமாரை பெருமளவு சமாதானப்படுத்தியது .

" இனி இந்த பிரச்சினையை எப்படி சமாளிக்க போகிறோம் மீரா ...அம்மாவிடம் சொல்லவே பயமாக இருக்கிறது .அம்மா ரொம்ப கவலைப்படுவார்கள் .முதலில் அப்பாவிடம்தான் சொல்லவேண்டும் ..."

" இல்லைங்க நீங்க முதலில் பாட்டியிடம் பேசுங்கள் ..."

" பாட்டியிடமா ...? எதற்கு ....? "

" பிரவீணா அண்ணியின் பிரச்சினையை முதலில் கண்டு கொண்டதே பாட்டிதான் . அவர்கள் பெரியவர்கள் ...விவரமானவர்கள் .ஏன் இப்படி ஒரு இக்கட்டான நிலையில் கூட நீங்கள் பாட்டியிடம் பேச மாட்டீர்களா ...இன்னுமா பாட்டி மீது கோபத்தை பிடித்து வைத்துள்ளீர்கள் ..." அவளையறியாமலேயே படபடத்தாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" ஏய் மீரா...பாட்டி மேல் எனக்கென்ன கோபம் ....? அதெல்லாம் ஒன்றுமில்லை .நீ சொன்னது போல் நாளை காலை பாட்டியிடம் பேசுகிறேன் ..."

நந்தகுமார் சொன்னது போன்றே மறுநாள் காலையில் பாட்டி முன்னால் போய் நின்றான் .பாட்டிக்காக மீரா இடலிகளை எடுத்துக் கொண்டு போன போது அவளுடன் தானும் ஒட்டிக்கொண்டான் .

" என்னடா ...என்னை தனியாக பார்க்க தைரியமில்லாமல் பொண்டாட்டி முந்தானையை பிடிச்சிட்டு நிற்கிறியாக்கும் ...? " பாட்டி நக்கலாக கேட்க ...

" நான் எப்போ பொண்டாட்டி முந்தானையை பிடித்தேன் .....? " ரோசமாக கேட்டவன் பாட்டியின் பார்வையை தொடர்ந்து ...

பேச்சை எப்படி ஆரம்பிப்பது என தெரியாமல் மனதினுள் சொல்லி பார்த்தபடி இயல்பாக மீராவின் முந்தானை நுனியை எடுத்து விரல்களில் சுற்றிக் கொண்டிருந்த தன் கைகளை பார்த்துவிட்டு சட்டென்று அதை விட்டு விட்டு அவசரமாக மனைவியை விட்டு தள்ளி நின்றான் .

## 24

இன்னதென்ற வரைமுறையற்று
காலையிலிருந்து முறைத்துக்கொண்டு திரிகிறாய்,
சரிதான் போடா ....
முரட்டு சிறகை மூக்கால் கோதி
மடியிறுத்தும் சூட்சுமம்
தெரியாதவளா நான் ????

ம் ..இப்போ சொல்லு ...." மீரா ஊட்டிய இட்லியை வாயில் வாங்கியபடி கேட்டார் பாட்டி .

https://telegram.me/aedahamlibrary

தன்னுடைய செய்கையை மனைவி பார்த்துவிட்டாளோ ...சந்தேகத்தோடு அவளை பார்த்தான் .

" அவள் கவனிக்கவில்லை .நீ சொல்லு ..." அதிரடியாக வெடித்தார் பாட்டி .

" பாட்டி ...வந்து ...." மேலே பேச முடியாமல் தொண்டையை செருமிவிட்டு மௌனமானான் .

" அம்மாடி மீரா ...உன் புருசனுக்கு பேச்சு மறந்துடுச்சு போல , இரண்டு வார்த்தைக்கு மேல் பேச்சு வரலை .எதற்கும் உன் முந்தி நுனியை அவன் கையில் கொடுத்து பாரேன் ...'"

" எதற்கு பாட்டி ...? " மீரா புரியாமல் கேட்க ...

" பாட்டி ...." பல்லை கடித்தான் நந்தகுமார் .

" நீதான் பேச மாட்டேங்கிறியேடா ...அதுதான் அப்படி சொன்னேன் ..."

" என்ன பாட்டி அவர் முக்கியமான விசயம் பேச வந்திருக்கிறார் .நீங்கள்

அவரை காரணமில்லாமல் கிண்டலடித்து கொண்டிருக்கறீர்கள் ...." மீரா குறைபட்டாள் .

" உன் புரசனை நான் கிண்டலடிக்க முடியாமாம்மா ...அதுவும் உன்னை பக்கத்தில் வைத்துக்கொண்டு .இதற்கெல்லாம் பயந்துதானே அவன் உன்னை முன்னால் விட்டு பின்னால் வந்தான் ...."

" போதும் பாட்டி நான் அக்காவை பற்றி பேச வந்தேன் ..."

" ம் ...சொல்லு ..அந்த பொண்ணை பற்றி விசாரித்து விட்டாயா ...? "

கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டார்கள் .நீ சொன்னாயா ...என பரஸ்பரம் பார்வையால் விசாரித்து கொண்டார்கள் .

" வெளியே போய் அலைந்து திரிந்து விசாரிக்க வேண்டியதில்லைடா .ஒருத்தர் மொகரைகட்டையை வைத்தே அவங்க மனக்கஷ்டத்தை கண்டுபிடிச்சுடுவேன் ...பிரவீணா வாயே திறக்கலைன்னாலும் அவள் கஷ்டம் இதுவாகத்தான் இருக்கனும்னு முதல்லயே ஊகிச்சிட்டேன் ...."

" அதே பிரச்சினைதான் பாட்டி . இப்போ என்ன பண்றது ...? "

https://telegram.me/aedahamlibrary

" பிரச்சினையைத்தான்டா என்னால் கண்டுபிடிக்க முடியும் .தீர்வை ..எல்லோரும் சேர்ந்துதான் கண்டுபிடிக்கனும் .திவ்யா , சசி , மாளுவை விட்டுட்டு வீட்டில் எல்லோரையும் கூட்டுங்க பேசி முடிவெடுப்போம் ...."

" பாட்டி ....அம்மா ....கேட்டதும் ரொம்ப கஷ்டப்படுவாங்க ..." நந்தகுமார் தயங்கினான் .

" உன் அக்காவை விட பெரிய வேதனையா ...உன் அம்மாவோடது ...போடா ...போய் எல்லோரையும் கூட்டிட்டு வா .சும்மா ...சும்மா அம்மா ..." பாட்டி அதட்டினாள் .

வாயை மூடி சிரித்த மீராவை முறைத்தபடி போனான் நந்தகுமார் .

" நீங்க சொல்றது சரிதான் பாட்டி .அவர் சரியான அம்மாபிள்ளை ..."

," அதில் தப்பில்லை மீரா .அவனது அந்த அம்மா பாசம்தான் அவனை அந்த மிருணாளினியிடமிருந்து காப்பாற்றி உன்னை கல்யாணம் முடிக்க சம்மதிக்க வைத்திருக்கிறது ...."

ஆமாம் அதே அம்மா பாசம்தான் காதலியை நெஞ்சில் வைத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு மனைவியுடன் வாழ ஆரம்பிக்கலாமென்ற முடிவையும் எடுக்க வைத்திருக்கிறது ...தனக்குள் சொல்லிக்கொண்டாள் மீரா .

" உனக்கு ஒண்ணு தெரியுமா மீரா .எந்த ஆம்பளை அம்மா கோண்டுவா இருக்கானோ , அவனை எளிதாக பொண்டாட்டி அவள் பக்கம் திருப்பிக்கொள்ளலாம் .ஏனென்றால் அம்மாவோ ...மனைவியோ ..ஏதோ ஒரு பெண்ணின் வருடல் இல்லாமல் அந்த ஆம்பளையால் வாழ்நாளை தள்ள முடியாது .அம்மாவுக்கு ஆமா சாமி போடுற ஆம்பளைங்கெல்லாம் சீக்கிரமே பொண்டாட்டிக்கும் தலையாட்ட ஆரம்பிச்சுடுவாங்க ...."

" ம்க்கும் ...உங்க பேரன் தலையாட்டிட்டாலும் ...ஒரு பொண்ணுக்கு தலையாட்டுறவரா இவர் ...? " மனதிற்குள் சொல்லிக்கொண்டவள் ....

" ஆனால் மாமா இன்னமும் உங்களுக்குத்தான் தலையாட்டிக் கொண்டிருக்கிறார் பாட்டி ..." கிண்டல் போல் குத்தினாள் .

" என் மகனா ...? எனக்கு தலையாட்டுறானா ...? அப்படி ஆட்டினால்தான் பிரச்சினை இல்லையே .சில தலைகள் எந்தப் பக்கமும் ஆடாது .இந்த குரு அப்படி ...." சலித்துக்கொண்ட பாட்டியிடம் நம்பிக்கையில்லை மீராவிற்கு .

https://telegram.me/aedahamlibrary

பத்தே நிமிடங்களில் வீட்டினர் அனைவரும் கூடிவிட ...

" பிரவீணா நீ சொல்கிறாயா ...? நான் சொல்லவா ...? "பாட்டியின் கேள்விக்கு தலைகுனிந்தாள் பிரவீணா .

" நம்ம பிரவீணா வாழ்க்கையில் இன்னொரு பொண்ணு நுழைஞ்சிருக்கா ...."

" அம்மா ..." குருநாதன் அதிர ...

" என்னத்தை ....எனக்கு புரியலை ...? " சுந்தரி .

" ம் ...உன் மாப்பிள்ளை உன் பொண்ணுக்கு போட்டியா ஒரு பொம்பளையை வச்சிருக்கான் ..."

" பாட்டி ...இதை அம்மாவிடம் இப்படி கடுமையாகவா சொல்வீர்கள் ...? " நந்தகுமார் ஆதரவாக தாயை அணைத்துக்கொண்டான் .

" உன் அம்மாவுக்கு இப்படி உச்சந்தலையில் அடிச்சாத்தான் புரியும்டா ..." பாட்டி இரக்கமின்றி சொல்ல , அலறி திகைத்து அழும் மாமியாரை பார்க்க மீராவிற்கு பாவமாக இருந்த்து .

பரிதாபமான மருமகளின் பார்வையில் கூசிய சுந்தரி " உள்ளே போய் வேலையை பாரேன் ◌இங்கே நின்று ஏன் வாய் பார்க்கிறாய் ..? " எரிந்து விழுந்தாள் .

மீராவின் முகம் வாட ....

"அவளை எங்கே போகச்சொல்கிறாய் ..? அவள்தான் உன் மகளோட வாழ்க்கை அவலத்தை கண்டுபிடிச்சு வந்து சொல்லியிருக்கிறாள் ..." பாட்டி அதட்டினாள் .

அப்படியா எனக் கேட்ட தாய்க்கு ஒப்புதலாய் தலையசைத்தான் நந்தகுமார் .

இல்லையென்ற ஒரு சொல்லை தன்னிடம் எதிர்பார்த்து நோக்கும் தாயையும் ,தந்தையையும் ஏமாற்றி  பிரவீணா இறுகி போய் அமர்ந்திருந்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" மூன்று வருடங்கள் ....என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டு இருக்கிறேன் ..."

மகளின் துக்கத்தில் உடைந்த சுந்தரி அவளை அணைத்துக் கொண்டு அழத்துவங்க ,

" ஏன்மா முதலிலேயே சொல்லலை ...? " குருநாதன் பல்லை கடித்தார் .

" இதோ இப்படி பல்லை கடித்து பொங்குகிறாயே , அதற்கு பயந்துதானடா .சரி விடு .இப்போதான் தெரிஞ்சிடுச்சே , இனி என்ன செய்ய போகிறாய் ...? "

" இப்போவே போய் அவனை என்னன்னு கேட்கிறேன் ...? " வேகமாக கிளம்பியவரை ...

" போய் கேளு .ஆனால் நீ மட்டும் போகாதே .துணைக்கு ஆட்களை கூட்டிட்டு போ .வாயால மட்டும் பேசு ..." பாட்டி வழி சொல்லிக் கொடுத்தார் .

" ஆமாம் ..நந்து வாடா நாம் போய் பேசிவிட்டு வரலாம் ..."

" நந்துவா ...அவன் எதற்கு ..? சின்ன பையன் ...யாராவது பெரிய மனுசனை கூட்டிட்டு போய் பேசு ..."

" யாரைம்மா சொல்கிறீர்கள் ...? " குருநாதன் குழம்ப ...

" இதோ இவள் அண்ணனைத்தான் .அவன்தானே இவளுக்கு தாய்மாமன் .உனக்கடுத்ததாக அவனுக்குத்தான் கேட்கும் உரிமை இருக்கிறது ...."

" என்னது ...? இவள் அண்ணனிடமா ...? நான் போய் நிற்பதா ...? ,"

" நீதான்டா ..உன் மச்சானைத்தான் ..." பாட்டி அழுத்தி சொல்ல ...

" அதற்கு வேறு ஆளை பாருங்க .அவன் வீட்டில் போய் நான் நிற்கமாட்டேன் ...." துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு குருநாதன் எழுந்து போய்விட்டார் .

பார்த்தாயா ...என் மகனை ...என் பேச்சை எங்கே கேட்கிறான் ...? மீராவிடம் கண்ணால் கேட்டார் பாட்டி .

இதென்ன மகள் வாழ்க்கையை விட மாமனாருக்கு சுயகௌரவமா பெரிது ...மீரா வருந்தினாள் .

https://telegram.me/aedahamlibrary

" நான் கூப்பிட்டால் அண்ணா வருவார் ..." சுந்தரி வேகமாக போன் எண்ணை அழுத்தினாள் .

சொன்னது போன்றே தங்கையின் ஒரே போன் அழுகைக்கு ஓடி வந்தார் சண்முகசுந்தரம் .பிரச்சினையை கேட்டு உள்ளம் கொதித்தார் .அறையினுள் முகம் திருப்பி அமர்ந்து கொண்டிருந்த குருநாதனிடம் போய் தானே தாழ்ந்து பேசி அவரையும் அழைத்துக் கொண்டு குமரேசனை பார்க்க கிளம்பினார் .

ஆனால் போன காரியம்தான் நிறைவேறவில்லை .

25

கருவிழி மிரள கனிமொழி குழற
அச்சத்தை அடுக்கி சூழும்
இந்திர  தனிமையிலும்

உன் பொல்லா சொற்களில் ஒளிந்திருக்கும்
சொல்லா காதலையே தேடுகிறேன்

கொல்வதேயானாலும் சீக்கிரம்
வாடா  கள்ளா ...

குமரேசன் சிறு வயதிலேயே அப்பாவை இழந்தவன் .திருமணம் முடிந்த இரண்டே வருடங்களில் அம்மாவும் மறைய பெரியவர்களென அதட்ட அவனுக்கான நெருங்கிய உறவில்லாதவன் .அதனால் பெரியவர்களாக போய் நியாயத்தை எடுத்து சொன்னால் அவன் மாறிவிடுவான் என அனைவருமே நினைத்தனர் .அதனால்தான் ஒருவருக்கு இருவராக போகும்படி பாட்டி ஆலோசனை சொன்னார் .

ஆனால் ...

முதலில் தன் தவறை கண்டுபிடித்து விட்டனரே என குறுகினாலும் , விரைவிலேயே சுதாரித்துக் கொண்டவன் .... அந்தப் பெண் மிகவும் கஷ்டப்படும் குடும்பத்தை சேர்ந்தவள்  , என்னை நம்பி வந்துவிட்டாள் .அதனால் அவளை விட முடியாது என்றான் .அதற்காக பிரவீணாவையோ , திவ்யாவையோ ஒதுக்க போவதில்லை என்றும் , அவரகளும் எனக்கு மிகவும் வேண்டும் என்றும் , இரு குடும்பத்தையும் வைத்து வாழும் அளவு தனக்கு திடம் இருப்பதாகவும் உறுதியாக கூறினான் .

https://telegram.me/aedahamlibrary

ஓங்கி சுவரில் குத்திய நந்தகுமாரின் வேகத்தில் அவனது ஆத்திரத்தை உணர்ந்தாள் மீரா .வாய்க்குள் அவன் முணுமுணுத்த வார்த்தைகள் நிச்சயம் கேட்ககூடிய வசவாக இருக்காது என அவளுக்கு தோன்றியது .

" இரண்டு  வருடமாக இந்த கண்றாவியைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார் ..." முடிவை முன்பே தெரிந்திருந்த பிரவீணா விரக்தியுடன் சொன்னாள் .

" என்னண்ணா அவர்தான் கோபக்கார்ர் .எடுத்துக் , கவிழ்த்தேன் என பேசி வைப்பார் .நீங்கள் பக்குவமாக எடுத்து சொல்லி மாப்பிள்ளைக்கு புரிய வைத்திருக்க வேண்டாமா ...? ,"

மனைவியை முறைத்தார் குருநாதன் .இவளுக்கு அண்ணன் முன்னால் என்னை எப்படியாவது ஒரு படியாவது குறைத்துவிட வேண்டும் .பல்லை கடித்தார் .

" இல்லம்மா ...மாப்பிள்ளை ரொம்ப அமைதியாக பொறுமையாகத்தான் பேசினார் .பிரவீணா வீட்டுக்கார்ர் எதையும் கேட்கும் மனநிலையில் இல்லை .பொறுமையாக நாங்கள் பேசுவதை முழுவதும் தலை குனிந்து கேட்டுவிட்டு பிறகு அவர் சொன்னதையே சொல்கிறார் கிளிப்பிள்ளை போல ...." என்றார் சண்முகசுந்தரம் .

" அப்படியே ஓங்கி ஒரு அறை விட்டிருக்க வேண்டியதுதானே மாமா ..."

" டேய் நந்து பேசாமல் இரு .உன்னை அனுப்பினால் இப்படி ஏதாவது செய்வாயென்றுதான் உன்னை போகாதே என்றேன் ..." பாட்டி அதட்டினார்.

எல்லோரும் பாட்டி வீட்டில் வைத்துதான் பேசிக்கொண்டிருந்தனர் .

" நீங்கள் அனுப்பினாலும் நான் போகப் போவதில்லை ...நேரில் பார்த்தால் அடிக்காமல் வரமாட்டேன் ...." முணுமுணுத்தான் .

" இப்போ என்ன செய்வது சண்முகம் ...? " பாட்டி சண்முகசுந்தரத்திடமே ஆலோசனை கேட்டார் .

https://telegram.me/aedahamlibrary

" எனக்கும் ஒன்றும் ஓடவில்லை அத்தை .திரும்ப திரும்ப என் பொண்டாட்டியையும் , பிள்ளையையும் அனுப்பி வைங்கங்கிறாரு .பேசாமல் அனுப்பி வைத்து பார்க்கலாமா என யோசிக்கிறேன் ...."

பிரவீணாவின் முகம் நிராசையுடன் சோர்ந்தது .

அவளை கவனித்தபடியிருந்த மீரா " அதெப்படி அனுப்ப முடியும் ...? " என்றாள் வேகமாக .

" அப்படியெல்லாம் அனுப்ப முடியாது ..." என்ற நந்தகுமாரின் குரலும் அவள் குரலோடு சேர்ந்து ஒலித்தது .

சண்முகசுந்தரத்தின் பார்வை கூர்மையாக மீராவின் மேல் படிந்தது . " பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கிறோமில்லையா ...? " என்றார் .

" அவள் சொன்னதில் என்ன மாமா தப்பு ...? இந்த மாதிரி ஒரு தரங்கெட்ட ஆளுடன் வாழ நான் என் அக்காவை அனுப்பபோவதில்லை ...." நந்தகுமார் .

" இங்கே பாருங்க மாப்பிள்ளை நாம் பெண்ணை பெற்றவர்கள் .கொஞ்சம் தாழ்ந்துதான் போகவேண்டும் ...." சண்முகசுந்தரம் .

அதுதான் திருமணமே இல்லையென்றாகிவிட்டதே ...பிறகென்ன மாப்பிள்ளையென்ற கொஞ்சல் வேண்டிக்கிடக்கிறது ...சண்முகசுந்தரத்தின் தாய்மாமன் உறவை மறந்து , மிருணாளினியின் அப்பாவாக மட்டுமே அவரை பார்த்தாள் மீரா .

" பொறுத்து போவதற்கும் ஒரு அளவு இருக்கிறது மாமா .ஒரு கணவன் அவன் மனைவிக்கு செய்யும் அதிகபடச துரோகம் இது .இதை பொறுத்து போகவோ , பொறுத்து போகச் சொல்லவோ என்னால் முடியாது ."

" ஆனால் நமக்கு இப்போது வேறு வழியில்லையே நந்து " சுந்தரி அழுகையுடன் குறுக்கிட்டாள் .

" எதற்கு வழி ...? இங்கே சாப்பாடு இல்லையென்றா அக்கா அங்கே போகவேண்டும் ...? அதெல்லாம் நாங்கள் நன்றாகவே செய்வோம் .அவர் ஒழுங்காக வாழ வந்தால் சரி .இல்லாவிட்டால் அக்கா இங்கேயே இருக்கட்டும் ....,"

" எதுவானாலும் யோசித்துதான் செய்யவேண்டும் நந்து ..." பாட்டி .

" இல்லை மாப்பிள்ளை அப்படி எடுத்தேன் , கவிழ்த்தேன்னு பேச முடியாது ....,"

https://telegram.me/aedahamlibrary

" ஒரு அப்பனாக என் மகளை அனுப்ப எனக்கும் பிடிக்கவில்லைதான் ஆனால் வேறு வழியில்லையே ..."

" வேண்டாம் மாமா ....அனுப்ப வேண்டாம் ..."

," நீ பேசாதேம்மா ..." சண்முகசுந்தரம் திரும்ப அதட்ட ....

" ஏன் ஆளாளுக்கு கத்திக்கொண்டிருக்கிறீர்கள் ...? இந்த பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும் வரை நான் அங்கு போகப் போவதில்லை ...." பாதிக்கப்பட்டவள் தன் முடிவை சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டாள் .

அனைவரும் அமைதியானார்கள் .ஏனோ இந்த முடிவு ஒரு வகையில் எல்லோருக்குமே திருப்தியளித்தது .

அதன்பிறகு எப்போதும் கலகலப்பாக இருக்கும் வீடு மயான அமைதியில் மூழ்கியிருந்த்து .சமையல் செய்ய ஆளிருந்தாலும் , சாப்பிட ஆளில்லை .ஆண்கள் கிளம்பி சென்று விட பெண்கள் ஒருவர் முகத்தை

ஒருவர் பார்க்க அஞ்சி ஆளுக்கு ஒரு இடத்தில் முடங்கியிருந்தனர் .
" அத்தையும் , மாமாவும் சாப்பிடவில்லை ..." இரவு வீட்டிற்கு வந்த கணவனிடம் தகவல் சொன்னாள் மீரா .

" நீ சாப்பிட சொல்லியிருக்கலாமே ....,"

" சொன்னேன் ஆனால் ...."

" சரி நீ போய் அம்மாவிடம் சாப்பாட்டை கொடுத்து அப்பாவிற்கு தரச் சொல்லு ..."

" வேண்டாங்க , மாமா ஏற்கெனவே உங்கள் மாமா வந்த்திலிருந்து அத்தை மேல் கொஞ்சம் கோபமாக இருக்கிறார்கள் ...ஏதாவது பெரிய சண்டையாக ...வந்து விட போகிறது ...." என அடிப்பது போல் கை காட்டினாள் .

" ம் ...ஆனால் நமக்கு வேறு வழியில்லை .அப்பா சாப்பிடவில்லையென்றால்தான் அம்மா சாப்பிடுவாங்க .நீ போய் சாப்பாடு கொடுத்து அனுப்பு ..."

https://telegram.me/aedahamlibrary

மருமகளை கணவருக்கு சாப்பாடு எடுத்து வைக்க சொல்லிவிட்டு படுத்திருந்த சுந்தரி ...அவர் சாப்பிடவில்லை என மருமகள் சொல்லவும் பற்றி தானே உணவு கொண்டு போனாள் .

கொஞ்ச நேரம் வெளியே நின்று எதுவும் சண்டை வந்துவிடுமோ என பயந்தபடி இழுந்தனர் நந்தகுமாரும் , மீராவும் . கொஞ்சநேரத்தில் சுந்தரியின் அழுகை சத்தம் கேட்க வேகமாக இருவரும் எட்டி பார்த்தபோது ...

கட்டிலில் உட்கார்ந்திருந்த குருநாதனின் கால்களில் தலையை சரித்து கீழே உட்கார்ந்தபடி அழுது கொண்டிருந்தாள் சுந்தரி .சமாதானமாக அவள் தலையை வருடியபடியிருந்தார் குருநாதன் .

கலங்கிய கண்களை துடைத்தபடி வந்துவிட்டனர் நந்தகுமாரும் , மீராவும் .

நாட்கள் ஓடியதே தவிர குமரேசனிடம் மாற்றமில்லை .திவ்யாவிற்கு மூன்று மாதத்தில் சடங்கு வைப்பதாக நாள் குறித்திருந்தனர் .அதனை அவளுடைய அப்பா இல்லாமல் எப்படி நடத்துவது ....?

" நீங்கள் ஒரு தடவை உங்கள் மச்சானிடம் பேசி பாருங்களேன் ...."

கணவனிடம் கேட்டாள் மீரா .

" நானா ...? அப்பா , மாமாவிடம் பேசுவது போல் என்னிடம் பேசினாரானால் அந்த ஆளை அடிக்காமல் நான் வரமாட்டேன் .எத்றகு பிரச்சினை ...? "

" எனக்கென்னவோ அவர் உங்களிடம் அப்படி பேச மாட்டாரென தோன்றுகிறது .உங்கள் மீது அவருக்கு தனி அபிமானம் இருக்கிறது ...."

" மதிப்பு , மரியாதை ...அபிமானமெல்லாம் இந்த விசயத்தில் செல்லாது மீரா ..."

" அப்படியே இருக்கட்டுமே . .நீங்கள் ஒரு வார்த்தை ...சும்மா நலம் விசாரித்து விட்டுத்தான் வாங்களேன் ..."
கைகளை கணவனின் கழுத்தில் மாலையாக்கி அவன் விழிகளுக்குள் பார்த்து ..." ப்ளீஸ் ..." என்றாள் .

" போகிறேன் ....ஆனால் ஒரு கண்டிசன் ..நீயும் என்னுடன் வர வேண்டும் ...."

" நான் எதற்கு ....? "

" நீ பக்கத்தில் இருந்தால் எனக்கு கொஞ்சம் எனர்ஜிட்டிக்காக இருக்கும் மீரா ...வாயேன் ப்ளீஸ் ...." அவள் இடையில் கைகளை கோர்த்து தன்னருகே இழுத்துக் கொண்டான் .

"சரி ....சரி வருகிறேன் .விடுங்கள் ...." வேகமாக விடுபட முயன்றவளின் இடையை வருடியபடி மெல்ல விடுவித்து ....

" நான்தான் விட்டுக்கொண்டே இருக்கிறேனே .பிறகு ஏன் அவசரம் ...? " என்றான் .

நெஞ்சம் படபடக்க ஓடிவந்துவிட்டாள் மீரா .

அன்று மாலையே கோவிலுக்கு போவதாக சொல்லவிட்டு இருவரும் குமரேசனை பார்க்க சென்றனர் .

https://telegram.me/aedahamlibrary

25

மூக்கு விடைத்து ...கண் சுருக்கி

நா சுழலும் உன் கோபத்திலும் ,
வெண்புறாவாய் இதயம் சடசடக்க...
மெல்ல நகரும் பின்மதியம் தாண்டிய
காதல் பூத்துவிட்ட சாயங்காலத்தினை ,
நத்தையின் காலென அமைத்து விட்டதென்ன  நியாயம் ...?

குமரேசனின் வீட்டிற்கு முந்தின தெருவில் போகும் போது மீராவின் தோழி ஒருத்தி அவளை பார்த்து வண்டியை நிறுத்தி பேச ஆரம்பித்துவிட ...சீக்கிரம் வரும்படி கூறிவிட்டு நந்தகுமார் மட்டும் முன்னால் போனான் .

தோழியிடம் பேசிவிட்டு மீரா அங்கே போனபோது இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி எதிரெதிரே அமர்ந்திருந்தனர் .கணவனை திரும்பி பார்த்த மீரா விழி விரித்தாள் .என்ன பார்வை இது .....????

நீயா ...? நீதானா ...? நீயேதானா ....? என்பது போன்றதொரு நம்ப முடியாதோர் பார்வையை அவன் மேல் வீசிக்கொண்டிருந்தான் நந்தகுமார் .அந்த பார்வையை சந்திப்பதும் ...பின் தலைகுனிவதுமாக இருந்தான் குமரேசன் .

https://telegram.me/aedaham/library

" வந்து ...நான் ...அ...அவள் ...." அவனது தடுமாற்ற ஆரம்பத்தில் இதுவரை இருவரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லையென உணர்ந்தாள் மீரா .

கூடை கூடையாய் கொட்டிய அறிவுரைகளை விட இந்த கனன்ற பார்வை குமரேசனை அதிகம் பாதிப்பதை உணர்ந்தாள் மீரா .வாய் திறந்தால் ...தவறாக எதுவும் பேசிவிடுவோமோ ...என பயந்து கண்களாலேயே கோபத்தை வெளிப்படுத்தும் கணவனை பாராட்டியபடி வாசலை பார்த்திருந்தாள் அவள் .

அப்போது சார் என அழைத்தபடி உள்ளே நுழைந்தாள் அந்த பெண் .சற்று முன் மீராவிடம் பேசிய அவளது தோழி .

" வணக்கம் சார் .நான் இங்கே ..." ஒரு லோக்கல் டிவி சேனலின் பெயரை சொல்லி ...

" அங்கே காம்பயராக வேலை செய்கிறேன் ." பாதர்ஸ் டே ..." வருதில்லையா ...அதற்கு இந்த ஏரியாவில் எல்லோர வீட்டு ,பிள்ளைகளிடம் அவர்கள் அப்பாவை பற்றி எழுதி அனுப்புமாறு

கேட்டிருந்தோம் .நிறைய பேர் எழுதி குவித்து விட்டார்கள் .நிறைய நெகிழ்ச்சியான அனுபவங்கள் இருந்தாலும் ஜட்ஜ் எல்லாரும் ஒன்றாக சேர்ந்து செலக்ட் செய்து  முதல் பரிசு வாங்கியிருப்பது உங்கள் மகள் திவ்யாவின் "அப்பாவும் , நானும்" கட்டுரையை ...."

" அப்படியா ....? " குமரேசனிடம் மிகுந்த மகிழ்ச்சி .

" ஆமாம் சார் .என்னமா எழுதியிருக்கிறாள் உங்கள் பொண்ணு .எப்படிப்பட்ட அற்புதமான அப்பாவாக நீங்கள் இருந்திருக்கிறீர்கள் .கை கொடுங்க .உங்க பொண்ணையும் , மனைவியையும்  கூப்பிடுங்க .பரிசு கிடைத்த விபரத்தை சொல்லிட்டு போறேன் ..."

" திவ்யா அவுங்க பாட்டி வீட்டுக்கு போயிருக்கறாள் ...."

" சரி சார் ...நான் அவர்கள் வந்த்தும் வருகிறேன் .பாதர்ஸ் டே அன்று நம் டிவி அலுவலகத்தில் பங்சன் சார் .லைவ் டெலிகாஸ்ட் .நீங்கள் குடும்பத்தோடு வந்துவிடுங்கள் ...."

" கண்டிப்பாக வருகிறேன் .என் பொண்ணு என்ன எழுதியிருந்தாள் ...?"

" நிறைய எழுதியிருக்கிறாள் சார் .உங்களை எழுதியிருக்கிறாள் .அப்பாவாக மட்டுமில்லாமல் , அம்மாவாக , நண்பராக , அண்ணனாக நீங்கள் இருந்த ஒவ்வொரு தருணத்தையும் எழுதியிருக்கிறாள் .முக்கியமாக அவள் எழுதியிருந்த்து ...உங்கள் ஒழுக்கத்தை ...நல்ல குணங்களை .ஒரு ஆண் எப்படி இருக்கவேண்டுமென என் அப்பாவின் நடத்தையை பார்த்து தெரிந்து கொள்ளுங்கள் ..என படிப்பவர்களுக்கு சவால் விட்டிருக்கிறாள் ...."

https://telegram.me/aedahamlibrary

குமரேசன் உள்ளுக்குள் நொறுங்கிக்கொண்டிருப்பதை அறியாமல் அந்த பெண் பேசிக்கொண்டே போனாள் .
மறக்காமல் வந்துவிடும்படி மீண்டும் நினைவுறுத்திவிட்டு போனாள் .

வியர்க்க விறுவிறுக்க அமர்ந்திருந்த குமரேசனிடம் " யோசித்து

முடிவெடுங்க .." என்று எழுந்தான் நந்தகுமார் .

" ஏற்றுக்கொண்ட கட்டாயத்திற்காகவே எந்த பாரத்தையும் அநாவசியமாக தலையில் சுமக்க வேண்டியதில்லை அண்ணா .தகுந்த இடத்தில் இறக்கியும் வைத்துவிடலாம் ....ஒரே ஒரு முறை தாங்கும் தகுதி உங்களுக்கில்லை என அங்கே சொல்லிப்பாருங்கள் ...." சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டாள் மீரா .

" அந்தப் பெண்ணை நீதான் தயார் செய்தாயா ...? " பைக்கில் திரும்பி வரும்போது கேட்டான் நந்தகுமார் .

" ஆமாம் ...ஆனால் தற்செயலாக நடந்த்து அது .திவ்யா அப்பாவை பற்றி எழுதியது , பரிசு கிடைத்தது எல்லாம் உண்மைதான் .ஆனால் அதனை என் தோழி வந்து இங்கே சொல்வதாக இல்லை .அவள் அந்த சானலில் வேலை பார்க்கிறாள் .யார் வீட்டிற்கு வந்தீர்களென கேட்டாள் ...? நான் சொன்னதும் இந்த பரிசு விபரம் சொன்னாள் .நானாகத்தான் அந்த நேரம் இங்கே வந்து பேசும்படி கேட்டுக்கொண்டேன் .அவள் இது ஏதோ நம் குடும்ப கலாட்டா போல என நினைத்துக்கொண்டு சம்மதித்தாள் .

நான் நீங்கள் நம் குடும்ப கௌரவம் பற்றி எப்படியும் பேசியிருப்பீர்கள் .அந்த நேரம் திவ்யா பற்றிய செய்தி வந்தால் ...."

" பாசமும் , சமூக அந்தஸ்தும் சேர்ந்து மச்சான் மனதை மாற்றுமென்று நினைத்தாய் போல ....? "

" ஆமாம் ...ஆனால் என் முயற்சியை விட பேசாமல் கண் பார்வையிலேயே சாதித்தது நீங்கள்தான் .அந்தப் பார்வையிலேயே அண்ணன் அப்படியே அலண்டு போய் உட்கார்ந்திருந்தார் தெரியுமா ...? "

https://telegram.me/aedahamlibrary

" ப்ச் ...நீ சொன்னது போல் அவருக்கு என் மேல் ஒரு அபிமானம் ....சரியாக சொல்வதானால் ஒரு வகை பிரமிப்பு உண்டு மீரா ."

" இதை நான் அன்று திவ்யாவிற்கு தலைக்கு தண்ணீர் ஊற்றும் நாளன்றே ஊகித்தேன் .ரொம்ப வேகமாக வந்தவர் நீங்கள் பேசியதும் அடங்கிவிட்டார் ...."

" ம் ..இவ்வளவு வேகமாக தொழிலில் நான் முன்னேறியதுதான் அதற்கு காரணம் .கொஞ்சம் மதிப்போடுதான் என்னை பார்ப்பார் . .அக்கா திருமணத்திலிருந்து எனக்கும் , அவருக்கும் நல்ல அன்டர்ஸ்டான்டிங் உண்டு . .வெளிப்படையாக நண்பர்கள் போல பேசிக்கொள்வோம் .முதலிலேயே இந்த விசயத்தில் நானே பேசியிருக்கலாம் .ஆனால் நண்பர்களாக பழகினாலும் ...உறவினால் உண்டான ஒரு மெல்லிய கோடு நூல் போல் எங்களிருவரிடையே இருந்த்து .அதனை அறுத்துவிட முடியாமல் நான் தவித்துக்கொண்டிருந்தேன் .

அக்கா யாருக்கும் தெரியாமல் அழுதுகொண்டிருக்கிறாளே ....அது வேறு எனக்கு கோபத்தை உண்டாக்கி கொண்டிருந்த்து .கை

நீட்டிவிடுவோமோ என்ற பயத்தில்தான்  அமைதியாக உட்கார்ந்தே இருந்தேன் . "

" நீங்கள் கை நீட்டியிருந்தால் கூட பலன் எதிரமறையாகத்தான் இருந்திருக்கும் .இப்போது நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும் .கவலைப்படாதீர்கள் ...."

" ம்ப்ச் ...பார்க்கலாம் ...."

" அப்பாவுடன் போகப் போவதில்லை என சொன்னாலும் திவ்யா மனதில் அவள் அப்பா பற்றிய ஏக்கம் இருக்கிறதுங்க .அம்மாவும் , அப்பாவும் அடிக்கடி சண்டை போடுகிறார்கள் என்றுதான் அதை சரி செய்யத்தான் பாட்டி வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் .மற்றபடி அவள் மனம் முழுவதும் அவர்கள் வீட்டிலேயேதான் இருக்கிறது .அன்று காலையில் கூட அப்பாவும் , அம்மாவும் சண்டை போட்டதினால் ...அம்மா அழுதுகொண்டிருந்தார்கள் என்றுதான் ...ஸ்கூலிலிருந்து நம் வீட்டிற்கு ஓடி வந்திருக்கிறாள் ..."

" ம் ...அக்கா என்ன சொல்கிறார்கள் ...? அவர்களுடன் பேசிப் பார்த்தாயா ...? "

https://telegram.me/aedahamlibrary

" திவ்யாவை கூட கணித்துவிடலாம் போல .பிரவீணா அண்ணி மனதில் இருப்பதை கணிக்கவே முடியவில்லை .ஒரு மாதிரி இறுகிப்போய் இருக்கிறார்கள் .பக்கத்தில் போய் பேசவே பயமாக இருக்கிறுது ."

" ம் ...பார்க்கலாம் ...."

அவர்கள் எல்லோருக்கும் பெரும் அவஸ்தையை தந்த அந்த வாரம் மிகவும் நிதானமாக , ஊர்ந்து ஊர்ந்து நகர்ந்து முடிந்த்து .அடுத்த வார ஆரம்பத்திலேயே ...குமரேசன் வந்து நின்றான் .

" எனது கூடாத பழக்கங்களையெல்லாம் விட்டு விட்டேன் .என் மனைவியையும் , குழந்தையையும் அனுப்பி வையுங்கள் ...." என்றான் .

அந்த பெண்ணை அவளது சொந்த ஊருக்கு அனுப்பிய ஆதாரங்களை காட்டினான் .அந்த நிமிடமே நந்தனும் , சசியும் போய் விசாரித்து விட்டு வந்து அது உணமைதானென உறுதிப்படுத்தினர் .

செய்தியறிந்து ஓடி வந்த சண்முகசுந்தரமும் தன் பங்கிற்கு விபரங்களை விசாரித்து வந்து உறுதிபடுத்தினார் .வீட்டிலுள்ள அனைவரும் சூழ்ந்திருக்க கைகட்டி தலை குனிந்து நின்றான் குமரேசன் .

" முன்பே அவளிடம் எனக்கு திவ்யா மட்டும்தான் குழந்தை .வேறு குழந்தை கிடையாது என சொல்லியிருந்தேன் . அந்த மனத்தாங்கல் அவளுக்கு உண்டு .இப்போது எனக்கு தொழிலில் மிகுந்த நஷ்டம் ...என்னால் இரண்டு வீடுகளை பார்க்கமுடியாது என சொன்னேன் ....எல்லாம் சேர்ந்து அவளாக விலகி கொண்டாள் .ஓரளவு பணம் கொடுத்து அனுப்பிவிட்டேன் ...."

தனக்கென ஒரு குடும்பத்தையோ ...ஒரு பாதுகாப்பான வாழ்க்கையையோ கொடுக்காத ஆண் பின்னாலேயே ஒரு பெண் வரவேண்டுமானால் அவளுக்கு அவன் மீது அளவு கடந்த காதல் இருக்கவேண்டும் .பணத்திற்காகவும் , பாதுகாப்பிற்காகவும் மட்டுமே ஆரம்பித்த இந்த உறவு ...எளிதாக உடைந்து போனது .

" இனியாவது புத்தியோடு பிழைக்க பாருங்கள் .பிரவீணா நீ கிளம்பும்மா ...." பாட்டி சொல்ல ...

" எனக்கு அவருடன் கொஞ்சம் தனியாக பேச வேண்டும் பாட்டி ..." என்றாள் பிரவீணா .

இருவரையும் தனித்து விட்டு விட்டு மற்றவர்கள் திக்திக் மனதுடன் இருந்தனர் .

https://telegram.me/aedahamlibrary

" இதே போல் இன்னொருத்தி நம் வாழ்வில் வரமாட்டாளென்பதற்கு எனக்கு என்ன உத்தரவாதம் தருகிறீர்கள் ...? "

" நம் குழந்தை மீது சத்தியம் செய்யவா பிரவீணா ...? "

" வேண்டாம் . ஆண்களையும் , அவர்கள் சத்தியங்களையும் நான் இப்போதெல்லாம் நம்புவதில்லை ...."

" நம் குழந்தை இப்போது பெரிய பெண்ணாகிவிட்டாள் .அவளுக்கு ஒரு முன்மாதிரி தகப்பனாக இருப்பேன் என உறுதியாக கூறுகிறேன் பிரவீணா ...."

" அது ...உங்கள் அப்பா ..மகள் பிரச்சினை .ஒருவர் மீது ஒருவர் வைத்தருக்கும் அன்பை நீங்கள் எப்படியாவது வெளிப்படுத்திக் கொள்ளுங்கள் ◌உங்கள் இருவருக்கிடையில் நான் வர மாட்டேன் . ஒரு மனைவியாக எனக்கு என்ன பதில் ...? " இரும்பின் கடினத்துடன் கேள்விகளை துப்பினாள் பிரவீணா .

" நா ...நான் ...இ...இனி என்ன செய்யவேண்டும் பிரவீணா ....? "

" நான் அப்போது அங்கே வருவது திவ்யாவிற்கு அம்மாவாக மட்டும்தான் .உங்களுக்கு மனைவியாக இல்லை .புரிகறதென்று நினைக்கிறேன் .கணவனென்ற எண்ணத்துடன் என்னருகில் நெருங்க கூடாது ...சம்மதமென்றால் வருகிறேன் ....,"

" இது யாருக்கான தண்டனை பிரவீணா ...? "

" முதலில் தடம் மாறிய என் புருசனுக்கு ...பிறகு அந்த தவறுக்கு பிறகும் அறிந்தும் , அறியாமலும் அவனோட குடும்பம் நடத்திய எனக்கு ....ஆக இருவருக்கும்தான் ...."
" எந்த சாபத்திற்கும் விமோசனம் உண்டில்லையா பிரவீணா ...? "
குமரேசன் வேதனையோடு கேட்டான் .

" உண்டுதான் .உங்கள் மீதான நம்பிக்கை எனக்கு உறுதியாகும் வரை .எனக்கான நம்பிக்கையை நீங்கள் ஏற்படுத்தும் வரை ...."

" நான் கல்மிசமற்ற சுத்தமான மனதோடு இருப்பதினால் , விரைவிலேயே நம் இல்லற வாழ்வை எதிர்பார்த்து ...செய்த தவறுக்குரிய தண்டனையாய் இதனை மனமார ஏற்றுக்கொண்டு அழைக்கிறேன் .வா பிரவீணா நம் வீட்டிற்கு போகலாம் ...." கைகளை அவள்புறம் நீட்டினான் .

https://telegram.me/aedahamlibrary

" திவ்யா கிளம்பும்மா .நம் வீட்டிற்கு போகலாம் ..." குரல் கொடுத்தபடி நீட்டிய அவன் கைகளை கண்டுகொள்ளாமல் வெளியே நடந்தாள் பிரவீணா .

27

கோடை வெம்மையின் வெளுத்த பூக்களை
அந்த ஒரு கோடை இரவே அறிமுகப்படுத்தியது ,
முடிவற்றதாக வேண்டுமென என விரும்பும்
மனதினையும் ...
இமைக்குள் வெயில் மறைக்கும் வித்தையையும்
அதன் பிறகுதான் கற்றுக்கொண்டாள்
,அடர் வெக்கை நாளொன்றில்
இதழோடு இதழுரசி தீயொன்று வளர்த்த
அந்தக் கணத்திலிருந்துதான்
இவையெல்லாமே ....

அந்த மரத்தில் பச்சைக்கிளிகள் கூடு கட்டியிருந்திருக்கின்றன. இப்போது குஞ்சு பொரித்து விட்டன போல .பின்பக்கம் வந்துமே கீச் கீச்சென்ற சத்தம் .ஏதோ வினை முடித்த திருப்தி நிலவும் மனத்துடன் அந்த வேப்பமரத்தடி கல்லில் அமர்ந்து அந்த சத்தங்களை ரசித்துக்கொண்டிருந்தாள் மீரா .

" மீரா ...உன்னை வீடு முழுவதும் தேடுகிறேன் .இங்கே என்ன பண்ணுகிறாய் ...? " வந்து நின்றான் நந்தகுமார் .

" கிளிங்க ...மரத்தில் கூடு கட்டியிருக்குது .பாருங்க ஒரே சத்தம் ...இத்தனை சத்தத்திற்கு ஒரு கிளி கூட கண்ணில் பட மாட்டேங்குதேன்னு பார்க்கிறேன் .சும்மா மின்னல் மாதிரி அங்கிட்டும் ...இங்கிட்டும் பறக்குது .முழுதா கண்ணில் பட மாட்டேங்குதே ..." குறை சொன்னபடி அமர்ந்திருந்த கல்லின் மேலேறி நின்று எட்டி  பாரத்தாள் .

" கிளிதானே ..இதோ இங்கே இருக்குது பாரு ..." அவள் இடையை பற்றி தூக்கியவன் தாழ்வாக இருந்த கிளையொன்றில் அவளை அமர வைத்தான் .

" அங்கே பார் கண்ணா ..." அவள் முகவாயை பற்றி முகத்தை நிமிர்த்தி மேலே  காட்டினான் .

https://telegram.me/aedahamlibrary

அவன் காட்டிய இடத்தில் சிறு குஞ்சாய் ஒரு கிளி அமர்ந்து சிவப்பு அலகால் உடல் கோதிக்கொண்டிருந்த்து .இடையிடையே சிறகுகளை படபடத்து பறக்க முயற்சி செய்த்து .

" ஹை ....."இரு கைகளையும் கன்னம் தாங்கி வியந்தவள் ...

" ஏங்க ...உங்க போன் குடுங்க ...போட்டோ எடுக்கலாம் ...." அவன் சட்டை பாக்கெட்டிலிருந்து போனை எடுத்தவள் போட்டோ எடுக்க துவங்கினாள் .

இரண்டொரு போட்டோக்களுக்கு அவளுக்கு போஸ் கொடுத்த அந்த குஞ்சு , பிறகு சலித்தாற் போல் அவளை முறைத்துக்கொண்டு குட்டிச் சிறகடித்து பறந்து போய் மரப்பொந்தொன்றுக்குள் புகுந்து கொண்டது .

" ப்ச்  ..." ஏமாற்றத்துடன் எடுத்த போட்டோக்களை பார்த்தவள்

கணவனிடமும் அதை காட்ட திரும்பினாள் .
தாழ்ந்த கிளையொன்றில் அமர்ந்து மேலே அண்ணாந்து போட்டோ எடுத்துக் கொண்டிருந்தவளை கீழே நின்று கொண்டு அவன்

பார்த்தவிதம் ....அந்த பார்வை ....இன்னமும் அவள் இடையை வருடியபடியிருந்த கரங்கள் ....

சட்டென மேலிருந்து குதித்தாள் .

" ஏய் ...அதற்குள் ஏன் இறங்கினாய் ...? " ஏமாற்றமாய் கேட்டான் .

" சை ...நீங்களும் ..உங்கள் பார்வையும் ..." திடீரென மேனி முழுவதும் பரவி மின்சாரம் பாய்ச்சிக் கொண்டிருந்த மின்னலை ..வெளிக்காட்டாமல் சமாளிக்க...உள்ளே ஓடினாள் .

" இவ்வளவு சீக்கிரம் இந்த பிரச்சினை முடியும்னு நினைக்கலைம்மா ...."

ஹாலில் அமர்ந்து சுந்தரியுடன் பேசிக்கொண்டிருந்தார் சண்முகசுந்தரம்

.இவர் எப்போது வந்தார் என நினைத்தபடி ...

" வாங்க பெரியப்பா ...என்ன சாப்பிடுறீங்க ...? " விசாரித்தாள் .

" எல்லாம் உங்கள் பேச்சுத்திறன் தான் அண்ணா .நிச்சயம் நீங்கள் மாப்பிள்ளை மனதிற்கு உரைக்கிற மாதிரி சொல்லியிருப்பீங்க . அதை மாப்பிள்ளை தனக்குள்ளாக யோசித்து பார்த்து இந்த முடிவிற்கு வந்திருப்பார் .உங்கள் திறமையை தவிர ..இதில் வேறு ஒன்றுமில்லை அண்ணா ...." அண்ணனின் தலையில் கூடை கூடையாக பூக்களை கொட்டிக் கொண்டிருந்தாள் சுந்தரி .

இதென்ன அத்தைக்கு என்ன நடந்தாலும் அதற்கு அண்ணன்தான் காரணமா ...உள்ளே வந்து நின்ற கணவனின் முகம் பார்த்தாள் .அவன் தன் உதட்டின் மேல் விரல் வைத்து காட்டினான் .எதையும் சொல்லவேண்டாமாம் ....போயேன் ...எனக்கென்ன ...என தோள்களை குலுக்கியபடி உள்ளே போனவளிடம் ....

" எனக்கு டீ கொண்டு வாம்மா ...மிருணாவிற்கு காபி ...," என்றார் சண்முகசுந்தரம் .

மிருணாவா ....அவளுமா வந்திருக்கிறாள் .எங்கே காணோம் ....யோசித்தபடி விழிகளை சுழற்றிய போது அவர்களுடைய படுக்கை அறையினுள்ளிருந்து வெளியே வந்தாள் மிருணாளினி .

குத்தீட்டி ஒன்று அடிவயிற்றில் தைத்தது போலிருந்தது மீராவிற்கு.வந்ததும் ...எதற்காக எங்கள் அறைக்குள் போனாள் .மனம் மூண்ட எரிச்சலில் .வா என்று அழைக்கவும் மனமன்றி லேசாக இதழை

மட்டும் இழுத்து இளித்து விட்டு அடுப்படிக்குள் நுழைந்து கொண்டாள் .

பாலை சுட வைத்தபடி அடுப்பு நெருப்பை பார்த்தவளுக்கு சற்று முந்திய கணவனின் பார்வை நினைவு வந்தது .என்ன பார்வை அது .... நடுக்கும் குளிரில் இதோ இப்படித்தான் அடுப்பு அருகே நிற்பது போலிருந்தது .பார்வையாலேயே இவ்வளவு வெப்பத்தை உடம்பிற்கு கடத்துகிறானே ...வெட்கத்துடன் நினைத்த மீரா கட்டின்றி பாயும் தன் நினைவுகளை கட்டுக்குள அடக்க தன் கையிலிருந்த கணவனின் போனை ஆன் செய்தாள் .அந்த கிளி போட்டோவை பார்க்க எண்ணினாள்.

போன் பாஸ்வேர்டு கேட்டது .அப்போது என்ன சொன்னார் ?....யோசித்தவளருகே ....

" 9...8...7...3 ...அதுதான் பாஸ்வேர்டு போட்டு பாரு ...." என்று வந்து நின்றாள் மிருணாளினி .

அவளை வெறித்தபடி கை நடுங்க நின்றிருந்தவளிடமிருந்து போனை வாங்கியவள் தானே நம்பரை அழுத்தி போனை திறந்தாள் .

" இந்த நம்பர் எங்கள் இரண்டு பேருக்குமிடையே சீக்ரெட் கோட் தெரியுமா ...? " கண்களை சிமிட்
டினாள்.

https://telegram.me/aedahamlibrary

காது கேட்காதவள் போல் டீயை பில்டர் பண்ண தொடங்கிய மீராவின் உள்ளம் உலைக்களமாக கொதித்து கொண்டிருந்தது .

சலனமின்றி போனை நோண்டிக் கொண்டிருந்த மிருணாளினி ..அத்தான் ....பொத்தான் ...என ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள் .தன் செவிகளை தானே செவுடாக்கிக் கொண்டு கப்புகளை டிரேயில் அடுக்கிய மீரா , திடீரென மிருணாளினியின் பேச்சு நின்று போனதை உணர்ந்து அவளை பார்த்தாள் .

மிருணாளினி விழிகள் நிலை குத்தியது போல் போனை பார்த்தபடி இருந்தாள் .எட்டி போனை பார்த்த மீராவிற்கு உடல் முழுவதும் புன்னகைக்க வேண்டும் போலிருந்தது .அவள் ...அந்த போனில் ...நந்தகுமாரும் , மீராவுமாக சேர்ந்து அன்று எடுத்துக்கொண்ட அந்த போட்டோவை பார்த்தபடி இருந்தாள் .

" புருசன் ...பொண்டாட்டி போட்டோவை அடுத்தவர்கள் பார்க்கலாமா மிருணா .அதுவும் நீங்கள் இன்னமும் மணமாகாத சின்னபெண்

.எங்களின் அந்நியோன்யம் உங்களுக்கு எதற்கு ...!? " கேலியாய் சொன்னதோடு போனையும் பிடுங்கிக்கொண்டு காபி தம்ளர்களோடு நகர்ந்தாள் .

" இந்தாங்க உங்க போன் ..." கணவனிடம் நீட்டியவள் அவன் கைகளில் காபி கப் இருந்ததால் ...தானே அவன் பாக்கெட்டில் சொருகினாள் , ஓரக்கண்ணால் முகம் வெளிறி இருந்த மிருணாளினியை பார்த்தபடி .

" மிருணாவிற்கு மாப்பிள்ளை பார்த்தீர்களாண்ணா ...? " கேட்ட சுந்தரிக்கு ...

" என் மகளுக்கு அமெரிக்க மாப்பிள்ளை பார்த்திருக்கறேன் ...." என்ற சணமுகசுந்தரம் ஓரக்கண்ணால் நந்தகுமாரை ஆராய்ந்தார் .

" அப்படியா மாமா .அப்போது கல்யாணத்திற்கு பிறகு மிருணா அமெரிக்கா போய்விடுவாளா ...? " கவனமாக தன் மீசையில் படிந்த காபி நுரையை சலனமின்றி துடைத்த கணவனை கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்த்து மீரா .

இவன் கல்லுளிமங்கன் .இவனது ரியாக்சனை பார்க்க வேண்டுமென்றே ,சண்முகசுந்தரம் இதை கூறியது போலிருந்த்து மீராவிற்கு .அதையே தானும் உணர்ந்தே இது போலொரு பதில் சொன்னான் நந்தகுமார் .

" ஆமாம் அமெரிக்கா போய்விடுவேன் .இங்கே இருக்க எனக்கு பிடிக்கவில்லை .உங்கள் யார் முகத்தை பார்க்கவும் எனக்கு பிடிக்கவில்லை .அப்பா ...இப்போது சொல்கிறேன் உடனே அந்த மாப்பிள்ளையை முடிவு பண்ணுங்கள் .நான் ஒரேடியாக போய்விடுகிறேன் எல்லோரும் நிம்மதியாக இருங்கள் ..." ஆங்காரமாய் கத்திவிட்டு வெளியே ஓடினாள் மிருணா.

" மிருணா ...நில்லும்மா ..." கத்தியபடி சண்முகசுந்தரம் பின்னாலேயே போய்விட ..சுந்தரி அழத் துவங்கினாள் .

ஒரு நிமிடம் அம்மாவை பார்த்த நந்தகுமார் பிறகு எழுந்து அவளருகே அமர்ந்து அவளை சமாதானப்படுத்த தொடங்கினாள் .

இரவு...

சன்னல் வழியே வேப்ப மரத்தை பார்த்து நின்றிருந்த மீரா..பின்னிருந்து அவளை தாபத்துடன் அணைத்த கணவனின் அணைப்பை எதிர்பார்த்தே இருந்தாள் .இன்னமும் முழு ஒப்புதலற்ற மனமிருந்தாலும்

...அன்று போல் கணவனை தள்ளும் மனதுமில்லாததால் ....குழைந்த உடலை மனதுடன் சேர்க்க முயற்சித்தாள் அவள் .

சன்னல் வழியே கண்ணில் பட்ட வேப்பமரக் கிளை அன்று மாலை அவளை நந்தன் அந்த கிளையில் ஏற்றி அமர வைத்ததை நினைவூட்ட ,அந்த நேரம் மிருணாளினி இந்த அறையினுள்தானே இருந்தாள் .ஒருவேளை எல்லாவற்றையும் பார்த்திருப்பாளோ ....? அதுதான் அவ்வளவு வேகமோ ...?

சன்னல் கதவுகளை மூடினான் நந்தகுமார் .

" ஏன் பூட்டுகிறீர்கள் ...? "

" வா .சொல்கிறேன் ." அவளை அள்ளி போய் கட்டிலில் கிடத்தினான் .

"மீரா ...நிறைய நாட்களை வீணாக்கி விட்டோம் . இனி ஒரு நொடியை கூட வீணாக்க போவதில்லை.... " கைகளில் ஆரம்பித்து கழுத்தடியில் வரிசையாக பதித்த முத்தங்களை கன்னத்திற்கு மாற்றியவன் .... பேச முயன்ற மீராவின் இதழ்களையும் முடக்கினான் .

" உன்னை பேசவிட்டால் , கண்டதையும் யோசித்து பேசி வைப்பாய் .அது எனக்குத்தான் பாதகமாக மாறி தொலையும் ..." முணுமுணுத்தபடி வேகமாக அவளுள் மூழ்க ஆரம்பித்தான் .

https://telegram.me/aedahamlibrary

முதலில் மிருணாளினி ...போன் ...பாஸ்வேர்டு என ஒவ்வொன்றாக சுற்றி வந்த மனதில் நேரமாக ஆக கணவனும் ...அவன் கொஞ்சல்களுமே நிரம்பி தளும்ப எல்லா நெருடல்களும் மறந்து கணவனை மனதிலும் , உடலிலும் நிரப்பிக்கொள்ள ஆரம்பித்தாள் மீரா .

28

பெருவிரல் நகம் வரை பற்றியெரிந்தபடி ,
நிலவுக்கு பின்னான சூரியனை
விரும்ப தொடங்கியதும்
சமர்த்தென பாராட்டியபடி உடலோடும்
வியர்வை ஓடைகளின் மீதான
விருப்பும் அன்றிலிருந்துதான்

நீ என்னை பற்றிய அன்றிலிருந்துதான்

" கொஞ்ச நேரம் இப்படி சாய்ந்தே உட்கார்ந்திருங்கள் பாட்டி . சாப்பாடு உள்ளே இறங்கட்டும் .ஒரு பத்து நிமிடத்தில் மாத்திரை தருகிறேன் ..." பாட்டி சாப்பிட்ட பாத்திரங்களை ஒதுக்கினாள் மீரா.

" என்னம்மா ...உன் புருசன் என்ன சொலகிறான் ..? "

" என் புருசனா ...? உங்க பேரனில்லையா பாட்டி ....? "

" என் பேரனா இருக்கிறதோடு உனக்கு புருசனாத்தான் அதிக நேரம் இருக்கிறான் போல ...? "

பாட்டியின் கேலியில் மீராவின் முகம் சிவந்த்து .பாட்டியின் தலையணையை சரி செய்தாள் .

" என்னம்மா ..இப்போது உனக்கு ஒழுங்கான புருசனா நடந்துக்கிறானா ....? " பொருள் பொதிந்த பாட்டியின் கேள்விக்கு ...நேரடி பதில் தர கூச்சப்பட்டு தலை குனிந்து படுக்கை விரிப்பை சரி செய்தபடி....

" ம் ..." என்றாள் .

https://telegram.me/aedahamlibrary

" இவ்வளவுதான்மா வாழ்க்கை .இனி அவனுக்கு ஒரு பிள்ளையையும் பெத்துட்டீன்னா ...எங்கேயும் போகமாட்டான். உன் முந்தானையை பிடிச்சிட்டு சுத்தி சுத்தி வருவான் ...."

சுத்தி வருவான்தான் ..இது போல் பிள்ளை பெற்று அதனால் புருசனை இழுத்து வைத்துக்கொள்ளும் சாதாரண வாழ்க்கை என்ன வாழ்க்கை ...? நம் நாட்டில் எல்லா பெண்களுக்கும் கிடைக்கும் வாழ்க்கைதான் இது .ஆனால் மீரா விரும்பியது ...உன்னால் நான்.... என்னால் நீ ...என ஒருவரில் ஒருவர் கரைந்து வாழும் ஒரு முழுமையான காதல் வாழ்விற்கு ...

ஆனால் அம்மாவிற்காக ....உறவினரின் விசாரிப்பிற்காக ...பிள்ளை பெற்றுக் கொள்வதற்காக என ஊருக்கு காட்ட வாழும் ஒரு வாழ்வு இது .இதனுடன் என்ன முயன்றும் மீராவால் முழு மனதுடன் ஒன்ற முடியவில்லை .

," அவர் அம்மாவே சொல்லிவிட்டார்களே .பிறகு என்னோடு வாழாமல் இருப்பாரா பாட்டி ..? "

மீராவை உற்று நோக்கினாள் பாட்டி .

" சுந்தரி என்ன சொன்னாள் ...? "

" விரைவில் எனக்கு பேரப்பிள்ளை வேண்டும் என உறுதியாக உத்தரவிட்டு சொல்லித்தான் அவரை அறைக்குள் அனுப்பினார்கள் .அம்மா சொல்லை அவர் நிறைவேற்றினார் ...." வறண்ட குரலில் கூறினாள் .

உண்மையில் அன்று நடந்த்தும் அதுதான் .அன்று இவர்கள் இருவரையும் பூஜையறைக்குள் அழைத்த சுந்தரி இருவர் நெற்றியிலும் திருநீறு பூசிவிட்டு ....சீக்கிரமாக ஒரு பேரக்குழந்தை வேண்டுமென சொல்லி அனுப்பி வைத்தாள் .

அன்னையின் கோரிக்கையை மகன் உடனே தலையிலேற்றி செயலாற்றுவான் என தெரிந்தே , அன்று மீரா கணவனை மறுக்க எண்ணவில்லை .அத்துடன் அன்று மிருணாளினி கல்யாணம் முடித்து அமெரிக்கா போக போகிறேன் என்றதும் மீராவை கொஞ்சம் நெகிழ்த்தியிருந்த்து .எனவே எளிதாக கணவனின் பிடியில் மனைவியாகிவிட்டாள் .

" அம்மாவிற்காகத்தான் உன்னுடன் இல்லற வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறான் என்கிறாயா ...? " பாட்டி நேரடியாகவே கேட்டார் .

" எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது ...."

" இல்லைம்மா மீரா ...நீ எங்கேயோ தப்பு செய்கிறாய் "

" தப்பெல்லாம் இல்லை பாட்டி .எல்லாம் சரிதான் .என் வாழ்க்கை இப்போது சரியான பாதையில்தான் போய் கொண்டிருக்கிறது .நீங்கள் வாயை திறங்கள் .மாத்திரை தருகிறேன் ...." மாத்திரை போட்டு நெஞ்சை நீவி விட்டாள் .

" உடம்பெல்லாம் ஊறலாக இருக்கிறதும்மா .அந்த மருந்தை எடுத்து தேய்த்து விடுகிறாயா ....? " படுக்கையிலேயே இருப்பதால் உடம்பு அடிக்கடி ஊறும் .அதற்கு பாட்டி ஒரு மருந்து தடவுவார் .

" சரி பாட்டி .மருந்து எங்கே உள்ளே இருக்கிறதா ...? "உள் ரூமில் மேலே செல்பில் இருந்த மருந்து பாட்டிலை சின்ன ஸ்டூலை போட்டு ஏறி எடுத்துக் கொண்டிருந்தாள் .

" நான் உதவட்டுமா மீரா ...? கிசுகிசுப்பாய் கேட்டபடி பின்னால் வந்து

https://telegram.me/aedahamlibrary

நின்ற நந்தகுமார் , அவள் திரும்பும் முன் அந்த சிறிய ஸ்டூலில் ஒற்றை காலை ஊனி தானும் ஏறியிருந்தான் .தடுமாறியவளின் இடையை தாங்கி தன்னுடன் சேர்த்துக் கொண்டான் .

" எதை எடுக்க வேண்டும் மீரா ...? " கொஞ்சலாய் கேட்டபடி அவள் கன்னத்தில் மூக்கை உரசினான்

" என்னங்க இது ...அங்கே பாட்டி இருக்காங்க .விடுங்க ..." அவனை தள்ள முயன்றாள் .

" பாட்டி தூங்குறாங்க ...." ஆவலுடன் கன்னத்தில் புதைந்தன அவன் இதழ்கள் .

" இல்லை ...இப்போ வரை பேசிட்டிருந்தாங்க .சும்மாதான் கண் மூடியிருப்பாங்க .விடுங்களேன் ..." தவித்தாள் .

" அப்போது ஒரு முத்தம் கொடு .விடுறேன் ...." பேரம் பேசினான் .

" சரி ...கொடுத்ததும் போயிடனும் ..." உதடு குவித்து நெருங்கிய மனைவியின் இதழ்களில் விரல் வைத்து தடுத்தான் .

https://telegram.me/aedahamlibrary

" ஐய்யே ...உப்புச்சப்பில்லாத இந்த முத்தம் யாருக்கு வேண்டும் .எனக்கு அந்த முத்தம் வேண்டும் ...."

கணவனும் , மனைவியுமாக காதல் விளையாட்டில் கலந்திருக்கும் ஒவ்வொரு நேரத்தின் முடிவிலும் , நந்தகுமார் மீராவின் முத்தத்தில் திருப்தியடைவதில்லை .ஒவ்வொரு முத்தத்திலும் அவளது அந்த முதல் முத்தத்தை எதிர்பார்த்தான் ...கேட்டான் .

மீராவும் முயற்சித்தாள் .ஆனால் ...கள்ளமில்லாமல் , உறுத்தலில்லாமல் ...முழுக்க முழுக்க கணவன் மீது காதல் மட்டுமே பொங்கியிருந்த அந்த நேரத்தில் அவள் கொடுத்த முத்தம் அது .

இப்போதோ ..மனம் நிறைய குழப்பங்களுடன் ...ஆழ்ந்த தாம்பத்யத்தில் கூட கணவனுடன் ஒன்ற முடியாத நிலையில் அவள் அளிக்கும் முத்தங்கள் மனமார இருப்பதில்லை .சீக்கிரமே அதனை உணர்ந்து கொண்ட நந்தகுமார் அந்த முதல் முத்தத்திற்காக அவளை வேண்டியபடி இருந்தான் .

அடுத்த அறையில் பாட்டியை வைத்துக்கொண்டு காதல் பொங்கும் ஒரு முத்தத்திற்காக வேண்டும் கணவனின் குழந்தைமையில் சிரிப்பு வந்து

மீராவிற்கு .

" பட்டப்பகலில் ...பாட்டி பக்கத்திலே உப்பும , உரைப்புமா ...முத்தம் கேட்டால் எப்படி கிடைக்கும் ...? " சீண்டினாள் .

" ஆமாம் ...நடுராத்திரியில் யாரும் இல்லாத போது மட்டும்  அந்த முத்தம் கிடைக்குதாக்கும் ...? உனக்கு கொஞ்சம் கூட என் மேல் காதலே இல்லை மீரா ..." சலித்துக் கொண்டான் .

" காதல் இல்லாதவங்கதான் புருசனை இப்படி கட்டிப்பிடிச்சுக்குவாங்களா ....? " கணவனின் தோளை அணைத்தபடி அவன் மீசையை வருடினாள் .

" போ ...சொன்னதிற்காக ...ஒண்ணும் நீ இதெல்லாம் செய்ய வேண்டியதில்லை ..." அவளை தள்ளினான் .

" ஆமாம் ..பாட்டிக்கு மருந்து தடவனும் ..." கீழே இறங்கிய மனைவியுடன் சேர்ந்து உரசியபடி இறங்கியவன் ...

" நீதான் எதற்கும் உதவ மாட்டேனென்கிறாய் ...நானாவது ..." என அவள் இதழ்களை நெருங்கினான் .

https://telegram.me/aedahamlibrary

" டேய் ...நந்தா ...." வெளியிலிருந்து பாட்டியின் குரல் .

" பா ...பாட்டி ..." நொடியில் காதல் வடிய தடுமாறினான் .

" என்னடா பண்ற ....? "

" அ...அது மருந்து பாட்டில் ...தேடி ...இதோ ...கிடைச்சிடுச்சு ..." பாட்டிலுடன் வெளியே போனான் .

" முழிச்சிட்டீங்களா பாட்டி ...? "

" நான் எப்போடா தூங்கினேன் ....? "

" ஓ...அ...அப்படியா ...நா ...நான் எனக்கு கொஞ்சம் வேலை இருக்குது .வர்றேன் ...." வெளியே ஓடிவிட்டான் .

" டன் டன்னா அசடு வழியுது உன் புருசன் மூஞ்சியில் ..." பாட்டி கேலி செய்ய மீரா சிரித்தாள் .

" பட்டப்பகல்ல பாட்டி பக்கத்திலிருந்தாலும் உன்னை பார்த்ததும் காதல் எண்ணம் வருகிறது உன் புருசனுக்கு .நீ அம்மாவிற்காக உன்னுடன்

வாழ்கிறானென்கிறாய் ...இது சரியில்லைம்மா மீரா .உன் எண்ணத்தை மாற்றிக்கொள் ...."

இது மீராவிற்குமே நெருடல்தான் .ஆசையோடு நந்தன் அவளை நெருங்கும் ஒவ்வொரு நேரமும் கணவனையும் , மனைவியையும் தவிர வேறு எண்ணம் அவனுக்கு இருப்பதாக தோன்றாது .கடமைக்கானதாகவோ , அந்த நேரத் தேவைக்கானதாகவோ அந்த அணைப்பு தோன்றாது .இவன் எப்படி இவ்வளவு நாட்களாக என்னை தொடாமல் தள்ளியிருந்தான் ...ஒவ்வொரு முறையும் மீராவின் மனதில் எழும் ஆச்சரிய கேள்வி இதுதான் .

"சரிதான் பாட்டி .." என பாட்டிக்கு ஒப்புதல் பதிலளித்து விட்டாலும் நெருஞ்சி ஊறும் மீராவின் அடிமனது அப்படியேதான் இருந்த்து ஊஞ்சலாக ஊசலாடியபடி .

ஏனென்றால் இவர்கள் இருவருக்குமிடையே மிருணாளினி என்ற முள் இன்னமும் கூர்மையாக குத்தியபடியேதான் இருந்த்து .அடிக்கடி வீட்டிற்கு வருபவள் ...தவறாமல் வேலி மரத்தின் விதைகளை மீராவின் நெஞ்சில் தூவி விட்டே போனாள் .

https://telegram.me/aedahamlibrary

வேர்பிடித்து வளர்ந்து நிற்கும் அந்த முள் மரத்தினை வெட்டியெறியும் வகையறியாது தவித்துக் கொண்டிருந்தாள் மீரா .

## 29

மற்றுமொரு அசுப நாளென்ற
மனக்கனத்தில் ,
பிசிறடித்து விட்ட வார்த்தைகளை
சீர் செய்ய முடியாது விழித்தபடி ,
சிற்றெறும்பு சினத்தில் சீறும் எனை ..
பல் முளைக்கா சிசு கடி போல்
கையாள்கிறாய்
சூடான காபி ...சுவையான சூடு ...
மற்றும் இதமான உன்னுடன் ,
கழுத்தோர இதழ்களில் புதைந்து கொண்டது

காணாமல் போய்விட்ட ஒரு கோபம் .

" அந்த மிருணாளினிக்கும் உங்களுக்கும் என்ன பாட்டி பிரச்சினை ...? " ஒருநாள் பாட்டியிடம் மெல்ல கேட்டாள் .

" அவளே பிரச்சினைதான் ..." பாட்டி பெருமூச்செறிந்தார் .
" பிரச்சினைதான் முடிந்துவிட்டதே .இனி யாரிடமும் சொல்ல வேண்டாமென நினைத்தேன் .ஆனால் உன்னிடம் சொல்லத்தான் வேண்டும் ..."

" சுந்தரிக்கு அவள் அண்ணன் குடும்பத்தார் மேலிருக்கும் அபிமானம் உனக்கு தெரியுமில்லையா ...? அது அளவில்லாமல் இருப்பதாக நினைத்து குரு அடிக்கடி அவளுடன் சண்டை போடுவான் .அவன் பேசாமல் இருந்திருந்தால் நாளனடைவில் அந்த அபிமானம் குறைந்து சுந்தரி சரியாகியிருப்பாள் .அவன் செய்யாதே ...செய்யாதே என்க சுந்தரிக்கு செய்யும் ஆர்வம் வந்த்து .அவள் அண்ணனை மட்டம் தட்ட ...தட்ட அவளுக்கு அண்ணன் தனக்காகவே பிறந்த தேவதூதன் என்ற எண்ணம் வந்து அவனை அப்படியே பாவிக்க தொடங்கினாள்.இதனால் இருவருக்கும் அடிக்கடி சண்டை .

https://telegram.me/aedahamlibrary

இந்த சூழ்நிலையில் தான் அண்ணன் மகளை தன் வீட்டு மருமகளாக்கி கொண்டால் , தனக்கும் அண்ணனுக்குமான உறவு நீடிக்குமென்ற எண்ணத்துடன் நந்தனுக்கும் , அந்த மிருணாளினிக்கும் திருமணம் பேசினாள் சுந்தரி .

அப்போது எனக்கும் மிருணாளினியை மறுக்க தோன்றவில்லை .மிக அழகான பெண் .இனிய பேச்சுக்களுடன் பட்டாம்பூச்சி போல வீட்டை சுற்றி வந்தாள் .நந்தனுக்குமே அவள் மீது ஒரு அபிப்ராயம் இருந்தாற் போல் இருந்த்து .அதனால் இந்த திருமணத்திற்கு சம்மதித்தேன் .குருவையும் சம்மதிக்க வைத்தேன் .

நாங்களாக வீட்டிற்குள் வாய் வார்த்தையாக பேசி வைத்து ...மாளவிகா திருமணத்திற்கு பின் இவர்கள் திருமணம் என்று முடிவு செய்தோம் .அப்போது ஒருநாள் மிருணாளினியும் , அவள் அம்மாவும் நான் அறைக்குள் படுத்திருப்பதை அறியாமல் பேசிக்கொண்டிருந்தனர் .

இந்த வீட்டிற்கு மருமகளாக வந்த்தும் பேசிப்பேசியே சீக்கிரமே என்னை மேலே அனுப்பி விடுவதாகவும் ,குருநாதனை சாமியாராக்கி வீட்டை

விட்டு விரட்டி விடுவதாகவும் , சுந்தரி கை , கால்களை முடக்கி படுக்கையில் தள்ளி விடுவதாகவும் ...பிரவீணா , மாளவிகாவை இந்தப் பக்கமே வரவிடாமல் வைத்து விடுவதாகவும் , சசியை ஹாஸ்டலில் சேர்த்துவிட்டு இந்த வீட்டிற்குள் அவள் மட்டுமே மகாராணியாக வளைய வரப் போவதாக அவள் அம்மாவிடம் பெருமை பேசிக்கொண்டிருந்தாள் "

" பாட்டி ..." அதிர்ந்தாள் மீரா .

" எனக்குமே அன்று அதிர்ச்சிதான்மா .சுந்தரியின் அண்ணனிற்கு அதற்கு முன்பெல்லாம் மகளை இங்கே மணமுடித்து தரும் எண்ணமில்லை .வீடு வீடாக சென்று பொருட்களை விற்கும் குருவின் தொழிலை எப்போதும் கொஞ்சம் கேவலமாகவே பார்ப்பான் .ஆனால் எப்போது நந்தன் அவன் தொழிலில் மேலேற ஆரம்பித்தானோ அப்போதே தன் மகளை இங்கே மணம் முடிக்கும. எண்ணம் சண்முகசுந்தரத்திற்கு வந்துவிட்டது ..."

" அதில் தப்பென்ன பாட்டி ...தன் மகள் வசதியான இடத்தில் வாழ வேண்டுமென்பது ஒரு அப்பாவின் ஆசைதானே ..."

அவள் கன்னத்தை நெட்டி முறித்த பாட்டி ..." இதுதான் மீராவிறகும் , மிருணாவிற்கும் இடையிலுள்ள வித்தியாசம் .உனக்கு பிடிக்காதவள் என்றாலும் அவள் பக்க நியாயத்தை உணர்கிறாய் பார் .அந்த மிருணா தப்பு தப்பாக செய்துவிட்டு அதுதான் சரியென அடம்பிடிப்பாள் ..நான் சண்முகசுந்தரத்தை தப்பு சொல்லவில்லை .சுந்தரி நினைப்பது போல் அவள் அண்ணன் பாசம் என்னவானாலும என் தங்கச்சி ..என்று அதிகப்படி அளவில் இல்லை ...தன் மகளுக்கு வசதியான மாப்பிள்ளை என்ற சாதாரண கணக்கில்தான் இருந்த்து என்கிறேன் ..." என்றாள்.

" ஆனால் இதனை அத்தை உணர்ந்து கொள்ளவில்லை ..."

" அதேதான் ...அதை உணரவைக்கும் தெம்பும் எனக்கில்லை .ஏனென்றால் மனம் முழுவதும் பேசி வைத்திருக்கும் திருமணத்தை நிறுத்துவது தப்பில்லையா என்ற குழப்பம் நிரம்பியிருந்த்தாலோ ...என்னவோ ...பாத்ரூமில் பாதம் பிறழ்ந்து இடுப்பில் அடிபட்டு கட்டிலில் விழுந்துவிட்டேன் .பாதி வேலை இப்போதே முடிந்த்து என அம்மாவும் , மகளும் என் படுக்கையை கிண்டல் பண்ணி சிரிக்கவும் ஒரே மனதாக திருமணத்தை நிறுத்தவேண்டும் என நினைத்து ...எனக்கு மனதில் சரியாக படவில்லை ...அது ...இதுவென ஏதேதோ

https://telegram.me/aedahamlibrary

காரணங்களை குருவிடம் சொல்லி அந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட்டேன் ..."

" நான் செய்த்து ஏதோ புண்ணிய காரியம் போல , அதனால்தான் அந்தக் கடவுள் உன்னை எங்கள் குடும்பத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார் ...." மீராவின் மோவாயை தொட்டு முத்தமிட்டார் பாட்டி .

இதன்பிறகு அந்த மிருணாளியின் வாழ்வை தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ ...என்ற உறுத்தல் மீராவினுள் மறைந்த்து .இந்த வீட்டில் வாழும் தகுதியற்றவள் மிருணாளினி என நினைத்துக்கொண்டாள் .

ஆனால் இதை உணரவேண்டியவர்கள் சுந்தரியும் , நந்தகுமாரும்தான் . ஆனால் சுந்தரிக்கோ அண்ணன் மகள் தேவதையாக தெரிந்தாள் .இன்னமும் அவள் உள்மனதில் இருந்த மிருணாளினியை மருமகளாக்கி கொள்ள முடியாத ஏக்கம் இடையிடையே அவளது செயல்களில் அவ்வப்போது வெளிப்பட்டபடி இருந்த்து .

நந்தனோ ...தான் தர தவறிய வாழ்வினால் மிருணாளினி படு துயரத்தில் இருப்பதாக எண்ணி அவளிடம் பரிதாபம் காட்டினான் .எனவே தன்னால் முடிந்த்தாக அவளுடன் , அவள் பேச்சுடன் ஒத்து போக எண்ணினான் .

https://telegram.me/aedahamlibrary

அதற்கேற்றபடி மிருணாவின் திருமணம் தட்டிப் போக ...மிருணாளினி ஆதரவு தேடி என அங்கே அடிக்கடி வந்து சுந்தரியையும் , நந்தகுமாரையும் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு ...மீராவை சொற்களால் குத்தி ,கிழித்துக் கொண்டிருந்தாள் .

" அத்தானுடன் தான் திருமணம் என்பது என் தலைவிதி போல .அதனால்தான் என் திருமணம் தள்ளிப் போய்கொண்டே இருக்கிறது என்பாள் .

" அதெப்படி உன்னை விரும்பாத இடத்தில் உன்னால் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்க முடிகிறது ...? என்றாள் .

" உன்னிடத்தில் நானிருந்தால் எப்போதோ ...என் அம்மா வீட்டிற்கு ஓடியிருப்பேன் ..." என்றாள் .

" இது என் வீடு ...நான் ஏன் போகவேண்டும் ...? "என்றாள் மீரா .

அவளருகில் வந்து அவள் கழுத்திலிருந்த தாலி செயினை கையிலெடுத்து

பார்த்துவிட்டு ...

" இதை வைத்துதானே ...என் வீடு என்ற உரிமை வந்த்து உனக்கு .இது மட்டும்தான் உன் கழுத்தில் இருக்கு .மற்ற உரிமையெல்லாம் என்னிடம்தான் இருக்கு .சீக்கிரமே இந்த உரிமையும் என் கழுத்திற்கு வரும் பாரேன் ..."

மிருணாளினியின் சவாலில் நடுங்கிவிட்டாள மீரா .

எப்போதும் அண்ணன் மகளை தெய்வமாக பார்க்கும் மாமியார் .அம்மாவை தெய்வமாக பார்க்கும் கணவன் .இவர்களிடையே மிருணாளினியின் எண்ணம் நிறைவேற மிக அதிக வாய்ப்புகள் இருக்கின்றனவே ....

அப்படியானால் தனது கதி ...கணவனை விட்டு ...இந்த வீட்டை விட்டு தன்னால் வாழமுடியுமா ...? மீராவின் உடல் நடுங்க தொடங்கியது .

" அத்தான் கார் வாங்க போகிறார் தெரியுமா ...?  .இன்று நானும் , அப்பாவும் அவருடன் போனோம் .நான்தான் காரை செலக்ட் செய்தேன் .முதலில் என்னைத்தான் கீ போட்டு ஸ்டார்ட் செய்து தரச்சொன்னார் தெரியுமா ...? என்றாள் ஒருநாள் .

https://telegram.me/aedahamlibrary

மீராவால் முழுதாக பொய்யென்று ஒதுக்க முடியவில்லை .கார் வாங்கப் போவதாக நந்தகுமார் சொன்னது உண்மைதானே ....

" இன்னைக்கு அத்தானும் , நானும் சினிமாவுக்கு போகிறோமே ...." பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தவளின் காதில் வந்து கிசுகிசுத்தாள் மிருணாளினி .

" பொய் ...நீ பொய் சொல்கிறாய் ..."

" பொய்யா ...நேரில் வந்து பார்க்கிறாயா ...? சூப்பர் ஸ்டார் கபாலி படம் ..." இவளிடம் ஒரு டிக்கெட்டை நீட்டினாள் .

கபாலி படம் ரிலீஸானதும் போக வேண்டுமென்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்த போது , இப்போது வேண்டாம் ஒரு வாரம் கழித்து போகலாம் .இப்போது ரசிகர்களின் கூச்சலாக இருக்கும் ...என்று நந்தகுமார்தான் கூறியிருந்தான் .இப்போது இவளுடன் போகிறானா ...?

" என்னோடு மட்டும் போகவேண்டும் ...என்றுதான் உங்களையெல்லாம் அடுத்த வாரத்திற்கு அத்தான் தள்ளினார் .என் தோழி ஒருத்திக்காகவும்

அத்தானையே டிக்கெட் எடுக்க சொன்னேன் .இதோ எடுத்து வந்துவிட்டார் .அவள் ஏதோ வேலையென வரவில்லையென்றுவிட்டாள் .உனக்கு சந்தேகமென்றால் நீ நேரிலேயே வந்து பார் ...எங்களுக்கு பத்தொம்பது , இருபது ..சீட் நம்பர் . டிக்கெட்டை அவள் கையில் திணித்துவிட்டு போய்விட்டாள் .

வேண்டாம் ...சந்தேகம் வேண்டாம . ...போக கூடாது ...எவ்வளவோ திடமுடன் நினைத்திருந்தாலும் கடைசி நேரத்தில் தன்னிடமே தோற்று ...வேகமாக சரியான நேரத்திற்கு ஸ்கூட்டியில் கிளம்பிவிட்டாள்.

அந்த பத்தொம்பது , இருபது ...மீரா இருந்த சீட்டிலிருந்து நன்கு பார்க்கும்படி இருந்த்து .தலையை குனிந்து முகத்தை பாதி மறைத்தபடி அந்த சீட்டையே பார்த்தபடி இருந்தாள் .பத்து நிமிடத்தில் அதில் மிருணாளினி வந்து அமர்ந்தாள் .வாட்சை பார்க்கவும் , போனை நோண்டவுமாக இருந்தாள் .மீரா நன்றாக குனிந்து கொண்டாள் .ஆனால் அவள் மீரா பக்கமே திரும்பவில்லை .அவள் பார்வை முழுவதும் வாசல் பக்கமே இருந்த்து .

தியேட்டரினுள் விளக்கணைத்ததும் இருளில் தடுமாறியபடி வந்து அமர்ந்த்து ....வெளிச்சமே இல்லாவிட்டாலும் ...கணவனை தெரியாதா ...மீராவிற்கு .விம்மல்கள் தெறித்து வெளியே வந்துவிடுமோ என பயந்து வேகமாக வெளியேறினாள் .
சுந்தரியிடம் தலைவலியென்று விட்டு அறைக்குள் வந்து படுத்தவள்தான் .அழுதழுது எப்போது தூங்கினாளோ ...தெரியாது .

" மீரா ...என்னடா ...? உடம்பு என்னசெய்யுது...? " கணவனின் இதமான வருடலில் மீராவின் உடல் விரைத்தது .

கையை எடுடா ...எனக் கத்த தோன்றிய மனதை அடக்கியபடி கண்ணை இறுக மூடியபடி படுத்து கிடந்தாள் .

" வெளியே போய்விட்டு வந்த்தும் தலைவலியென படுத்தாள் நந்து .இன்னும் சாப்பிடவில்லை .சுந்தரியின் குரலும் கேட்க ....இன்னமும் கண்களை இறுக்கிக் கொண்டாள் .

" ஏன் மீரா ...? கொஞ்சம் பால்சாதம் சாப்பிட்டு மாத்திரை போட்டுக் கொள்கிறாயா ...? "

" நான் குழைவாய் பிசைந்து எடுத்து வரவா மீரா ...? என்றாள் சுந்தரி .

" கொஞ்சநேரம் என்னை தனியாக விடுங்களேன் ..." தனை மறந்து கத்தினாள் மீரா .

" ச...சரிம்மா மீரா .நீ தூங்கு ..." சுந்தரி போய்விட்டாள் .

" என்ன மீரா ...எவ்வளவு கோபமென்றாலும் அம்மாவை இப்படி பேசலாமா ...? " வருடிய கணவனின் கையை பட்டென தட்டிவிட்டாள் .
" அம்மா ...அம்மா ...இதைத் தவிர வேறு எண்ணமே உங்களுக்கு கிடையாதா ...? அம்மா என்னை ஒதுக்கி வைத்துவிடச் சொன்னால் உடனே ஒதுக்கி வைத்து விடுவீர்களா ...? " ஆத்திரமாக கேட்டாள் .
" என்ன உளறுகிறாய் ...? அம்மா ஏன் அப்படி கேட்க போகிறார்கள் ..? "
" ஏதோ சூழ்நிலையில் கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம் .அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள் ...? "

" ம் ...நல்லவேளையாப் போச்சுன்னு உடனே உன்னை தள்ளி வைத்துவிட்டு அம்மா காட்டுற பொண்ணுக்கு தாலி கட்டிடுவேன் ..." நந்தகுமார் கேலி பேசினான் .

சட்டென எழுந்த மீரா தரையில் பாயை உதறி படுத்தாள் .

" ஏய் ..மீரா ...நான் சும்மா சொன்னேன் ...." சமாதானப்படுத்த நெருங்கியவனை கையுயர்த்தி தடுத்தாள் .

" நான் கொஞ்சமாவது நிம்மதியா இருக்கனும்னா என்னை விட்டு தள்ளியிருங்க. வெறுத்துப் போய் என்னை அம்மா வீட்டிற்கு போக வச்சிடாதீங்க ..."

திரும்பி படுத்து கண்களை மூடிக்கொண்டாள் .

" அந்த மிருணாளினிக்கும் உங்களுக்கும் என்ன பாட்டி பிரச்சினை ...? " ஒருநாள் பாட்டியிடம் மெல்ல கேட்டாள் .

" அவளே பிரச்சினைதான் ..." பாட்டி பெருமூச்செறிந்தார் .
" பிரச்சினைதான் முடிந்துவிட்டதே .இனி யாரிடமும் சொல்ல வேண்டாமென நினைத்தேன் .ஆனால் உன்னிடம் சொல்லத்தான்

வேண்டும் ..."

" சுந்தரிக்கு அவள் அண்ணன் குடும்பத்தார் மேலிருக்கும் அபிமானம் உனக்கு தெரியுமில்லையா ...? அது அளவில்லாமல் இருப்பதாக நினைத்து குரு அடிக்கடி அவளுடன் சண்டை போடுவான் .அவன் பேசாமல் இருந்திருந்தால் நாளனடைவில் அந்த அபிமானம் குறைந்து சுந்தரி சரியாகியிருப்பாள் .அவன் செய்யாதே ...செய்யாதே என்க சுந்தரிக்கு செய்யும் ஆர்வம் வந்த்து .அவள் அண்ணனை மட்டம் தட்ட ...தட்ட அவளுக்கு அண்ணன் தனக்காகவே பிறந்த தேவதூதன் என்ற எண்ணம் வந்து அவனை அப்படியே பாவிக்க தொடங்கினாள்.இதனால் இருவருக்கும் அடிக்கடி சண்டை .

இந்த சூழ்நிலையில் தான் அண்ணன் மகளை தன் வீட்டு மருமகளாக்கி கொண்டால் , தனக்கும் அண்ணனுக்குமான உறவு நீடிக்குமென்ற எண்ணத்துடன் நந்தனுக்கும் , அந்த மிருணாளினிக்கும் திருமணம் பேசினாள் சுந்தரி .

அப்போது எனக்கும் மிருணாளினியை மறுக்க தோன்றவில்லை .மிக அழகான பெண் .இனிய பேச்சுக்களுடன் பட்டாம்பூச்சி போல வீட்டை சுற்றி வந்தாள் .நந்தனுக்குமே அவள் மீது ஒரு அபிப்ராயம் இருந்தாற் போல் இருந்த்து .அதனால் இந்த திருமணத்திற்கு சம்மதித்தேன் .குருவையும் சம்மதிக்க வைத்தேன் .

நாங்களாக வீட்டிற்குள் வாய் வார்த்தையாக பேசி வைத்து ...மாளவிகா திருமணத்திற்கு பின் இவர்கள் திருமணம் என்று முடிவு செய்தோம் .அப்போது ஒருநாள் மிருணாளினியும் , அவள் அம்மாவும் நான் அறைக்குள் படுத்திருப்பதை அறியாமல் பேசிக்கொண்டிருந்தனர் .

இந்த வீட்டிற்கு மருமகளாக வந்த்தும் பேசிப்பேசியே சீக்கிரமே என்னை மேலே அனுப்பி விடுவதாகவும் ,குருநாதனை சாமியாராக்கி வீட்டை விட்டு விரட்டி விடுவதாகவும் , சுந்தரி கை , கால்களை முடக்கி படுக்கையில் தள்ளி விடுவதாகவும் ...பிரவீணா , மாளவிகாவை இந்தப் பக்கமே வரவிடாமல் வைத்து விடுவதாகவும் , சசியை ஹாஸ்டலில் சேர்த்துவிட்டு இந்த வீட்டிற்குள் அவள் மட்டுமே மகாராணியாக வளைய வரப் போவதாக அவள் அம்மாவிடம் பெருமை பேசிக்கொண்டிருந்தாள் "

" பாட்டி ..." அதிர்ந்தாள் மீரா .

" எனக்குமே அன்று அதிர்ச்சிதான்மா .சுந்தரியின் அண்ணனிற்கு

அதற்கு முன்பெல்லாம் மகளை இங்கே மணமுடித்து தரும் எண்ணமில்லை .வீடு வீடாக சென்று பொருட்களை விற்கும் குருவின் தொழிலை எப்போதும் கொஞ்சம் கேவலமாகவே பார்ப்பான் .ஆனால் எப்போது நந்தன் அவன் தொழிலில் மேலேற ஆரம்பித்தானோ அப்போதே தன் மகளை இங்கே மணம் முடிக்கும. எண்ணம் சண்முகசுந்தரத்திற்கு வந்துவிட்டது ..."

" அதில் தப்பென்ன பாட்டி ...தன் மகள் வசதியான இடத்தில் வாழ வேண்டுமென்பது ஒரு அப்பாவின் ஆசைதானே ..."

அவள் கன்னத்தை நெட்டி முறித்த பாட்டி ..." இதுதான் மீராவிறகும் , மிருணாவிற்கும் இடையிலுள்ள வித்தியாசம் .உனக்கு பிடிக்காதவள் என்றாலும் அவள் பக்க நியாயத்தை உணர்கிறாய் பார் .அந்த மிருணா தப்பு தப்பாக செய்துவிட்டு அதுதான் சரியென அடம்பிடிப்பாள் ..நான் சண்முகசுந்தரத்தை தப்பு சொல்லவில்லை .சுந்தரி நினைப்பது போல் அவள் அண்ணன் பாசம் என்னவானாலும என் தங்கச்சி ..என்று அதிகப்படி அளவில் இல்லை ...தன் மகளுக்கு வசதியான மாப்பிள்ளை என்ற சாதாரண கணக்கில்தான் இருந்து என்கிறேன் ..." என்றாள்.

" ஆனால் இதனை அத்தை உணர்ந்து கொள்ளவில்லை ..."

https://telegram.me/aedahamlibrary

" அதேதான் ...அதை உணரவைக்கும் தெம்பும் எனக்கில்லை .ஏனென்றால் மனம் முழுவதும் பேசி வைத்திருக்கும் திருமணத்தை நிறுத்துவது தப்பில்லையா என்ற குழப்பம் நிரம்பியிருந்த்தாலோ ...என்னவோ ...பாத்ரூமில் பாதம் பிறழ்ந்து இடுப்பில் அடிபட்டு கட்டிலில் விழுந்துவிட்டேன் .பாதி வேலை இப்போதே முடிந்த்து என அம்மாவும் , மகளும் என் படுக்கையை கிண்டல் பண்ணி சிரிக்கவும் ஒரே மனதாக திருமணத்தை நிறுத்தவேண்டும் என நினைத்து ...எனக்கு மனதில் சரியாக படவில்லை ...அது ...இதுவென ஏதேதோ காரணங்களை குருவிடம் சொல்லி அந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட்டேன் ..."

" நான் செய்த்து ஏதோ புண்ணிய காரியம் போல , அதனால்தான் அந்தக் கடவுள் உன்னை எங்கள் குடும்பத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார் ...." மீராவின் மோவாயை தொட்டு முத்தமிட்டார் பாட்டி .

இதன்பிறகு அந்த மிருணாளியின் வாழ்வை தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ ...என்ற உறுத்தல் மீராவினுள் மறைந்த்து .இந்த வீட்டில் வாழும் தகுதியற்றவள் மிருணாளினி என

நினைத்துக்கொண்டாள் .

ஆனால் இதை உணரவேண்டியவர்கள் சுந்தரியும் , நந்தகுமாரும்தான் . ஆனால் சுந்தரிக்கோ அண்ணன் மகள் தேவதையாக தெரிந்தாள் .இன்னமும் அவள் உள்மனதில் இருந்த மிருணாளினியை மருமகளாக்கி கொள்ள முடியாத ஏக்கம் இடையிடையே அவளது செயல்களில் அவ்வப்போது வெளிப்பட்டபடி இருந்த்து .

நந்தனோ ...தான் தர தவறிய வாழ்வினால் மிருணாளினி படு துயரத்தில் இருப்பதாக எண்ணி அவளிடம் பரிதாபம் காட்டினான் .எனவே தன்னால் முடிந்த்தாக அவளுடன் , அவள் பேச்சுடன் ஒத்து போக எண்ணினான் .

அதற்கேற்றபடி மிருணாவின் திருமணம் தட்டிப் போக ...மிருணாளினி ஆதரவு தேடி என அங்கே அடிக்கடி வந்து சுந்தரியையும் , நந்தகுமாரையும் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு ...மீராவை சொற்களால் குத்தி ,கிழித்துக் கொண்டிருந்தாள் .

" அத்தானுடன் தான் திருமணம் என்பது என் தலைவிதி போல .அதனால்தான் என் திருமணம் தள்ளிப் போய்கொண்டே இருக்கிறது என்பாள் .

https://telegram.me/aedahamlibrary

" அதெப்படி உன்னை விரும்பாத இடத்தில் உன்னால் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்க முடிகிறது ...? என்றாள் .

" உன்னிடத்தில் நானிருந்தால் எப்போதோ ...என் அம்மா வீட்டிற்கு ஓடியிருப்பேன் ..." என்றாள் .

" இது என் வீடு ...நான் ஏன் போகவேண்டும் ...? "என்றாள் மீரா .

அவளருகில் வந்து அவள் கழுத்திலிருந்த தாலி செயினை கையிலெடுத்து பார்த்துவிட்டு ...

" இதை வைத்துதானே ...என் வீடு என்ற உரிமை வந்த்து உனக்கு .இது மட்டும்தான் உன் கழுத்தில் இருக்கு .மற்ற உரிமையெல்லாம் என்னிடம்தான் இருக்கு .சீக்கிரமே இந்த உரிமையும் என் கழுத்திற்கு வரும் பாரேன் ..."

மிருணாளினியின் சவாலில் நடுங்கிவிட்டாள மீரா .

எப்போதும் அண்ணன் மகளை தெய்வமாக பார்க்கும் மாமியார்

.அம்மாவை தெய்வமாக பார்க்கும் கணவன் .இவர்களிடையே மிருணாளினியின் எண்ணம் நிறைவேற மிக அதிக வாய்ப்புகள் இருக்கின்றனவே ....

அப்படியானால் தனது கதி ...கணவனை விட்டு ...இந்த வீட்டை விட்டு தன்னால் வாழமுடியுமா ...? மீராவின் உடல் நடுங்க தொடங்கியது .

" அத்தான் கார் வாங்க போகிறார் தெரியுமா ...? .இன்று நானும் , அப்பாவும் அவருடன் போனோம் .நான்தான் காரை செலக்ட் செய்தேன் .முதலில் என்னைத்தான் கீ போட்டு ஸ்டார்ட் செய்து தரச்சொன்னார் தெரியுமா ...? என்றாள் ஒருநாள் .

மீராவால் முழுதாக பொய்யென்று ஒதுக்க முடியவில்லை .கார் வாங்கப் போவதாக நந்தகுமார் சொன்னது உண்மைதானே ....

" இன்னைக்கு அத்தானும் , நானும் சினிமாவுக்கு போகிறோமே ...." பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தவளின் காதில் வந்து கிசுகிசுத்தாள் மிருணாளினி .

" பொய் ...நீ பொய் சொல்கிறாய் ..."

https://telegram.me/aedahamlibrary

" பொய்யா ...நேரில் வந்து பார்க்கிறாயா ...? சூப்பர் ஸ்டார் கபாலி படம் ..." இவளிடம் ஒரு டிக்கெட்டை நீட்டினாள் .

கபாலி படம் ரிலீஸானதும் போக வேண்டுமென்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்த போது , இப்போது வேண்டாம் ஒரு வாரம் கழித்து போகலாம் .இப்போது ரசிகர்களின் கூச்சலாக இருக்கும் ...என்று நந்தகுமார்தான் கூறியிருந்தான் .இப்போது இவளுடன் போகிறானா ...?

" என்னோடு மட்டும் போகவேண்டும் ...என்றுதான் உங்களையெல்லாம் அடுத்த வாரத்திற்கு அத்தான் தள்ளினார் .என் தோழி ஒருத்திக்காகவும் அத்தானையே டிக்கெட் எடுக்க சொன்னேன் .இதோ எடுத்து வந்துவிட்டார் .அவள் ஏதோ வேலையென வரவில்லையென்றுவிட்டாள் .உனக்கு சந்தேகமென்றால் நீ நேரிலேயே வந்து பார் ...எங்களுக்கு பத்தொம்பது , இருபது ..சீட் நம்பர் . டிக்கெட்டை அவள் கையில் திணித்துவிட்டு போய்விட்டாள் .

வேண்டாம் ...சந்தேகம் வேண்டாம . ...போக கூடாது ...எவ்வளவோ திடமுடன் நினைத்திருந்தாலும் கடைசி நேரத்தில் தன்னிடமே தோற்று ...வேகமாக சரியான நேரத்திற்கு ஸ்கூட்டியில் கிளம்பிவிட்டாள்.

அந்த பத்தொம்பது , இருபது ...மீரா இருந்த சீட்டிலிருந்து நன்கு பார்க்கும்படி இருந்த்து .தலையை குனிந்து முகத்தை பாதி மறைத்தபடி அந்த சீட்டையே பார்த்தபடி இருந்தாள் .பத்து நிமிடத்தில் அதில் மிருணாளினி வந்து அமர்ந்தாள் .வாட்சை பார்க்கவும் , போனை நோண்டவுமாக இருந்தாள் .மீரா நன்றாக குனிந்து கொண்டாள் .ஆனால் அவள் மீரா பக்கமே திரும்பவில்லை .அவள் பார்வை முழுவதும் வாசல் பக்கமே இருந்த்து .

தியேட்டரினுள் விளக்கணைத்ததும் இருளில் தடுமாறியபடி வந்து அமர்ந்த்து ....வெளிச்சமே இல்லாவிட்டாலும் ...கணவனை தெரியாதா ...மீராவிற்கு .விம்மல்கள் தெறித்து வெளியே வந்துவிடுமோ என பயந்து வேகமாக வெளியேறினாள் .
சுந்தரியிடம் தலைவலியென்று விட்டு அறைக்குள் வந்து படுத்தவள்தான் .அழுதழுது எப்போது தூங்கினாளோ ...தெரியாது .

" மீரா ...என்னடா ...? உடம்பு என்னசெய்யுது...? " கணவனின் இதமான வருடலில் மீராவின் உடல் விரைத்தது .

கையை எடுடா ...எனக் கத்த தோன்றிய மனதை அடக்கியபடி கண்ணை இறுக மூடியபடி படுத்து கிடந்தாள் .

" வெளியே போய்விட்டு வந்த்தும் தலைவலியென படுத்தாள் நந்து .இன்னும் சாப்பிடவில்லை .சுந்தரியின் குரலும் கேட்க ....இன்னமும் கண்களை இறுக்கிக் கொண்டாள் .

" ஏன் மீரா ...? கொஞ்சம் பால்சாதம் சாப்பிட்டு மாத்திரை போட்டுக் கொள்கிறாயா ...? "

" நான் குழைவாய் பிசைந்து எடுத்து வரவா மீரா ...? என்றாள் சுந்தரி .

" கொஞ்சநேரம் என்னை தனியாக விடுங்களேன் ..." தனை மறந்து கத்தினாள் மீரா .

" ச...சரிம்மா மீரா .நீ தூங்கு ..." சுந்தரி போய்விட்டாள் .

" என்ன மீரா ...எவ்வளவு கோபமென்றாலும் அம்மாவை இப்படி பேசலாமா ...? " வருடிய கணவனின் கையை பட்டென தட்டிவிட்டாள் .

" அம்மா ...அம்மா ...இதைத் தவிர வேறு எண்ணமே உங்களுக்கு கிடையாதா ...? அம்மா என்னை ஒதுக்கி வைத்துவிடச் சொன்னால் உடனே ஒதுக்கி வைத்து விடுவீர்களா ...? " ஆத்திரமாக கேட்டாள் .

" என்ன உளறுகிறாய் ...? அம்மா ஏன் அப்படி கேட்க போகிறார்கள் ..? "

" ஏதோ சூழ்நிலையில் கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம் .அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள் ...? "

" ம் ...நல்லவேளையாப் போச்சுன்னு உடனே உன்னை தள்ளி வைத்துவிட்டு அம்மா காட்டுற பொண்ணுக்கு தாலி கட்டிடுவேன் ..." நந்தகுமார் கேலி பேசினான் .

சட்டென எழுந்த மீரா தரையில் பாயை உதறி படுத்தாள் .

" ஏய் ..மீரா ...நான் சும்மா சொன்னேன் ...." சமாதானப்படுத்த நெருங்கியவனை கையுயர்த்தி தடுத்தாள் .

" நான் கொஞ்சமாவது நிம்மதியா இருக்கனும்னா என்னை விட்டு தள்ளியிருங்க. வெறுத்துப் போய் என்னை அம்மா வீட்டிற்கு போக வச்சிடாதீங்க ..."

திரும்பி படுத்து கண்களை மூடிக்கொண்டாள் .

https:/ /telegram.me/aedahamlibrary

30

நிமிர்ந்தென்னை பார் ..
உனக்கு அதிர்ச்சி தரும் சொல்லொன்றை
சுமந்து நிற்கிறேன் ,
மீண்டும் பிரிக்க வசதியாக
விரல் சொருகி வைத்திருக்கும்
புத்தக பக்கம் விடுத்து ,
மடித்து உள் சொருகியிருக்கும்
வார்த்தை வளரும் முன்
உரசி உதிரும் பற்கள்
பற்றிய கவலை விடுத்து
முத்தமிட்டு இதழ் பூட்டி விடு ,
நிமிர்ந்தென்னை பார் .

" இன்னும் நீ இங்கேதான் இருக்கிறாயா ...? உன் அம்மா வீட்டிற்கு போயிருப்பாயென்று நினைத்தேனே ...? " தனக்கு கதவு திறந்து விட்ட மீராவை நக்கலாக கேட்டாள் மிருணாளினி .

அதுதானடி இன்னும் போகாமல் இருக்கிறேன் மனதிறகுள் நினைத்தபடி அவளை முறைத்துக் கொண்டே உள்ளே போனாள் .

" அத்தானை எங்கே அத்தை ...உள்ளேதானே இருக்கிறார் " சுந்தரியிடம் கேட்டு விட்டு ஓரக்கண்ணால் மீராவை பார்த்தபடி அவர்கள் அறைக்குள் நுழைந்து கதவை பூட்டிக்கொண்டாள் .

மீராவிற்கு கொதித்து வந்த்து .அந்த வேப்பமரத்தடி கல்லில் போய் உட்கார்ந்து கொண்டாள் .

கொஞ்ச நேரத்திலேயே அவளருகில் வந்து அமர்ந்தான் நந்தன் .தன்னையே பார்க்கும் அவன் பார்வையை உணர்ந்தும் பார்க்காத்து போல் மரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள் மீரா .

" இப்போது கிளி இல்லையா மீரா ...? "

" இறக்கை முளைத்து பறந்து போய்விட்டது ..." இயந்திரமாக பதில் சொன்னாள் .

https://telegram.me/aedahamlibrary

" என்ன பிரச்சினை மீரா உனக்கு ...? " மென்மையாக அவள் கையை வருடினான் .

கையை விடுங்கள் ..." இழுத்துக் கொண்டாள் .

" மீரா ...உன் பிரச்சினையை சொன்னால் ..."

" உங்களிடம் சொல்லும்படியான பிரச்சினை இல்லை " வெடித்தாள.

" ஆனால் ஏதோ இருக்கிறது .அப்படித்தானே ...? "

" அப்படி இருந்தாலும் உங்களிடம் ஏன் சொல்ல வேண்டும் ...? "

" என்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வாய் மீரா ..? "

" ஒன்று சொல்லுங்கள் .மனைவியென்றாலே எல்லாவற்றையும் கணவனிடம் கொட்டியே ஆக வேண்டுமா ...? அவளுக்கென்று ப்ரைவஸி கிடையாதா ...? "

"": என்னாச்சு மீரா உனக்கு ...? "

" நான் ஒரே குழப்பத்தில் இருக்கிறேன் .என் குழப்பம் தீரும் வரை தயவுசெய்து என்னை விட்டு தள்ளியிருங்கள் .பேசக்கூட வேண்டாம் ...."

நந்தகுமார் முகத்தில் அடி வாங்கிய பாவம் தெரிந்த்து .

" சாரி மீரா ...." எழுந்து போனான் நந்தகுமார் .

அறைக்குள் அவளிடம் பேசிவிட்டு வெளியே என்னிடமும் வந்து எப்படி இப்படி கொஞ்ச முடிகிறது ...? இது இந்த ஆண்களுக்கே கை வந்த கலையோ ..?

அந்த குமரேசன் இருக்கவில்லை ...? வீட்டில் மனைவியிடமும்....வெளியில் வேறு ஒரு பெண்ணிடமும் ..குடும்பம் நடத்திக் கொண்டு ....சை ...அருவெறுப்பில் உடல் சுருங்கியது மீராவிற்கு .

எழுந்து பாட்டி வீட்டினுள் சென்றாள் .

" என் மனது திக்கற்று தவிக்கிறது பாட்டி ..." பாட்டி தோள்களில் சாய்ந்து விசும்பினாள் .

https://telegram.me/aedahamlibrary

" அவர் ...அந்த மிருணாவுடன் அத்து மீறி பழகுகிறாரோ என்று இருக்கிறது பாட்டி .இந்த ஆண்பிள்ளைகள் எல்லோரும் இப்படித்தான் இருப்பார்களா ..?? ," விசும்பினாள் .

" என் நந்தன் அப்படி இல்லை மீரா .அதை என்னால் உறுதியாக கூற முடியும் .நீ அந்த மிருணாளினியை நந்தனின் முன்னாள் காதலியாக மட்டும் பார்க்காதே .அவள் அவனின் தாய்மாமன் மகள் .அவர்களுக்கிடையே அந்த உறவுதான் முதலில் ..அந்த உறவை கொச்சைப்படுத்தாதே ..." பாட்டி அதட்டினார் .

" ஆனால் அத்தைக்கு ...அவள் தன் மருமகள் .மகனின் மனைவி என்ற எண்ணம்தானே இருக்கிறது .அம்மா சொன்னால் ...அந்த மிருணாளினியை திருமணம் செய்து கொள் என்று அம்மா சொன்னால் இவர் தலையாட்டி விடுவாரே ..."

" அப்படி என்ன அந்த மிருணாவிற்கு வேறு ஆம்பளை கிடைக்கவில்லையா ...? என் பேரன் ஒருத்தன்தான் ஆண்பிள்ளையா ...? "

" உண்மையான காதலுக்கு விரும்பியவன் ஒருவன்தான் ஆணாக

தெரிவான் பாட்டி ."

" மண்ணாங்கட்டி ...அந்த மாதிரி காதல் எதுவும் அந்த மிருணாளினியிடம் கிடையாது ....,"

" இருக்கிறதென்று அவள் சொல்கிறாளே பாட்டி ...."

" எங்கே இரண்டு பேரையும் கூப்பிடு .கேட்டுவிடுவோம் ...."

" பாட்டி ..." பதறி தடுத்தாள் .

" ஆமாம் ...அப்படித்தான் என்றுவிட்டால் ..நான் என்ன செய்வேன் பாட்டி ...? " விம்மினாள் .

" நான் உன்னை புத்திசாலி என்று நினைத்தேன் மீரா .இப்படி மட்டியாக இருக்கிறாயே ..."

" இந்தக் காதல் பெரிய புத்திசாலியை கூட முட்டாளாக்கி விடும் பாட்டி .என் மீது ஆணை .இது விசயம் நீங்கள் என் அனுமதி இல்லாமல் யாரிடமும் பேசக்கூடாது ...."

பாட்டியின் வாயை அடைத்து விட்டு வெளியேறினாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" ஆமாம் மீரா....நீ முட்டாள் .பெரிய முட்டாள் .என் வாயை அடைத்து விட்டாய் .ஆனால் என்னால் முடிந்ததை நான் செய்கிறேன் ...."

பாட்டி வீட்டினர் அனைவரையும் கூட்டினார் .

" என் சொத்துக்கள் எல்லாவற்றையும் பிரித்து கொடுத்து விடலாமென்று நினைக்கிறேன் ..." பாட்டியின் பேச்சில் அனைவரும் அதிர்ந்தனர் .

" அம்மா ..என்னம்மா ...ஏன் இப்படி பேசுகிறீர்கள் ...? " கலக்கத்தோடு அம்மா அருகில் அமர்ந்தார் குருநாதன் .

" எண்பத்தியிரண்டு வயசாச்சுடா எனக்கு .எப்போ வேண்டுமானாலும் எனக்கு ஒரு முடிவு வரலாம் .அதற்குள் உங்கள் எல்லோருக்கும் நான் என்னுடையதென்று வைத்திருந்ததை தர வேண்டாமா ...? "

" அதற்கு இப்போது என்ன அவசரம் பாட்டி ...? " அத்தட்டலோடு மறுபுறம் அமர்ந்தான் நந்தகுமார் .

" அவசரம்தான்டா ..மனதிலிருப்பதை வெளிப்படையாக சொல்லிவிட்டால் யாருக்கும் எந்த பிரச்சினையும் வராது பார் ....,"

பாட்டியின் பார்வை மீராவை துளைத்தது .மீரா தலை குனிந்து கொண்டாள் .

" பாட்டி ஒண்ணும் புரியவில்லை .இப்போதாவது புரியும்படி பேசுங்களேன் .சொத்து பிரிக்கும் போதும் எப்போதும் போல் புரியாமலேயே பேசினீர்களானால் என் பங்கு சொத்தின் அளவு  கடைசீ வரை எனக்கு புரியாமலேயே போய்விடும் .அதற்குத்தான் ...."" வழக்கம் போல் கிண்டல் பேசிய சசிகுமாரை முறைத்தான் நந்தகுமார் .

" ஏய் என்னடா ...இப்போதும் கிண்டல் ...."

" அண்ணா பாட்டி பேசுவது கொஞ்சம் கஷ்டமாக இருந்த்து. அதுதான் ...இப்படி பேசி சமாளித்தேன் ...."

" டேய் கொஞ்ச நேரம் பேசாமல் இருங்கடா ...." அதட்டிய பாட்டி ...தொடர்ந்து வீடு , நிலம் என தன்னுடைய சொத்துக்களை பிரித்து சொல்ல தெடங்கினார் .குருநாதனுக்கு , சசிகுமாருக்கு  அசையா சொத்துக்களை சொன்னவர் ...பெண்களுக்கு நகைகளை பிரித்தார் .நந்தகுமாருக்கும் , மீராவிற்கும் எதையும் சொல்லாமல் விட்டார் .

https://telegram.me/aedahamlibrary

" பாட்டி நந்தனுக்கு ..மீராவிற்கு ...? " பிரவீணா இழுத்தாள்

" இரண்டு பேரும் என் பக்கத்தில் வாங்க ...."

இருவரும் பாட்டியின் இரு பக்கமும் அமர்ந்தனர் ...

" நந்தா ..இந்த சொத்துக்களை எல்லாம் விட மிகப்பெரிய சொத்தை உனக்கு நான் தேடி கொடுத்திருக்கிறேன் .இது வரை உணர்ந்தாயோ இல்லையோ ...இனியாவது உணர்ந்து இந்த புதையலை நீ காலம் முழுவதும் கண்ணுக்குள் வைத்து காக்க வேண்டும் ...."

மீராவின் கையை பிடித்து நந்தனிடம் கொடுத்தார் .

" மீரா ...இது உன் வீடு .இங்கிருக்கும் மற்ற பெண்களை விட உனக்குத்தான் இங்கே உரிமை அதிகம் .இந்த வீட்டின் எனக்கடுத்த பெண் வாரிசாக என் இடத்தில் உன்னை வைக்கிறேன் .அதற்கு அடையாளமாக ...."

தன் கரத்தில் இருந்த அந்த தங்க காப்பை கஷ்டப்பட்டு சுழட்டினார் பாட்டி .

" இது என் மாமியார் எனக்கு கொடுத்தது .குடும்ப கௌரவத்தை கடைசி

வரை காக்க வேண்டுமென என்னிடம் வாக்கு வாங்கிக்கொண்டு இதை எனக்கு கொடுத்தார் .இதன் நடுவில் ஒரு வைரம் இருக்கிறது .சுற்றிலும் இருக்கும் சின்ன கற்கள் மாணிக்கங்கள் .ஓரளவு விலை மதிப்பு வாய்ந்த்து. எத்தனையோ கஷ்டங்களிலும் இதை நான் என் கையிலிருந்து சுழட்டவில்லை .இப்போது இதை உனக்கு தருகிறேன் .தவறுபவர்களை நல்வழிப்படுத்தி உன் காலம் வரை இந்தக் குடும்பத்தை நீதான் வழி நடத்த வேண்டும் ...."

அந்தக் காப்பை மீராவின் கையில் போட்டார் .

" இந்தக் குடும்பத்தை இறுதி வரை காப்பது உன் கடமை மீரா . இவளை இறுதி வரை காப்பது உன் கடமை நந்தா ...."

கணவன் , மனைவிக்கிடையேயான குழப்பத்தை ஒரே செய்கையில் எளிதாக தீர்த்துவிட்டார் பாட்டி .

உன் தலையில் பொறுப்பிருக்கறதடி ...உதறிவிட்டு நீ போக முடியாது...இதை சொல்லத்தானே பாட்டி இந்த பங்கு பிரிப்பு ....பாட்டியிடம் கேட்க மீரா இரவு போனபோது ...அவளால் பேச முடியாது போனது .

https://telegram.me/aedahamlibrary

ஏனென்றால்...

முட்டாள்களே ...நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர்...பிரிய வேண்டுமென மனதாலும் நினைக்காதீர்கள்  என கணவன் ..மனைவி இருவரையும்  உணர வைத்துவிட்டு அன்று இரவே பாட்டி உலகை விட்டே போய்விட்டார் .

31

இடறல்கள் ஏதுமின்றி வழுவழுப்பாய் கூட்டி வைத்த பசுஞ்சாண முற்ற மனதில் ,

அழுத்த காலடியாய்
மெத்தென பதிந்து கிடக்கிறது
உனது முதல் முத்தம் .

மீராவால் நம்பவே முடியவில்லை .முகத்தை பிடித்து பார்த்தாள். கைகளை அசைத்து பார்த்தாள் . பாட்டியின் சாவை உணர்ந்தாலும் ஏறக மனமின்றி வீட்டினுள் ஓடியவள்...

" ஏங்க ...வாங்க பாட்டியை பாருங்க .எழுப்புங்க ..." கணவனை இழுத்து வந்தாள் .

படபடப்புடன் வீட்டினர் அனைவரும் கூடிவிட்டனர் .பாட்டியின் மறைவை நந்தகுமார் உறுதிபடுத்த சுந்தரி அழ ஆரம்பித்தாள் .குருநாதன் வயதை மறந்து குழந்தையாய் அம்மாவின் காலில் விழுந்து கதறினார் . இடிந்து போய் பாட்டி முகத்தை பார்த்தபடி அமர்ந்துவிட்ட மீராவின் தோள்களை ஆதரவாக அழுத்திய நந்தகுமார் அம்மாவை அணைத்து சமாதானப்படுத்த துவங்கினான் .

பாட்டியின் கையை பிடித்தபடி அமர்ந்து விட்டான் சசிகுமார் .அப்போதுதான் பிரவீணா , மாளவிகாவிற்கு மீண்டும் தகவல் சொல்லப்பட அழுதபடி அவர்கள் வந்து சேர்ந்தனர் .தொடர்ந்து உள்ளூர் , வெளியூர் உறவினர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது .

https://telegram.me/aedahamlibrary

பாட்டி நடுவீட்டில் தலைமாட்டில் எரியும் விளக்குடன் கிடத்தப்பட்டிருப்பதை நம்ப முடியாமல் பார்த்தாள் மீரா .பாட்டி அளித்த காப்பு மணிக்கட்டில் கனத்துக் கொண்டிருந்த்து .இப்படி திடீரென விட்டுப் போவாரென நினைக்கவில்லையே .மனம் மரத்து ...மூளை வேலை செய்யாமல் அழுகை கூட வரவில்லை மீராவிற்கு .

சுந்தரி , பிரவீணா , மாளவிகா எல்லோரும் அழுதபடி இருக்க ...மீரா பாட்டியை பார்த்தபடியே அமர்ந்திருந்தாள் .இனி என் மனக்கலக்கங்களை நான் யாரிடம் சொல்லுவேன்.எனக்கு ஆறுதல் கூற இனி இந்த வீட்டில் ஆளில்லையே ...இதையே அவள் மனம் மாறி...மாறி நினைத்துக் கொண்டிருந்த்து.

" அடக்காதே மீரா ....அழுது விடும்மா ...." அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருக்கும் வேலைகளின் இடையிலும் இவளருகில் வந்து தோள்களை வருடி சொல்லிவிட்டு போனான் நந்தகுமார் .

" இந்தப் பொண்ணு சும்மா பேருக்காவது அழலாம் ...."' அக்கம் பக்க ,தூரத்து சொந்த பெண்கள் சிலர் பெயருக்கு அழுகை நாடகம் போட்டபடி தங்களுக்குள் கிசுகிசுத்தனர் .

எல்லா பேச்சுக்களும் , செய்கைகளும் காதில் கேட்டு மனதில் பட்டாலும் ...மூளையில் ஏறாமல் வெறித்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள் மீரா .

" அய்யோ சுந்தரி ...இப்படி ஆயிடுச்சே ...." என்ற பெரிய அழுகையுடன் சங்கீதாவும் ,

" அத்தை ....பாட்டி போயிட்டாங்களே ...." என்ற சத்த கதறலுடன் மிருணாளினியும் உள்ளே வந்தனர் .

சுந்தரியும் அழுகையுடன் அவர்களிடம் தஞ்சமடைந்தாள் .கொஞ்ச நேரம் இருவருமாக பாட்டியின் அருமை , பெருமைகளை சொல்லி அழுதனர் .

" நான் இனி என்ன செய்வேனென்று தெரியவில்லை அண்ணி .படுக்கையில் இருந்து கொண்டே அத்தைதான் இந்த வீட்டை நடத்திக் கொண்டிருந்தார்கள் .இனி நான் என்ன செய்ய போகிறேன் ...? " சுந்தரி அழ....

https:/ /telegram.me/aedahamlibrary

" கவலைப்படாதே சுந்தரி ...உனக்கு நாங்கெல்லாம் இல்லை ...? நீ தைரியமாக இரு ..." என அவர்கள் ஆறுதல் சொல்ல ....

மீராவிற்கு தலை வலிக்க ஆரம்பித்தது .கடவுளே என்ன நடிப்பு ...!!! இருவரும் முன்பு எப்படி பேசினார்களென பாட்டி சொன்னாரே ...இப்போது அவர் மறைந்தும் இப்படியெல்லாம் ஏமாற்றுகின்றனரே ...இந்த அப்பாவி அத்தையும் இவர்களிடம் ஏமாந்து நிற்கிறாரே ...

தீடீரென அவள் மணிக்கட்டு அழுத்தமாக இறுக்கப்பட்டது .சுள்ளென வலிக்க திரும்பி பார்த்தாள் .

மிருணாளினிதான்...." இது எப்படி உன் கைக்கு வந்தது ...? " அவள் கை தங்க காப்பை காட்டி கேட்டாள்.

" ஏன் ...? பாட்டிதான் கொடுத்தாங்க ..."

" ஒரு வழியாக பாட்டியை ஏமாற்றி வாங்கிவிட்டாயா ...? " முணுமுணுவென பேசினாலும் குரோதம் வழிந்தது அவள் குரலில் .

" யாரையும் தொட்டு கூட பார்க்க விட மாட்டாங்களே .உன்னிடம் எப்படி கொடுத்தாங்க ...? என்ன சொல்லி வாங்கினாய் ...? "

இவ்வளவு நேரம் சுற்றுப்புறம் உரைக்காமல் இருந்த மீரா ...இப்போது மிருணாளினியின் கேள்வியில் நொந்து நிகழ்வுக்கு வந்தாள் .
நடுவீட்டில் பிணத்தை கிடத்தி வைத்துவிட்டு நகையை ஆராய்கிறாளே ....சே என்ன மனுசி இவள் ....மனம் அருவுறுப்பில் சுருங்க ....
" பாட்டிகிட்டேயே கேட்டு தெரிந்து கொள்ளேன் ..." என்றாள் லேசான குரூரத்துடன்.
மிருணாளினியின் முகம் சிவந்து சுருங்கி ...பயங்கரமாக மாறியது .
அவளை கண்டு கொள்ளாத பாவனையில் அயர்வுடன் சுவரில் சாய்ந்து கண்களை மூடியவளை சுந்தரி உலுக்கினாள் .

" அண்ணிக்கும் , மிருணாவிற்கும் ...காபி கொண்டு வா மீரா .பாவம் அழுதழுது தொண்டை காய்ந்திருக்கும் ...."

இப்போது இருக்கும் மனநிலையில் அவர்களுக்கு உபச்சாரம் பண்ணும் எண்ணம் மீராவிற்கு இல்லை .

உடனே போய் காபி போடு ...பார்வை பார்த்தவர்களை அலட்சியமாக பார்த்தவள் ....

https://telegram.me/aedahamlibrary

" எனக்கு தலை சுற்றுகிறது அத்தை .போய் படுக்க போகிறேன் ..." சொல்லிவிட்டு எழுந்து உள்ளறைக்கு வந்தாள் .

உண்மையாகவே கால்கள் தடுமாறி தலை சுற்றியது .காலையிலிருந்து சரியாக சாப்பிடவில்லை ..நினைத்தபடி நடக்க முடியாமல் தடுமாறியவளை அடுத்த அறையிலிருந்து பார்த்துவிட்ட நந்தகுமார் ஓடி வந்து தாங்கினான் .

" மீரா ...என்னம்மா ...என்ன ஆச்சி ...? "

" அதிகமாக வேலை வந்துவிட்டால் உங்க பொண்டாட்டிக்கு தலைசுற்றல் வந்துவிடும் அத்தான் ...." கிண்டல் செய்படி வந்தாள் மிருணாளினி .

" ஆமாம் அவளுக்கு மெல்லிய உடம்பு .நீ போய் அவளுக்கு ஒரு காபி போட்டு கொண்டு வா...." சொன்ன நந்தகுமாரை ஆச்சரியமாக மீராவும் , ஆத்திரமாக மிருணாளினியும் பார்த்தனர் .

" வழியை விடு மிருணா ...நான் அவளை படுக்க வைக்க போகிறேன் ...."

அதட்டலுடன் அவளை விலக சொன்னவன் , மீராவை கைகளில் தூக்கிக் கொண்டு போய் கட்டிலில் படுக்க வைத்தான் .

அதை பார்த்துவிட்டு பிரவீணாவும் , மாளவிகாவும் வேகமாக வந்தனர் .மூவரும் சூழ்ந்து நின்று மீராவை நலம் விசாரிப்பதை நகம் கடித்தபடி கோபத்தோடு பார்த்தாள் மிருணாளினி .

படுக்கையில் படுத்திருந்த மீரா திடீரென எழுந்து ...பாத்ரூமிற்கு போய் வாந்தி எடுத்துவிட்டு வந்தாள் .

";,மீரா இந்த மாதம் குளித்துவிட்டாயா ...? " பிரவீணா சந்தேகமாக கேட்க ...மீரா திகைத்தாள் .

வேகமாக தனக்குள் கணக்கிட்ட மீரா ..." ஐம்பத்தியெட்டு நாளாச்சு " என்றாள்.அவளாலேயே நம்பமுடியவில்லை .

" ஐ...இரண்டு மாசம் ஆகப் போகுதா ...? அண்ணா அப்போது நிச்சயம் உங்களுக்கும் தெரிந்திருக்கும் .ஏன்னா ...சஸ்பென்சா இருக்கட்டும்னு தானே சொல்லாமல் இருந்தீர்கள் ...? நாங்கள் கண்டுபிடித்து விட்டோமே ...." மாளவிகா குதிக்க ...

https://telegram.me/aedahamlibrary

நந்தகுமாரின் முகம் வாடியது .மகிழ்ச்சியான அவன் முகபாவத்தை எதிரபார்த்து அவனை பார்த்த  மீரா இந்த பாவனையில் தானும் முகம் வாடினாள் .

" இப்போ வந்துடுறேன் ...." ஒட்டாத குரலில் கூறிவிட்டு வெளியேறினான் நந்தகுமார் .

32

சொல்லாமல் வரும் உன்
பிள்ளை கோபங்களுக்கு மாற்றாய் ,
கல்லாமல் விட்ட கடைசி அத்தியாயங்களில்
அடையாளமாய்  எனை நூலாய் சொருகுகிறே

மாளவிகா உடனே போய்  சுந்தரியின் காதை கடிக்க அவள் வேகமாக உள்ளே ஓடி வந்தாள் .

" இரண்டு மாசமாச்சு .சொல்லாமல் இருந்திருக்கிறாயே ...? இப்போது பார் வெளியே சொல்லக் கூட முடியவில்லை ...? " வருத்தப்பட்டாள் .

சாவு வீட்டிற்குள் இந்த சந்தோச விசயத்தை எப்படி வெளிப்படையாக சொல்ல முடியும் ..?

சுந்தரி அலுத்துக்கொண்டாலும் வெளிப்படையாக தெரியாமல் அந்த செய்தி மெல்ல வீட்டினுள் பரவ தொடங்கியது .

குருநாதன் உள்ளே வந்து மகிழ்ச்சியை தெரிவித்து விட்டு போக , சசிகுமார் வாழ்த்துக்களை சொல்லி சென்றான் .மேலும் சில உறவினர்கள் நலம் விசாரித்து விட்டு செல்ல ...நந்தகுமார் உள்ளே வரவே இல்லை .

" இது அத்தானுக்கு பிடிக்கவில்லை .அதுதான் அவர் உன் முகத்தை பார்க்க கூட பிடிக்காமல் பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் ." மிருணாளினி விசமத்துடன் சொன்னாள் .

" வாயை மூடு . என் புருசனை எனக்கு தெரியும் .நீ சொல்ல வேண்டாம் ...."

https://telegram.me/aedahamlibrary

" ஏதோ ஒரு பலவீனமான நேரத்தில் இந்த மாதிரி தவறுதலாக ஆகியிருக்கும் .அது போல் வந்த பிள்ளை உனக்கு தேவையா ...? பேசாமல் இந்த பிள்ளையை கலைத்து விடு ...."

" என்னடி சொன்ன ...? " ஆத்திரத்தில் கைகளை வீசி மிருணாளினியை அறைந்துவிட்டாள் மீரா .

" மீரா ....என்ன இது ...? என்ன காரியம் செய்கிறாய் ...? " அடக்கப்பட்ட குரலில் ஆத்திரத்துடன் வந்து நின்றான் நந்தகுமார் .

" அத்தான் ...." அவனை பார்த்ததும் கண்களை கசக்கி அழத்துவங்கினாள் மிருணாளினி .

" அழாதே மிருணா ...மீரா அவளிடம் மன்னிப்பு கேள் ...."

அதிர்ந்தாள் மீரா .

" அவள் என்ன சொன்னாள் தெரியுமா ...? "

" அது எனக்கு தேவையில்லாத விசயம் .நீ செய்த்து தவறு .உடனே மன்னிப்பு கேள் ..."

" முடியாது ...." தலையை நிமிர்த்தி சொன்னாள் மீரா .

" நான் தவறு செய்யவில்லை .நான் மன்னிப்பு கேட்க மாட்டேன் ...."

" அத்தான் ..இவள் மன்னிப்பு கேட்கும் வரை நான் இங்கே வர மாட்டேன் ...." நந்தகுமார் மெல்லிய குரலில் கூப்பிட கூப்பிட மிருணாளினி வீட்டை விட்டு போய்விட்டாள் .

" தப்பு மீரா .நீ செய்வது பெரிய தப்பு .நம் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளி அவள் . அவள் தப்பே செய்திருந்தாலும் நாம் பொறுத்து போகவேண்டும் ."

" அந்த மாதிரி தப்பு அவள் செய்யவில்லை ...."

" இந்த இக்கட்டான சூழ்நிலையில் உனக்கு விளக்கம் சொல்ல எனக்கு நேரமில்லை ...," எரிச்சலாக சொன்னவன் ...என்னமோ செய் என்பது போல் கையை அசைத்து விட்டு போய்விட்டான் .

ஒரு வார்த்தை உன் பிள்ளையை பற்றி கேட்க கூட நேரமில்லையா ....? தனது வயிற்றை வருடியபடி கலங்கினாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

பாட்டியின் முன் வந்து அமர்ந்தவள் " பாட்டி எனக்கு தைரியம் கொடுங்கள் ...." என மனதிற்குள் வேண்டிக்கொண்டாள் .
பெண்கள் தண்ணீர் குடமெடுக்க ப்ளாஸ்டிக் குடங்கள் வைக்கப்பட ...அனைவருடனும் மீராவும் குனிந்து குடம் தூக்க முயல ....
" வேண்டாம் மீரா ...." பின்னிருந்து அவள் கைகளை பற்றியிழுத்து தடுத்தான் நந்தகுமார் .

" நீ அலட்டிக்கொள்ளாதே ...." என்றான் .

இந்த சின்ன கரிசனத்திலேயே மீராவின் முகம் மலர்ந்துவிட்டது .அப்போது சுந்தரியும் வந்து ...

" மீரா இப்போது நீ குடமெல்லாம் தூக்க வேண்டாம் .பின்னால் நகர்ந்து நில்லு " என்றாள் .தலையாட்டி நகர்ந்த மீரா பின்னால் நின்றிருந்த கணவனின் மேல் மோதிக்கொண்டாள் .

உடனே நகர போனவனின் கையை பிறரறியாமல் இழுத்து மெல்ல தன் வயிற்றில் பதித்துக்கொண்டாள் .
ஒரு கணம் தயங்கிய நந்தகுமாரின் கை பின் மெல்ல அவள் வயிற்றை

வருட , மீரா நெகிழ்ந்தாள் .மென்மையான சின்ன அழுத்தமொன்றை அவள் வயிற்றில் வைத்தவன் விலகி போனான் .நிறைவாய் நின்றாள் மீரா .

பாட்டியை எடுக்கும் போது அழுகை பொங்கியது .பாட்டியின் பாசம் நினைவு வர சூழ்ந்திருந்தோருடன் சேர்ந்து கத்தி , கதற தொடங்கிய மீராவை ....வேண்டாம் ...அமைதி என கண்களால் சொன்னபடியிருந்தான் நந்தகுமார் .கத்தல்களையும் , விம்மல்களையும் குறைத்து விசும்ப ஆரம்பித்தாள் மீரா .

" உடம்பை அலட்டாதே மீரா .ஜாக்கிரதை .உள்ளே போ ..." அழுகையினூடே சுந்தரி அவளை எச்சரிக்க மறக்கவில்லை .

சோகமான அந்த சூழ்நிலையிலும் தன் வீட்டினரின் கரிசனம் மீராவின் இறுகிய மனதை இளக்கி , உருப்படியாக யோசிக்க வைத்தது .பாட்டியை எடுத்துக் கொண்டு போனதும் வீடே அமைதியாகி ...ஒரு வித அமானுஷ்யமானது போலிருந்த்து .

" அத்தை போனதும் வீடே மயானமாகி விட்டதே ...." சுந்தரி தரையில் படுத்து அழத்துவங்கினாள் .

https://telegram.me/aedahamlibrary

பிரவீணாவும் , மாளவிகாவும் அவளை சமாதானப்படுத்த துவங்க மீரா பாட்டியின் வீட்டிற்குள் வந்து நின்றாள் .பாட்டி படுத்திருந்த கட்டிலை தடவி பார்த்தவள் சிறிதுநேரம் அதில் தலை சாய்த்து படுத்திருந்தாள் .ஏதோ பாட்டியே வந்து தலை வருடுவது போல் ஒரு ஆறுதல் உண்டாக சற்றே தெளிவான மனதுடன் நிமிர்ந்தாள் .

" என்ன சங்கீதா உன் பொண்ணுக்கு நேரம் கூடி வந்துடுச்சு போல ...? " பேச்சுக்குரல்கள் சன்னலுக்கு மறுபுறம் கேட்டன. மிருணாளினியை பற்றிய பேச்சென்பதால் சன்னலை ஒட்டி நின்று கவனித்தாள் . கேட்ட தகவல்களை மனதில் இருத்திக்கொண்டவள் கிணற்றடிக்கு போய் நீர் இறைத்து தலைவழியே ஊற்றிக்கொண்டாள் .பாட்டியின் ஆத்மாதான் இந்த தகவல்களை தனது காதிற்கு கொண்டு வந்து அடுத்த செயல்பாடுகளுக்கு தன்னை தயாராக்கி இருப்பதாக நம்பினாள் . உடையை மாற்றிக்கொண்டவள் வீட்டினர் யாரும் கவனிக்காத போது ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு வெளியேறினாள் .ஆண்கள் அனைவரும் மயானத்திற்கு போயிருக்க இருந்த பெண்களும் குளிக்க ,

வீடு கழுவ என ஏதோ ஒரு வேலையில் இருந்ததால் மீராவால் யார் கண்ணிலும் படாது வெளியேற முடிந்த்து .

முன்பு ஒரு முறை சுந்தரி சொன்ன விலாசத்தை மனதில் நினைவுகொண்டு இரண்டு இடங்களில் விசாரித்துக் கொண்டு வந்துவிட்டாள் மீரா .

காலிங்பெல்லை அழுத்திவிட்டு ...திறக்க நேரமானதால் திறந்திருந்த ஜன்னல் வழியே எட்டி பார்த்தாள் .

சோபாவில் சரிந்து அமர்ந்து கால்களை டீப்பாயில் நீட்டிக்கொண்டு சுற்றிலும் பாக்கெட் தீனிகளை பரப்பி வைத்து டிவி பார்த்தபடி அலட்சியமாக இருந்தாள் மிருணாளினி ....அழைப்புமணி ஓசையை கேட்டபிறகும்....

அங்கே என் வாழ்வில் தனலை கொட்டிவிட்டு இங்கே வந்து நிம்மதியாக டிவியா பார்க்கிறாய் ....இப்போது நீ எனக்கு பதில் சொல்ல வேண்டுமடி ...

மீண்டும் மணியை அழுத்தினாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" இதோ வர்றேன்மா ...." சாவு வீட்டிற்கு போயிருக்கும் பெற்றோர் என நினைத்து நிதானமாக வந்து கதவை திறந்தவள் நிச்சயம் மீராவை எதிர் பார்க்கவில்லை .

" நீயா ....நீ ...ஏன் ...எதற்கு வந்தாய் ...? "

" உன்னிடம் நிறைய பேசவேண்டும் மிருணாளினி ..." அவளை இடித்துக்கொண்டு உள்ளே வந்த மீரா ...

" ஏன் இப்படி செய்தாய் ...? " கைகளை கட்டிக்கொண்டு கேட்டாள் .

இரண்டு நிமிடங்கள் ....இரண்டே இரண்டு நிமிடங்கள்தான்

எடுத்துக்கொண்டாள் மிருணாளினி .உடனே தன்னை சுதாரித்துக்கொண்டாள் .

நிதானமாக நடந்து சோபாவில் போய் அமர்ந்து கொண்டு சிப்ஸை

வாயில் போட்டு மென்றபடி " எப்படி செய்தேன்

முகாந்திரங்களற்ற உன் முன்கோப பொழுதுகளை
முதிர்ந்த நெல்லென சமனித்து கொள்கிறேன் ,
சலித்துக்கொள்ளாதே சாணக்யா
மணம் கமழும்
உன் தந்திர ஜவ்வாதுகளில்
சலிப்பேற்படுவதேயில்லை என்னுள் .

" என் கணவருக்கும் , என் வீட்டினருக்கும் என் மேல் பிடிப்பில்லாத்து போல் ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்க நினைத்தாயே ...ஏன் ..? "

" அது ஒன்றும் பொய்யில்லை .உணமைதான் .அத்தை வீட்டில் யாருக்கும் உன்னை பிடிக்காது.எல்லோருமே கடமைக்காகத்தான் உன்னை சகித்துக்கொண்டிருக்கின்றனர் .அத்தான் உட்பட ...கடமைக்காகத்தான் உன்னுடன் வாழ்ந்து ஊருக்காகத்தான் உனக்கு குழந்தையை கொடுத்துள்ளார் ...."

தான் கூட ஒரு சந்தர்ப்பத்தில் இப்படி நினைத்ததற்கு இப்போது வருந்தினாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

" இல்லை மிருணாளினி ...என் வீட்டினர் , என் மாமியார் , மாமனார் , என் நாத்தனார்கள் , என் கொழுந்தன் , என் கணவர் எல்லோரும் எனக்காக என் விருப்பத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள் ..." ஒவ்வொரு " என் " னிலும் அழுத்தம் கொடுத்தாள் .

" இப்படியா நினைத்துக்கொண்டிருக்கிறாய் ...? கொஞ்சம் முன்பு உன் கர்ப்ப செய்தியை சொன்னாயே யார் .. ..யாரம்மா உன்னை தலையில் தூக்கி வைத்து ஆடியது ...? " கிண்டலாக கேட்டாள் .

" இது சினிமாவோ , டிவி சீரியலோ இல்லை மிருணாளினி .வாழ்க்கை .சாவு வீட்டிற்குள் தெரிந்து விட்ட என் கர்ப்ப செய்திக்கு எந்த அளவு சந்தோசப்பட முடியுமோ ...அதை விட அதிகமாகவே சந்தோசப்பட்டார்கள் என் வீட்டினர் ."

" ஆமாம் பார்த்தேனே ..அத்தான் முகத்தை திருப்பிக்கொண்டு போனாரே ...."

" பிறகு உன்னை வைத்துக்கொண்டு கட்டிப்பிடித்து முத்தமா கொடுக்க முடியும் ..? "

" ஏய் ...என்னடி வாய் ஓவராக பேசுகிறாய் ...? நான் இப்போது நினைத்தாலும் அத்தையிடம் பேசுகிற விதமாக பேசி உன்னை உன் அம்மா வீட்டிற்கு விரட்டிவிட்டு நான் அத்தானின் மனைவியாக அங்கே வந்து உட்கார்ந்துவிடுவேன் .பார்க்கிறாயா ...? " சவால் போல் கட்டைவிரலை உயர்த்தினாள் .

நிதானமாக அவள் பேசி முடிக்கும் வரை பொறுமையாக பார்த்திருந்து விட்டு " பிறகு தனசேகரனுக்கு என்ன பதில் சொல்லுவாய் ...? " என்றாள் மீரா .

" த...தனசேகரன் ...அ...அவரை ...பற்றி உனக்கு ..."

" உன் அம்மா ஒருவர் போதும் .மகள் அமெரிக்கா போகிறாள் என அங்கே உட்கார்ந்து பெருமை பேசிக்கொண்டிருந்தார் ...உனக்காக வாய்த்திருக்கும் இந்த நல்ல வாழ்க்கையை தொலைத்து விட்டு என் வீட்டில் வந்து உட்காருவாயா நீ ...? "

" நிச்சயம் மாட்டேன் ..." அழுத்தமாக மறுத்தாள் மிருணாளினி .

" பிறகு ஏன் இப்படி ஒரு நாடகம் ...? அத்தானின் மேலுள்ள அளவில்லாத காதல் இப்படி செய்ய உன்னை தூண்டியிருந்தால் ..உனக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கும் இந்த நேரத்திலாவது அதையெல்லாம் மறந்து விடு ... "

https://telegram.me/aedahamlibrary

" அத்தான் மீது காதலா ...? அம்மாவின் முந்தானையை பிடித்துக்கொண்டு தலையாட்டிக்கொண்டிருக்கும் ஒரு ஆண் , இந்த மிருணாளினியின் காதலை பெறும் தகுதியில்லாதவன் .என்றைக்கு அம்மாவிற்காக , அப்பாவிற்காக , பாட்டிக்காக ...உன்னை திருமணம் செய்ய சம்மதித்தானோ ...அன்றே ...அந்த நொடியே அவனை என் மனதிலிருந்து தூக்கி எறிந்துவிட்டேன் ...."

மிருணாளியின் பேச்சில் அயர்ந்தாள் மீரா .

" பிறகு ஏன் இப்படி எங்கள் வாழ்க்கையை கலைக்க நினைத்தாய் ...? "

" என் மனதில் ஆசையை உண்டாக்கிவிட்டு பிறகு கலைத்தனரே .அதற்கு தண்டனை தரவேண்டாமா ...அந்த வீட்டினர் அனைவருக்கும் .அதற்குத்தான் .உன்னை வீட்டை விட்டு விரட்டி உங்கள் திருமண பந்த்த்தை முறிக்க வேண்டும் .நீ பிரிந்து போய்விட்டால் அத்தான் வேறு திருமணம் செய்து கொள்ளமாட்டார் .அந்த அளவு உன் மீது அவருக்கு

காதல் .அவர் தனிமரமாக நிற்பதை பார்த்து வேதனையில் சாக வேண்டும் அந்த குடும்பத்திலுள்ளவர்கள் .இவர்களின் துன்பத்தை நான் ...அமெரிக்காவில் ஒரு உயர்ந்த வாழ்வு வாழ்ந்து கொண்டு பார்த்து ரசிக்கவேண்டும் ."

" அதற்காகவே வந்திருந்த வரன்களையெல்லாம் அலசி ஆராய்ந்து , தட்டி விட்டு ...இதோ இந்த பெரிய வரனை பிடித்து வைத்துள்ளேன் .என் எதிர்காலம் வளமாக என் முன் விரிந்திருக்கிறது .நல்லவேளை அந்த நந்தகுமாருடனான வறண்டு போன வாழ்விலிருந்து தப்பிவிட்டேன் ...."

" அவருடன் வாழ்வது வறண்ட வாழ்வா ...? உனக்கு தெரியாது மிருணாளினி .அவருடனான வாழ்க்கை எவ்வளவு இனிமையானதென்று .அது எனக்கு மட்டும்தான் தெரியும் ...."

கனவில் சொக்கிய மீராவின் கண்களை எரிச்சலாக பார்த்த மிருணாளினி ....

" வேண்டாம் மீரா .சாதாரணமான இந்த அணைப்பிலெல்லாம் மயங்கிவிடாதே .அத்தான் எந்த நேரமும் அம்மாவிற்கு தலையாட்டிக் கொண்டிருக்கும் தஞ்சாவூர் பொம்மை .எந்த நேரமும் அந்த பொம்மை அம்மா சொன்னாரென உன்னை தூக்கி எறிந்துவிடும் . அப்போது தடுமாறி நிற்பதை விட இப்போதே விலகி விடு .குழந்தையை கலைத்து விட்டு ..உன் அம்மா வீட்டிற்கு...." மெல்ல விசம் கலக்க முற்பட்டாள் ."

https://telegram.me/aedahamlibrary

" மீண்டும் என்னை அறைய வைத்துவிடாதே மிருணாளினி ...என் குழந்தை .என் உயிர் " கைகளால் வயிற்றை பிடித்துக் கொண்டாள் .

" நல்லதை சொன்னால் கேட்டுக் கொள்ளும் எண்ணமில்லை உனக்கு .எப்படியோ போ ...என்றாவது கண்ணை கசக்கிக்கொண்டுதான் நிற்க போகிறாய் பார் ..." சாபம் போல் சொன்னாள் .

" நானும் பதிலுக்கு சொல்லுவேன் மிருணாளினி .ஆனால் நீ திருமணமாக போகும் பெண் .என் வாயில் வருவது பலித்து உன் வாழ்வு பாழாகிவிடக்கூடாது .உன் மணவாழ்வு மிக மகிழ்ச்சியாக அமைய வேண்டும் ஏனென்றால் இந்த வாழ்வு உனக்கு என் கணவர் அமைத்து கொடுத்தது ...."

மிருணாளினி திடுக்கிட்டாள் .

" அது எப்படி உனக்கு ....சை இந்த அம்மா ஒரு ஓட்டைவாய் .இப்படியா எல்லாவற்றையும் உளறுவாள் ....? " என முணுமுணுத்தாள் .

" தன்னால்தான் உன் வாழ்வு பாழாகிவிட்டதென்ற வருத்தத்தில் அதை சீர் செய்ய வேண்டுமென்று எண்ணத்தில் உனது மனது போன்றே ஒரு வாழ்வை தேடி கண்டுபிடித்து உனக்கு அமைத்து கொடுக்க எண்ணினாரே. அவருக்கு நீ செய்யும் நன்றிக்கடன் இதுவா ...? "

" என்ன ...பாழான என் வாழ்வை சீரமைக்கிறாரா...காரணம் அதுவல்ல .என்னால் அவருடைய இப்போதைய வாழ்வு ...அதாவது உன்னோடுடனான காதல் வாழ்வு பாழாகிறது .அதை சரி செய்ய என்னை அப்புறப்படுத்த வேண்டும் .அதனால்தான் இந்த திருமண ஏற்பாடுகள் ...." போட்டு உடைத்தாள் .

" அப்படி அவர் சொன்னாரா ...? "

" வெளிப்படையாக சொல்ல வேண்டுமா ...? மூஞ்சியை பார்த்தாலே தெரிகிறதே .முதன் முதலில் வாங்கிய கார் .என் மீராதான் உட்கார வேண்டுமென்று சாவியை என் கையிலிருந்து பிடுங்குகிறான் ...." அனல் மூச்சு விட்ட மிருணாளினியை பார்த்து வந்த சிரிப்பை அடக்கினாள் மீரா .

https://telegram.me/aedahamlibrary

அடக்கிய அவள் சிரிப்பை கண்டுகொண்ட மிருணாளினி கோபத்தோடு அவள் கையை பற்றி இழுத்துக் கொண்டு போய் கண்ணாடி முன் நிறுத்தினாள் .

" பார் உன்னையும் பார் ...என்னையும் பார் .யார் அழகு ...? என்னை இவ்வளவு அழகான என்னை ஒருவனால் மறுக்க முடியுமா ...? இந்த நந்தகுமார் மறுக்கிறானென்றால் அவன் என்ன ஆண் ...? என்னுடன் திருமணம் எனும் வரை பழகிவிட்டு உன்னை காதலிக்க எப்படி அவனால் முடிந்தது ...? நீயும் உன் மூஞ்சியும் ...வடு போல் உன் மச்சமும் ...." பொறாமை அப்பட்டமாக தெரிய புலம்பினாள் மிருணாளினி .

மிருணாளினியால் வெறுக்கப்பட்ட அந்த மச்சம் ...கணவனால் மிக விரும்பப்படுவதை ...இதமாய் அவன் அடிக்கடி வருடும் ..சமயம் கிடைக்கும் போதெல்லாம் முத்தமிடும் அந்த மச்சத்தை பெருமையாய் வருடினாள் மீரா .

" இந்த மச்சம் என் முகத்திற்கு ரொம்ப அழகு இல்ல ...? " கண்ணாடியில் தன்னைத்தானே சிலாகித்துக்கொண்டாள் .

கணவனின் காதல் தந்த இனிய நினைவில் மிளிர்ந்த அவள் முகம் மிக அழகாக நீரில் மிதக்கும் செந்தாமரையாக மாறி ஜொலிக்க ஆரம்பிக்க ...திடீரென இவள் ஏன் இவ்வளவு அழகாக தெரிகிறாள் ...புரியாத புதிர்க்கு விடையறியாது ...

" ஏய் வெளியே போடி ..." கத்தினாள் மிருணாளினி .

" பேசி முடித்து விட்டாயானால் நாம் போகலாம் மீரா...."

வெளியிலிருந்து வந்த குரல் நந்தகுமாருடையதே ...

எதிர்பாரா அவன் வரவில் திக்கென்ற மனதுடன் திரும்பிப் பார்த்தனர் இருவரும் .

பார்த்ததும் ..." ஐயோ அத்தான் இதென்ன கோலம் ...? " விழுந்து விழுந்து சிரிக்க தொடங்கினாள் மிருணாளினி .

# 34

https://telegram.me/aedahamlibrary

தகிக்கும் என் சூரியக்கனவுகளில்
குளிக்கும் நிலவென நீ புகுந்தென்
பசலை களைந்த பொழுதுகளில்
பறிபோன கவலையின்றி
பரிமளிக்கிறது
என் யவ்வனம் .

" ஐய்யோ ...கண்ணை கொண்டு பார்க்க முடியவில்லையே... " மிருணாளினி தொடர்ந்து சிரிக்க தீர்க்கமான பார்வையோடு அவளை நெருங்கினான் நந்தகுமார் .

கைகளை மார்போடு கட்டிக்கொண்டு ஊசி போன்ற பார்வையால் அவளை நேருக்கு நேர் பார்த்தான் .மிருணாளினியால் அதிக நேரம் அவனை பார்க்க முடியவில்லை .சிறிது சிறிதாக சிரிப்பு தேய்ந்து மறைந்து தலை குனிந்தாள் .

" சை ..." ஒற்றை வார்த்தைதான் .அதில் அத்தனை வெறுப்பு .நந்தகுமார் கோபமாக பார்த்திருந்தாலோ , பேசியிருந்தாலோ ...மிருணாளினி அவனுக்கும் மேலாக எகிறியிருப்பாள் .ஆனால் இந்த ஒற்றை வார்த்தை

...அது காட்டிய வெறுப்பு ...உள்ளுக்குள் நொறுங்கினாள் .

" போகலாமா மீரா ..." என்ற போது நந்தகுமாரின் குரலில் அளவற்ற காதலும் , பாசமும் வந்திருந்த்து .திரும்பியவன் விழுங்கும் பார்வையுடன் தன்னை பார்த்துக் கொண்டிருந்த மனைவியை பார்த்து விழிகளை உயர்த்தி என்னவென்றான் .

ஒரு பேரனாக தன் பாட்டிக்குரிய சடங்குகளை முடித்துவிட்டு தலைமுடியையும் , மீசையையும் நம் சடங்குகளுக்கேற்ப கொடுத்துவிட்டு ஒரு முழுமையான ஆணாக கம்பீரமான புதிய தோற்றத்தில் நிமிர்ந்து நின்ற தன் கணவனை பெருமிதமாக விழியகற்றாமல் காதலாக பார்த்தபடியிருந்தாள் மீரா .

மனைவியின் காதல் பார்வையை உணர்ந்த நந்தகுமார் மின்னல் மின்னும் கண்களுடன் அவளை நெருங்கினான் ...

" இந்த மாதிரி நேரத்தில் இப்படி தனியாக ஸ்கூட்டியில் வரலாமா ...? " செல்லமாய் கடிந்து கொண்டு அவள் கைகளுடன் தன் கைகளை கோர்த்துக் கொண்டான் .

" போகலாம் ..." வாசல் வரை போய் நின்றவன் திரும்பி ...
" இனி எங்கள் வீட்டு பக்கம் வர வேண்டிய தேவை உனக்கு இருக்காது .தனசேகரிடம் நான் ஒன்றும் சொல்லமாட்டேன். " அழுத்தமாக மிருணாளினியின் நிலைமையை அவளுக்கு உணர்த்திவிட்டு வெளியேறினான் .

https://telegram.me/aedahamlibrary

தன்னை கவனமாக ஸ்கூட்டி ஓட்ட வைத்து பொக்கிசமாக காத்தபடி பின்னால் வரும் கணவனை ஸ்கூட்டி கண்ணாடி வழியாக பார்த்தபடியே வந்தாள் மீரா .

வீட்டு மனிதர்களை தவிர மற்றவர்கள் போய்விட்டிருக்க வெறிச்சிட்டிருந்த்து வீடு .இரவு முழுவதும் தூங்காததால் ஆங்காங்கே சுருண்டு தூங்கி கொண்டிருந்தனர் .

" என்னம்மா இப்படி சொல்லாமல் , கொள்ளாமல் எங்கே போனாய் ...? வயிற்றுப் புள்ளைக்காரியை காணோமேன்னு நான் பதறிட்டிருக்கேன் ." சுந்தரி படபடக்க ...

மாமியாருக்கு அவளின் அண்ணன் மகளை விளக்கி விடும் முடிவோடு வாயை திறந்த மீராவை கைகளை பற்றி தடுத்தான் நந்தகுமார் .

" அம்மா ஒன்றுமில்லை .பாட்டியை நினைத்து மனது சரியில்லாமல் மீரா பார்கில் போய் உட்கார்ந்திருந்தாள் .நான் போய் அழைத்து வருகிறேன் .இப்போது நாங்கள் மிகவும் களைப்பாக இருக்கிறோம் .ஏதாவது குடிக்க தருகிறீர்களா ...? "

" இதோ தருகிறேன்பா ..." சுந்தரி அடுப்படியினுள் செல்லவும் தன்னை கேள்வியாய் நோக்கிய மனைவி பக்கம் திரும்பியவன் ....

" அம்மாவுக்கு மிருணாளினியை பற்றி இப்போது தெரியவேண்டாம் மீரா .அம்மா மிகவும் வருத்தப்படுவார்கள் .பிறகு சொல்லிக் கொள்ளலாம் ..." கெஞ்சலாய் கேட்டான் .

சம்மதமாய் தலையசைத்துவிட்டு சோபாவில் அமர்ந்தாள் மீரா .எதிரே அமர்ந்திருந்த கணவனை பார்த்தவளின் மனதில் குறும்பு தலை தூக்கியது .

மெல்ல தன் இருக்கையிலிருந்து எழுந்து கணவனருகில் வந்து நின்றவள் அவன் முகத்தை பற்றி  குனிந்து அவனது மொட்டைத்தலையில் அழுத்தமாக இதழ் குறுகுறுக்க முத்தமிட்டாள் .

" இப்போ ரொம்ப அழகாய் இருக்கீங்க ..." கிசுகிசுவென சொன்னவள் மீசை எடுத்த அவனது மோவாயை ஆட்காட்டி விரலால் வருடிவிட்டு அடுத்த முத்தத்தை தாடி எடுத்த தாடையில் பதித்தாள் .

https://telegram.me/aedahamlibrary

" இந்த முத்தம் ஓ.கேவா ...? " என்றவளை இழுத்து மடியில் அமர்த்தியிருந்தான் நந்தகுமார் .

" ம் ....அதே முத்தம் .நீ முதலில் கொடுத்த அந்த முத்தம் .என் மனைவியின் காதல் பொங்கும் முதல் முத்தம் ..." மெல்லிய குரலில் அரற்றியபடி அவளை இறுக அணைத்தான் .

வேகமாக இதழை நோக்கி முன்னேறி போது ...

," நந்து ஆரஞ்சு இருந்த்து .பிழிஞ்சிட்டேன் .வெயிலுக்கு அதுதான் சரி .சீனி போடவா ...? " உள்ளிருந்து சுந்தரி குரல் கொடுக்க , மீரா அவசரமாக நந்தனின் மடியிலிருந்து சரிந்து பக்கத்தில் அமர்ந்தாள் .

" வேண்டாம்மா ...ஏற்கெனவே நிறைய தித்திப்பு இதிலும் சீனி ...வேண்டாம்  ..." தன் இதழகளை மடித்து கடித்தபடி மனைவியின் இதழ்களை பார்த்தான் .

மீராவின் உடல் சூடாகி சிலிர்த்தது .எழுந்த கொள்ள போனவளை பற்றியிழுத்து அருகேயே அமர்த்திக்கொண்டான் .

அம்மா கொண்டு வந்து கொடுத்த ஜூஸை அவசரமாக குடித்துவிட்டு ... .
" கொஞ்சம் படுக்கிறேன்மா ..." அம்மாவிடம் கூறிவிட்டு வரும்படி ஒரு அழைப்பை மனைவிக்கு அனுப்பி விட்டு போனான் .

," கொஞ்ச நேரம் நீயும் படும்மா ...." சுந்தரி சொன்னதும் மீராவும் அறையினுள் நுழைந்தாள் .

உடனேயே கணவனின் வேகமான அணைப்பில் சிக்கிக்கொண்டாள் .

என்ன செய்வது ...எப்படி செய்வது என புரியாமல் அவனும் ...எப்படி ஏற்பது ...எப்படி தடுப்பது என தெரியாமல் அவளும் ஒருவரையொருவர் அணைத்தபடி தங்கள் அன்பையும் , பாசத்தையும் இதழ்களால் ஒருவர் மீது ஒருவர் கண்டபடி பரிமாறிக் கொண்டனர் .

" என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் ஏன்டி அவளை பார்க்க போனாய் ...? ஆத்திரத்தில் அவள் ஏதாவது செய்திருந்தால் ....???? " மீராவின் தலைமுடியில் கையை விட்டு பிடித்தபடி செல்லமாக அவளை உலுக்கினான் .

https://telegram.me/aedahamlibrary

" அதனால்தானே நீங்கள் பின்னாலேயே வந்து அவளை கண்டுகொண்டீர்கள் ."

" நான் முன்பே மிருணாளினியை உணர்ந்துதான் இருந்தேன் மீரா .அவளது சுயநலத்தை , அலட்சியத்தை ...அதிக ஆசையை ...."

" பிறகு எப்படி அவளை திருமணம் செய்ய சம்மதித்தீர்கள் ...? "

" அம்மாவிற்காக....எனக்கு நினைவு தெரிந்து அம்மா அவள்தான் உன் மனைவி என எனக்குள் பதித்துவிட்டார் .அதனால் உள்மனம் ஒப்பவில்லையென்றாலும் அவளை மனைவியாக நினைக்க முயற்சித்தபடி இருந்தேன் ..."

" அம்மாவிற்காக இப்படியா உங்கள் மனதிற்கு பிடிக்காத வாழ்வென்றாலும் வாழ தயாராவீர்கள் ...? "

" எனக்கு அப்போது வேறு வழியில்லையே மீரா .ஏனென்றால் நான் அப்போது உன்னை பார்த்திருக்கவில்லையே ...."

கணவனின் குறும்பு பதில் தேன் மழையாய் சொரிய ..." ம்க்கும் நீங்கள் நிமிர்ந்து என் முகம் பார்க்கவே ஒரு வாரம் ஆனது ...." சிணுங்கினாள் .

" ஏய் ...பொய் சொல்லாதே .உன்னை பெண் பார்க்க வந்தபோது உன்னை பார்க்கவில்லை ...? உண்மையில் அப்போது உன்னை தனிமையில் சந்தித்து உன்னை பிடிக்கவில்லையென கூறும் எண்ணத்தில் இருந்தேன் .ஆனால் உன்னை பார்த்ததும் மனப்பாடம் பண்ணி கொண்டு வந்திருந்த வார்த்தைகள் எல்லாம் மறந்து போனது .சத்தமில்லாமல் திருமணத்திற்கு தலையசைத்து விட்டு வந்துவிட்டேன் ...பாட்டிக்காக , அப்பாவிற்காக , அம்மாவிற்காக என சொல்லிக்கொண்டேன் .அப்போது அப்படித்தான் நினைத்தேன் ..."

" அப்போதே நீங்கள் என்னை விரும்ப ஆரம்பித்து விட்டதாக சொல்கிறீர்களா ...? "

" ஆமாம் ...இதை இப்போது தைரியமாக சொல்வேன் ஆனால் அப்போது ...என்னை எனக்கே தெரியவில்லை .நான் காதலை அறியாதவன் மீரா .பாட்டி ,அம்மா , அக்கா , தங்கையென பெண்கள் சூழ இருந்த்து என் வாழ்வு .பெண்களை ...அவர்கள் அன்பை , பாசத்தை ...முழுமையாக அறிந்து வளர்ந்தவன் நான் .ஆனால் காதலை அறியாதவன் ...வருங்கால மனைவியென ஒரு அழகு பெண் என்னுடனேயே பழகி வந்த போதும் அவள் மூலமாக கூட காதல் எனக்கு அறிமுகமாகவில்லை ....என் வீட்டு பெண்களை போல் அவளும் எனக்கு ஒரு பெண் அவ்வளவுதான் ...."

https://telegram.me/aedahamlibrary

" அவளை காதலிக்கவே இல்லையென்றால் ...அவளை நினைத்து என்னை ஏன் ஒதுக்கினீர்கள் ...? "

" நான்தான் அவளை காதலிப்பதாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன் .அவளை காதலித்து விட்டு எப்படி உன்னோடு வாழ முடியும் ...என என்னை நானே கேட்டுக்கொண்டேன் ...உன்னை ஒதுக்கி வைத்தேன் ...."

" நீங்களும் உங்கள் காதலும் ...இப்படியா என்னை படுத்துவது ...." செல்லமாய் சிணுங்கினாள் .

" ஒரு வழியாக இந்தக் காதல் என் மீது கருணை வைத்து என்னை எனக்கு உணர்த்தும் நாள் வந்த்து மீரா ..." நந்தகுமாரின் கை மீராவின் முக மச்சத்தை ரசனையாய் வருடியது .

" நான் உங்களை அணைத்து நின்றேனே ...அன்றுதானே ...? " மீரா ஊகித்து கேட்டாள்.

" இல்லை மிருணா என்னை அணைத்து நின்ற போது ...." நந்தகுமாரின் பதிலில் மீரா திடுக்கிட்டாள் .

35

சுடரேற்றி நிற்கும் உன்
சூரபத்ம வதை பொழுதுகள்
குறவள்ளி கர்வத்தையெனக்கு
கொடுக்கின்றன ...
மலை பிளக்கும் கூர்வேல் காலங்களுக்கு முன்
மமதை பிளந்தெனை ஆட்கொள்ளடா
அசுரனளிக்கும் அசுரா...

https://telegram.me/aedahamlibrary

" என்றைக்கு ....அன்று மொட்டைமாடியிலா ...? மீராவின் குரல் வறண்டிருந்த்து .

" ஏய் அது எப்படி உனக்கு தெரியும் ...? ஓ ...அன்று நீ எங்களை பார்த்தாயா மீரா .அதனால்தான் பிறகு என்னிடம் தள்ளியிருந்தாயா ...? என்ன மீரா இது என்னிடமே நேரடியாக அன்றே கேட்டிருக்கலாமே ...? " வருத்தத்துடன் எழுந்தவன் சன்னலருகே போய் நின்று வெளியில் வெறித்தான் .

," அன்று இரவு நான் எவ்வளவு ஆசையுடன் உன்னருகில் வந்தேன் . நீ என்னை ஒதுக்கியது எனக்கு எவ்வளவு வேதனையை தந்த்து தெரியுமா ...? "

தானும் எழுந்து கணவன் பின்னால் நின்றவள் " நான் என்ன கேட்கமுடியும் ...? அவள் உங்கள் அத்தை மகள் .உங்கள் காதலி .அன்று நம் வீட்டினுள் நுழைந்த்திலிருந்து ஒவ்வொரு இடத்திலும் அவளது உரிமையை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறாள் .நீங்கள் எல்லோரும் அவளை வராது வந்த தேவதையை போல் பார்க்கிறீர்கள் .இரவில் யாரும் இல்லாத போது அவளை கட்டியணைத்து நிற்கிறீர்கள்..? நான்

ஏதாவது கேட்டால் ஆமாம் நான் அப்படித்தான் என்றுவிட்டால் ....அன்றுதான் ..?சற்று முன்தான் ..உங்களை ஆசையோடு அணைத்த என்னை நீங்கள் ...தள்ளி விட்டீர்கள் ...இந்த நிலைமையில் நான் ..." மீராவின் குரல் தழுதழுக்க தொடங்கியது .

நந்தகுமார் சட்டென திரும்பி அவளை இறுக அணைத்துக்கொண்டான் ." முட்டாள் ...இப்படியெல்லாமா தப்பு தப்பாக யோசித்து மனதை புண்ணாக்கி வைத்திருப்பாய் ...? அன்று நீ என்னை அணைத்தபோதே உன்னை இறுக்கிக் கொள்ளத்தான் தோன்றியது .ஆனால் அன்றைய நம் வீட்டு சூழல் ....மேலும் அந்த கணம் வரை நான் மிருணாளினியை காதலிப்பதாகத்தானே நினைத்துக்கொண்டிருந்தேன் .அந்தக் குழப்பத்தையும் அவளே தீர்த்துவைத்துவிட்டாள் .

அன்று மொட்டைமாடியில் அவளது திருமணம் தட்டி தட்டி போவதாகவும் ...நான் அவளுக்கு துரோகம் செய்து விட்டதாகவும் ஏதேதோ புலம்பி அழுதபடி இருந்தவள் திடீரென என்னை அணைத்துக் ....ஏய் மீரா இரு ...அவள் அன்று உன்னை பார்த்துவிட்டுத்தான் என்னை அணைத்திருக்க வேண்டும் .அதுவரை கைப்பிடி சுவரில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவள் திடீரெனத்தான் என்னை அணைத்தாள் .உடனேயே அவளை தீச்சுட்டாற் போல் தள்ளி விட போனவனை ...இரண்டே நிமிடம் அத்தான் .இது ஆசையான அணைப்பில்லை .ஆறுதலான அணைப்பு ...என ஏதேதோ பேசி நிறுத்தினாள் .

ஆசையாக என்னை அணைத்தால் தள்ளிவிடலாம் ..ஆனால் அழுகையோடு அணைத்தால் ...அதுவும் அவள் வாழ்வை பாழாக்கிவிட்டதாக ஒரு குற்றச்சாட்டோடு ....பல்லைக் கடித்துக்கொண்டு பேசாமல் நின்றேன் .முழுதாக ஒரு நிமிடம்தான் இருந்திருக்கும் மீரா அந்த அணைப்பு .அதுதான் எனக்கு உனக்கும் ...அவளுக்குமிடையேயான வித்தியாசத்தை சொன்னது .எனது காதல் யார் மீதென்று எனக்கு விளக்கியது .இப்போது மிருணா என் மாமன் மகளாக மட்டுமே இருந்தாள் .தயங்காமல் அவள் தலையை வருடி சமாதானப்படுத்தினேன் .அப்போதுதான் நீ எங்களை பார்த்திருக்க வேண்டும் .சரியா ...? "

" அப்போ நமது திருமணத்திற்கு முன் நீங்கள் மிருணாவை ...." தயங்கி நிறுத்தினாள் .

" அணைத்ததில்லையா என கேட்கிறாயா ...? நான்தான் சொன்னேனே மீரா நான் பெண்களுடன் ஒன்றி வாழ்ந்தவன் .அவர்கள் ஸ்பரிசங்களை

உணர்ந்தவன் .ஆனால் பாசமாக மட்டுமே .காதல் என்பது என் மனைவியுடன் மட்டும்தான் என உறுதியாக இருந்தவன் .வருங்கால மனைவியென்ற நிலையில் மிருணா இருந்தாலும் , நாங்கள் ஒரே வீட்டிற்குள் புழங்கிக் கொண்டிருந்தாலும் அம்மாவின் கண்டிப்பின் முன் நாங்கள் அப்படியெல்லாம் பழகிவிட முடியாது மீரா .அம்மாவிற்கு ஒழுக்கம் மிகவும் முக்கியம் .ஆண்பிள்ளை என்பதற்காக எங்களுக்கு எந்த அதிக சுதந்திரமும் கொடுத்ததில்லை .பெண் பிள்ளைகளுக்குரிய அதே கட்டுப்பாடுகள் எனக்கும் சசிக்கும் எப்போதும் உண்டு ...இதையெல்லாம் தாண்டும் தைரியம் வேண்டுமென்றால் அதற்கு கண்மூடித்தனமான காதல் வேண்டும் . அது எங்கள் இருவரிடமுமே என்றுமே இருந்த்தில்லை ..."

" ஆனால் அப்படி உங்கள் இருவருக்குமிடையே ஏதோ ஒன்று இருந்த்தாக என்னை நம்ப வைக்க வேண்டுமென்றுதான் அவள் முயற்சித்துக் கொண்டிருந்தாள் ...."

" அதை நீ ஏன் என்னிடம் கேட்கவில்லை மீரா ..? அந்த அளவு உரிமை உனக்கு என்னிடம் இல்லையா ...? " வருத்தமாக கேட்டான் .

https://telegram.me/aedahamlibrary

" ஒரு பெண்ணாக இருந்தால்தான் இதை உங்களால் புரிந்து கொள்ளமுடியும் .உங்களுக்கு இருந்த அம்மா பாசத்தை மையமாக வைத்து அவள் காய் நக்ற்றிக் கொண்டிருந்தாள் .பொய்யற்ற அந்த உண்மை பாசத்தை நான் நன்கு அறிந்திருந்த்தாலேயே என்னால் எதுவும் கேட்டு தெளிய முடியவில்லை ...ஒரு வேளை உங்கள் அம்மா சொல்லி நீங்கள் என்னை விலக்கி வைத்துவிட்டால் ..."

நந்தகுமாரின் உடல் மெல்ல அதிர்ந்த்து .

" இதோ பார் மீரா உனது இந்த வார்த்தையிலேயே எனது உடல் அதிர்கிறது .இதனை என்னால் செய்கையில் செய்ய முடியுமா ...? அம்மாவிற்காக மிருணாளினியை ஒதுக்க என்னால் முடிந்த்து . ஆனால் உன்னை ...அது என் உயிர் போன பின்னால்தான் முடியும் ...."

மீரா தாவி கணவனை கட்டிக்கொண்டாள் .

" ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் ....? அவள் விதம் விதமாக பேசி என்னை நம்ப வைக்க முயற்சித்தாள் என்றுதான் சொன்னேனே தவிர நான் நம்பினேன் என்று சொல்லவில்லையே .அப்படி ஒரு தைரியத்தை எனக்கு பாட்டிதான் அளித்தார்கள் ..."

" ஒரு கணவனாக உனக்கு நான் அளித்திருக்க வேண்டிய தைரியம் அது .ம் ...சரி விடு ...அப்படி என்னென்ன சொன்னாள் ....? "

" அது எதற்கு இப்போது விடுங்கள் ..."

" இல்லை மீரா எனக்கு தெரியவேண்டும் .அவளை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் .உன் வேதனையை முழுதுமாக நான் உணர வேண்டும் .சொல்லு ...."

" உங்கள் போன் பாஸ்வேர்டு ...அவளுக்கு தெரிந்திருக்கிறது ...."

" என் போனில் எந்த ரகசியமும் கிடையாது .அதனால் என் போன் பாஸ்வேர்டு நம் வீட்டில் எல்லோருக்குமே தெரியும் ...."

" நீங்கள் கார் வாங்க போவதாகவும் , அவள்தான் முதலில் ஸ்டார்ட் பண்ண போவதாகவும் ...."

" இதனை நான் அவளறியாமல் செய்யமுடியாது மீரா .ஏனென்றால் சண்முகம் மாமா அந்த தொழில்தான் செய்கிறார்.பழைய கார்களை வாங்கி விற்கும் தொழில் .ரொம்ப நாட்களாகவே என்னை ஒரு கார் வாங்கும்படி நச்சரித்துக் கொண்டிருப்பார் .அதற்கு முக்கிய காரணம் அவர் மகளை காரிலேற்றி ஊர் சுற்ற வேண்டுமென்பதே .மிருணா வேறு கார் வாங்கியதும் நான்தான் என் கையால் முதல் கியர் போட்டு தருவேன் ...என அவளுக்கு அவளே ஒரு தகுதியை உண்டாக்கிக் கொண்டிருந்தாள் .எனக்கு அப்போது கார் ஆடம்பரம் என்று தோன்றியது .அதனால் கார் வாங்குவதை தவிர்த்து வந்தேன் .ஆனால் அன்று நீ ஸ்கூட்டி ஓட்டியதை பார்த்ததும் உன்னை கார் ஓட்ட வைத்து பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்த்து .உடனே கார் வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டேன் .

முதன்முதலாக நீதான் காரில் ஏறி கியர் போட்டு ஸ்டியரிங் பிடித்து உட்கார வேண்டுமென்பது என் ஆசை .மிருணாளினி காரை முடித்ததும் சாவியை எடுத்துக்கொண்டு நான் உட்காருவேன் என்றாள் .அது என் மீராவிற்கு என்று சாவியை பிடுங்கிக்கொண்டு வந்தேன் .முதன்முதலில் நீ உட்கார வேண்டுமென்றுதான காரை இன்னமும் நம் வீட்டிற்கு கொண்டுவராமல் மாமாவின் ஆபிஸிலேயே நிறுத்தியிருக்கிறேன் .அதற்குள் பாட்டியின் மரணம் ...."

" சாரி ...." அழுதபடி கணவனின் மார்பில் முகத்தை புதைத்தாள் .

" இன்னமும் ஏதாவது இருந்தாலும் கேட்டுவிடு மீரா ...."

" நீங்களும் , அவளும் கபாலி படம் பார்க்க தியேட்டர் போனீர்களே ...." திணறி திணறி கேட்டாள் .

" அன்று நீயும் அங்கே வந்தாயா மீரா ...? "

" எனக்கு ஒரு டிக்கெட் எடுத்துக் கொண்டு வந்து தந்தாள் ...."

" சை ...எவ்வளவு குறுக்கு புத்தி இந்த பெண்ணிற்கு .அன்று அவளும் , தனசேகரும் சேர்ந்து படம் பார்க்க ஏற்பாடு பண்ணியிருந்தேன் .தனசேகர் என்னுடைய நண்பன் .மிருணாளினிக்கு அவனை மாப்பிள்ளையாக மாமாவிடம் அறிமுகப்படுத்தினேன் .மிக விரைவில் அவளது திருமணத்தை முடித்து அவளை அனுப்ப வேண்டுமென நினைத்தேன் ஏனென்றால் எப்போதும் நம் இருவருக்குமிடையே அரூபமாக அவள் ஏதோ ஒரு வகையில் நின்று கொண்டிருப்பதை போல் , கண்ணுக்கு தெரியாமல் உனக்கு ஏதோவோர் துன்பத்தை கொடுத்துக் கொண்டிருப்பது போல் ஒரு பிரமை எனக்கு இருந்து கொண்டேயிருந்த்து .

அதனால் அவளை நம் வாழ்க்கையிலிருந்து விலக்க அவளது திருமண ஏற்பாடுகளில் முழு மூச்சாக நானே இறங்கினேன் .மிருணாளினியை பார்க்கும் யாருக்கும் அவளை உடனே பிடிக்கும் .தனசேகருக்கும் , அவன் வீட்டினருக்கும் அவளை மிகவும் பிடித்தது .ஆனால் அவள் தனசேகருடன் தனியாக பேசவேண்டுமென்றாள் .திருமணத்திற்கு முன் அவர்களிருவரையும் தனி இடமெதிலும் சந்திக்க வைக்க பிடிக்காமல் ...கூட்டம் அதிகமாக இருக்கும் கபாலி பட தியேட்டரை தேர்ந்தெடுத்து இருவரும் பேசிக்கொள்ள ஏற்பாடு செய்தேன் .

https://telegram.me/aedahamlibrary

அன்று தனசேகர் அவசர வேலையால் ஒரு அரைமணி நேரம் தாமதமாகுமென்றதால் , அதுவரை தியேட்டரில் மிருணாவை தனியாக விட மனமின்றி அவன் வரும் வரை நானிருந்தேன் .ஆனால் அதனை அவள் இப்படி பயன்படுத்திக் கொள்வாளென எனக்கு தெரியாது ...."

" அவளுக்காக பார்க்க போய் அவள் என் வாழ்க்கையை கெடுக்க நினைத்து விட்டாளே ...." அழுத்தமாக தலையை பிடித்து கொண்ட கணவனின் கையை விலக்கியவள் அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள் .

" விடுங்க ...அவள் குணம் அவ்வளவுதான் .ஆனால் எவ்வளவு

முயற்சித்தும் அவள் திட்டமெல்லாம் தோல்வியில்தானே முடிந்த்து ...."

மீராவின் மார்பில் முகம் புதைத்த நந்தன் மெல்ல தலையை கீழே சாய்த்து அவள் வயிற்றில் சேலையை விலக்கி விட்டு மென்மையாக முத்தமிட்டான் .

" இரண்டு மாதமாக இதை கூட என்னிடம் சொல்லாமல் விட்டு விட்டாயே மீரா ...." ஏக்கமாக வந்த்து அவன் குரல் .

" ஐயோ ...இது எனக்கே தெரியாதுங்க .என் மனது இருந்த குழப்பத்தில் நான் இதை கூட சரியாக கவனிக்கவில்லை ...."

" ஓ...அப்போது சரி ...இதை எனக்கு நிரூபித்துக் காட்டு ..."

" அதெப்படி காட்டுவதாம் ...? " கிண்டலாக கேட்ட மனைவிக்கு

உதடுகளை குவித்து காட்டினான் ...

" இப்படி ..."

" ம் ...காட்டுவேன் .பிறகு ...அப்படியில்லை ...இப்படியில்லை என குறை சொல்லக்கூடாது ..."

" அது போல் ஒரு உயிர்ப்பில்லாத முத்தம் இனி உன்னிடமிருந்து வருமா என்ன ...?இப்போது கொஞ்சம் முன்னால் கொடுத்தாயே ...ஹப்பா ...என்ன முத்தம் அது ..." தனது தலையை தடவி சிலிர்த்தவன் ...

" இந்த மொட்டைத்தலையில் வில்லனை போல் தெரிகிறேனா மீரா ..." என்றான் சிறு கவலையுடன் .

" இல்லை ...எனக்கே எனக்கான ...என்னுடைய மட்டுமான ஹீரோ போல் இருக்கிறீர்கள் ..." கணவனின் தோள்களை அழுத்தி அவனை கட்டிலில் அமர்த்தியவள் ...உள்ளத்து காதலையெல்லாம் தனது இதழ்களில் தேக்கி அழுத்தமாக அவன் உச்சந்தலையில் முத்தமிட்டாள் .

" ஆஹா ..." என உடல் சிலிர்த்தவன் அவளை முரட்டுத்தனமாக இழுத்து இதழ்களை சிறை செய்தான் .
அவசரமாக அவன் மீராவை கட்டிலில் சரித்தபோது ...

" மீரா ..." வெளியிலிருந்து சுந்தரியின் குரல் .

" இந்த வெந்நீர் பானையை எங்கேம்மா .ஆளாளுக்கு தூக்கி வெந்நீர் போட்டாங்க .இப்போ பாத்திரத்தையே காணோம் .கொஞ்சம்

https://telegram.me/aedahamlibrary

பார்க்கிறியாம்மா ...."

இருவருக்கும் சிரிப்பு வந்த்து .

" கடமை அழைக்கிறது கணவனே ..."

" சென்று வா மனைவியே .நமக்காக இரவு நீண்டு காத்திருக்கிறது ..."
நெற்றியில் பாசமானதொரு இதழ் ஒற்றலுடன் மனைவியை
விடுவித்தான் நந்தன் .

பொங்கும் காதலுடன் எப்போதும் அணைக்க தயாரென்ற பார்வையுடன்
நின்ற கணவனை பெருமித்துடன் பார்த்தபடி தனது கடமையாற்ற
வெளியேறினாள் நந்தனின் மீரா

https://telegram.me/aedahamlibrary